அல்லியரசாணி மாலை

1905

இதை பதிப்பு பாரதத்தில்
இருக்கிறது

திரு ஆசிரியருக்கு

[illegible]

6053

உ

கடவுள் துணை.

வித்வசிரோன்மணியாகிய

புகழேந்திப்புலவர்

திருவாய்மலர்ந்தருளிய

அல்லியரசாணிமாலை.

இஃது.

மைலம்

சுப்பிரமணியசுவாமிகளால்

பார்வையிடப்பட்டு,

சென்னை-இட்டா

பார்த்தசாரதிநாயுடு

அவர்களாற்றமது

ஸ்ரீபத்மநாபவிலாச அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

1905.

நெ, 84, ஆச்சாரப்பன்தெரு.

[illegible]

[illegible]

உ

கடவுள் துணை.

அல்லியரசாணிமாலை.

விநாயகர் துதி

கலிவிருத்தம்.

அடாதழும்முலையாள் திருவாலவாய்த்
தடாதகைப்பிராட் டியரின் தன்னருள்
கொடாநின்றவல்லிக் கோதைகதைசொலக்
கடர்களிற்றினைக் கைதொழுதேத்துவாம்.

வெண்செந்துறை.

சித்திவிநாயகர் தஞ் செம்பொற்பதம்போற்றி
முத்தியளிக்கவல்ல முக்கணன்றருள்போற்றி
அஞ்ஞானநீக்கிவிடும் அங்குசநின்றருள்போற்றி
சீராருமல்லிகதை செந்தமிழால்யான் பாட
வராறுநாவினிலே யிசைந்தருளாயைங்கரனே.

சுப்பிரமணியர் துதி.

சுத்தமெஞ்ஞானகந்தர் துய்யவடிபோற்றி
பத்தர்தமக்குவரம் பாலிப்போன்றருள்போற்றி
ஆதிபரமசிவற் கருள்செய்வோன்றருள்போற்றி
தீதில்லாமாயனையுஞ் சிருஷ்டித்ததாள்போற்றி
சூரபத்மன்சிரந் துணித்தபதம்போற்றி
தீரகயமுகனைச் சேதித்ததாள்போற்றி
வன்முகன்றருகனை வாதித்ததாள்போற்றி
பின்முகன்றருகனைப் பாழ்செய்ததாள்போற்றி
கந்தாகடம்பா கதிர்வேலாயிக்கதைக்குச்
சிந்தாகுலந்தீரச் செய்திடுவாய்கர்த்தாவே.

சரஸ்வதிதுதி.

தாதாருங்கூந்தல்விழுந் தங்கள்பதம்போற்றி
சூதார்முலைவாணி துங்கப்பதம்போற்றி
துன்னுங்கலைமாதின் துணையடிகளைப்போற்றி
மன்னுசரஸ்வதிதா மரையடிகளேபோற்றி
அல்லிகதையுரைக்க அருள்புரிவாய்மாதாவே
வல்லிக்கொடியனைய வண்கரத்துக்கோதாவே
கஞ்சபூபன்மனதிற் கலந்தவளேநீயென்று
நெஞ்சந்தனிற்கலந்து நிகழ்த்துமம்மாயிக்கதையை

வீறுமலகளந்த மெய்ய[illegible]கம்போற்றி
பஞ்சவற்குத்தூதுசென்ற பங்க[illegible]த்தாள்போற்றி
எக்கலடையாத இணையடிகளே போற்றி
இந்தக்கதைதனக்கு எப்பெருமாளே நீரும்
சந்ததமும்வந்துவரந் தந்தளிக்கக்கண்பாரும்

நாட்டுச்சிறப்பு.

தேன்பெருகுஞ்சோலை தென்னவளநாடு
கனியுதிருந்திருச்சோலை கனமதுரைநன்னாடு
வடகாஞ்சிமுத்திரங்கும் வடமதுரைபட்டணமாம்
வாழைவடக்கினும் வான்கமுகுதெற்கினும்
கரும்புமிளநீரும் கண்திரந்துமடைபாயும்
கட்டுக்கலங்காணும் கதிருழக்குநெற்காணும்
அரிதாளருத்துவர மறுதாள்பயிராகும்
அருதாளின்கீழே ஐங்கலத்தேன்கூடுகட்டும்
யானைகட்டத்தாளும் வானமட்டும்போருகும்
மாடுகட்டிப்போர்படுத்தால் மாளாதுசெந்நெலென்று
யானைகட்டிப்போர்படுக்கும் அழகானதென்மதுரை
தானாகத்தான்வளர்ந்து தழைத்தோங்குந்தென்மதுரை
சோலையலருடைய சொக்கர்கிருபையினால்
அங்கயற்கண்மீனாட்சி அம்மனருளாலே
மாதமொன்றுமும்மாரி வருஷிக்குந்தென்மதுரை
பஞ்சைபனாதி பரதேசிகிடையாது
பஞ்சைகிடையாது பாண்டிவளநாட்டில்
கருப்புகிடையாது கனத்ததொருமதுரையிலே
அங்காடிகூடையை அதிரவிலைகூறார்கள்
ஏழைப்பரதேசி இல்லரங்குடிவாழ்க்கை
தழைத்தோங்கிவாழ்வார்கள் சங்கரன்கிருபையினால்
எங்கினுமிருந்து ஏழைபரதேசிகளும்
அடுப்பார்பரிசனங்கள் அந்தமதுரையிலே
மதுரையிலடுத்தவர்கள் வாழ்வாகப்போற்றிடுவார்
நீதிமனுமுறைகள் நெறிதவறுமன்னவனும்
செங்கோல்பிடித்தாளும் சித்திராங்கதபாண்டியனும்
மகுடமுடிசூடும் மன்னன்சிங்காதனத்தில்
தங்கமுடிசூட்டித் தரணிபதியாண்டிருந்தான்
சொக்கர்வலிமையுண்டு துரைராஜர் பாண்டியர்க்கு
மீனாட்சிவலுமையினால் மேன்மையுடனாண்டிருந்தான்
ஆறிலொருகடமை அரசனவன்வாங்குவது
சக்கரநெறிப்படியே தரணிதனையாண்டிருந்தான்

சொக்கர்திருவிழாவை சோராமல்செய்திடுவார்
ஐயர்தன்திருவிழா ஆனந்தமாய்நடக்குஞ்
உலகந்தழைத்தோங்கி வுத்தமனாண்டிருந்தான்
தாழ்வுகளில்லாமற் றழைத்தோங்கிவாழ்ந்திருந்தான்
அப்படியாய்வாழ்ந்து அரசாளுங்காலையிலே

சோழமகாராஜன் வறுமை அல்லது சிறுமை.

சோழராஜன்தன்னாட்டில் சொர்னகிரிபட்டணத்தில்
மழைகள்கிடையாது மன்னனதுராச்சியத்தில்
தூரல்கிடையாது சோழனதுசீமையிலே
பயிர்கள்கிடையாது பரவைகள்நாடாது
குடிக்கஜல கிடையாது குருவிகள்நாடாது
காய்ந்தமரங்களெல்லாங் கனிகள்கிடையாது
தீய்ந்தபயிர்களெல்லாம் சொல்லிமுடியாது
ஏரிகுளங்கழனி இறைக்கஜலங்கிடையாது
பூமிதனில்புல்லும் பூண்டுங்கிடையாது
சருகுபோலுலர்ந்தனவே தனிச்சோழன்பட்டணத்தில்
அன்னங்கிடையாது அன்பானசீமையிலே
சோறுகிடையாது சோழனதுசீமையிலே
எல்லோரும்பரதேசி ஏழைகளாய்ப்போனார்கள்
பெண்டுடனேபிள்ளைகள் புருடசனங்களெல்லாம்
இனியிருந்தாலிவ்விடத்தி லிறந்துமடிவோமென்று
சொல்லாமலோடுகிறார் சோழராஜன்சீமைவிட்டு
வலசைவாங்கிப்போனார்கள் மன்னர்பரிசனங்கள்
குடிவலசைவாங்கினார் குடித்தனக்காரரெல்லாம்
அண்டைபிழைக்கவென்று அனைவருமோடிவிட்டார்
வந்துமிகச்சேர்ந்தார்கள் மதுரைவளநாட்டில்
பாண்டியன்தேசத்திற் பரிஜனங்கள்வந்தடுத்தார்
அப்போதுசோழன் அவனுடையபட்டணத்தில்
பாழடைந்துபோயிற்றே பரிசனங்களில்லாமற்
சோழனதுசீமையிலே துற்குறியடைந்தனவே
பன்னிரண்டுதன்வருடம் பாரில்மழையில்லாமல்
மாடுகள்கிடையாது மனிதருங்கிடையாது
தங்கநிழல்கிடையாது தரித்திரமேபெரிதாச்சு
என்செய்வேனென்று எண்ணமிட்டான்சோழனவன்
வாடிமனந்தளர்ந்தான் வாடும்பயிரதுபோல்
செடியின்கீழ்புல்லதுபோற் செழித்ததிருமுகங்கள்
களர்நிலத்துப்புல்லதுபோற் கருகிநிறங்குலைந்தான்
எண்ணாதுமெண்ணியவ னேங்கிமனந்தளர்ந்து
ஆரையடித்தோமோ அனியாயஞ்செய்தோமோ

கூலிக்குறைத்தோமோ குறைமரக்காலிட்டோமோ
பஞ்சைபனாதிகளை பறக்கடித்தோட்டினோமோ
அந்தணர்வேதியர்க்கு அபராதஞ்செய்தோமோ
தெய்வத்தின்செயலோ திருவுளத்தின்சோதனையோ
ஆரையடுப்போம் அண்டிப்பிழைத்திடுவோம்
எவரையடுப்போம் இக்குறைதீர்த்திடுவோம்
தேசமும்பாழாச்சு செனங்களெல்லாம்பரிபோச்சு
அனைவரும்போயடுத்தா ரணிமதுரைபாண்டியனை
பாண்டியன்தேசம்பதவியடைந்ததுகாண்
சொக்கர்கிருபையினால் சுகமாயிற்றுதென்மதுரை
தெய்வச்செயலல்லவோ சீர்பெற்றான்பாண்டியனும்
நாமுமவருடைய நாதரடிதாள்பணிந்து
பாண்டியனனுமதியால் பகவானைநாம்வணங்கி
ஐயர்கிருபையினா லதிஷ்டங்கள்பெறவேணும்
இதுதான்வயணமென்று இதைவிடவேறேயுண்டோ
மகாதேவர்கண்திரந்தால் மழைக்குக்குறைவுமுண்டோ
தழைத்தோங்கும்சீமையென்று தரணிபதியெழுந்து
மதுரைக்குப்போகவென்று மன்னனெழுந்திருந்து
சினேகிதஞ்செய்தானே தென்மதுரைபாண்டியனை
என்றுபயணமிட்டான் இடறுதனைத்தொலைக்க
கொஞ்சநஞ்சஞ்சேனைகளை கூடத்துணையாக்கி
பொன்னால்முடிதுலங்க பூஷணங்கள்சோதிமின்ன
வாளுங்கடகமின்ன வச்சிரமணிடால்துலங்க

சோழமகாராஜன் பாண்டியரைக்காணுகிறது,

பாண்டியதேசத்தில் பட்சமுடன்வாரானே
வெகுதூரமாய்நடந்து விரும்பிவிடாய்ப்பட்டு
தொலைதூரமா நடந்து தென்மதுரைவந்துசேர்ந்தார்
மதுரைவளநாட்டில் வந்துவிட்டான்சோழனவன்
கோட்டைக்குள்ளேநுழையக் கொற்றவன்சோழனவன்
தூதுவர்களோடிப்போய்சொன்னார்கள்பாண்டியற்கு
சந்தோஷங்கொண்டு தனிமதுரைபாண்டியனும்
வரச்சொல்லுமென்று மன்னன்கொலுவமர்ந்தான்
அப்போதுதூதர்வந்து அறிக்கையிட்டார்சோழனுக்கு
கொலுமுகத்தைத்தேடியல்லோ கொற்றவனுந்தானடந்து
பாண்டியனைக்கண்டு பரிவுடனேதெண்டனிட்டான்
தெண்டனிட்டசோழனைச் சித்ராங்கதபாண்டியனும்
திடுக்கிட்டெழுந்திருந்து சிங்காதனமேடைவிட்டு
கூடவேகையெடுத்துக் கும்பிட்டான்பாண்டியனும்
கட்டித்தழுவி கடாலிங்கனஞ்செய்து

கூட்டிவந்துகொலுமுகத்தில் கூடவுட்காரவைத்தான்
இட்டசிங்காதனத்தில் இருந்தானேசோழராஜன்
சினேகிதன்முகம்பார்த்துத்தென்பாண்டியராசன்
சோழன்முகம்பார்த்து சொல்லுகிறான்பாண்டியனும்
எங்கேவந்தீரென்னசெய்தி என்னுடையவுயிர்தோழா
அவசரமாய்வந்ததென்ன ஆள்கள்படையில்லாமல்
வேர்வைபொழிய வேற்றுமுகமாவதென்ன
சிந்தைகலங்கித் திருமுகந்தான்வாட
பூமாலைதான்கசங்க பொன்மகுடந்தான்கருக
அழகுகள்தான்மாறி அனலிட்டமெழுகதுபோல்
உருமாறிவந்ததென்ன வுணர்வுடையமன்னவரே
எந்தனுக்குத்தான்தெரிய யியம்பிடுவாய்மன்னவரே

சோழராஜன் பாண்டியனிடத்தில் சொல்வது.

அவ்வார்த்தைதான்கேட்டு அரசாளுஞ்சோழனவன்
தனக்குள்ளவருத்தத்தைச் சாங்கமாய்ச்சொல்லுகிறான்
பன்னிரண்டுவருஷம் பாரில்மழையில்லாமல்
தவிக்கிரதேயுலகந் தாங்கமுடியவில்லை
நிருவகிக்கமுடியாமல் நிலைக்காமலோடிவந்தேன்
கருகிறதேபூமியெல்லாங் கருகிற்றேராச்சியங்கள்
தாளமுடியவில்லை தனிமதுரைபாண்டியனே
உம்முடையராச்சியந்தா னொருகுறைவுமில்லாமல்
தாழ்வுகளில்லாமல் தரணிகள்தான்தழைக்க
தேசஞ்செழிக்கச் சிறப்புடனேநீர்வாழ்க
ஏழையவன்போலேநான் இந்தச்சிறுமைபட
பார்க்கமனம்வந்ததோ பாராளும்பாண்டியனே
என்தேசம்தான்செழிக்க என்சனங்களீடேற
அவ்வளவுதவி அனுக்கிரகம்நீர்செய்தால்
நன்றிமறப்பேனோ நானுள்ளநாள்வரைக்கும்
சகாயமறப்பேனோ சந்திராதித்தருள்ளவும்
உதவிமறப்பேனோ ஊழியுள்ளநாள்வரைக்கும்
இந்தசகாயமதை எப்போதும்யான்மறவேன்
சஞ்சலந்தீரவைப்பாய் தனிமதுரைபாண்டியனே
அவ்வசனங்கள்கேட்டு அழகுள்ளபாண்டியனும்
சோழன்முகம்நோக்கிச் சொல்லுவானோர்வசனம்
என்னாலேயாகுமோ இவ்வுலகந்தான்றழைக்க
நம்மாலேயாவதுண்டோ நாடுகள்தழைத்தோங்க
உன்றனுமென்றனு முலகந்தழைக்குமோதான்
தேவாதிதேவர் திருவருள்தானிருந்தால்
ாதாதுதயவு நமக்குத்தானிருந்ததென்றால்

சொக்கரதுதயவால் தொல்லுலகந்தான்றழைக்கும்
அவருடையசெயலல்லா லரசனுலாவதுண்டோ
தெரியாதோவுந்தனுக்குத் தெளிவழிந்தசோழமன்னு
காதராலென்னுடைய நாடுதழைத்ததென்றான்
அவ்வசனங்கேட்டு அருஞ்சோழனேதுரைப்பான்
உமதுதயவாலே உரிமைபடவெந்தனுக்கு
நாதருக்குசொல்லி நாடுதழைக்கவையும்
என்றுமிகவேண்டினான் இராஜனந்தபாண்டியனை.
அப்படியேநல்லதென்று ஆனதொருபாண்டியனும்
வந்ததொருசோழனுக்கு வருந்திமிகவிருந்துசெய்து

பாண்டியனுஞ் சோழனுஞ் சொக்கரிடம்
வந்துகண்டது.

இருவருங்கூடியே ஈஸ்வரராதுஆலயத்தில்
சொக்கரதுகோயிலுக்குத் துரிதமுடன்வந்தார்கள்
ஈசரதுசந்நிதிக்கு இன்பமுடன்வந்தார்கள்
சுவாமியைக்கண்டு தொழுதடிகளைப்பணிந்தார்
சாஷ்டாங்கமாகதெண்டன் சரணமென்றடிபணிந்தார்
இருவருமேயடிபணிந்து ஈசரைத்தோத்தரித்து
தும்பமலர்சூடுகின்ற சொக்கரைத்தோத்தரித்து
ஆலவிடமுண்ட ஐயரைத்தோத்தரித்தார்
நஞ்சையமுதுண்ட நாதரைத்தோத்தரித்தார்
இடருதனைநீக்கிவிடும் ஈசனேசரணமென்றார்
ஏழைமுகம்பாருமையா ஈசனேசரணமென்றார்
அப்போதுசொக்கலிங்கர் அந்தமொழிகேட்டு

சொக்கலிங்கர்சொல்வது

குஞ்சிரிப்புகொண்டவரும் கொடிமுடிகைலாசர்
ஏதுவகையாக இருவருமாய்வந்தீர்கள்
வந்தவிவரமதை வகையாகச்சொல்லுமென்றார்
அவ்வசனங்கேட்டு அழகுள்ளபாண்டியனும்
சொக்கரைச்சேவித்து சொல்லுகிறான் இராஜனவன்
மதுரையிலேவாழுகின்ற மகாதேவர் ஆண்டவனே
இச்சோழராசனுக்கு வந்ததொருதுன்பங்கள்
சொல்லததொலையாது துயரமிகத்தோன்றுதையா
மழைகள்கிடையாமல் வையகங்கள்பாழாகி

உலர்ந்துதேசுரருபோ னுலகங்களத்தனையும்
வாடித்தவிக்கிறார்கள் மனிதர்களெல்லோரும்
அன்னங்கிடையாது அரசனதுபட்டணத்தில்
சோறுகிடையாது சோழனதுசீமையிலே
மிகவும்வருத்தமுற்றான் வேந்தனிந்தசோழராசன்
தயவுபுரிந்துவந்து தற்காக்கவேண்டுமையா
மனதுகளித்து மழைபெய்யவைய்யுமையா
நாடுசெழிப்பதற்கு நாதரேகண்பாரும்
கண்பார்க்கவேணுமென்று கர்த்தரேதெண்டனிட்டோம்

சொக்கநாதர் சொல்வது.

அவ்வசனங்கேட்டு ஆண்டவருமேதுரைப்பார்
அரசர்களேநீங்கள் அஞ்சவேவேண்டாங்காண்
எவனெவன்றன்றனக்கு எந்தவதிகாரமுண்டோ
அந்தவதிகாரம் அவனவனேசெய்கிறது
வருணபகவானு மனதுவைத்தாராமானால்
பெய்யாமழைபெய்வித்து பெருகவைப்பார்பூமியெல்லாம்
வருணனுக்கதிகாரன் வானவர்கோனித்திரன்காண்
மேகத்துக்கதிகாரன் மேலானஇந்திரன்காண்
தேவேந்திரனைநீங்க ளிருவரும்வணங்கிடுங்கள்
தேவேந்திரனைத் தெரிசித்தீராமாகில்
உங்கள்குறைவுகளை யுரையுங்களிந்திரற்கு
மனதிரங்கவேண்டி வணங்கினீராமாகில்
வருணனைத்தானழைத்து மழைபெய்யவைப்பான்காண்
மேகத்தைத்தானழைத்து விடைகொடுப்பானிந்திரனும்
இந்திரதயவாலே எங்குஞ்செழித்தோங்கும்
அவ்வசனங்கேட்டு அணிமதுரைபாண்டியனும்
சொக்கர்விடைகொடுக்கச் சோழனும்பாண்டியனும்
நல்லதென்றுசொல்லி நாதரடிபணிந்து
இருவருமாய்நடந்தார்கள் ஈசரதுகோவில்விட்டு
ஆலயத்தைவிட்டு அப்பால்நடந்தார்கள்

இந்திரலோகங்காண்கிறது.

தெய்வலோகம்போகவென்று சனுதியாய்தானடந்தார்
சோழனும்பாண்டியனுஞ் துருசாய்நடந்தார்கள்
இந்திரலோகத்திற்கு இசைந்துமேவந்தார்கள்
தேவேந்திரலோகத்திற்கு சனுதியில்தானடந்தார்
அமராபதிதேடி அரசர்கள்தானடந்தார்
வானுலகங்கிட்டி வருகிறவேளையிலே
ஆயிரங்கண்ணிந்திரரு மமர்ந்தார்கொலுமேடை

முப்பத்துமுக்கோடி முனிவர்களுந்தேவர்களும்
நாற்பத்தெண்ணாயிரம் நலமானரிஷிகளுடன்
கிம்புருடர்கின்னரர் கெருடகாந்தருவருடன்
கின்னரிவீணைகள் கீதங்கள்பாடிநிற்க
மேனகைரம்பையும் மெல்லிதிலோர்தமையும்
ஊர்வசிநாட்டியங்களுச்சிதமாய்செய்துநிற்க
இந்திராணிதேவியுடன் இந்திரன்கொலுவிருந்தார்
அந்தச்சமயத்தில் அழகுள்ளபாண்டியனும்
சோழனும்பாண்டியனுந் துரிதமாய்வந்தார்கள்
இந்திரன்கொலுதேடி இருவரும்வருகையிலே
கண்டானே இந்திரனுங் காவலர்கள்வருகிறதை
பூலோகராசாக்கள் பொன்னுலகம்வருகிறார்கள்
நரமதனிதராசாக்கள் நாடிவரக்காரணமேன்
இவர்களாய்வருவாறோ ஈச்சுரனால்வருகிறார்கள்
சொக்கரருள்பெற்று சொர்க்கபதிவாறார்கள்
நல்லதென்றுசொல்லி நலமுடன்பார்த்திருந்தார்கள்

இந்திரனைக்காண்பது.

சொர்க்கலோகயிந்திரச் சோழனவன்பார்த்து
மிகவும்பயந்து மேன்மையுள்ளயிந்திரற்கு
அஞ்சிப்பயந்து அடிதொழுதுதெண்டனிட்டான்
சாஷ்டாங்கதெண்டனிட்டான் சசிதேவிநாயகற்கு
தெண்டனிட்டசோழனைத் தேவேந்திரன்வாழ்த்தி
வணங்கியசோழனை வாயாரத்தான்வாழ்த்தி
பொற்பூடம்போடுமென்றார் பூலோகச்சோழனுக்கு
எட்டுப்படியின்கீழிட்டார்கள்பொற்பீடம்
வந்தமகாராசனை மன்னன்மனமகிழ்ந்து
அந்தமுள்ளபீடத்திலமர்ந்தானேசோழனவன்
எதிராகபாண்டியனும் இருமாப்புதானடந்து
மதுரையாளும்பாண்டியனும் வணங்காமற்றானிருந்தார்
நம்மைப்போலிவனொருவன் ராசனல்லோஇந்திரன்தான்
இந்திரனைநாமும் எப்படிவணங்குவது
பூலோகயிந்திரன்போற் பொன்மதுரையாளுகிறோம்
ஈஸ்வரன்கிருபையினா லிப்பூமியாளுகிறோம்
ஈசன்தயவிருக்க யிவனைவணங்குவதோ
சொக்கர்மகுத்துவத்தால் தொழாமலெதிரேநின்றார்
எதிர்நின்றபாண்டியனை யிந்திரனுந்தான்பார்த்து
வந்திருக்கும்பாண்டியன்றான் வணங்காமலிருப்பதென்ன
நம்மைமதிக்கவில்லை நாடாளும்பாண்டியனும்
எதினால்மதியாம லிருக்கிறான்பாண்டியனும்

சொக்கர்வலுவையினாற் றொழுகாமற்போனானே
நாதரதுதயவால் நம்மைமதிக்கவில்லை
பூலோகமன்னனுக்குப் பெருமைகள்தானுமுண்டோ
கெருவம்படைத்தோர்க்குக் கேடுவருந்தெரியாது
இவனுடையகர்வத்தை யினியடக்கவேண்டுமென்று
நல்லதனத்தாலே நடுங்கவைக்கவேணுமென்று
உபாயத்தினாலே ஒடுங்கவைக்கவேணுமென்று
மர்மத்தைக்கொண்டாராம் வானவர்கோனிந்திரனும்
ஆரடாதூதுவர்கள் அருகிருக்குங்காவலரே
சரியொத்தபாண்டியற்குச் சரிபீடம்போடுமென்றார்
எதிராகப்போட்டதொரு ஈடான ஆசனத்தில்
குந்துமென்றார்பாண்டியனைக் கொலுமேடையாசனத்திற்
சரியாகவுட்கார்ந்தான் தனிமதுரைபாண்டியனும்
ஆரடாதூதுவரே அரசாளும்மன்னனுக்கு
வந்ததொருமன்னனுக்கு மாலையொன்றுபோடுமென்று
கண்காட்டியிந்திரனுங் கனமுடனேமல்லருக்கு

இந்திரன் கெண்டிமாலை சூட்டினது.

பாண்டியராசனுக்குப் பதித்தமுத்துகெண்டியொன்று
ஆயிரம்பேர்சுமக்கும் ஆணிமுத்துகெண்டியொன்று
கொண்டுவந்துபோடுமென கொடிமதுரைபாண்டியற்கு
சூட்சமாயொருமாலை சோழனுக்குப்போடுமென்றார்
அப்படியேயோடினார்க ளந்தப்புரந்தானுழைந்து
ஆயிரம்பேர்மல்லரவ ராள்பிடித்துத்தோளூன்றி
நெக்கியெடுத்தார்கள் நேரானகழுத்துகெண்டி
இத்தோடேபாண்டியன்றான் ஈரல்நடுங்கிடுவான்
தூக்கிக்கொண்டுவந்தார்கள் சூரரந்தமல்லர்களும்
இந்திரன்கண்காட்ட எதிர்வந்தார்மல்லர்களும்
பாண்டியற்குவெகுமதியாய்ப் பார்மன்னன்சூடுமென்றார்
போட்டார்கள்கழுத்திலேதான் போர்மல்லராயிரம்பேர்
அப்பெரியமாலையைத்தான் அழகுள்ளபாண்டியனும்
நாதரதுகிருபையினால் நடுக்கங்களில்லாமற்
சொக்கரைதுதிசெய்து தோளிலேதாங்கிக்கொண்டான்
மார்பைநெளித்துவே மாலையைத்தாங்கிகொண்டான்
கண்டார்களெல்லோருங் கனமானபாண்டியனை
தேவேந்திரன்கண்டான் சிறப்புள்ளபாண்டியனை
இவனாலேயொன்றுமில்லை யீசரதுதன்பலந்தான்
அறிவோமிவனுடைய ஆங்காரவலுமையென்று
பாண்டியன்மேலேயல்லோ பகைவைத்தானிந்திரனும்

ஒருவருக்குந்தெரியாம லுள்ளத்தில்கபடுவைத்தான்
பாண்டியன்முகம்நோக்கி பண்புடனேதுசொல்வான்
சோழனுநீருயாய்ச் சொர்க்கபதிவந்ததென்ன
வந்தவயணமதை வகைபிரித்துச்சொல்லுமென்றார்
அப்போதுபாண்டியனும் அருள்புரிந்தேதுசொல்வான்
எந்தனதுகாரியமா யிவ்விடத்தில்வந்ததில்லை
சோழனுக்காயிங்குவந்தேன் சொர்க்கபதியிந்திரனே
அவ்வரசனலுவல்கொண்டு அமராபதிவந்தேனென்றார்
தொந்தரைகள்படுகிறானே சோழனிந்தமன்னவனும்
மழைமாரியில்லாமல் வருத்தங்கள்மிகவாகி
கம்முதேராச்சியத்தில் கருகுதேபூமியெல்லாம்
பரிசனங்களெல்லவரும் பரதேசியானார்கள்
பன்னிரண்டுதன்வருடம் பாரில்மழைகிடையாது
அந்தவிசனத்தாலே அடுத்துவந்தாரென்னையும்
என்னாலேயாகாதென்று யீசரண்டைபோயுரைத்தேன்
உம்மண்டைபோகவல்லோ உத்தரவுசெய்தார்காண்
ஈசர்விடைபெற்றுமல்லோ இவ்விடத்தில்வந்தோம்யாம்
உம்மாலேயானும்நல்ல வுதவிபெறவேண்டுமென்றான்
அந்தமொழிகேட்டு ஆயிரங்கணிந்திரரும்
சோழன்முகம்பார்த்துச் சொல்லுவாரிந்திரரும்
எதுக்குமஞ்சாதே யின்பமுள்ளமன்னவனே
ஈசர்தயவாலே இனியசவுக்யமுண்டு
அப்படியேசெய்விப்பேன் அஞ்சாதேசோழமன்னா
னென்முறைமைதானறிந்த நீதியுள்ளமன்னவனே
நாதரதுவார்த்தைக்கு நாமென்னபேசுவோமே
அப்படியேயானடப்பேன் அரசனேநடவுமென்றார்
தேவேந்திரன்சொல்லத் திடுக்கிட்டெழுந்திருந்து
சாஷ்டாங்கதெண்டனிட்டுச் சரணமென்றடிபணிந்தார்
வாழ்த்திவிடைகொடுத்தார் வானவர்கோனிந்திரனும்
உத்திரவுபெற்றானே உலகாளும்சோழமன்னன்
பாண்டியனுமப்போது பக்குவமாயெழுந்திருந்து
இந்திரரேவிடைதாரு மெங்களிருவருக்கும்
போய்வாருமென்றுசொல்லி போகவிடைகொடுத்தார்
ஆனந்தமாய்பூரித்து அரசர்களிருவருமாய்
தெய்வலோகம் விட்டுமல்லோ திரும்பினார்பூலோகமெல்லாம்
மதுரைவளநாட்டில் வந்தார்களிருவருமாய்
சோழனுக்குவெகுமதிகள் செய்தந்தபாண்டியனும்
அனுமதிகள்பெற்றுகொண்டு அனுப்பிவிடைகொடுத்து
பாண்டியன்விடைபெற்றுப் பார்மன்னன்சோழனவன்
சொக்கரைத்தரிசித்துச் சோழன்நடந்துவிட்டான்

தன்னுடையராச்சியத்திற் றன்ஞ்செயனும்போய்நடக்க
இப்படியாய்ச்சோழ னிருக்குமந்தவேளையிலே

இந்திரன்கோபித்துச் சோழன்பெருமைபடவும் பாண்டியன் சிறுமைபடவுஞ்செய்தது.

ஆகாயவிந்திரனு மன்புடனேதுசெய்தார்
பாண்டியன்வந்ததுவும் பார்சோழன்வந்ததுவும்
தன்னைவணங்காமற் றயிரியமாய்ப்போனதுவும்
நரனனபாண்டியன்று னம்மைவணங்காததினல்
மதியாமற்போனவனை யடக்கவேணுமென்று
கோபங்கள்கொண்டாரே கொழுந்தணல்போலிந்திரனும்
எறிபரந்தகண்களுடன் இந்திரனுரேதுசொல்வார்
மேகங்களேழையும் மேன்மையுடன்வரவழைத்து
சப்தமேகமத்தனையுஞ் சதிராய்வரவழைத்து
வருணபகவானை வரவழைத்திந்திரனும்
கேளுங்கள்மேகங்களே கீர்த்தியுடனென்வார்த்தை
இன்றுமுதலாக ஈடழிவான்மதுரையிலே
கால்வைக்கக்கூடாது கருமேகம்நீங்களெல்லாம்
அன்னீதவான்மதுரையிலே அடிவைக்கலாகாது
தூரல்விழப்போரீர்கள் துன்மார்க்கன்மதுரையிலே
எடுத்தடிவையாமல் இடைந்துமழைபெய்யுங்கள்
அவனுடையபூமியினி லடிவைக்கலாகாது
மதுரையிலேநீங்களும்போய் மழைபெய்தீராமானல்
கால்விலங்கும்கைவிலங்கும் கழற்றுப்பெருவிலங்கும்
தாழ்விலங்கும்தோள்விலங்கும் தரிக்காப்பெருவிலங்கும்
விலங்குகள்போட்டுமல்லோ வெட்டியெரிந்திடுவேன்
என்வார்த்தையைத்தடுத்து வருஷிக்கப்போகிறீர்கள்
சோழனதுசீமையிலே சொர்னமழைபெய்திடுங்கள்
மாதமும்மாரி வருஷியுங்கள்சோழனுக்கு
முப்போகந்தான்விளைய மும்மாரிபெய்திடுங்கள்
எந்நாளுஞ்சோழனுக்கு இடையூறுவாராமல்
அரசனுடையசீமையிலே அமர்ந்துமழைபெய்திடுங்கள்
என்றுவிடைகொடுத்தா ரிந்திரனரப்போது
நல்லதென்றுசொல்லியல்லோ நலமாகமேகமெல்லாம்
மதுரையைநாடாமல் வருகிறதேமேகமெல்லாம்

சோழராஜன் பெருமைப்பட்டது.

சோழனதுசீமையிலே சொலிக்கிறதேபெருமழைகள்
கடலிரைச்சல்போலாக கம்மிற்றேமேகமெல்லாம்
குமிறியிடித்துக் குடங்கொண்டுபொழிகிறதே
இரைச்சலுடனுக ஏகவெள்ளம்பொழிகிறது
சோனைமழைகளது சொரிகிறதேபூமியெல்லாம்
நல்லமழைகளாலே நாடுசெழித்ததுவே
பூமிகுளிர்ந்ததங்கே பொய்கைகள்நிரம்பியது
ஏரிகுளம்நிரம்பி புரளுதேயேகவெள்ளம்
மடுக்கள்குளம்நிறம்பி கால்வாய்கள்தானிரம்பி
ஆறுகள்நிறம்புவதா லடைபடுதுவெகுசனங்கள்
கழனிபள்ளம்நிறம்பி கால்வாய்கள்தானிறம்பி
ஊற்றுகள்தான்சுரந்து ஓடிற்றேசலம்விசையாய்
தடாகங்கள்தானிறம்பித் தாமரைப்பூத்ததுபோல்
வயல்கள்நிறம்பியல்லோ வாய்க்காலுந்தானேடி
உலர்ந்தமரங்களெல்லாம் உயிருண்டாய்துளிர்த்ததுவே
அடியற்றமரங்களெல்லாம் அன்பாய்த்துளிர்ந்தவே
காடுசெடிகளெல்லாம் கனமாகவேதுளுக்கும்
செடிகள்மரங்களெல்லாம் செழிப்பாய்வளர்ந்திருக்கும்
பூவாமரங்களெல்லாம் பூத்துச்சொரிந்தனவே
செந்நெல்விளைந்தனவே தேசஞ்செழித்தனவே
கிள்ளப்பழுத்ததுவே கிளிகள்வந்துசேர்ந்ததுவே
அள்ளப்பழுத்ததுவே அணிகள்வந்துசேர்ந்ததுவே
சோலைகள்சாலைகளுஞ் சூழ்ந்ததடாகங்களும்
குருவியடுத்தனவே குயில்கள்வந்துபாடுவதும்
தாராவும்மயில்களும் தாவிவிளையாடுவதும்
குயில்களிரைச்சலிடுங் கோகிலங்கள்சத்தமிடும்
அன்னங்கள்பேடையது அநேகம்வந்துசேர்ந்ததங்கே
பண்டுபழங்கள்தின்று களித்தனபறவையெல்லாம்
ஏர்கட்டிவிழுவாரும் இளநாற்றுநடுவாரும்
பயிரிடுங்குடிகளெல்லாம் பலப்பட்டார்பூமியிலே
ஓடுங்குடிகளெல்லாம் ஊர்வந்துசேர்ந்தார்கள்
பரிதேசியரிதேசி பஞ்சைபனுதியெல்லாம்
சோழராசன்பட்டணத்தில் சுகப்பட்டுவாழ்ந்தார்கள்
பிச்சைக்காரரெல்லோரும் பெருமையடைந்தார்கள்
சோழமண்டலங்களெல்லாம் சுகமாய்த்தழைத்தனவே

சோழமகாரர்ஜன் தொலைத்தான்விசனமெல்லாம்
கீர்த்தியடைந்தானே கிருபைக்கடலானன்
இந்திரனைமனந்தனிலே எந்நாளும்நினைத்திருப்பான்
மாதமும்மாரி வருஷிக்கும்மண்டபத்தில்
சோழமகாராஜன் தொலைத்தான்விசனமெல்லாம்
அப்படியாகவாழ்ந்தான் அழகானசோழமன்னன்

பாண்டியன் வறுமையடைந்தது.

பாண்டியநாட்டார் பரதேசம்போனார்கள்
மழைகள்கிடையாது மதுரைநகர்சீமையிலே
தூரல்கிடையாது தென்மதுரைபூமியிலே
தூரல்விழுவதில்லை சொக்கர்மதுரையிலே
காய்ந்துலர்ந்துபோயினவே கனமதுரைபட்டணத்தில்
எறிந்துபுகைகிறதே ஈரங்கிடையாமல்
குடிக்கநீர்கிட்டாது குளங்கள்மடுக்களெல்லாம்
காகங்குடிப்பதற்குக் கரண்டிசலங்கிட்டாது
ஆறுகள்குளங்களெல்லாம் அடங்கலும்வரண்டனவே
ஏறிகள்வரண்டனவே ஏற்றக்கோலாழமட்டும்
பூமிக்குள்சூடெழும்பிப் பொங்கிற்றேதணலாக
விளைவுகள்கிடையாது வேந்தன்மதுரையிலே
களைவுகள்கிடையாது கனமதுரைபூமியிலே
பொன்மதுரைநாட்டிலே புழுதியடைந்ததுவே
சருகுபோலுலர்ந்தனவே தழைத்தமரங்களெல்லாம்
பூமியிலுலர்ந்தது பூண்டுகிடையாது
பறவைகள்கிடையாது பாண்டியன்தேசத்தில்
குடிவலசைவாங்கினா கொடிமதுரையுள்ளவர்கள்
பஞ்சைபனாதியாய்ப் பரதேசம்போகிறார்கள்
அன்னங்கிடையாது அழகுள்ளமதுரையிலே
மதுரையைச்சுற்றி மகாவனங்கள்செடிகளெல்லாம்
காய்ந்துமிகத்தீய்ந்து கரும்புகைச்சல்கொண்டனவே
தங்கநிழல்கிடையாது தனிமதுரைபூமியிலே
ஊரிலேயுள்ளவர்கள் உறக்கங்கள்கொண்டார்கள்
பாழடைந்தமுகமானார் பாண்டியநாட்டிலுள்ளோர்
அன்னவிசாரம் அதுவேபெரிதாச்சு
பன்னிரண்டுவருஷம் பாரக்கருப்பாயிற்று
சீரம்வெளுத்தார்கள் சல்லடைக்கண்ணானார்கள்
பெண்டுடனேபிள்ளை புருஷர்களொருதேசம்
திக்குகள்கெட்டுத் திசைமாறிப்போனார்கள்
அப்படியலைந்தது அணிமதுரைபூமியெல்லாம்
இந்திரனாலே இடருகள்நேர்ந்தனவே
ஆயாசத்துடனே அணிமதுரைபாண்டியனும்

மழையில்லாநாடு வையகந்தானுமோ
என்றுவிசனமா யிருக்குமந்தவேளையிலே
மேகம்பொழியுந் தனிச்சோழன்நாட்டிலே
மேகங்குமரி மேலாகப்போய்விடுமாம்
மதுரையைநாடாமல் வகையுடனேபோய்விடுமாம்
இப்படியாயோடும்போது இதிலேயொருமேகம்
குட்டிமேகமொன்று குறுக்கிட்டுவோடும்போது
வருகிறவிசைதனிலே மதுரையென்றுதெரியாமல்
பொழிந்துகொண்டேயோடிற்று போகும்விசையிலே
அந்தமழைவெள்ளம் அணிமதுரைபெருகிற்று
வெள்ளம்புரண்டுது வேந்தன்மதுரையிலே
வைகைப்பெருக்கெடுத்து மாவெள்ளமோடுவதை
அதுகண்டுபாண்டியனும் அவசரமாயெழுந்திருந்தான்
துரிதமாயெழுந்திருந்தான் சுந்தரப்பாண்டியனும்

பாண்டியன் வைகையாற்றை அணைகட்டியது.

ஓடுகிறவெள்ளத்தை உள்ளடக்கவேணுமென்று
அப்புறம்போகாமல் அணைகட்டவேணுமென்று
ஆராதாதுவனே அணிமதுரைப்பட்டணத்தில்
வீட்டுக்கோராள்தான் விடுபட்டுவரவேண்டும்
ஆளனுப்பாவிட்டால் ஆக்கினைசெய்வேனென்று
அணைகட்டவரச்சொல்லி அடியடாதமுக்கென்றான்
அப்படியேதானடித்தான் ஆனதொருசாம்புவனும்
அந்ததமுக்கடிக்க அணிமதுரையுள்ளவர்கள்
வீட்டுக்கோராள்கள் விடுபட்டுவருகிறார்கள்
அவரவர்கள்தம்முறைக்கு ஆளொருவர்வாறார்கள்
மண்வெட்டிக்கொண்டு வருகிறார்களணைகட்ட
பங்குள்ளவிதமாகப் பாறைகொண்டுஓடிவந்தார்
அவரவர்க்குப்பங்கு அளந்துகொடுத்தார்கள்
அளந்திட்டபங்குகளில் அதிலேகுறைபட்டால்
பங்குவிதக்காரனைப் பட்டாவுக்கிறையிடுவேன்
என்றுதிட்டஞ்செய்தான் இராசனந்தபாண்டியனும்
அவரவர்கள்பங்குவீதம் அனைவருங்கட்டும்போது
மதுரையிலேயொருத்தி வாணிச்சியென்பவளாம்
அவளுக்குயாதொரு ஆண்திக்குதானுமில்லை
அவளுக்கொருபங்கு அணைகட்டச்சொன்னார்கள்
பிட்டுசுட்டுவிற்று பிழைக்குமந்தவாணிச்சி
என்னசெய்வேனென்று எண்ணமிட்டாள்வாணிச்சி
ஆளுங்கிடையாது ஆருமற்றபாவிநான்

எனக்கிட்டஒருபங்கும் எப்படிக்குச்செய்வேன்
அணைகட்டஎந்தனுக்கு ஆளுங்கிடையாது
ஆளில்லையென்றால அரசனுங்கேட்பானோ
என்றுவிசனமுடனெண்ணியிருக்கையிலே

வாணிச்சிபிட்டுக்குச் சொக்கர்மண்சுமந்தது

அவளுடையவிசனத்தை யாற்றவேவேணுமென்று
அட்டாளுஞ்சொக்க ரைய்ரவரேதுசெய்தார்
அவளுக்குஆளாகி அணைகட்டவேணுமென்று
ஒட்டனைப்போலே யுருவெடுத்துசொக்கலிங்கர்
தண்டெனேமண்வெட்டித் தலைமேலேதானெடுத்து
வாணிச்சிஅண்டையிலே வந்துநின்றொட்டனாக
ஒட்டனைக்கண்டாளே உத்தமியாள்வாணிச்சி
ஆரடாஒட்டாநீ அணைகட்டவந்தாயோ
என்பங்குக்காளாகி யெனக்கணைகட்டுவையா
கட்டுவேனென்றார் கனத்துரையொட்டனவர்
கேட்டதொருகூலி கிருபையுடன்தருவேனென்றாள்
அவ்வார்த்தைக்கேட்டு அந்தஒட்டனேதுசொல்வார்
கூலிக்குபிட்டுசுட்டு கொம்பனையேநீகொடம்மா
உதிர்ந்துவிடும்பிட்டதனை உத்தமியேநீகொடுத்தால்
பிட்டுக்குமண்சுமந்து போடுகிறேனணையாக
அப்படியேநல்லதென்று எவ்வாணிச்சிக்கிழவி
பிட்டுசுடும்போது பிட்டுமுதிர்ந்ததுதான்
உதிர்ந்தபிட்டைதானெடுத்து உத்தமியுங்கொடுத்தாளே
ஏந்திமடியில்வைத்து யீஸ்வரனுமொட்டனவர்
வாணிச்சிபங்குக்கு வந்தாரேயணைகட்ட
உதிர்ந்தபிட்டைத்தின்று ஒருகூடைமண்சுமந்து
போடுவாரொருதட்டு பிட்டுஞ்சரியாகும்
மறுபடியுந்தான்வருவார் வாணிச்சியண்டையிலே
பிட்டுசுடுவாளாம் பொடியாய்உதிர்ந்திடுமாம்
உதிர்ந்ததொருபிட்டுக்கு ஒட்டன்வந்துநிற்பாராம்
பிட்டெடுத்துக்கொடுப்பாள் போனஒட்டனுக்கு
ஒருதட்டுமண்ணுக்கு உதிர்ந்தபிட்டுசரியாகும்
வாணிச்சிஅண்டைக்கு வந்துநிற்பாரொட்டனவர்
பிட்டுசுடும்போது பொடிபொடியாயுதிர்ந்திடுமாம்
உதிர்ந்ததொருபிட்டுக்கு ஓடிவந்துநிற்பாராம்
பிட்டுக்கொடுப்பாளாம் போவாராம்தின்றுகொண்டு
ஒருதட்டுமண்போடவே னுதிர்ந்தபிட்டுசரியாகும்
மறுபடியும்வாராராம் வாணிச்சிபிட்டுக்கு
ஒருபிட்டுசுட்டாலும் உதிராதிருப்பதில்லை

சுடப்பட்டபிட்டனைத்துஞ் சொரசொரென்றுதிர்ந்திடுமாம்
உதிர்ந்ததொருபிட்டுக்கு ஓடிவந்துநிற்பாராம்
பிட்டுதின்றுகொண்டே பாடுவாரொருதட்டு
பிட்டுவிலையாகவில்லை ஒட்டன்வேலைசாயவில்லை
பாதியணையாயிற்று பாதியின்னங்கட்டவில்லை
அவரவர்கள்பங்குக்கு அணைகட்டியாயிற்று
வாணிச்சிபங்குக்கு வரப்புகட்டி தீரவில்லை
பிட்டுகளைதின்கிறதும் போகுரதும்வருவதுமாய்
ஒட்டன் திரிவதிலே உதிர்ந்தபிட்டுஞ்சரியாயிற்று
பொழுதுமறைந்தது பொன்மதுரைபாண்டியனும்
கட்டின அணைகளை கனமுடனேபார்த்துவந்தான்
வாணிச்சிபங்குக்கு வரப்பின்னுங்கட்டவில்லை
ஆருதடாயிந்தப்பங்கு அணைகட்டி தீரவில்லை
எவனுதடாயிந்தஅணை யென்றுமேபாண்டியனும்
அரசனுக்குச்சொல்லுகின்றா ரணைகட்டுமன்னவர்கள்
வாணிச்சிப்பங்குக்கு வந்தானேயொட்டனவன்
அவனுடையபங்கிதுதான் அணைகட்டவில்லையென்றார்
கோபங்கள்கொண்டானே கொற்றவனார்பாண்டியனும்
எங்கேயடாஒட்டனவ னிழுத்துக்கொண்டுவாருமென
ஒட்டனைப்பிடித்துவந்தார் உலகாளும்ராசனண்டை
கண்கள்சிவப்பேறிக் கனமதுரைபாண்டியனும்

சொக்கர் பிரம்பாலடிப்பட்டது.

பிட்டுக்குமண்சுமந்த பித்தரென்றறியாமல்
ஒட்டனென்றெண்ணியல்லோ ஓங்கியடிக்கலுற்றான்
கைபிடித்தபிரம்பதனைக் கரகரென்றுதான்சுழற்றி
ஒட்டன்முதுகின்மேலே லோங்கியடித்தானே
அந்தஅடிபடவே ஐயரந்தசொக்கருக்கு
வருத்தங்கள்கொண்டாரே மதுரைசொக்கநாதருந்தான்
அந்தவடியுந்தான் அனைவருக்கும்பட்டனவே
அவரவர்கள்தம்முதுகில் அகத்தழும்புநேர்ந்தனவே
திக்குதிசைகளும தேவாதிரங்களெல்லாம்
அண்டங்கள்தீவுகளும் ஆகாசமெவ்விடத்தும்
சகலசீவசெந்துக்கும் தழும்புமிகவுண்டாச்சு
பாண்டியன்முதுகின்மேற் பாரத்தழும்பாயிற்று
எல்லவருப்பயந்தா ரிந்தவடியாலே
பாண்டியனுமப்போது பயந்துநடுநடுங்கி
எங்கேயந்தஒட்டனென்ன வெடுத்துப்பார்க்கையிலே
மாயமாய்தான்மறைந்தான் வந்ததோரொட்டனவர்
எங்கெங்குந்தேடினான் இனிமதுரைபாண்டியனும்
காணுததினாலே கனகத்தாணிடிவிழுந்தான்

வந்தவரோட்டனல மாபாண்டிசொக்கரவர்
ஆண்டவராகவேனும் ஆளடிமைசெய்யவந்தார்
தெரியாமற்பாச்சுதென்று சிந்தைதவிக்கவாடி
நீலிமீனாட்சாளுமே தெய்வமென்றுபாராமல்
வல்லினக்காளானேனும் மகாதேவனென்றறியாமல்
இந்தவிதிப்பயனை எப்போதொலைந்திடுவோம்
வந்ததுநமக்குமல்லோ மதிமோசமென்றுசொல்லி
எந்தவிதத்திலேயும் ஈடேறப்போறதில்லை
தெரிந்ததுநமக்கென்று தென்மதுரைபாண்டியனும்
மெத்தவிசனமாய் விடுதிக்குவந்துவிட்டான்
அழகியசொக்கரவர் ஆண்டவனாரப்போது
ஒட்டனென்றஉருவை உத்தமனார்தான்மறைத்து
ஆலயத்தில்வந்தாரே அட்டாளும்சொக்கலிங்கர்
வருத்தத்துடனேயவர் வந்துநின்றாராலயத்தில்
அப்போதுமீனாட்சி யண்டையிலேஓடிவந்து
ஏதுகாண்சுவாமிநீரு மிப்படிக்குவந்ததென்ன
அலைபகுலையவந்தீர் அக்குறையைச்சொல்லுமென்றாள்
கேளுமென்னாயகியே கிளிமொழியேமீனாட்சி
வாணிச்சிக்காகவல்லோ மண்சுமக்கப்போயிருந்தேன்
பிட்டுக்குமண்சுமக்கப் பிரம்படிபட்டுவந்தேன்
அடித்தான்பிரம்பாலென் னங்கந்தழும்பேற
கொடுத்தான்முதுகின்மேற் கொடும்பாவிபாண்டியனும்
சகாயஞ்செய்யப்போனேன் அபாயம்வந்துநேர்ந்ததுகாண்
அபாயமென்னைச்செய்தவனை ஆதரிக்கப்போறதில்லை
என்றுரைக்கசொக்க ரெடுத்துரைப்பாள்மீனாட்சி
அறியாமற்செய்தபிழை பெரியோர்மனம்பொறுப்பார்
மறுரூபங்கொண்டல்லவோ மண்சுமக்கப்போனதினால்
ஆளடிமையென்றுசொல்லி அடித்தான்பிரம்பாலே
ஐயனென்றுதானறிந்தா லடிபணிந்துதொழுதிடுவான்
தெரியாதவன்செய்தால் சிற்றத்தில்வையாமல்
ஆதரிக்கவேண்டுமென்றாள் அங்கையற்கண்மீனாட்சி
அவ்வசனங்கேட்டு அழகுசொக்கரேதுசொல்வார்
என்னையடித்தஅடி எல்லோர்க்கும்பட்டதுகாண்
உலகத்துக்கெல்லாம் உரைத்ததேபிரம்படிதான்
சித்தர்கள்முனிவர்கள் தேவருக்கும்பட்டதுவே
வானவரிஷிகளுக்கும் மாயனுக்கும்பட்டதுவே
சப்தரிஷிகளுக்கும் தபோதனர்க்குபட்டதுவே
சகலசீவஜெந்துக்கும் தழும்புவந்துநேர்ந்ததுவே

கன்னியர்கள்கெர்ப்பம் கருவுக்கும்பட்டதுவே
இந்தப்பழிபாவம் எப்படிதொலையுமடி
எப்படிக்குப்பெண்ணை மைந்தன்வரய்நான்கொடுப்பேட
கருவுதரிக்கவேதான் கன்னியரேநான்கொடுக்கேன்
அந்தப்பழிபாவம் அத்தோடேதொலையுமடி
என்றுமிவருரைக்க வந்திழையும்பேசாமல்
மௌனமாய்த்தானிருந்தாள் மதுரை மீனாட்சியரும்
இப்படிச்சிலகாலம் இருக்குமந்தவேளையிலே
பாண்டியனுடு பரிசனங்களெல்லவரும்
அரசனதுநாடு அருமைமழையில்லாமல்
தத்தளித்துப்போகிறதே தனிமதுரைபூமியெல்லாம்
அரனுரைததானடிக்க அக்கொலைப்பாதகனும்
கம்முதேநாட்டிற் கதருதேபூமியெல்லாம்
மைந்தருமில்லை மருடமுடி அரசனுக்கு
பிள்ளைகளுமில்லை பேரானமன்னனுக்கு
அப்படியேதுன்பம் அரசனும்பட்டிருக்கான்
ஆரையும்வணங்காத அங்கசித்ராங்கதனும்
சிறுத்தேனைச்சொல்லி பெருத்தவரைபோயடுக்கான்
தெய்வமேகதியென்று தேசத்தையாண்டிருந்தான்
சொக்கரேகதியென்று தோத்திரங்கள்செய்திருந்தான்
பன்னிரண்டுதன்வருடம் பாரில்மழையிலலாமல்
துன்பங்களுடனேயல்லோ துரைத்தனமும்பண்ணிவர

சொக்கருமீனாட்சியும் கானகமடைந்தது

மதுரையிலேவாழும் மகாதேவர்சொக்கலிங்கம்
அங்கையர்கண்மீனாட்சி அம்மனும்சொக்கருமாய்
இருவருய்வரும்போது ஏகாந்தவேளையிலே
தேவியரைப்பார்த்து சுவாமியவரேதுசொல்வார்
பெண்ணேமீனாட்சி பொற்கொடியேஆலயத்தில்
தணலாயெரிகிறது தனிக்காற்றடியாமல்
ஒடுக்கங்களாகுது உள்மதுரைப்பட்டணத்தில்
காற்றுங்குளிர்ந்தடிக்க கனிவிருட்சங்கிடையாது
ஒடுக்கங்கள்தீரவேண்டி உலாவிநாம்வந்திடலாம்
காத்துவாடைக்குநாம் கானகத்தில்போய்வரலாம்
மதுரையைச்சுற்றி வருவோம்சாம்பெண்மயிலே
வாருமென்றுசொக்கர் மயிலேணையைதானழைக்க
அப்படியேநல்லதென்று அங்கயற்கண்மீனாட்சி
சம்மதிப்பட்டு சதியும்புருடனுமாய்
இடபத்தின்மேலேறி ஈஸ்பரனுமீஸ்வரியும்
எருதின்மேலேறி யிருவரும்வெளியானார்
ஆலயத்தைவிட்டு ஐயரும்வெளியானார்

மதுரையவிட் ... காதேவர்வெளியானார்
மதுரையைச் ...றி வந்தார்களிருவருமாய்
பட்டணஞ் ...ள்சுத்தி பார்த்துவருகையிலே
அழகு ...றைந்து அழகானதென்மதுரை
அங்—கொருநிழலும் ஆதரிக்கக்கிடையாது
தோட்டங்கிடையாது துறவுகள்தாந்திருக்கும்
நிற்கநிழலுமில்லை நிலத்திற்றரிப்போமென்றால்
கானகங்களத்தனையும் கட்டையாயுலர்ந்திருக்கும்
செடிகள்கிடையாது செட்டுகள்கிடையாது
தழைகள்கிடையாது சற்றேயிருப்போமென்றால்
வெய்யலுறைக்கின்றது வெங்கானல்வீசிடுமாம்
கானலுறைக்கின்றது கடுங்கானல்வீசிடுமாம்
வேர்வைபொழிகிறது விமலருக்கும்பார்வதிக்கும்
அண்டமுடிகூடவில்லை அக்கினிவாடையது
அக்கினிவாடையது அனல்கொண்டுவீசுதையா
நடுகாட்டில்வந்தார்கள் நாதரும்தேவியரும்
அந்தநடுகாட்டில் அலைந்துவருகையிலே
பசுமையாகத்தழைத்துப் படர்ந்துநெருங்கிருக்கும்
சந்துகள்தெரியாமல் தழைத்திருக்கும்வில்வமரம்
என்னேரமுஞ்சலங்கள் இலையிற்படர்ந்திருக்கும்
காய்த்துபழுத்து கனிகளுதிர்ந்திருக்கும்
பூத்துப்பழுத்துப் புஷ்பங்கள்பரிமளிக்கும்
தென்னலதுவீசும் தேகங்குளிர்ந்திருக்கும்
அந்தமரமொன்று அவ்விடத்திற்றழைத்திருக்கும்
அவ்விடத்தில்வந்தார்கள் அரசனுமுமையவளும்
அந்தவதிசயத்தை அன்புடனேகண்டுவிட்டார்
சோபமுந்தான்தெளிந்து தேகமுந்தான்குளிர்ந்து
இந்தநடுகாட்டி லிதுதழைத்தவதிசயத்தை
கண்டறிவோமென்று கடுகியேகீழிறங்கி
எருதைநிழலில்விட்டு இறங்கினார்மரத்தருகில்
ஆயாசந்தீர்வதற்கு அவ்விடத்திலுட்கார்ந்தார்
சவுக்கியமானார்கள் தங்கள்சரீரத்தில்
இருவருமுட்கார்ந்து ஏகாந்தமாயிருக்க
பட்டம்பகலிலே பாங்கானவேளையிலே
உச்சியிற்சூரியன் உருமத்தின்வேளையிலே

நீர்காக்கையைக்கண்டது

அங்கேயொருநீர்க்காகம் அலைகடலில்போய்முழுகி
கடலில்முழுகியே கடல்சலத்தைத்தான்வாரி
சப்பட்டையில்நிறைய சலங்கொண்டுதான்வந்து

கடல்நீரைக்கையாலே காகமதுகொண்டுவந்து
வில்வமரத்தின்மேல் மேலாகத்தான்பறந்து
மேலிருந்துவிசிற்றும் மேன்மையுள்ளகாகமது
மழைமாரிபோலே வருஷிக்குங்காகமது
வருஷித்தசலங்கள் மகாதேவர்மேற்பட்டவே
குளிர்ந்ததேகேதகங் கொடிமதுரைசொக்கருக்கு
அங்கயற்கண்ணம்மனைக்கு அங்கம்குளிர்ந்ததுகாண்
எதிர்ந்தசலமென்று எடுத்துப்பார்த்தார்கள்
சங்கரும்சங்கரியுந் தலையெடுத்துப்பார்க்கையிலே
நீர்க்காகம்சலம்பொழிந்து நின்றுபறந்ததுவே
அந்தநல்லகாகத்தை ஆண்டவனார்தான்பார்த்து
பார்த்தாயோபெண்ணேநீ பட்சியுடதன்னறிவு
கண்டாயோபெண்ணேநீ காகத்தின்தன்னறிவு
இந்தமரத்துக்கு இக்காகம்நீர்தெளிக்க
ஏதனால்தெளிக்கிறதோ இதையறியவேண்டுமென்று
காகத்தைதான்கேட்டு காரியமறிவோமென்றார்
அப்படியேயழையுங்கள் அறிவுள்ளகாகமதை
என்றுமவையுரைக்க ஈஸ்வரனுமப்போது
ஆகாயத்திற்றான்பார்த்து அந்தநீர்க்காகமதை
கைகாட்டிதானழைத்தார் கைலாசநாதருந்தான்
கண்டதுகாகம் கைலாசநாதரென்று
அஞ்சிப்பயந்து ஆகாயம்விட்டிறங்கி
தாய்தகப்பன்வந்தாரோ தற்காக்கநம்மையென்று
சீக்கிரமாய்தானிறங்கி திட்டனவேயோடிவந்து
முக்கால்வலம்வந்து முடிவணங்கிதெண்டனிட
நாற்கால்வலம்வந்து நமஸ்கரித்துதெண்டனிட
தெண்டனிட்டபட்சியைக் சிவனாரும்தான்வாழ்த்தி
அடிபணிந்தகாகமதை அரனாருந்தான்வாழ்த்தி
இந்தமரத்துக்கு இறைப்பதென்னநீசலத்தை
இந்தமரதனாலே இத்தனைவருத்தமென்ன
வருத்தத்துடனேநீ வந்துநீர்தெளிப்பதென்ன
சொல்லுமென்றுகேட்டார்கள் சொக்கரும்அம்மனுமாய்
கண்டதுகாகம் சனக்கமிகப்பயந்து
சொல்லுரதுகாகஞ் சொக்கரவர்கேள்விபட
தங்களுக்கேயுகந்த தனித்தமரமென்றுசொல்லி
விமலருக்குகந்த வில்வமரமென்றுசொல்லி
அதனால்கடல்நீரை அள்ளிவந்துயாந்தெளித்தேன்
நாடோறும்யாந்தெளித்தேன் நாதருக்கேற்றதென்று
இதுதானேயெந்தனுக்கு ஈஸ்வரனார்கட்டளைதான்

அவ்வார்த்தைதான்கேட்டு அரனாரும்அம்மனுந்தான்
பூரித்திருந்தோளும் புத்தியுள்ளகாகமென்று
ஆனந்தமாய்ப்பூரித்து அறிவுள்ளகாகமென்று
கட்டித்தழுவி காகத்தைதானோக்கி
எந்தனுக்கேற்றதோ இந்தமரமென்றறிந்து
களையாகவந்தவற்கு களையாற்றிவைத்தாயே
இந்தசகாயமதை எங்களுக்குச்செய்தாயே

சொக்கர்நீர்க்காக்கைக்கு வரங்கொடுத்தது.

உனக்கொருசகாயம் உதவிசெய்வேனென்றுசொல்லி
என்னவரம்வேண்டும் இன்பமுடனுந்தனுக்கு
கேட்டவரம்தருவேனென்றார் கிருபைமிகக்கூர்ந்து
அப்போதுகாகந்தான் அரனாரைச்சேவித்து
சொல்கிறதுகாகனும் சொக்கருக்குதெண்டனிட்டு
கைலாசநாதரே கண்மூன்றுடையவரே
என்மனதிலிருக்கின்ற எண்ணத்தைச்சொல்கின்றேன்
கன்னிப்பெண்ணாகி கனமதுரைப்பாண்டியனை
சேரவேண்டுமென்று சிந்தையில்நினைத்திருந்து
என்னுடையபாலனுக்கு இசைந்தபட்டந்தரவேணும்
அந்தவரமெனக்கு அருள்புரியவேண்டுமையா
காகமதுசொல்வதைக் கண்டாரேசொக்கலிங்கம்
ஆனாலொருவார்த்தை அன்பானகாகமேகேள்
கன்னிப்பெண்ணாகி கனமதுரைநீபோனால்
மன்னனைச்சேர்ந்தாலும் மலடியாய்போய்விடுவாய்
உன்னைப்பெண்ணாகி ஒருமாதங்கெர்ப்பமதாய்
அனுப்பிவைப்பேனுன்னை அரசனதுமதுரையிலே
ஆரென்றுகேட்பான் அணிமதுரைபாண்டியனும்
ஆருமற்றபாவிநான் அண்டவந்தேனும்மையென்று
சொல்வாயேயாகில் தோழியாய்வைத்துக்கொள்வான்
தாதியாயிருந்தாயானால் தையலேயுந்தனைத்தான்
வசந்தனுவானால் மருவமணங்கொள்ளுவான்
ஆருமறியாமல் அணைவானேயுந்தனைத்தான்
அணைந்தாசைதீர்த்திடுவாய் அரிவையிளமாதே
உன்வயிற்றிலேபிறக்கும் உதியுள்ளபாலனுக்கு
பட்டந்தரிப்பான பட்டணத்திலொருபங்கு
அந்தவரமளித்தேதன் அப்படியேநடவுமென்றார்
சம்மதித்துகாகனும் சந்தோஷங்கொண்டதுவே
காகத்தைப்பெண்ணாக்கி கருப்பமுமுண்டாக்கி
நீர்க்காக்கையென்று நேரிழைக்குப்பேர்கொடுத்து
நடவுமென்றுபேர்கொடுத்து நாதரவர்போய்விட்டார்

நீர்க்காக்கைப்பெண்ணாகிப்பாண்டியனையடுத்தது.

அப்போதுநீர்க்காக்கை யரிவையந்தபெண்ணணங்கு
மதுரைநகர்தேடி வந்தாளேபெண்மயிலாள்
அப்போதுபாண்டியன் அரிவையரைத்தான்பார்த்து
சுந்தரமும்வடிவ முள்ள தோகையரைத்தான்பார்த்து
ஆரடிபெண்ணேநீ யரியவுரையுமென்றார்
அவ்வசனங்கேட்டு ஆரணங்கேதுசொல்வாள்
ஆருமில்லாப்பரதேசி அண்டிவந்தேனும்மையென்றாள்
ஒருமாதங்கெர்ப்பம் உத்தமியாளெந்தனுக்கு
ஆருமற்றஎந்தனைநீர் ஆதரிப்பாயென்றுரைத்தாள்
அவ்வசனங்கேட்டு யந்தமுள்ளபாண்டியனும்
கெர்ப்பமானமங்கை கிளிமொழியாளாகையினால்
காப்பாற்றவேண்டுமென்றால் கன்னியரேயஞ்சாதே
அப்படியேசெய்வேனென்று அரிவையரைக்கூட்டிப்போய்
தன்னுடையதேவியண்டை தாதியாய்வைத்துவிட்டான்
சகலவிசாரணைக்குந் தாதியாய்தானிருந்தாள்
அழகுந்திருமேனி அலங்காரமாயிருப்பாள்
புத்தியுள்ளகுணவதியும் பூஷணாலங்கிருதையாய்
பாண்டியன்தேவிக்கு பட்சமாய்தானிருந்தாள்
சுந்தரமுமெவ்வனமும் சொல்லத்தொலையாது
வாலிபமாய்ப்பெண்மயிலும் மன்னவனார்தேவியண்டை
அதிகாரமும்பெற்று அவளிடத்திருக்கையிலே
சந்தமானகாலம் வந்துமிகநேரிடவே
மன்மதவேதனையால் மன்னனந்தபாண்டியனும்
தன்னுடையதேவியாந் தையலாண்மனைக்கு
மாளிகைதேடி வரும்போதந்தவேளையிலே
வாசற்படியிலே மயில்போலத்தாதியவள்
பொற்பதுமைபோலே பொன்னாபரணமின்ன
நின்றாளேநீர்க்காக்கை நேரிழையைத்தான்பார்த்து
அதிகமயல்கொண்டானே அந்தமுள்ளசுந்தரிமேல்
அவளுமிவர்பேரி லாசைகொண்டுநின்றாளே
ஒருவர்க்கொருவர் உடன்பட்டிருவருமாய்
ஆசையுடன்சேர்வதற்கு அரிவையரைத்தானழைத்தார்
அதற்கந்தநீர்க்காக்கை அரிவையருஞ்சம்மதித்து
என்வயிற்றிலேபிறக்கும் இனிதானமைந்தனுக்கு
பட்டங்கொடுப்பீரோ பாண்டியரேயென்னாளும்
காலிலொருபங்கு நடத்துவேன்மங்கையரே
அப்படிக்குச்சம்மதித்தாள் அரிவையிளமாது
ஆருமறியாமல் அங்கொருவர்காணாமல்
கூடியணைந்தான் கோலவிழிமாதரசை

ஆசைகளிதீர்த்தாளே அரன்கொடுத்தவரத்தினாலே
சமர்த்துடனேசேர்ந்து துரிதமுடன்பாண்டியனும்
தேவியன்னைபாண்டியனுஞ் சீக்கிரமாய்கட்டிட்டார்
இப்படிசிலகாலம்.யிருக்குமந்தவேளையிலே
அப்போதுநீர்காக்கை அதிவைபிளம்பிறையும்
மாதமும்பத்தாச்சு வருந்திமிகத்தவித்து
நீர்காக்கை நீன்முகனைப் பெற்றது.
பிள்ளையைப்பெற்றாள் பேருள்ளமதுரையிலே
மைந்தனைப்பெற்றாள் மாதந்தநீர்காக்கை
தாதிவயிற்றிற் சந்ததிபிறந்ததென்று
சந்தோஷங்கொண்டு சர்க்கரைவழங்குகிறார்
நீர்காக்கைபெற்றெடுத்த நேரானபாலனுக்கு
நீன்முகனென்று நேர்த்தியாய்பேருமிட்டார்
பிள்ளையில்லாமாளிகையிற் பிள்ளைபிறந்ததென்று
பாண்டியன்தேவி பட்சமாய்த்தான்வளர்த் ாள்
பிள்ளையும்வளர்ந்தது பேரானமாளிகையில்
தாதியின்பிள்ளையென்று சதங்கைகொலுசுமிட்டார்
காப்புகடகமிட்டு ஆபரணந்தான்பூட்டி
வயதுமைந்தாக வளர்த்துவருநாளையிலே
ஐந்துவயதாகி அமர்த்தினார்பள்ளியிலே
பன்னுதமிழ்வித்தை படிக்கவைத்தார்பள்ளியிலே
அம்புபிடிக்கறிந்தார் ஆயுதம்பிடிக்கறிந்தார்
சகலமுங்கற்று சாமர்த்தியமானபின்பு
அவனுக்குவேறே அரண்மனையமர்த்திவைத்தார்
வெள்ளாட்டிபெற்றெடுத்த வீரியன்நீன்முகனும்
அப்படியாயிருக்க ஆனதொருபாண்டியனும்
நமக்குப்பிள்ளைஇல்லையென்று ராஜனந்தபாண்டியனும்
சிங்காதனத்திற் செங்கோலுந்தான்பிடிக்க
பட்டணத்தையாள்வதற்கு பாலனில்லையென்றுசொல்லி
விசனத்தைக்கொண்டானும் வேந்தனந்தபாண்டியனும்
சித்ராங்கதனுடனே சேர்ந்திருந்தபாண்டியர்கள்
ஆறாயிரம்பேர்கள் அணிதிரளாம்பாண்டியர்கள்
பிள்ளைகளில்லாமற் பெருமலடாய்ப்போனோமே
ஆறாயிரவர்க ளனைவருமலடானும்
அவர்களுடன்கூட ஆரார்கள்தான்மலடு
பாண்டியர்களேழிவரும் பட்டத்தானைதான்மலடு
கொட்டாய்நிறைந்ததொரு குதிரையெல்லாந்தான்மலடு
பட்டிநிறைந்ததொரு பாற்பசுக்கள்தான்மலடு
தொழுவம்நிறைந்ததொரு செவ்வாடுதான்மலடு
எறப்பிலேயிருக்கின்ற எலிகளெல்லாந்தான்மலடு

தெருவிலேகூடுகட்டுஞ் சிறுகுருவிதான் மலடு
தெருவிலேதானிருக்குந் தென்னமரந்தான் மலடு
கொல்லையில்தானிருக்கும் புன்னைமரந்தான் மலடு
வாசலிலேதானிருக்கும் வாழைமரந்தான் மலடு
அழுக்கெடுக்கும்வண்ணானும் அம்பட்டனுந்தான் மலடு
வளர்கின்றநாய்களுடன் வாழ்பூனைதான் மலடு
மைந்தனுமில்லாமல் மகாபாவியானார்கள்
பிள்ளைகளில்லாமல் பெரும்பாவியானார்கள்
மைந்தர்பெறவேணுமென்று வருந்தியேபாண்டியர்கள்
சாலைகள்போட்டுவைப்பார் சத்திரங்கள்கட்டிவைப்பார்
நடபாவிதிருக்குளங்கள் நல்லதண்ணீர்கிணறெடுப்பார்
தவித்துவருவோர்க்கு தண்ணீர்பந்தல்போட்டுவைப்பார்
பசித்துவருவோர்க்கு பாலமிர்தஞ்செய்துவைப்பார்
ஆலயங்கடோறும் அணிமதில்கட்டிவைப்பார்
கோவில்கடோறுங் கோபுரங்கள்கட்டிவைப்பார்
காணுதகோவில்கட்கு காணிக்கையனுப்பிவைப்பார்
செங்கல்லைக்கண்டவுடன் தெய்வமென்றுகைதொழுவார்
கருங்கல்லைக்கண்டவுடன் கர்த்தனென்றுகைதொழுவார்
என்னதவஞ்செய்தாலு மேதாலும்பிள்ளையில்லை
தவத்திற்குபோகவென்று தங்கள்மனதிலெண்ணி

நீன்முகனுக்குப்பட்டங்கட்டிப் பாண்டியர் தவத்திற்குபோனது.

வெள்ளாட்டிபெற்றெடுத்த வேல்வேந்தன் நீன்முகனை
மதுரையையாள்வதற்கு மன்னனுக்குப்பட்டங்கட்டி
நீன்முகனைத்தானழைத்து நீதியுள்ளபட்டங்கட்டி
ஆதிசிவனைநோக்கி அருந்தபசுசெய்யவேண்டும்
மைந்தன்வரத்தைப்பெற்று வருகிறநாள்வரைக்கும்
எல்லையரசாளுமென்று இனியபட்டங்கட்டிவைத்தா
ஆயிரம்பாண்டியர்க ளையமாரனைவோரும்
ஆண்பெண்ணடங்கலும் அரியதவஞ்செய்வோமென்று
போகிறார்கள்பாண்டியரும் பொன்மலையைத்தான்தேடி
வனமாய்வனங்கடந்து வருகிறார்கள் பாண்டியர்கள்
காடுசெடிதாண்டி கரியமலைதான் கடந்து
சிருவதபருவதத்தைச் சேர்ந்தார்கள்பாண்டியர்கள்
ஆறுயிரம்பாண்டியரு மவருடையதேவியரும்
கண்ணிரண்டுமூடிக் கையிரண்டுமேந்திக்கொண்டார்
பரமசிவனைநோக்கிப் பாரதவம்பண்ணுகிறார்
மைந்தனைவேண்டியே மாளிகைமறந்தார்கள்
புத்திரனைவேண்டியே பூமிமறந்தார்கள்

பாண்டியர்களேறிவரும் பட்டத்துவெள்ளையானை
ஆறுயிரவருடன் ஆனைதவஞ்செய்கிறது
நாற்காலுயரெடுத்து நடுவேயோர்தும்பிக்கையில்
தும்பிக்கைநாட்டிச் செய்கிறதுபெருந்தவசு
அப்படியாகவேதா னநேகதவம்பண்ணுகிறன்
அப்போதுபரமசிவன் ஆதிகயிலையிலே
ஆவணிமாதத்திற்றன் அன்பானநாளையிலே
பிட்டுதிருநாளுக்குப் புறப்பட்டார்சொக்கலிங்கம்
தேவாதிதேவருடன் தெருசுற்றிவலம்வரச்சே
அரகராவென்றசத்தம் அலைகடல்போல்கோஷ்டமிட
சிவசிவாவென்றசத்தம் தேவருக்கும்காதடைக்கும்
அந்தசத்தங்கேட்டு அங்கயற்கண்ணேதுசொல்லுவாள்
என்சுவாமிஎன்குருவே என்னுடையகர்த்தாவே
அரகராவென்றசத்தம் அலைகடற்போற்கேட்கிறது
சிவசிவாவென்றசத்தம் செவியடைந்துபோகுதையா
இந்தவனத்தில்மெத்த இரைச்சலென்ன ஆண்டவனே
என்றுதான்கேட்டளவி லீஸ்வரனுரேதுசொல்வார்
ஆறுயிரம்பாண்டியர்க ளரியதவம்பண்ணுகிறார்
மதுரைநாடாளும் வாழ்பாண்டிநாட்டார்கள்
புத்திரனைவேண்டியே பொருந்திதவம்பண்ணுகிறார்
கோவிலுக்குப்போவோம் கொம்பனையேஎன்றழைத்தார்
இவ்வார்த்தைதான்கேட்டு ஈஸ்வரியுமேதுசொல்வாள்
தவசுபண்ணும்விந்தை தான்சுவாமிநானறியேன்
ஏதேது தவம்பண்ணுவா ரீஸ்பரரேபார்ப்போம்வா
அம்மனுடனே அரனுருங்கூடிவந்தார்
ஆறுயிரவர்க ளருந்தவசுபார்த்தார்கள்
புற்றுமூடிப்போனதுவும் பெருங்கரையானெறித்ததுவும்
புல்மூடிப்போனதுவும் புழுதியடைந்ததுவும்
யானைதவசுநிலை யருந்தவசுபண்ணுவதும்
உற்றுற்றுப்பார்த்தாளே உத்தமியாளீஸ்வரியும்
ஐயாபரனுரே ஆறுயிரவருக்கும்
புத்திரனளித்துவிடும் போனபாண்டியற்கு
ஆனல்கேள்பெண்மயிலே அரசர்செய்கொடுமையெல்லாம்
கூலிகுறைத்தார்கள் குறைமறக்காவிட்டார்கள்
அங்காடிகூடைதனை அதிரவிலையிட்டவர்கள்
பட்டடைநெற்களிலே பதரைக்கலந்தவர்கள்
பசித்தழுக்ம்பாரார் பாலடைக்குபால்வாரார்

தவித்தார்முகம்பாரார் தாகங்கொடுத்தறியார்
ஆண்டிபரதேசியைப்போல் அங்கொருநாள்வடிவெடுத்து
பாண்டியராசாக்கள் பருமுத்தளக்கையிலே
சிவதருமமென்று சேர்ந்துவந்துபிச்சையென்றேன்
பதரானமுத்தெடுத்துப் பாவியெனக்கிட்டார்கள்
சிப்பிமுத்துபோட்டார்கள் தோஷியந்தபாண்டியர்கள்
பதரிட்டபாவிகட்குப் பாலன்கொடுப்பதில்லை
பிட்டுக்குமண்சுமந்தேன் பிரம்படியும்பட்டுவந்தேன்
என்னதவம்பண்ணிறனும் ஏதானும்பிள்ளையில்லை
ஏழுபிறப்பிலேயு மிப்பிறப்புபிள்ளையில்லை
என்றதுதான்கேட்டு ஈஸ்வரியாளேதுசொல்வாள்
எப்பாவஞ்செய்தானு மீஸ்பரனேமனமிரங்கி
புத்திரனளிக்கவேணும் புகழானபாண்டியற்கு

பாண்டியற்கு ஈஸ்வரி புத்திரவரங்கொடுத்தது.

உன்சித்தமிரங்காமற் போனாலுமீஸ்பரரே
ஒரு-பெண்ணாகிலுமளிப்பேன் புகழானபாண்டியற்கு
அங்கையற்கண்ணம்மையவ ளதிகமனமகிழ்ந்து
தோள்சதையைகிள்ளியம்மை தூரயெறிந்துவிட்டாள்
அல்லியுங்கொடியு மடர்ந்ததொருபொய்கையிலே
செந்தாமரைவெண்டாமரை சேர்ந்ததொருபொய்கையிலே
வானவருமிந்திரரும் வந்திருக்கும்பொய்கையிலே
சந்திரருஞ்சூரியரும் சந்திபண்ணும்பொய்கையிலே
தாமரைபொய்கையிலே தண்ணீர்கடாகத்தில்
அல்லியிலைமேலே வந்துவிழுந்ததுகாண்
கையாகிக்காலாகிக் கண்ணுமுகமுருவாகி
குவ்வா குவ்வாவென்றுசொல்லி குழந்தையழுகிறது
சந்திரனைப்போலத் தளும்புதுகாண்பொய்கையிலே
சூரியனைப்போலத் துலங்குதிந்தக்குழந்தை
மேகத்துமின்னலைப்போல் மின்னுகிறதக்குழந்தை
குன்றுமேற்சந்திரனுங் குதித்தெழுந்தபாவனைபோல்
இருண்டிருந்தசோலையிலே திரண்டெழுந்தசூரியர்போல்
இப்படியாகவேதா னிருக்கிறவேளையிலே
அங்கயற்கண்ணம்மையவ ளதிகமனமகிழ்ந்து
குழந்தைதனக்கேற்றபடி குலாவிவரங்கொடுத்தாள்
ஏழாம்பிராயந்தனில் இளவரசுபட்டமென்று
பன்னிரண்டாம்பிராயத்திற் பார்த்தனுக்குமாலையிட்டு
எல்லையரசாள இசைந்துவரங்கொடுத்தாள்
அம்மன்கழுத்தினி லணிந்தபதக்கமுடன்
சுவாமிகழுத்திற் றரித்தபதக்கமுடன்
வாங்கிதரித்தாளே வரிசையுள்ளகுழந்தைக்கு

அல்லியென்றுபேருமிட்டு அங்கையற்கண்ணம்மாள்
பாண்டியரைத்தானழைத்து பார்வதியேதுசொல்வாள்
ஆறாயிரவரே அணிதிரளாம்பாண்டியரே
அல்லியிலைமேலே அழகுமைந்தனிருக்கிறது
ஆணுமதுபெண்ணுமது ஆறாயிரவருக்கும்
எடுத்துப்போய்வாருமென்று ஈஸ்பரியுந்தானுரைத்து
அப்போதுபாண்டியரும் அரனுரைத்தான்வணங்கி
தவசுநிலைகலைந்து தானெழுந்தார்பாண்டியரும்
அல்லியின்மேலே அமைந்திருந்தகுழந்தையைத்தான்
தாங்கள்பெற்றதுபோலே தழுவியெடுத்தார்கள்
வாரியெடுத்தார்கள் மார்போடணைத்தார்கள்
மதுரைநகர்நோக்கி வருகிறார்பாண்டியர்கள்
ஆளோடவிட்டார்கள் அரிக்கையிட்டார்பாண்டியர்கள்
மைந்தனைப்பேருபெற்று வருகிறார்பாண்டியர்கள்
புத்திரனைப்பேருபெற்று புண்ணியர்கள்வாறார்கள்
நீன்முகராசனுக்கு நீதியுடன்சொல்லுமென்று
தூதனுடன்சொல்லியே சேதிவிட்டார்பாண்டியர்கள்
ஒற்றுளொருவனுந்தா னுத்தமர்க்கேசேதிசொன்னான்
கேட்டந்தநீன்முகனுங் கெர்வமதிகமாகி
ஆரடாதூதுவரே அலங்காரமல்லர்களே
பாண்டியராசனுடன் பாங்கானவார்த்தைசொல்லும்
நீன்முகராசனிவ னிலைகொண்டராச்சியத்தை
நீங்கள்தரித்துவைத்த நிண்ணயப்பட்டமது
பட்டங்குறையவில்லை பாருலகம்வருவதில்லை
மதுரைக்குவந்தாலே வல்லுயிரைவாங்கிடுவான்

நீன்முகராசனுக்குப்பாண்டியர்கள் பகுதிகட்ட தீர்மானித்தது.

நீங்களெங்கேயிருந்தாலும் எங்களுக்குப்பகுதிகட்டி
வருஷத்துக்கொருதரம் வரவனுப்பும்பாற்குடங்கள்
ஆறாயிரம்பாற்குடங்க ளனுப்பவேண்டுமென்னகற்கு
அனுப்பாமற்போனாக்கா லாக்கினைகள்செய்திடுவேன்
நீன்முகராஜன் நிச்சயமாய்ச்சொன்னானென்று
பாண்டியராஜனுக்குப் பாங்குடனேசொல்லுமென்றான்
ஒற்றுளொருவனுமே யோடினான்ராசரண்டை
ஆறாயிரம்பாண்டியர்க ளையருக்கேதெண்டனிட்டு
நீன்முகன்சொன்னதொரு சேதியைசொல்லலுற்றான்
உங்களால்வந்தவினைக் காரென்னசெய்வார்கள்
அவனைவெறுக்கவென்றா லதிகமானபாவம்வரும்
வடமதுரைபட்டணத்தில் வந்துகுடித்தனமாய்

உழவுகுடித்தனமா யுத்தமர்கள்வாசம்பண்ணுர்
வருஷத்துக்கொருதரந்தான் வரவிடுவார்பாற்குடங்கள்
இந்தவிதமாகவேதா னிருந்தார்கள்பாண்டியர்கள்
சொக்கரருளாலே சுந்தரியாளல்லியற்கு
மாணிக்கத்தொட்டிலிட்டு வளர்த்தார்கள்பாண்டியர்கள்
ஒருமாதமிருமாத மொன்றிரண்டுமூன்றாச்சு
சிற்றாடைகட்டுவாளாம் சிறுகம்பிகோலிடுவாள்
பாவாடைகட்டுவாளாம் பந்துவிளையாடுவாளாம்
அம்மாணர்பந்துகளும் அழகானபுள்ளடிப்பாள்
ஐந்தாம்வருஷத்தி லழகானபள்ளிவைத்தார்
எழுபிராயமட்டும் இளங்கொடியாள்தான்படித்தாள்
ஆறுசாஸ்திரம்நான்குவேத மறுபத்துநாற்கலைக்கியானம்
அம்புவித்தைசில்வித்தை ஆஸ்தானவித்தையெல்லாம்
காணலாவுபந்தியங்கள் கற்றுக்கொண்டாளல்லியரும்
பள்ளியின்கணக்கு பகற்பாடமொப்புவித்து
பாலமிர்தமுண்ணுகைக்குப் பத்தினியாள்வருகலுற்றாள்
அப்போதுநீன்முகன்றா னாறுயிரவரண்டை
ஆயிரந்தூதுவரை அனுப்பினான்நீன்முகனும்
ஆயிரங்குடத்தி லப்பட்டமானபாலாம்
வாங்கிவரச்சொல்லியே வரவிட்டான்தூதுவரை
மலைகளுடன்தலைகொடுக்கு மல்லர்வெளிப்பட்டார்கள்
காற்றிலும்வேகமாக கடுந்தூதர்வாரார்கள்
தங்ககுடமெடுத்துத் தான்வந்தார்மல்லரெல்லாம்
பாண்டியராசனண்டை பாங்குடனேவந்தார்கள்
பகுதிகளைகட்டுமென்று பாற்குடங்கள்முன்னேவைத்தார்
அரண்மனைக்குப்போகவேணு மனுப்புங்கள்பாலையெல்லாம்
அவ்வார்த்தைதான்கேட்டு அஞ்சிப்பயந்தெழுந்து
காராவின்பசும்பாலை கரந்துமேபாண்டியர்கள்
ஆறுயிரங்குடத்தி லன்பாய்நிரப்பிவைத்து
மஞ்சள்துணிமேற்கட்டி மாலைகளைச்சுற்றிவைத்தார்
பாற்குடங்கள்தன்னையவர் பார்தீர்த்துவைத்தார்கள்
வரிசைவரிசையாக வைத்தார்கள்பாற்குடத்தை
பதினாயிரந்தூதருக்கும் பாலமுதுபோசனங்கள்
போசனஞ்சமைக்கலுற்றார் பேரானபாண்டியர்கள்
அரிப்பதும்பொரிப்பதும் அடிசில்சமைப்பதும்
இந்தவிதமாக இருக்கின்றவேளையிலே
அந்தசமயத்தி லல்லியம்மாள்வந்துவிட்டாள்
பதினாயிரந்தூதுவரைப் பாற்குடங்கள்பார்த்தாளே
அரிப்பதுவும்பொரிப்பதுவும் அடிசில்சமைப்பதுவும்

இந்தமகிட்சிகண்டு யேதுசொல்வாளல்லியம்மாள்
ஒருநாளுங்கண்டதில்லை உச்சிதச்சப்ரமங்கள்
இன்றுஅதிசயமா யெந்தனுக்குத்தோற்றுது
இந்தவுறன்முறையா ரெங்கிருந்துவந்தவர்கள்
ஒருநாளுங்கண்டதில்லை உச்சிதமானவரை
இவ்வார்த்தைகேட்டு ஏதுசொல்வார்பாண்டியர்கள்
அவ்வார்த்தையுந்தனுக்கே னழுதுண்ணப்போடியம்மா
பாலமுதுண்டுநீயும் பள்ளிக்குப்போமென்றார்
அவ்வார்த்தைதான்கேட்டு அல்லிமனதுநொந்து
இதுசொல்லாமற்போனீரானால் சீரானபாண்டியரே
நான்வல்லபிராணனை கல்லோடேமோதிடுவேன்
செத்துமடிந்திடுவேன் செலவழிந்துபோய்விடுவேன்
மாண்டுமடிந்திடுவேன் வைகுந்தஞ்சேர்ந்திடுவேன்
அவ்வார்த்தைதான்கேட்டு ஆறுயிரவர்சொல்வார்
ஆறுயிரவருமே ஆண்மலடுபெண்மலடாய்
மைந்தனைவேண்டியல்லோ மகாதவம்பண்ணேனம்மா
என்னதவம்பண்ணினாலு மேதாலும்பிள்ளையில்லை
மகாமுனிவர்தவசுபண்ணு மாமலையைத்தான்தேடி
நாங்கள்தவத்திற்கு நகர்விட்டுப்போவதற்கு
வெள்ளாட்டிபெற்றதொரு வீரானநீன்முகனை
பட்டந்தரித்துவைத்து பாரத்தவசுபண்ணேனும்
சிருவதபருவதத்திற் சேர்ந்துதவம்பண்ணேனம்மாள்
சொக்கரருளாலே சிவகாமித்தாயாலே
அல்லியிலைமேலே ஆரணங்கைபெற்றெடுத்தோம்
வயற்றிற்பிறந்ததில்லை வன்கொடுமைசெய்ததில்லை
குடலில்பிறந்ததில்லை குலக்கொடுமைசெய்ததில்லை
ஓடுகிறதண்ணியிலே யுள்ளேமணற்சேருமுண்டு
அடிக்கிறகாற்றதனி லலைகாற்றுருப்புமுண்டு
காலகாலகண்டருக்குங் கண்டத்தில்கறுப்புமுண்டு
குண்டுமணிக்காணாலுங் கொஞ்சங்கறுப்புமுண்டு
சந்திரர்க்குமாசியுண்டு சற்றேகருப்புமுண்டு
உனக்குமயிரேகறுப்பொழிய மற்றக்கருப்புமில்லை
புருவங்கறுப்பொழிய பின்னேகருப்புமில்லை
அல்லியிலைமேலே ஆரணங்கேநீபிறந்தாய்
வரத்தினாற்பேறுபெற்று வந்தாயம்மாதென்மதுரை
வெள்ளாட்டிபெற்றெடுத்த வீரானநீன்முகனும்
ஊரில்வரவொட்டாம லோட்டிவிட்டானப்புறத்தே
உழவுகுடியாக ஊரிற்பிழைபுமென்றான்
ஆறுயிரம்பாண்டியர்க்கு ஆறுயிரம்பார்குடமும்

வருஷத்திற்கொருதரந்தான் வாங்குகிறான்பகுதியவன்
உன்னைப்பெறவேண்டி ஊரிழந்தோம்பதியிழந்தோம்
சீமையிழந்தோமம்மாள் துரைத்தனமுந்தானிழந்தோம்
ஏழுவருஷமம்மா இப்படியனுப்புகிறோம்
இந்தவருஷமுமே இங்குவந்தார்மல்லரவர்
பாற்குடம்நிரப்பிவைத்தோம் பாலமிர்தஞ்செய்கிறார்கள்
நீபாலமிர்தமுண்டலவோ பள்ளிக்குப்போமென்றார்

அல்லியம்மாள் மல்லர்களை அவமானஞ்செய் தனுப்பியது.

அவ்வார்த்தைதான்கேட்டு அல்லிமிககோபமதாய்
எட்டிப்பழம்போலே இருகண்சிவந்தாளே
கோவைப்பழம்போலே கூ யகண்சிவந்து
வெள்ளாட்டிபையனுக்கு வீரியங்களுண்டாமோ
எருதுபசுவாமோ இளைத்தபசுவுமுண்டோ
உயரப்பறந்தாலும் ஊர்க்குருவிபருந்தாமோ
கொசுவும்பருந்தாமோ கூடப்பறக்குமோதான்
விரலேவுறலானல் உரலென்னசொல்லுமையா
வெள்ளாட்டிப்பையலைத்தான் வெட்டிதலைத்தள்ளாமல்
பாண்டியராசர்களே பாராளவைத்தீர்களே
உங்களைப்போல்ராசாக்கள் உலகத்தில்நானறியேன்
என்றுமிகக்கோபமுட னெழுந்தாளேயல்லியம்மாள்
எழுந்திருந்து அல்லியம்மாள் இபலானபாற்குடத்தை
இடதுகால்தன்னாலே எட்டியுதைத்தாளே
ஆறுயிரம்பாற்குடத்தை அகங்கொண்டிரடிவிட்டாள்
ஆரடாமல்லர்களே அழையும்பிடாரனைத்தான்
ஓடியழைத்துமே ஒருநொடியில்வாருமென்றாள்
அங்கிருக்குமல்லர்க ளதிதுரிதமாயோடி
பாம்புப்பிடாரனைப் பரிந்தேயழைத்துவந்தார்
வாழ்வரசியல்லியற்கு வந்துதெண்டம்பண்ணினார்கள்
எம்மையழைத்ததற்கு ஏதுகருமமென்றார்
காட்டுக்குப்போய்நீங்கள் கன்னிபுத்தில்மருந்தைவைத்து
கருநாகஞ்செந்நாகம் காலக்கோட்டிவிஷங்களுடன்
மண்ணுளிதாசிரியு மலையேறிவிரியனுந்தான்
ஊதுசுருட்டிபாம்பு முபார்வானநாகங்களும்
நீக்கத்திருட்டிகளும் நீதியுள்ளபாம்புகளும்
வண்ணவண்ணப்பாம்புகளும் வகையாகத்தான்பிடித்து
ஓட்டம்நடையுமாக ஒருநொடியில்வாருமென்றாள்
அவ்வார்த்தைதான்கேட்டு அந்தபிடாரரெல்லாம்
ஓட்டம்நடையுமாக ஓடினார்கானகத்தில்
காட்டுக்குப்போனார்கள் கன்னிபுத்துமருந்துவைத்தார்

வன்னவண்ணப்பாம்புகளை வரிசையுடன்பிடித்தார்
பெட்டிகள்நிரம்பவே பிடித்தார்கள்பிடாரரெல்லாம்
காடுசெடி தாண்டி கடுகியேயோடிவந்தார்
அல்லியரசாணி ஆரணங்குமுன்புவந்தார்
பெட்டியிற்பாம்பையெல்லாம் பொற்கொடியாள்முன்னேவைத்து
அல்லிப்பெருமாளும் ஆரணங்கேதுரைப்பாள்
பாற்குடந்தன்னிலேதான் பாம்பையடையுமென்றாள்
பஞ்சவர்னச்சீலையினாற் பானைகள்வாய்கட்டுமென்றாள்
ஆராயிரங்குடத் தடைப்புமென்றாள்பாம்பையெல்லாம்
பஞ்சவர்னசீலைகட்டி பார்த்தீர்க்குமுன்னேவைத்தார்
அல்லிபெருமாளு மாரணங்கேதுரைப்பாள்
அம்பட்டரைத்தேடி அழையுமென்றாளல்லியரும்
ஓடியழைத்தல்லவோ ஓட்டம்நடையாகவந்தார்
ஆராயிரந்தூதுவரை அழகுமொட்டைசெய்யுமென்றாள்
தாடிசிரைத்தவரை தலைபோடிபண்ணுமென்றாள்
மீசைசிரையுமென்றாள் முன்போடிபண்ணுமென்றாள்
கரும்புள்ளிசெம்புள்ளியுங் கலந்தழகாய்குத்துமென்றாள்
அல்லியின்சொற்படிக்கே அழகுமொட்டையிட்டார்கள்
மீசைதாடிசிரைத்து முகமனைத்தும்பொட்டுமிட்டார்
ஆரடாதூதுவரே அன்பானவார்த்தைகேளும்
நீன்முகராசனுக்குப் பட்சமுள்ளஅல்லியம்மாள்
இந்தவரிசைகளை யனுப்பினாளென்றுசொல்லும்
தொண்டைக்குத்தூண்டிமுள்ளு தொப்புளுக்குவிராணி
அவன்மண்டைக்குக்கோடாலி மார்ப்புக்குசெப்புலக்கை
கழுத்தடியிற்கத்தியவள் காமாட்சியம்மையென்று
ஊட்டியறுக்கவந்த வுண்மைபராஞ்சோதி
தலைமாட்டிற்பாம்பலவோ தாயாரந்தஅல்லியென்று
சொல்லுங்கள்தூதுவரே துரைராசநீன்முகற்கு
வெள்ளாட்டிபையனுக்கு விந்தையைச்சொல்லுமென்ன
ஆயிரந்தூதுவர்க ளக்குடமெடுத்துக்கொண்டார்
வருகிறார்மதுரையது வடமதுரைதான்விட்டு
தேனுமதுரையது தென்மதுரைவருகிறார்கள்
தெத்துத்தெருகடந்து தேரோடும்வீதிவிட்டு
மகாராஜன்கொலுதனிலே வந்தார்கள்தூதுவர்கள்
அப்போதுநீன்முகனும் அப்பினங்கமாடுகைக்கு
சனிஎண்ணைமண்டபத்தில் தானமர்ந்தான்வாழ்மார்பன்
எண்ணையிட்டுக்கொண்டே யிருக்கின்றவேளைதனில்
பாற்குடத்தைமுன்னாலே பார்மீதிறக்கிவைத்தார்
வரிசைவரிசையாக வைத்தார்கள்பாற்குடத்தை
வந்திருந்ததூதரெல்லாம் வரிசையாய்நின்றார்கள்

கண்ணைத்திறந்தல்லவோ கட்டழகன்பார்த்தானே
அதுவென்னவதிசயங்கள் ஆர்செய்தவண்மையது
என்றுஎட்டிப்பழம்போலே இருவிழிகண்சிவந்தான்
கோவைப்பழம்போலே கூர்விழிகண்சிவந்தான்
உருக்கியசெம்பொன்னது வுதிரம்போல்கண்சிவந்து
இப்படிசெய்தவரை யெனக்கரியச்சொல்லுமென்றான்
பால்வார்த்தனுப்பாமல் பாம்பையடைத்ததென்ன
ஆரடாதூதுவரே அறியவுரையுமென்றான்

நீன்முகராஜனுக்குத் தூதர்கள்சேதிசொல்லுதல்.

அவ்வார்த்தைக்கேட்டவர்க ளஞ்சியுரைக்கலுற்றார்
ஐயாவேநீர்கேளும் அடியேனொருவார்த்தை
ஆயிரம்பாண்டியற்கே அரியவொருமகளாம்
அல்லியிலைமேலே ஆரணங்குபெண்பிறந்தாள்
ஏழுபிராயமுண்டு இளங்கொடியாள்கன்னிகைக்கு
பாண்டியராசரைநாம் பகுதிபோய்கேட்டவுடன்
பகுதியுங்கட்டினார்கள் பாற்குடங்கள்தாளிறைத்தார்
எங்களுக்குசாப்பாடு இன்பமுடனேசமைத்தார்
அவ்வளவிலல்லிநல்லா ளானந்தவாழ்மாரி
பள்ளிகூடத்துப் பகலமுதுண்ணவந்தாள்
எங்களைக்கண்டவுட னாரென்றுதான்கேட்க
பாற்குடங்களேதுக்கையா பாண்டியரேசொல்லுமென்றாள்
அவ்வளவிற்பாண்டியர்க ளஞ்சிப்பயந்துரைப்பார்
உமக்குபட்டந்தரித்துப் பாரதவம்போனதுவும்
அல்லியரைப்பெற்றதொரு அதிசயத்தைசொன்னார்கள்
அதுகேட்டுஅல்லியவள் அதிகமானகோபமதாய்
வெள்ளாட்டிப்பையலுக்கு வீரியங்களுண்டாச்சே
ஆராயிரங்குடத்தை அரைநொடியிலிரடிவிட்டாள்
பாம்பைப்பிடித்துவந்த பாற்குடத்திலேயடைத்தாள்
வாருமென்றாளம்பட்டரை மழுங்கயடியுமென்றாள்
தலைபோடிபண்ணினார்கள் தனிப்பொட்டுமிட்டார்கள்
தையலிடம்வந்தவர்கள் தலைபோடியானார்கள்
கரும்புள்ளிசெம்புள்ளி கலந்தழகாய்பொட்டிட்டு
தொண்டைக்குத்தூண்டிமுள்ளு தொப்புளுக்குவீராணி
மண்டைக்குகோடாலிமார்ப்புக்குசெப்புலக்கை
கழுத்தடியிற்கத்தியென்றாள் காமாட்சியம்மனென்றாள்
ஊட்டியறுக்கவந்த வுண்மைபரஞ்சோதியென்றாள்
உந்தனுக்குச்சொல்லுமென்று வுத்தமியனுப்பிவைத்தாள்
தருமதுரைமகராசி தப்பிவிட்டாளெங்களைத்தான்
பிழைத்துவந்ததெங்கள் பெரியோர்செய்தபுண்ணியந்தான்
என்றுசொல்லக்கேட்டு யெழுந்தானேநீன்முகனும்

அல்லியரசாணி நீன்முகனைச்சங்கரித்தது.

காலாளும்சேனைகளுங் கடுகியேபயணமாச்சு
தேரைசுற்றித்தெண்டனிட்டு தேரின்மீதேறினாளே
அம்புவில்கைபிடித்து அச்சுரதந்திருப்பிவிட்டாள்
மந்திரவாள்கைபிடித்து மச்சுரதந்திருப்பிவிட்டாள்
தேவதுந்துமிமுழங்கத் தேன்மொழியாள்வருகிறாளே
சித்திரத்தேருஞ் செருக்களத்தேவருகிறதே
வந்துவளைத்தாலே வல்லிடிபோலல்லியரும்
வில்வளைத்துநாரிபூட்டி வில்லைக்குணத்தொனித்தாள்
மாரிச்சரம்பொழிந்தாள் மகாசேனையுள்ளவர்மேல்
தொட்டாலேவில்லதனைச் சொரிகதுவிட்டாள்பாணமதை
விட்டாள்சரபாணம் மேனியெல்லாந்தான்மறைய
யானைசேனைபரிவாரம் அடங்கலும்கொல்லலுற்றாள்
யானைத்தலைகளெல்லாம் அபயமிட்டுக்கீழ்விழவே
ஒட்டைத்தலைகளெல்லாம் ஓலமிட்டுக்கீழ்விழவே
குதிரைத்தலைகளெல்லம் கொக்கரித்துகீழ்விழவே
யானைமேலிருந்தவர்கள் அபயமிட்டுக்கீழ்விழவே
ஒட்டகத்தின்மீதிருந்தோ ரோலமிட்டுக்கீழ்விழவே
குதிரைமேலிருந்தவர்கள் கொக்கரித்துமண்ணைக்கவ்வ
தென்னங்காய்ப்போலாக சேனைதலையுருளவிட்டாள்
பனங்காயைப்போலாக பார்தனிலுருளவிட்டாள்
செண்டுசெண்டாவேணதலை செருக்களத்திலுருளவிட்
அறுந்ததலைகளெல்லாம் அம்மனாராடுகுது
ஆலையாடுங்கரும்புபோல் அரைத்துரசம்பிழிந்தாள்
கரும்புக்கருணைபோலக் கண்டித்தாள்வேணதலை
மதப்பட்டயானைகள்தான் மடுவைக்கலக்கிறாற்போல்
குட்டிமதயானை குளங்கலக்கிவிட்டதுபோல்
கிண்ணியில்சந்தனத்தைக் கூட்டிவழித்ததுபோல்
நீன்முகன்சேனையெல்லாம் நிர்த்தூளிபண்ணலுற்றாள்
பிடாரியார்கோயிலுக்குப் பலிகொடுக்கும்பாவனைபோல்
அம்மையார்கோயிலுக்கு ஆடுவெட்டும்பாவனைபோல்
அரைநாழிக்குள்ளே அதம்பண்ணாள்பாளயத்தை
சண்டைபண்ணமாட்டாமற் றளர்ந்தோடிப்போனார்கள்
பண்டாரமென்பாரும் பரதேசியென்பாரும்
காமத்தைக்காண்பித்து நான்தாதனென்பாரும்
பூணூலைக்காண்பித்து பிராமணனென்பாரும்
சண்டைக்குவல்லையென்று சலாம்செய்துஓடுவாரும்
தண்ணீர்தண்ணீரென்று தவித்ததுபாளையங்கள்
வடுகரெலாம்நீளென்பார் வன்றமிழர்தண்ணீரென்பார்
துலுக்கரெல்லாம்பாணியென்று சொல்லிப்புலம்புகிறார்

இவ்விதமாய்பாளபத்தை இறக்கடித்தாளல்லியரும்
நீன்முகராசனண்டை நேரிழையும்வந்தெதிர்த்தாள்
ஆரடாநீன்முகனே அரிவுகெட்டபாதகனே
வெள்ளாட்டிப்பையலேநீ வீரியமுனக்கேண்டா
தம்பலவட்டிலேந்தத் தாதிபெற்றமகனுரே
மதுராம்புளியாமா வைகாசிதையாமா
எருதும்பசுவாமா எதிர்த்தாயாண்பிள்ளையரிமா
உன்னைக்கெடுப்பேனே வுனக்குமொருசேவகமோ
கொசுவும்பருந்தாமோ கூடப்பரக்குமோடா
உயரப்பரந்தாலு மூக்குருவிபருந்தாமோ
அணிப்பிள்ளையசக்கினால் மான்குட்டிவிழுமோடா
ஒதிபெருத்தால்தூணாமா ஒட்டாங்கச்சிமூனையாமா
உன்னைஅதம்பண்ணும்படியாக அல்லியிலேநான்பிறந்தேன்
உன்மார்க்குச்செப்புலக்கை மண்டைக்குக்கோடாலி
உன்கழுத்தையறுக்கவந்த காமாட்சியம்மனாடா
உன்ஊட்டியருக்கவந்த வுண்மைபராஞ்சோதியடா
உன்குலதெய்வமடா ஓங்காரயல்லியம்மாள்
அறியாமற்போனாயடா அறிவுகெட்டநாய்தலையா
அரைநாழிக்கொள்ளையிலே யமபுரஞ்சேர்க்கிறேன்பார்
கால்நாழிகொள்ளையிலே கைலாசஞ்சேர்க்கிறேன் பார்
ஒருநாழிக்கொள்ளையிலே வுயிர்வதைசெய்கிறேன்பார்
இன்றவுப்புமாண்டதோ தெருவுபாழாச்சுதோ
காலனாயரவந்து கைகாட்டியழைத்தானோ
இயமனாருபரவந்து இங்கேவாவென்றாரோ
ஆகையினாலேயடா வமருக்குவந்துவிட்டாய்
என்சமர்த்துஞ்சேவகமு மிப்போதறிவாய்பார்
தேரைத்துரத்திவிட்டாள் செங்கையில்வில்லெடுத்தாள்
கேட்டந்தநீன்முகனுங் கெர்வமதிகமாய்
நெற்றிக்கண்ஈஸ்வரனார் நிமிர்ந்துவிழிபார்த்தாற்போல்
வலதுபக்கமீசையது கட்டிபோலேதுடிக்க
மீசைதுடிக்கிறது மின்கோபமாகிறது
சாணுண்டே பெண்ணோநீ சமர்த்தாகப்பேசுகிறாய்
உன்சவுரியத்தானிழப்பேன் தம்பலங்களைத்தவைப்பேன்
என்வல்லமையைப்பாரென்று வளைத்தானேவில்லதனை
இவ்விருவர்தேரு மிருநிலத்திற்றான்சுழல
மாணிக்கச்சொக்கரையு மனதில்நினைத்தாளே

நீன்முகராசன் அல்லியின்மேற் படையெடுத்தது.

ஆடாதாறுவரே அழையுங்கள்மந்திரியை
இந்தட்சணமே கூடாரம்போடுமென்றான்
இன்றுவெளிகூடாரம் இபலுடனேபோடுமென்றான்
பாளையங்களுள்ளதெல்லாம் பயணமிட்டுவாருமென
சண்டைகொடிபோட்டுச் சண்டைமுரசடியுமென்றான்
தேரையலங்கரித்துச் சீக்கிரமாய்வாருமென்றான்
ஆராயிரமந்திரி யனைவரும்பயணமென்றான்
யானைசேனைபரிவாரம் அடங்கலும்பயணமென்றான்
காலாள்பரிசேனை கடுகியேபயணமென்றான்
ஆராயிரம்பாண்டியரை அதம்பண்ணிப்போட்டுவிட்டு
அல்லியெனும்பெண்ணை அரைநொடியிற்பிடித்துவந்து
தலைபோடிபண்ணியே தம்பலம்சுமக்கவைப்பேன்
எண்ணையிட்டஎன்தலைக்கே இயல்பாயரைப்பிடுவேன்
அப்போதுஸ்நானமா யாடுவேனபிஷேகம்
என்றுஎழுந்தானே இயல்புள்ளநீன்முகனும்
கட்டினதுகச்சையல்ல கைதனிலேவில்லுமல்ல
முகத்தினிலேமீசையல்ல முன்கட்டுச்சிலையல்ல
தலையிலேபாகையல்ல தரித்தது ஆடையல்ல
என்றவனுமார்பைத்தட்டி எழுந்தானேநீன்முகனும்
முத்தினுருமாலை முகமழகாய்த்தான்கட்டி
அம்புவில்தானெடுத்தான் அம்புறாத்தூணிமுதுகணிந்து
பாங்குகச்சைதானணிந்தான் கத்திவாள்தோளிலிட்டான்
தேரைச்சுற்றிநமஸ்கரித்து தேரின்மேலேறினானே
ஏறினான்தேரின்மேலே எடுத்தார்நெடுங்குடைகள்
கானல்தனக்கெடுத்தார் கறுப்புநல்லகூடாரம்
வெய்யலுக்கெடுத்தார்கள் வெள்ளைநல்லகூடாரம்
கறுப்புநிஜான்செகப்புநிஜான் கலந்துபறக்குது
அடிபடுதுரணமுரசு அனைவருங்கிடுகிடென
கோடைகாலத்திடிபோலே குமுறுதேபேரிகைகள்
வெங்கலபேரிகைகள் விருதுமுழக்கமுடன்
அமரதருஞ்சமரதரும் அஸ்திரராய்வருகிறார்கள்
கலிங்கர்தெலுங்கருடன் கன்னடர்வருகிறார்கள்
துலுக்கர்மலுக்கருடன் சோனகரும்வருகிறார்கள்
வன்னியருஞ்சன்னியரும் மராட்டியரும்வருகிறார்கள்
வருகிறசனங்களானல் மட்டுமிதங்களில்லை
கொக்குவெளுத்ததுபோல் குடமல்லிபூத்ததுபோல்

வானங்கவிந்ததுபோல் மல்லிகைப்பூத்ததுபோல்
நீன்முகன்சேனையெல்லாம் நெருங்கிவருகிறது
செந்தூளெழும்புவது சிவலோகங்கப்பிற்று
கருந்தூளெழும்புவது கதிரோனைக்கப்பிற்று
கோட்டைகடந்து கொப்பனவேவருகிறார்கள்
அப்போதுபாண்டியர்கள் அறிந்தார்கள்சேனைதன்னை
நீன்முகன்வருஞ்சேதி நிமிஷத்திற்றனறிந்தார்
ஐயோமகளேயென்று அலரலுற்றார்பாண்டியர்கள்
தவம்பண்ணிப்பெற்றோமே தவங்குலையநாளாச்சே
பாரதவம்நாங்கள்செய்து பாலகியைப்பெற்றோமே
நீன்முகன்கையாலே நீமடியநாளாச்சே
வருகிறான்நீன்முகனும் மட்டில்லாச்சேனையுடன்
என்செய்வோமகளேஎன்று இடிவிழுந்துதானழுதார்
அல்லிப்பெருமாளும் ஆரணங்குதான்கேட்டு
அஞ்சாதேஐயமாரே அவனைப்பலிகொண்டிடுவேன்
மாண்டுமடிவேனென்று மனதில்நினைக்கவேண்டாம்
செத்துமடிவேனென்று சிந்தையில்வைக்கவேண்டாம்
அரைநாழிக்குள்ளேயவன் ஆங்காரம்நானறிவேன்
என்சமர்த்தைப்பாருமென்று எழுந்தாளேஅல்லியவள்

அல்லியம்மாள் சொக்கரையும் அம்மனையுந் தொழுதுவரம்பெற்றது.

அல்லிக்குளமுழுகி அலர்தாமரைப்பூவெடுத்து
சொக்கரதுஆலயத்தில் சுந்தரியும்போய்புகுந்து
கோயில்வலம்வந்து கும்பிட்டுத்தெண்டனிட்டு
கொண்டுவந்தபூமலரால் கொம்பனையும்பூசைசெய்து
ஒருவர்-வயிற்றிற்பிறவாமல் வன்கொடுமைசெய்யாமல்
குடலில்பிறவாமல் குலக்கொடுமைசெய்யாமல்
அல்லியிலேமேலென்னை ஆச்சியரேபிறப்பித்தாய்
பொற்றமரையிலேதான் பிறப்பித்தாயீஸ்வரியே
நீன்முகனைக்கொல்லவேணும் நீலிபட்டங்கட்டவேணும்
மாற்றானைக்கொல்லவேணும் வையகத்தையாளவேணும்
வாழ்த்தியேகைகொடம்மா மந்திரவாள்கைகொடம்மா
என்றுவணங்கியே இரங்கிநமஸ்கரித்தாள்
மாணிக்கச்சொக்கலிங்கம் மனதுமிகக்களித்து
அகிலாண்டநாயகியாள் அங்கயற்கண்மனமகிழ்ந்து
மதுரைமீனாட்சியுந்தான் மங்கையருந்தான்மகிழ்ந்து
மச்சரதங்கொடுத்து மந்திரவாள்கைகொடுத்தாள்
வாழ்த்தியேகைகொடுத்து வெண்டிருநீறள்ளியிட்டாள்
வர்ணலட்சம்தூதர்களை மகாதேவர்கைகொடுத்தார்
அல்லியற்குத்துணையாக அனேகம்பேர்வந்துவிட்டார்

அங்கயற்கண்ணாயகியை ஆதிபரமேஸ்வரியை
மனதில்நினைத்தல்லவோ வாங்கிவிட்டாள்பாணமது
பாவியந்தநீன்முகனும் பதறிசரம்பொழிந்தான்
விட்டாள்சரபாண மெல்லிநல்லாள்மேனியிலே
கோடானகோடிபாணங் குறித்தானே நீன்முகனும்
அல்லிபெருமாளுக் கதிகமானகோபமுடன்
ஒன்றுக்குப்பத்துகணை ஒருநூற்றுக்காயிரமாம்
சரமேற்சரம்பொழிந்தாள் சாமர்த்தியமுள்ளகன்னி
வாய்வினது அஸ்திரங்கள் வருணனது அஸ்திரங்கள்
திவ்யநல்லஅஸ்திரங்கள் தீர்க்கமுள்ளஅஸ்திரங்கள்
சண்முகனஸ்திரமாஞ் சலந்திரனஸ்திரமாம்
மகாதேவியஸ்திரமாம் பார்வதியஸ்திரமாம்
வச்சிரஅஸ்திரமாம் மகுடனல்லஅஸ்திரமாம்
இடியினது அஸ்திரமாம் இந்திரனது அஸ்திரமாம்
இராமச்சந்திரஅஸ்திரமாம் நவச்சந்திரஅஸ்திரமாம்
சூரியஅஸ்திரமாம் சுப்பிரமணியஅஸ்திரமாம்
கார்த்திகைமாதத்திற் கனத்தமழைபெய்ததுபோல்
ஐர்ப்பசிமாதந்தன்னி லடர்ந்தமழைபெய்ததுபோல்
சோனைமழைகளுஞ் சொரிந்தாப்போற்றாவிவிட்டார்
விட்டதொருபாணமது மட்டுமிதங்களில்லை
நான்குநாள்மட்டும் நல்லசண்டைபண்ணுகிறார்
விற்பிடித்தகைகளது மெத்தசிவப்பேரிற்று
அம்பிழுத்தகைகளது அல்லிப்பூவருணமாச்சு
நெல்லிப்பழம்போலே நெருங்கிற்றுகொப்பளங்கள்
இந்தவிதமாக இருவர்சண்டைபண்ணினார்கள்
அப்போது அல்லியம்மா ளம்மனையேதோத்தரித்து
இடியாஸ்திரமெடுத்து இந்திரதூயந்தானுமிட்டு
மார்புரளவாங்கியல்லோ தோள்புரளத்தான்தொடுத்தாள்
கைகளும்நெருப்பெரிய வந்துவிழுந்தனவே
தேருமுடைந்தனவே செம்புரவிசெத்தனவே
சட்டதமான்வச்சிரகபாய் தவுடுபொடியாயினவே
சல்லடைகண்போலே சரீரங்கள்தொளையாகி
பதாதியாய்நின்றானே பராக்ரமநீன்முகனும்
எடுத்தான்வளைதடியை எறிஞன்கேடகத்தை
கண்டாளே அல்லியம்மாள் கனத்தநல்லகோபமுடன்
கேடகமும்வாளெடுத்து கெர்ச்சித்துக்கீழ்குதித்து
எலிகண்டபூனையைப்போ லெழும்பினாளல்லியம்மாள்
பசுகண்டபுலியதுபோல் பாய்ந்தானே நீன்முகனும்
மானைகண்டசிங்கம்போ லல்லியெழும்பினாளே
கொக்குகண்டராசாளிபோற் குதித்தானே நீன்முகனும்
யானைகண்டசிவிங்கிபோல வாறாளேயல்லியம்மா

உன்னைவிடுவேனென்று உன்மனதிலெண்ணாதே
நீன்முகாஉன்றலையை நிமிஷத்தில்வாங்குவேன் பார்
இடசாரிவலசாரியா யிருவருஞ்சுழலுகின்றார்
சக்கரஞ்சுழல்வதுபோற் சமர்த்தர்சுழலுகிறார்
வண்டுதும்பிபோலாக வட்டமிட்டகருடனைப்போல்
முன்கந்துபாய்ந்தலவோ முதுகின்மேல்வெட்டுவாளாம்
தட்டியுதறிநிற்பான் தர்க்குவானல்லியரை
எமனுமியமனைப்போ லிந்திரனுமிந்திரனும்
மலையுமலையோடு வந்தெதிர்த்தபாவனைபோல்
புலியும்புலியுடனே பதுங்கிபெதிர்த்ததுபோல்
நான்குநாழிகைமட்டும் நல்லசண்டைபண்ணினார்கள்
பொற்றாமரைதனிலே பிறந்தெடுத்தஅல்லியரும்
ஆலவாய்க்கொக்கவென்று மாண்டவனைதானினைந்து
மதுரைமீனாட்சியரை மனதிலேதானினைந்து
முன்கந்துபின்கந்து முப்பத்திரெண்டுகந்து
பக்கவளையாகவந்து பாச்சலுடனெழும்பி
வீசினாள்வாளாலே வேறிரண்டுதுண்டாக
கரும்புகருணையைப்போற் கண்டித்துகீழ்விழுந்தான்
ஏறினாள்தேர்மேலே யெடுத்தார்பெருங்குடைகள்
நீன்முகன்விழுந்தானென்று நீலிசங்குதான்தொனித்தாள்
தேரைத்திருப்பிவந்தாள் தேன்மொழியுமல்லியம்மா
நீன்முகன்மார்மீதில் நீவிரதமோட்டினாளே
செயங்கள்செயங்களென்று ஜெயபேரியடித்துவந்தாள்

அல்லியம்மாள் மதுரைக்குவந்து பட்டங் கட்டிக்கொண்டது.

எழுபதுசேனாபதி எல்லவருமோடிவந்தார்
தப்பிப்பிழைத்தவர்கள் சகலஜெனங்களெல்லாம்
அல்லிபெருமாட்கு அடிபணிந்துதெண்டனிட்டார்
தேவதுந்துமிமுழங்கத் தேவர்பூமாரிபெய்ய
ஆறாயிரவரென்னு மையமார்தாமறிந்தார்
சந்தோஷப்பட்டார்கள் தார்வேந்தரோடிவந்தார்
மகளதனைப்பார்த்தலவோ மகிழ்ந்தார்கள்பாண்டியர்கள்
மதுரைத்தெருவனைத்து மகுடகோரணங்கட்டுமென்றார்
அரைநாழிக்குள்ளே அலங்கரித்தார்பட்டணத்தை
எங்குமலங்கரித்து எத்திசையுநீர்தெளித்து
வாழைமரம்கமுகுமரம் வாசலெல்லாம்நட்டார்கள்
சேனைகள்சூழ்ந்துவர செயபேரியெடுத்துவர
மேளங்களார்ப்பரிக்க மெல்லிவருகிறாளே

மதுரைத்தெருவைச்சுற்றி மாளிகையில்வந்தார்கள்
சிம்மாதனத்தின்மீதேறினாள்தேன்மொழியாள்
ஆறாயிரம்பாண்டியரா மையன்மாரானவர்கள்
பட்டந்தரித்தார்கள் பத்தினியாளல்லியற்கு
செங்கோலுபட்டமுடன் துரைத்தனமுந்தந்தார்கள்
பொம்மைவிருதுகட்டி பூகத்தலைகட்டிவைத்து
அல்லிக்கொடிகட்டி அர்சுநிலையாளுகிறார்
மதுரையம்பத்தாறுகாதம் மாதுமையாளுகிறாள்
ஆண்பட்டங்கட்டியே அரசுநிலையாளுகிறாள்
பெண்பட்டங்கட்டியே பூமியரசாளுகிறாள்
இந்தவிதமாக எல்லையரசாண்டிருந்தாள்
இப்படியாகவே தான் இருந்தரசாளுகையில்
அப்போதருச்சுனனும் ஆணலழகுமன்னன்
இந்திரபுரிட்டணத்தில் அனந்ததிருடரவர்
பசுதிருடிப்போனசேதி பார்த்திபன்தானறிந்து
அம்பையெடுக்கவென்று அரண்மனையிற்போய்புகுந்தார்
எழாநிலையின்மேலு மின்பமாயேறினும்
தருமரும்திரௌபதையுஞ் சருவிவிளையாடையிலே
குங்குமப்பூமேடையிலே கூடியுறவாடினார்கள்
கலந்திருந்தவர்கள்தனைக் கண்ணாலேகண்டுவிட்டான்
முன்னிட்டகாலையவன் பின்னாகவாங்கினானே
மங்காரக்குந்தியரை மாதாவைத்தேடிவந்தான்
ஆச்சியர்தன்பாத மடிவணங்கிதெண்டனிட்டான்
வாழ்த்திவிடைகொடுத்து வருணித்துக்குந்தியம்மாள்
ஆச்சியரேயென்தாயே அடியேனொருவார்த்தை
அண்ணனுந்தேவியரு மன்பாக மத்தையின்மேல்
கலந்துவிளையாடுவதைக் கண்ணாலேகண்டேனம்மா
சருவிமயலாகையிலே சடுதியில்நான்கண்டேன்
பார்த்தபடியினாலே பாவம்வந்துநேர்ந்ததம்மா
ஆகாதபாவத்துக்கு ஆளானேனாச்சியரே
பொல்லாதபாவம்வந்து போதப்பலித்ததம்மா
இப்பாவம் தீர்வதற்கு எத்தலங்களும்பார்த்து
துங்கபத்திரிகோதாவரி யமுனைசரஸ்வதியாம்
காசிஸ்நானஞ்செய்யவேண்டும் கனபாவந்தீர்க்கவேண்டும்
பாராஸ்தலங்களெல்லாம் பார்த்துவருகிறேன்யான்
சிவஸ்தலம்விஷ்ணுதலம் தெரிசனமேசெய்வேன்யான்
கால்கண்டதூரமெல்லாங் கடுகத்திரிந்துவாரேன்
போகவேணுமென்று பொன்னடியைத்தெண்டனிட
அவ்வார்த்தைத்தான்கேட்டு அழுதுபுலம்பலுற்றாள்
உன்னையான்பாராமல் ஒருநிமிஷநிற்கமாட்டேன்

பாராதிருப்பதற்குப் பாவிமனம்வருமோ
செத்துமடிவேனான் செலவழிந்துபோவேனென்றாள்
அழுதுபுலம்பலுற்றா ளாரணங்குகுந்தியம்மாள்
அழுதகுரல்கேட்டு அத்தருமராசர்வந்துவிட்டார்
சந்தனவடிவழகன் தருமராஜர்வந்துவிட்டார்
எதுக்கழுவதுதா னென் தாயேசொல்லுமென்றார்
அர்ச்சுனன்சொன்னதெல்லா மச்சியருந்தாமுரைத்தார்
அவ்வார்த்தைகேட்டு அருண்மைந்தர்நொந்துமனம்
சொற்பேச்சைகேளானே சுந்தரப்பூமுடியான்
என்வார்த்தைகேழ்ப்பானே இளவிஜையராசனிவன்
ஆரைநினைத்தானோ அளவற்றசிந்தையிலே
எவரைநினைத்தானோ இன்பமுள்ளசிந்தையிலே
அடியளந்தமாயவரே ஆதிமூலம்வாருமென்றார்
இவவேளையிச்சமய மிங்கேவாசுவாமியென்றார்
தருமர்நினைத்ததைச் சுவாமியதுவறிந்து
வட்டமிடுங்கருடனேறி வந்துவிட்டாரெம்பெருமாள்
சிவந்தகருடனேறி ஸ்ரீராமர்வந்துவிட்டார்
காடுசெடிதாண்டி கரியமலைதான்தாண்டி
ஆறுசுனைதாண்டி அதிகவனந்தாண்டி
சந்தனவடிவழகர் தருமரண்டைவந்துவிட்டார்
வாகனம்விட்டிறங்கி வந்துசரணமிட்டார்
என்னையழைத்ததுதா னேதுகருமமென்றார்
சிம்மாதனத்தின்மீது ஸ்ரீராமர்வீற்றிருந்தார்
இட்டசிங்காதனத்தி லெம்பெருமாள்வீற்றிருந்தார்
சந்தனவடிவழகர் தருமராயரேதுரைப்பார்
ஆளுலழகுமன்னன் அர்ச்சுனராசனவன்
தீர்த்தயாத்திரைபோகச் சிந்தையில்நினைந்துகொண்டு
காசியாத்திரைபோகக் கருத்தில்நினைந்தானே
ஆர்சொல்லுங்கேளேனென்று அருச்சுனன்போகலுற்றான்
தனியேயனுப்புதற்குச் சற்றுமனந்தோன்றவில்லை
அர்ச்சுனற்குத்துணையாக அரிராமாபோய்வாரும்
கூடத்துணைபோங்கள் கோபாலப்பெருமாளே
கும்பிடுந்தெய்வமுநீ குழைத்திடுநாமமுநீர்
உன்னையேநம்பினே னுயிர்கொண்டுலாவுகிறேன்
ஆரைச்சதமென்பேன அன்னியரைத்தஞ்சமென்பேன்
எவரைச்சதமென்பேன் இனியாரைதஞ்சமென்பேன்
உம்மையல்லால்வேறுதுணை யுண்டோயிம்மாநிலத்தில்
அர்ச்சுனர்பின்சென்று அழைத்துமேவாருமையா
போய்வாருஞ்சுவாமியென்றார் புகழ்வேந்தர்தர்மலிங்கம்
மாதாவுங்குந்தியம்மாள் வாழ்த்திசெலவுதந்தாள்
மாயவனுமருச்சுனனும் வணங்கியெழுந்திருந்து

மாயவனும் அருச்சுனனும் தீர்த்தியாத்திரைபோகிறது.

காஷாயந்தானுடுத்திக் கடுவேஷங்கொண்டார்கள்
சந்நியாசிவேடங்கொண்டு தவமுனிபோல்வேடம்பூண்டு
தருமாபுரம்வீமாபுரந் தாணிபுரந்தாண்டி
இந்திரவனங்கடந்து இனியவனம்போகலுற்றான்
காடுசெடிதாண்டி கரியமலைதான்தாண்டி
காசிநதிபோய்முழுகிக் கனதீர்த்தமாடினார்கள்
விசுவநாதசுவாமியைத்தான் வேண்டிதரிசித்தார்கள்
துங்கபத்திரிகோதாவரி தொலைதீர்த்தமாடினார்கள்
யமுனைசரஸ்வதியு மின்புடன்ஸ்நானஞ்செய்தார்
மல்லிகார்ச்சுனம்வந்து மகேஸ்வரனைப்பூசைபண்ணார்
திருப்பதியேவந்தார்கள் தெரிசனமேசெய்தார்கள்
வேடனது எச்சிலைத்தான் விரும்பியுண்டவித்தகனார்
கண்ணப்பனுக்காட்சிதந்த காளஸ்திரிவந்தார்கள்
காளத்திநாதரையுங் கண்டுதரிசித்தார்கள்
திருப்பாலைவனந்தனிலே சிறப்புடனேவந்தார்கள்
கபாலீசநாதரைப் பணிந்துதண்டஞ்செய்தார்கள்
வால்மீகர்பூசைசெய்த மருந்தீசரைத்தரிசித்தார்கள்
திருவொற்றியூரில்வந்து தியாகரைபூசைசெய்தார்
கழுக்கள்வலம்வந்து கடைநயினார்பூசித்தார்
திருக்கழுக்குன்றபதி தேடியேவந்தார்கள்
வேதகிரிலிங்கத்தை வேண்டிச்சரணமிட்டார்
வண்ணாரப்பெண்ணுக்காய் மணம்போனாரென்றுசொல்லி
அண்ணாமலையாரை யாணழகர்தேடிவந்தார்
அருணகிரிநாதரைத்தா னடிபணிந்துதெண்டமிட்டார்
புற்றிடங்கொண்டதொரு பொன்திருவாலூர்போனார்
தியாகரைத்தரிசிக்கத் திரும்பினாரிருவருமாய்
சிதம்பரந்தன்னிலேதான் சபாபதியைதரிசித்தார்
மாயவரம்கும்பகோணம வந்துதரிசித்தார்கள்
ஸ்ரீரங்கம்வந்தல்லோ பிரங்கனைப்பூசைசெய்தார்
ஜம்புகேஸ்வரத்திலேதான் ஜலகண்டரைதரிசித்தார்
இராமேஸ்வரத்திற்கு யிருவருமாய்வந்தாராம்
சேதுபதிஸ்நானஞ்செய்து இராமலிங்கம்பூசைசெய்து
பிட்டுக்குமண்சுமந்த பித்தரைக்காணவென்று
மதுரைநகர்தேடி வருகிறாரிருவருமாய்

வருகிறவழிதனிலே வாணியனொருவனவன்
அல்லியரசாணிக்கு ஆரணங்குமாதினுக்கு
நித்தமவன்முத்தளக்கு நீதியுள்ளவாணியன்றான்
அன்றாடமுத்தி லளவுகுறைந்ததென்று
படிமுத்துகுறைந்ததென்று பதறிப்புலம்புகிறான்
வாயிலரைந்துக்கொண்டு மண்ணிற்புலம்புகிறான்
அழுதகுரல்கேட்டு அங்குவந்தாரிருவருமாய்
ஆரடாதம்பியரே யழுதுபுலம்புவதேதன்
உன்னையன்னீதம்பண்ணினவ ரார்காணும்வர்த்தகனே
அழுதுவுலம்புவதேத னவ்வயணஞ்சொல்லுமென்றார்
வனந்திரியும்சந்நியாசி வார்த்தையதுவுங்களுக்கேன்
இராசாத்திவார்த்தையது இனியுரைக்கக்கூடாது
சொன்னேனேயாமாகில் சுகமாக்கப்போரீரோ
உங்களாலாவதென்ன வூர்வழியேபோங்களென்றான்
அவ்வார்த்தைதான்கேட்டு அருச்சுனனுமேமதுரைப்பார்
சொல்லுனல்குறைவுமுண்டோ சுகம்பெருவீர்வாணியரே
பெரியோர்க்குச்சொன்னால் பிழையுண்டோவுந்தனுக்கு
உன்மனக்குறையகற்றி வகைமானஞ்செய்திடுவோம்
அழுதவயணமதை அறியவுரையுமென்றார்
ஆனால்கேள்சந்நியாசி அவ்வயணஞ்சொல்லுகிறேன்
ஐயாபெரியவரே ஆண்டவரேகேளுமையா
வாளுமதுரையது வடமதுரைப்பட்டணத்தில்
தென்மதுரைவாழுகின்ற தேன்மொழியாளல்லியரும்
ஆறுயிரம்பாண்டியர்க் கரியதுரைமகளாம்
வயிற்றிற்பிறந்ததில்லை வன்கொடுமைசெய்ததில்லை
குடலிற்பிறந்ததில்லை குலக்கொடுமைசெய்ததில்லை
ஓடுகிறதண்ணீரி லுள்ளேமணற்சேருமுண்டு
அடிக்கிறகாற்றதனி லலைகாற்றுரும்புமுண்டு
குன்றின்மணிக்காணலுங் கொஞ்சங்கறுப்புமுண்டு
புருவங்கருப்பொழிய பின்னேகருப்புமில்லை
மயிரேகறுப்பொழிய மற்றக்கறுப்புமில்லை
ஆறுயிரவருக்தா னரியமைந்தனில்லாமல்
மாளுவோமென்றுசொல்லி மலைமேற்றவமிருந்தார்
மாளாதேயென்றுசொல்லி மலரிலவதரித்தாள்
பொற்றாமரைதனிமேல் பிறந்தாளாமாதுகண்ணி
அல்லிப்பூமேலே யருமையாய்த்தவமிருந்து
அல்லியென்றுபேருமிட்டு ஆரணங்குபெண்வளர்த்தாள்
ஏழுபிராயமதி லெதிர்த்துவந்தநீன்முகனை
நீன்முகனைக்கொன்றவளும் நீலிபட்டங்கொண்டாளே

பொம்மைவிருந்துகட்டிப் பூமியரசாளுகின்றாள்
அவ்வார்த்தைக்கேட்டு அருச்சுனனுமேதுரைப்பான்
அழகில்மிகுந்தபெண்ணோ ஆணழகாசொல்லுமென்றான்
எல்லார்தலைமயிறு மிருமுழமொருமுழமாம்
ஆரணங்குகூந்தலது அறுபத்துமூன்றுமுழம்
வண்டுமுதுகோடுபோல் மயிர்நிறமாயிருக்கிறது
தேய்பிறைசாயலைப்போல் திருநெற்றிக்கண்ணழகும்
வேப்பிலைசாயலைப்போல் மேல்புருவத்தழகும்
கூரியமூக்கழகும் குளிர்ந்தமுகத்தழகும்
முத்துப்போல்பல்வரிசை முருக்கிதழ்போல்செவ்வுதடும்
நீர்முட்டைபோற்கண்ணழகும் நெரிந்தபுருவமுடன்
சங்குகழுத்தழகும் சாதிலிங்கமேனிகளும்
காமன்கடைந்ததுபோல் கலசத்திளமுலையும்
கற்பகச்சாயலைப்போல் கைத்தலமிரண்டழகும்
ஆலிலைபோலாகயமர்ந்ததிருவயறும்
சங்கத்திடைபோற் சேர்ந்தயிடையழகும்
இளவாழைத்தண்டதுபோல் இரண்டுதொடையழகும்
முத்துசிப்பிப்போலே முழங்காலிரண்டழகும்
புத்தகஞ்சேர்ந்ததுபோல் புறங்காலிரண்டழகும்
சுவரிலெழுதலாகும் சித்திரம்போல்பார்க்கலாகும்
படத்திலெழுதலாகும் பதுமைபோற்பார்க்கலாகும்
வேரிற்பவளங்கள் மின்னுகிறகாந்தியவள்
கொம்பனையாள்வார்த்தையது குயில்கள்குரலோசை
காய்க்கும்பிராயமையா கன்னிகட்டுங்காலமையா
பூக்கும்பிராயமையா பிஞ்சிவிடுங்காலமையா
அவளைப்போலழகுடையா ளாருமில்லைவையகத்தில்
கட்டழகிமாதினுக்குக் கல்யாணமாச்சுதடா
மாலைப்பசுங்கிளியை மணமுகூர்த்தம்செய்தனரோ
ஆனால்கேள்சந்நியாசி அவ்வார்த்தைசொல்லுகிறேன்
கொள்ளவருமாப்பிள்ளைக்கு கொரடாகொடுப்பேனென்றாள்
ஆளவருஞ்சம்பந்தியை யடிப்பேனென்றாள்சேறுபந்தால்
கல்யாணமென்பாரைக் கண்ணைப்பிடுங்கிடுவாள்
மூன்வாசற்படிதனிலே முச்சிகொட்டாகட்டிவைத்தாள்
பாலைக்கறந்துதான் பட்டணத்தில்வைத்தாக்கால்
பறக்கின்றகாகமது பாராதுதலையெடுத்து
ஆண்காற்றடியாது அல்லியம்மாள்கோட்டைதனில்
ஏறுவதும்பெண்குதிரை யிருப்பதுவும்பெண்சேனை
பன்னிரண்டுவயதாச்சு பாலப்பிராயமையா
நான் சித்தங்கலமுத்தளப்போல் நீதியுள்ளமாதினுக்கு

அன்றுடமுத்தி லளவுகுறைந்ததையா
ஆகையினாலேதா னழுதுபுலம்புகிறேன்
வெட்டியெறிந்திடுவாள் வீரமணிவாளாலே
கொல்லவினைப்பாளே குடிகெடுவந்துவிடும்
ஆகையினாலேதானழுதுபுலம்புகிறேன்
அவனுக்காதரவுசொல்லி யப்புறமேபோகையிலே

அர்ச்சுனர் அல்லியின்மே லாசைகொண்டது.

அர்ச்சுனராஜனவன் அதிகமோகங்கொண்டானே
அப்புறநடக்கறியான் அர்ச்சுனராஜனவன்
அல்லியின்மேலாசையது அதிகமோகங்கொண்டானே
காமவிகாரத்தால் கலைதாங்கிப்போனானே
மன்மதனெய்தகணை மார்பைப்பிளக்கிறதே
சித்தசன்தொட்டகணை சிறுமார்புருகிறதே
மோகித்துத்தானுமவன் மூர்ச்சைபட்டுப்போனானே
பாணங்களைந்து பட்டுநெஞ்சுருகிறதே
மாரன்விடும்பாணமது மார்புருகிப்போகிறதே
ஆயன்பெருமாளே அடியேனொருவார்த்தை
கட்டினவிருதுகளைக் கடுகவறுக்கவேணும்
எந்தவிதமானாலு மணமாலைசூட்டவேணும்
மாலையிட்டாலல்லாது மாயவனேவருவதில்லை
செத்துமடிவேனையா செலவழிந்துபோவேனையா
அவ்வார்த்தைதான்கேட்டு அரிராமரேதுசொல்வார
கட்டென்னகாவலென்ன காவலதிகாரமென்ன
ஆறுயிரவர்களா மையன்மார்சேனையென்ன
சேவகமிருந்ததொரு தேன்மொழியாளல்லியரை
கலியாணம்பண்ணுதற்குக் காண்டீபா ஆகுமோதான்
கொல்லவினைப்பாளே குடிகெடுவந்துவிடும்
செத்துமடிந்திடுவாய் செலவழிந்துபோய்விடுவாய்
தேசத்துபெண்களோடோ சேனபேர்கிட்டாரோ
சாதியிலொருபெண்ணை தாலிகட்டிவைப்பேனடா
குலத்திலொருபெண்ணை கோலம்பண்ணிவைப்பேனடா
மாதுடையவார்த்தையை மறந்துவிடுவாள்விசையர்
பெண்ணென்றவார்த்தையை போட்டுமறந்துவிடு
அல்லியரைமாலையிட லாகாதுவுன்னாலே
செத்துமடிவாயே செலவழிந்துபோவாயோடா

நச்சுநச்சென்றெண்ணாதே நாம்போவோம்ராசாவே
தீர்த்தயாத்திரைவந்து சேனனைாச்சுதடா
தருமருந்தம்பியரும் தவித்துப்புலம்புவாரே
ஆரணியவாசம்வந்து அனேகளாச்சுதோடா
என்றதுதான்கேட்டேதுசொல்வான்வாள்விஜையன்
நான்செத்துமடிந்தாலுஞ் செலவழிந்துபோனாலும்
மாண்டுமடிந்தாலும்வைக்குந்தனேசேர்ந்தாலும்
செத்தவிடந்தனிலே செங்கழுநீர்பூபூர்ப்பேன்
மாண்டவிடந்தனிலே மல்லிகைபூபூர்ப்பேன்
பஞ்சணைமெத்தையிலே படுக்கமலராவேன்
கொண்டைக்குப்பூவாவேன் கொசவணத்திற்பையாவேன்
நெற்றிக்குப்பொட்டாவேன் நேர்விழிக்குமையாவேன்
மூந்தாணித்தொங்கலிலே முள்ளாகிவொட்டுவேன்யான்
காலுக்குமிஞ்சாவேன் கைவளையல்நானாவேன்
மாலையிட்டாலல்லாது மாயவனே வருவதில்லை
கலியாணஞ்செய்துவையும் கரியமலெம்பெருமாள்
உன்புண்ணியத்தினாலேயான் பிழைக்கவழியாருமையா
பாதம்பணிந்தானே பார்த்திபன்மாவினது
ஆயர்பெருமானு மருளாளரேதுசொல்வார்
புத்திகெட்டவர்ச்சுனையுன் பின்னாலேவந்தேனடா
அறிந்துமிருந்தநா னறிவழிந்துவந்தேனடா
பெண்களைப்பார்த்துநீ பேதைபோற்புலம்புகிறாய்
ஆயன்பெருமானு மாலோசனைபண்ணலுற்றார்
காமக்கணைகள்பட்டு களையாகக்கீழ்விழுந்தான்
மாதுகன்னியல்லியரை வரவழைக்கவேணுமென்று
மாயமிருகங்களை மாயரவருண்டுபண்ணார்
காட்டானைசிங்கங்களும கரடிபுலியாளிகளும்
மானுமுயல்களுடன் மட்டற்றபன்றிகளும்
மயிலுங்குயிலன்னம் வண்ணவண்ணப்பட்சிகளும்
அனேகமிருகங்களை யரிராமருண்டுபண்ணார்
மதுரைக்குடிபடைகள் மகாசெனங்களத்தனையும்
காட்டில்வரத்தான்பயந்து கன்னிநல்லாள்முன்னேவந்தார்
அல்லியர்க்குத்தெண்டனிட்டு அடிபணிந்தேதுரைப்பார்
இத்தனைநாள்பிழைத்தோ மிடுக்கமில்லையென்றிருந்தோம்
என்னகுறைசெய்தோ மெண்ணமொண்ணாமிருகங்கள்
காட்டுக்குப்போவோமென்றால் கனத்தமிருகமம்மா
பொல்லாதமிருகங்கள் புலிகள்துரத்துதம்மா
எதாற்பிழைப்போமென் றெல்லாருமழுகலுற்றார்
அல்லிப்பெருமாளு மாரணங்கேதுரைப்பாள்

அல்லியரசாணி வேட்டைக்குவருகிறது.

மிருகத்தால்மடிவமென்று மிகவும்பயப்படாதே

வேட்டைக்குநான்போய் வேணமிருகமெல்லாம்
அரைநாழிக்குள்ளே யதமபண்ணிப்போவேனென்றாள்
அஞ்சாமலெல்லவரு மரண்மனைக்குப் போங்களென்றாள்
அத்தண்டபெண்களெல்லா மரண்மனைக்குப்போனபின்பு
ஆரடிதாதிகளே அலங்காரச்செங்கமலம்
வேட்டையாடும்பெண்களை நீ விரைந்தோடியழையுமென
வில்லியர்பெண்களை நீ விரைந்தோடியழையுமென்றாள்
குறவர்பெண்கள் மறவர்பெண்கள் கூட்டிவா தாதியரே
வில்லியர்பெண்களை நீ விரைந்தோடியழையுமென்றாள்
குதிரைமேற்சீனிகட்டுங் கொப்பனவேதாதியென்றாள்
அவ்வார்த்தைதான்கேட் டாரணங்குதாதியவள்
இலாயத்தில்கட்டிவைத்து யிருக்கின்றபுரவிகளில்
பாராசாரிபுரவிதன்னைப் பாங்குடனே தானவிழ்த்து
குதிரைகுளிப்பாட்ட கொப்பனவேகடிவாளமிட்டு
நாலுகாற்குவண்டயமாம் நடுகழுத்திற்கொலுசுகளாம்
பக்கத்திலங்குபடி பதியவைத்தாரப்போது
கண்ணாடிசல்லிகட்டி கவரிமான்குச்சுவிட்டு
முத்துத்துறுகலிக்கத்துறு முன்னாலேதான்சொருகி
இமாம்பட்சியிறகுகளை யியலாகத்தான்சொருகி
குதிரையலங்கரித்துக் கொண்டுவந்துமுன்புவிட்டார்
அல்லிபெருமாளு மப்போதேதானெழுந்து
அம்புவில்லுங்கைபிடித்து அம்புறாத்தூணிமுதுகணிந்து
பதினாயிரந்தோழிமார் பக்கம்புடைசூழ
ஆறாயிரம்யானைகுதிரை யல்லியுடன்பயணமாச்சு
வெள்ளித்தமுக்கடித்தார் வெண்கலக்கொம்பூதினார்கள்
பொன்னின்தமுக்கடித்து புறப்பட்டார்பெண்களெல்லாம்
வேட்டைநாய்சங்கிலியும் விருதுகட்டிவருகிறார்கள்
மான்வலையும்வல்லயமும் வளைதடியுஞ்சக்கரமும்
இரட்டைக்குழாத்துப்பாக்கி இருதோளிலிட்டார்கள்
காற்செருப்புந்தோல்குல்லாவுங் கையிலேசில்லாக்கோலும்
அனந்தவிதப்பெண்களெல்லாம் அல்லியரைச்சூழ்ந்துவர
அப்போது அல்லியரும் ஆரணங்குதானெழுந்து
புரவியருகில்வந்தாள் பொற்கொடியாள்மாதுகன்னி
புரவிதனைச்சுற்றி போதவேசரணஞ்செய்தாள்
கழுத்துமயிர்பிடித்துக் கடிவாளங்கைபிடித்தாள்
தட்டினாள்புரவிதனைச் சடுதியிற்றானேறினாள்
அடிவயிற்றில்கால்தட்ட அபாரியாயோடிற்று
ஆயிரம்புரவிகளும் அல்லியுடன்கூடவிட்டார்

ஆயிரங்குதிரைகளில் அல்லியம்மாள்குதிரையது
காற்றாய்ப்பறந்து கடுகெனவேவருகிறது
பட்டணத்தைதான்கடந்து பாரவனந்தான்வந்து
காட்டைவளைத்தார்கள் கருநகரைச்சூழவிட்டார்
செடியைவளைத்தார்கள் செந்நாயைச்சூழவிட்டார்
கோணக்கொம்பூதுவார்கள் கொப்பெனவேதமுக்கடிப்பார்
ஆயன்பெருமாளும் அர்ச்சுனரைத்தானெழுப்பி
வருகிறாள்காணல்லியரும் வனந்தனிலேவேட்டையாட

அல்லியருக் கருச்சுன னம்புபொருக்கித்தருவது.

அவள்—எய்கிறபாணமெல்லா மெழில்விசையாநீபொறுக்கி
அம்புகள்தான்பொறுக்கி யல்லியர்க்குநீகொடுத்து
வல்லமையாய்வந்தாலே மாலையிட்டுவைப்பேனென்றார்
அவ்வார்த்தைதான்கேட் டருச்சுனனுந்தானெழுந்தான்
மாயமிருகமது வந்ததேயல்லிமுன்ப
புள்ளிமான்றன்னையே பொற்கொடியாள்தெண்டனிட்டாள்
மானைத்துரத்தியேதான் வருகிறாளல்லியரும்
காற்றாய்ப்பறந்ததுவே கானகத்தில்மானதுதான்
குதிரைசவாரிவிட்டுக் கொப்பெனவேதுரத்தலுற்றான்
கூடத்தொடர்ந்தானே கோபாலன்மைத்துனனும்
அல்லியராசாணியவள் அம்புகளெய்ததெல்லாம்
பொறுக்கித்தருவானே போர்விசையர்ச்சுனனும்
காடெல்லாம்வேட்டையாடிக் களைத்தாளே அல்லியரும்
விடுவிடுநேரமது வெயிலானவேளையிலே
ஆலமரத்தடியிலே அங்கேயிறங்கிவிட்டார்
ஆரடிதாதியரே யாசனம்போடுமென்றார்
அரைத்துணியைத்தான்விரித்து அர்ச்சுனனுங்கீழ்போட்டான்
குதிரைகட்டுமென்று கொப்பெனவேதான்படுத்தாள்
அகில்மரந்தன்னுடனே யணைத்துவைத்தார்குதிரைதன்னை
பாங்கியரேஎன்னுடைய பாதம்பிடியுமென்றாள்
அருச்சுனராசதுரை யல்லியருக்கெதிரேவந்து
அல்லியம்மாள்தன்பாத மர்ச்சுனனும்பிடிக்கலுற்றான்
கையால்பிடிக்கையிலே கணையாழிசுற்றிக்கொண்டான்
ஆரடிதாதியரே யலங்காரத்தோழியரே
நீங்கள்—கற்றகதைதனிலே கதையொன்றுசொல்லுமென்றார்
களைகள்தெளியவேண்டும் கதையொன்றுசொல்லுமென்றார்

அருச்சுனன் அல்லிக்குக் கதைசொல்லல்

ஆணழகுமன்ன னல்லியர்க்குக்கதையுரைப்பான்
அல்லியரசாணி யம்மாதுரைசாணி

தூருவாசர்மந்திரத்தால் துலங்கவந்தநவமணிகள்
சந்திரகுலம்விளங்கவந்த தர்மரவரைந்துபேர்கள்
பாண்டுராஜன்பெற்றெடுத்த பஞ்சவர்களைவருண்டு
தருமருக்குநேரிளையான் தாக்குடையவீமராசன்
வீமனுக்குநேரிளையான் வில்வாங்குமர்ச்சுனன்றான்
நெருப்பிற்பிறந்தபெண்ணும் நேரிழையாள்திரௌப்தியை
எட்டாதவில்வளைத்து இளங்கொடியைமாலையிட்டான்
மீசைமுறுக்கழகன் விழியிற்கருப்பழகன்
நாவதனில்நக்ஷத்திரம் நயனவிழிப்பார்வையுள்ளான்
தோளில்துளசிமாலை தொப்புளிலமிர்தகலசம்
பல்லிற்பரசவீணை பாதத்தில்செந்தாமரை
முதுகிலேமட்சரேகை முழங்காலில்முத்துமாணிக்கம்
ஸ்திரீலீலைமன்மதன்றான் சிறுபெண்கள்மணவாளன்
முன்னிலும்பின்னழகன் மோககன்னிமணவாளன்
பின்னிலுமுன்னழகன் பெண்களுக்குமணவாளன்
அருச்சுனனைப்போலே அழகுடையான்யாருமில்லை
திக்குநல்லபாலகரை செயம்பண்ணுஞ்சேவகன்றான்
இனிபிறக்கும்பெண்களுக்கு யேற்றமணவாளன்
என்றுசொல்லத்தான்கேட்டு இளங்கொடியாளல்லியம்மாள்
என்னகதைசொன்னையென்று யேறமுகப்பார்த்தாள்காண்
மீசைகட்டும்பாவனையும் விழியழகுங்கண்டுவிட்டாள்

அர்ச்சுனன்பேரில் அல்லியரசாணி கோபித்தது.

நீ-ஆரடா ஆண்பிள்ளையென் றாயுதத்தைத்தானெடுத்தாள்
காற்றாய்பறந்தானே கட்டழகனர்ச்சுனனும்
கத்தியெடுக்கையிலே காதவழியோடிவந்தான்
திக்கத்தரியாமல் நீலவர்னர்பக்கம்வந்தான்
அங்கேநடந்தசேதி யாண்டவர்க்குத்தானுரைத்தான்
கதைகளும்சொன்னேன்யான் காலும்பிடித்தேனே
காலும்பிடித்தேனே களைகள்தெளியவில்லை
கணையாழிமோதிரத்தைக் கழற்றிவந்தேன்மாயவனே
மாலைப்பசுங்கிளியை மாலையிட்டுவையுமையா
ஆவியுருகிறது ஆனசிவன்போகிறதே
ஐந்துபாணங்கைத்தலைவா அடியேனெஞ்சுருகிறதே
ஆறுருகுபாணமது அடியேன்மார்புருகிறதே
பஞ்சிலிட்டதீப்போலே பதைத்துருகுதென்மனது
அவளைப்போலழகுடையாள் அவனியிலேயானறியேன்
பார்த்துமறியேனையா படத்திலேயுங்கண்டதில்லை
எழுத்துதச்சனவளெழுதிவரவிட்டானோ
மேனாட்டுதச்சனவன் மெய்யாய்சிருஷ்டித்தானோ

ஏதாய்சிருஷ்டித்தாரோ இயலானபிரமதேவன்
அல்லியென்பான்மெல்லியென்பானனந்தனிலேபெண்ணேயென்பான்
காமக்கணையாலே கணைதாங்கிபோய்விட்டான்
மூர்ச்சைபட்டுவிழுந்தானே முடிமன்னனர்ச்சுனனும்
அப்போதுதாதிமா ரத்தனைபேர்தோழிகளும்
பாங்கிமார்தோழியாம் பத்தினிமாரருகில்வந்தார்
ஆரடிதாதியரே அருகில்வந்தசெங்கமலம்
ஆரோஒருவனவன் ஆணாய்ப்பிறந்தவண்டி
காலும்பிடித்தானே கதைகளுரைத்தானே
தேடிப்பிடித்துவாரும் துண்டித்துப்போடுகிறேன்
ஆங்காரப்பட்டவனை ஆக்கினைகள்செய்யவேணும்
ஆயிரந்தோழிகளை யங்கெனவேதேடவிட்டார்
எங்கெங்குந்தேடியே யினியவிடமாராய்ந்து
கள்ளன்திருடனைத்தான் காணோமென்றுவந்துரைத்தார்
பேயேபிசாசோதான் பின்றொடர்ந்துவந்ததம்மா
ஆணுருவாய்த்தோன்றிற்றோ ஆச்சியரேயுந்தனுக்கு
அதனாற்பழுதுமில்லை ஆச்சியரேஎழுந்திருங்கள்
ஏறினாள்புரவியின்மே லனேகசனஞ்சூழ்ந்துவர
பாங்கியருந்தோழியரும் பக்கம்புடைசூழ
மாளிகைவாசலென்னு மண்டபம்போய்ச்சேர்ந்தார்கள்

ஸ்ரீகிருஷ்ணபகவான் படமெழுதிக்கட்டியதும் அருச்சுனன் தேடுவதும்.

அப்போதுகரியமா லாலோசனைசெய்து
அல்லியரைப்போலாக அழகுபடமெழுதி
பட்டங்களெழுதியே பாரளந்தமாயவரும்
குளத்தங்கரையிலுற்ற கோங்குமரந்தன்னில்
உயர்ந்தமரந்தனிலே வுலகளந்தார்கட்டிவைத்தார்
தண்ணீரில்நிழல்தெரிய சுவாமியங்கேகட்டிவைத்தார்
அர்ச்சுனரைத்தட்டியே யரிராமர்தானெழுப்பி
காண்டீபாவர்ச்சுனனே களையெனக்குவருகிறது
தண்ணீ நங்கொண்டுவந்து தந்தாயேயாமாகில்
மாலைப்பசுங்கிளியை மாலையிட்டுவைப்பேனடா
என்றுசொல்லக்கேட்டு எழுந்தானருச்சுனனும்
கமண்டலத்தைத்தானெடுத்துக் கடுகியேயோடலுற்றான்
வனத்தினிற்குளந்தேடி வருகிறானேயருச்சுனனும்
தண்ணியிலிறங்கும்போது தையலரைக்கண்டுவிட்டான்
அல்லியரைத்தான்பார்த்து அர்ச்சுனனுமேதுசொல்வான்
தண்ணீரில்போயிருக்கத் தையலரேகாரியமேன்

என்னிலும்புருஷனடி எங்கேகிடைப்பான்காண்
கட்டிலுண்டுமெத்தையுண்டு கால்பிடிக்கத்தாதியுண்டு
ஆடவென்றாலுஞ்சலுண்டு அமர்ந்திருக்கமெத்தையுண்டு
பந்தாடிசெண்டாடிப் பள்ளாங்குழியாடி
அம்மாநீராடியே யமர்ந்துநீவீற்றிருப்பாய்
தேனேபசுங்கிளியே சிங்காதனம்வீற்றிருப்பாய்
உன்சொல்லுமேலாக வுத்தமியேநானிருப்பேன்
உன்னாசைகொண்டுநான் வுழன்றுதிரிகிறேன்
உன்-மாயமருந்தாலே தாயைமறந்தேனே
அண்ணனைத்தம்பியரை யனைவரையுநான்மறந்தேன்
காமக்கணையாலே கனைதாங்கிப்போகிறேண்டி
ஆசையெல்லாமுன்மேலே யலையுதடிஎன்சீவன்
வாயைத்திறவாயே மறுவார்த்தைசொல்லாயோ
தாளைத்திறவாயோ தனிவார்த்தைசொல்லாயோ
வாயைத்திறந்தாயானால் வச்சிரமுதிருமடி
வச்சிரமுதிர்ந்தாலே வாரியெடுக்கிறேண்டி
முத்துவுதிர்ந்தானால் முந்தாணியேந்துரண்டி
உன்-சித்திரவாய்திறந்து செப்பாயோஒருவார்த்தை
மார்போடுமார்பணைய மகாவிடாய்தீருமடி
தோளோடுதோளணைந்தால் சுகங்கள்தெரியுமடி
நான்-எத்தனைநேரமட்டும் இதக்கங்கள்சொல்வேன்யான்
கல்லுங்கரையுமோடி கற்றூணுமிற்றுவிழும்
உன்-மனதுகரையவில்லை மாலைப்பசுங்கிளியே
தண்ணீரில்நானிறங்கித் தழுகப்பிடிப்பேண்டி
என்றுகுதித்தானே இளவிசையராசனவன்
மூச்சைப்பிடித்தவனு முழுகித்தடவலுற்றான்
சாமநேரமட்டாகத் தண்ணீரில்தடவினனே
தவளையும்பாம்புகளும் தடவிவலித்தெடுத்தான்
அலுத்துச்சலித்தவனு மர்ச்சுனனும்வெளியில்வந்தான்
கரையின்மேல்வந்தவனும் கட்டழகனேதுசொல்வான்
என்றனைமோசஞ்செய்து எங்கேபோனாளென்றறியேன்
போனவிடமறியேன் போய்பதுங்குந்தாவறியேன்
தங்குமிடமறியேன் சஞ்சரிக்குந்தாவரியேன்
என்றுவிசாரமிட்டு இறங்கியவன்பார்க்கையிலே
தண்ணீர்தெளிந்தபின்பு தையலரைப்பார்த்துவிட்டான்
இந்நேரந்தடவினேனே யெங்கிருந்தாயேந்திழையே
என்னவித்தைசூத்திரங்க ளிளங்கொடியேகற்றவள்காண்
மாயமறிந்தவளோ மந்திரங்கள்கற்றவளோ

மலையாளவித்தைகள் மந்திரத்தைக்கற்றாயோ
ஏந்திழையேயுனைப்பிடிக்க என்கையாலாகாதோ
மறுபடியுங்குதித்தாரே மன்னன்றுரைராஜாவும்
அவ்வளவில்மாயவனார் அங்ஙனவேயோடிவந்து
படத்தையவிழ்த்தவரும் பாரளந்தார்போய்மறைந்தார்
நாலுநாழிகைமட்டும் நல்விஜயராசதுரை
குட்டிமதயானை குளங்கலக்கிவிட்டதுபோல்
மூழ்கித்தடவினானே முடிமன்னராசனவன்
அல்லியரைக்காணாம லலைந்துவிசாரமிட்டான்
வந்துவெகுநேரமாச்சு மாயவரென்சொல்லுவாரோ
கனத்தவிசாரமுற்று கமண்டலத்தில்நீர்முகந்து
மாயவனார் தன்னருகில் வந்தானே அர்ச்சுனனும்
ஏன்காணுமர்ச்சுனரே இன்னேரமேதுசெய்தாய்
சாமநெடுநேரமாச்சே தண்ணீர்கொண்டுநீவரப்போய்
என்னவதிசயமா யிருந்தீர்காணர்ச்சுனரே
ஐயாபெருமாளே அடியேனொருவார்த்தை
தண்ணீர்மொள்ளப்போனபோது தையலரைக்கண்டேனையா
தண்ணீரிலிருந்ததுபோற் றரிசித்ததெந்தனுக்கு
குதித்துதடவினேன்யான் கொம்பனையைக்காணாமல்
மூழ்கித்தடவினேன்யான் மொய்குழலைக்காணாமல்

ஸ்ரீகிருஷ்ணபகவான் நித்திரைசெய்யவும் அர்ச்சுன ராசன் அல்லியரைத் தேடிப்போனது.

அவ்வார்த்தைதான்கேட்டு அரிராமரேதுசொல்வார்
அல்லியர்மேல்சித்தமது அரியவில்லை அர்ச்சுனரே
கலையாய்வருகிறது காண்டீபாவெந்தனுக்கு
நித்திரைசெய்தபின்பு நேரிழையையுந்தனுக்கு
மாலைப்பசுங்கிளியை மாலையிட்டுவைப்பேனடா
என்று-வாழ்விசையன்றுடைமேலே மாயவனார்தான்படுத்தார்
கள்ளக்குறட்டைவிட்டு கரியமால்தூங்கினார்
அப்போதுவாழ்விசைய னருச்சுனனுமேதுசெய்வான்
சிரசைநழுகவிட்டுத் தேர்விஜையன் தானெழுந்தான்
பாராங்கல்லைத்தூக்கிக்கொண்டு பார்த்திபன்வருகின்றானே
தலைமேலேகல்போடத் தார்விசையன் தானினைந்தான்
என்றுகலங்கி யெண்ணமிட்டுதானிருந்தார்
கல்லையெடுத்துவந்து காண்டீபனர்ச்சுனனும்
தலைக்குயரம்வைத்து சுவாமியைப்படுக்கவைத்தான்
அல்லிமேற்சிந்தைகொண்டு அருச்சுனனும்போகலுற்றான்
மதுரைக்குப்போகவென்று மாதுதனைக்காணவென்று

காடுசெடி தாண்டி கடுகிவருகையிலே
அருச்சுனன்போனசெதி யறிந்துமேமாயவரும்
அருச்சுனராசனுக் கனர்த்தம்வந்துநேர்ந்ததென்று

ஸ்ரீகிருஷ்ணபகவான் குறத்தியுருக்கொண்டது.

மாயன்பெருமாள் வடிவெடுத்தாரந்நேரம்
செக்கச்சிவலைபாய்ச் சிறுபெண்குறத்தியானார்
அக்குமணிகொக்குமணி அழகானபாலமணி
பச்சமணிபாலமணி பாங்காயலங்கரித்து
குறத்தியரைப்போலாகக் கொற்றவனார்மாயவரும்
கண்டானேகுறத்தியரைக் கட்டழகனர்ச்சுனனும்
ஆச்சிக்குறத்தியரே யடியேன்யான்தெண்டனம்மா
கைபார்த்துக்குறியுரைக்க கட்டழகிவல்லவளோ
மனதில்நினைத்தகுறி சொல்வாயோமாதாவே
எந்தவூருங்களது எனக்கரியச்சொல்லுமென்றான்

தினதெந்தினா தினதெந்தினா தினதெந்தினா தினனா
தென்னாதினா தினனா தினதெந்தினா தினனா

எந்தனது திருநாடு கேட்கிறையோ தம்பி
ஏற்றமுள்ள இந்திரனார் ராஜனெங்கள்நாடு
சந்திரர்கள்சூரியர்கள் தவம்புரியும்நாடு
தவமுனிவரிஷிகளெல்லாம் வாழுமெங்கள்நாடு
கொச்சிமலைகுடகுமலை யெங்களதுநாடு
குமரேசர்வாழுவது யெங்களதுநாடு
பச்சமலைபவளமலை யெங்களதுநாடு
பரமசிவன்வாழுவது யெங்களதுநாடு
வங்காளஞ்சிங்காள மராட்டியமெங்கள்நாடு
வளம்பாடிகுறியுரைக்க வந்தேனடா தம்பி
பசிகாலமானாலே பழங்கூழிவருவோம்
பரமசிவனுமையவட்குங் கைபார்க்குங்குறத்தி
ராமக்காலட்சுமக்காள் பொம்மக்காளென்பேர்
நலமறிந்துகுறியுரைப்போம் நட்டணையாய்நாங்கள்
உண்மையாய்க்குறியுரைப்போம் தண்மையில்லைதம்பி
உன்னணையென்றனை யென்றவளுஞ்சிரித்தாள்

வேறு.

ஆனால்கேள்கட்டுவெச்சி யடியேயொருவார்த்தை
தெய்வக்குறத்தியென்றால் சொல்லுங்குறியெந்தனுக்கு
உண்மைக்குறியுரைத்தால் வெச்சிதங்கள்தருவேண்டி
காதிலிடுங்குண்டலமும் கையிற்பவுத்திரமும்
தான்-உடுத்துமுடைமான மூந்தனுக்குத்தருவேண்டி

கைபார்த்துகுறியுரையும் கட்டழகியெந்தனுக்கு
நாமக்குறத்தியவள் நலமாகவேதுசொல்வாள்
வண்மைக்குறத்தியவள் வாய்திறந்தேதுசொல்வாள்

குறத்தி-அருச்சுனனுக்கு குறிசொன்னதுகுறம்.

தினதெந்தினாதினதெந்தினா தினதெந்தினாதினா
தெந்நாதிநாதினா தினதெந்தினாதினா

திங்கள்மதிபிறைசூடுஞ் சிவனுடையமகனே
திருத்தணிகைவாழ்முருகா சேவையருள்வேண்டும்
மலையாளத்தஞ்சியம்மை வாக்கருளவேண்டும்
அலர்மேலுமங்கையரே மலைமேலுஞ்சிந்தை
அணைவோரும்வந்துகுறி யன்புதரவேணும்
ஆகாசவாணிதுர்க்கை ஐயனார்பிடாரி
அம்மைவள்ளியுமையவளே யினியகுறிசொல்லும்
பொங்கல்நயினருகளும் பொற்கொடியேதெய்வம
பூவாடைக்காரியம்மை புகழ்ந்துகுறிசொல்லும்
தெய்வங்களைநினைத்தாலே சிலிர்த்துக்கொள்ளுதுடம்பு
திரேகமெல்லாமயிற்குச்சி சிலிர்க்கிறதேதம்பி
வாடைமணம்வீசுதேடா ஐவர்வந்தாப்போல
மயக்குகிறதென்னுடம்பை சன்னதங்கொண்டதுபோல்
கூடகொண்டுகவியுதடா கொற்றவனேயெனக்கு
கோலவிழிதுடிக்கிறது குறிகள்சொல்லக்கேளு
சந்திரகுலராசாக்கள் தருமரைவர்நீங்கள்
தரணிமுழுதாளுகின்ற தருமர்தம்பிநீதான்
சிலைநுதலின்வடிவழகன் தேர்விஜையநீதான்
தீர்த்தயாத்திரைபோகவென்று தோழனுடன்வந்தாய்
வடிவழகிசிலைநுதலாள் தென்மதுரைவாழும்
மாதரந்தஅல்லியின்மேல் மையல்கொண்டாய்நீயும்
ஆயிரம்பாண்டியற்கு அரியதுரைமகளாம்
அல்லியின்மேலாசைகொண் டலையுகிறாய்நீயும்
பொய்யடாவென்குறிகள் மெய்யோடாபுகல்வாய்
புண்ணியனேதர்மர்தம்பி பொறுமையுடன்சொல்வாய்
என்றவனைத்தான்பார்த் திணைவிழியால்மிரட்டி
இளங்குறத்திதனைப்போலே யிடைதுவளநகைத்தாள்

வேறு.

மெய்தான்காணுச்சியரே விளம்பினாயெந்தனுக்கு
கண்டதுகண்டாப்போல் கட்டுவச்சிசொல்லிவிட்டாய்
பார்த்ததுபார்த்தாப்போல் பட்சமாய்சொல்லிவிட்டாய்
தெய்வக்குறத்திநீ தெளிவானகட்டுவச்சி
உள்ளக்குறியெனக்கு வுத்தமியேயுரைத்தாய்
அல்லியரைமாலையிட்டு அழகுமணஞ்சூட்டுவனோ

என்மனதுக்கேற்றபடி வருவாளோ அல்லியவள்
என்மீதிலிச்சைகொண்டு இசைந்துவரப்பாருமம்மா
பாதம்பணிந்தானே பார்த்திபனருச்சுனனும்
ஆனால்கேள்தம்பியரே அல்லிவருவதற்கு
மூன்றுவிதக்குளிகையது முடிமன்னநான்தருவேன்
அம்மருந்தைநீவாங்கி யல்லிபுரம்போய்சேர்ந்து
தென்மொழியாள்பட்டணத்தில் திருக்குளத்தில்போய்சேர்ந்து
நான்-தந்தமருந்தெடுத்து தண்ணீரில்நீயுரைத்தால்
அல்லியம்மாள்பேரைச்சொல்லி யம்மருந்தைநீயுரையும்
மருந்துகரையும்போதவள் மனதுகரையுமேடா
குளிகைகரையும்போதவள் குணமுந்திரும்புமேடா
அல்லிமனம்வந்து அழகுமணஞ்செய்திடுவாள்
பொம்மக்காள்பேரைச்சொன்னால் திம்மக்காள்நேர்ந்துவிடும்
ராமக்காள்பேரைச்சொல்ல லட்சுமக்காள்நேர்ந்துவிடும்
பொய்யல்லவென்மருந்து புண்ணியனேயான்தருவேன்
உந்தனுடைமான முடுத்தியதை தருமென்றான்
காதிலிடுங்குண்டலமும் கையில்பவுத்திரமும்
கச்சைகளுந்தட்டிகளும் கழட்டிக்கொடுத்தானே
இந்தமருந்துதான் பலியாமற்போனக்கால்
உன்னை-எங்கேகண்டுதேடுவே னுச்சியரேசொல்லுமென்றான்
ஆனால்கேள்தம்பியரே யற்பமாய்ப்போச்சுதானால்
நாலுமலைக்கு நடுவேயடாவென்மலைதான்
ஏழுகுடிசைகளில் எதிர்குடிசைஎந்தனது
ராமக்காள்பொம்மக்காள் லட்சுமக்காளென்றழைத்தால்
உன்னுடமையான்தருவே னுத்தமனே அஞ்சாதே
அருச்சனன்தரித்திருந்த ஆபரணமுள்ளதெல்லாம்
பட்டுகுல்லாதட்டி கச்சை பலவிதவுடமைகளும்
கழட்டிகொடுத்தானே கட்டழகனர்ச்சுனனும்
வாங்கிநடந்தாளே மலைக்குறத்திதனைப்போல
ஆணழகராசனுமை அர்ச்சுனன்வழிநடந்தான்
உள்ளேமனமகிழ்ந்து வுத்தமனும்போகலுற்றான்
காடுசெடிதாண்டி கடுகிவந்தான்தென்மதுரை
அல்லிப்பெருமா ளவள்பிறந்தபொய்கைகண்டான்

அருச்சுனன் அல்லிபிறந்ததிருக்குளத்தில் மருந்துரைத்தது.

பவளக்கட்டுப்பொய்கைதனில் படியிலிறங்கியிவன்
வண்ணமருந்தெடுத்து தண்ணீரிலுரைக்கலுற்றான்
அல்லியென்பான்மெல்லியென்பானலந்தனிலேபெண்ணேயென்பான்
வருவாளோ அல்லியென்று வாய்திறந்துபெண்ணேயென்பான்
மருந்துகரையும்போதவள் மனதுகரையாதோ
குளிகைகரையயிலே குணமுந்திருப்பாதோ
சித்தமிரங்கியே தேடிவருவாளோ

எப்போமனம்வருமோ என்னருகில்வாராயோ
காமன்கணைபாலே கணைதாங்கிப்போகிறேனே
மன்மதபாணமது மார்பைபிளக்குதடி
சித்தசன்கொட்டகணை சிறுமார்புருகுதடி
உன்றனாசைகொண்டுநான் உழன்றுதிரிகிறேனே
அல்லியென்பான்மெல்லியென்பானனந்தனிலேபெண்ணேயென்பான்
வருவாளோஅல்லியென்பான் வாய்திறந்துபெண்ணேயென்பான்
அல்லிஅல்லியென்றுசொல்லி அலைகிறானர்ச்சுனனும்
வண்ணமருந்தெடுத்து தண்ணீரிலுரைக்கலுற்றான்
அல்லிப்பெருமாளவருடையதாதியர்கள்
ஆயிரந்தாதிமார்க ளாரணங்குகாலெழுந்து
தங்கக்குடமெடுத்துத் தண்ணீர்க்குவருகிறார்கள்
பவளக்கட்டுதிருக்குளத்தின் படியோரம்வந்தார்கள்
மருந்துரைக்குமவண்மைகளும் வார்த்தைகள்சொல்கிறதும்
அல்லியரைவைகிறதும் அவ்வார்த்தைகேட்டார்கள்
இடிவிழுவான்சொன்னதெல்லாம் எல்லவருங்கேட்டார்கள்
அல்லிப்பெருமாளை யரசாளும்நாயகியை
வம்புதும்புஞ்சொல்வார்கள் மண்டலத்திலாருமில்லை
அல்லியென்றுபேர்சொன்னால் அழுதபிள்ளைவாய்மூடும்
ஆடிடும்வார்த்தையெல்லாம் ஆச்சியற்கேசொல்லவென்று
ஓட்டநடையுமாக ஓடிவந்தார்தாதியர்கள்
அல்லியம்மாள்முன்னாலே அடிபணிந்துதெண்டனிட்டார்
ஆர்பணிதாதியரே அறியவுரையுமென்றார்
ஆர்பணியுமல்லநா னடியேன்திருப்பணிதான்
தங்கக்குடமெடுத்து தண்ணீர்க்குப்போனேனம்மா
பவளகட்டுகுளந்தனிலே படியிலொருவனம்மா
வண்ணமருந்துகளைத் தண்ணீரிலுரைக்கிறான்
ஆகடியஞ்சொல்லுகிறான் அழும்புகளும்பேசுகிறான்
வம்புதும்புபேசுகிறான் வாய்பழுதுஞ்சொல்லுகிறான்
காதாரக்கேட்டோமம்மா கனங்குலைந்துவந்தோமம்மா
அவ்வார்த்தைதான்கேட்டு அல்லிவெகுகோபமாய்
எட்டிப்பழம்போல இருகண்கள்தான்சிவந்து
செந்தலைநாகம்போற் சீறியவள்கோபமதாய்
ஏழுபிராயந்தன்னி லெதிர்த்துவந்தநீன்முகனை
நீன்முகனைக்கொன்று நீலிபட்டமாளுகிறேன்
அடிபெண்ணேயல்லியென்பார் ஆருமொருவரில்லை
பொம்மைவிருதுகட்டிப் பூமியரசாளுகிறேன்
பாலைக்கறந்துதான் பட்டணத்தில்வைத்தாலும்
பறக்கின்றகாகமது பாராதுதலையெடுத்து

ஐம்பத்தாறுகாதமுமென் னாக்கினைகள்மெத்தவுண்டு
அஞ்சாமல்வந்துமிங்கே யழும்புசொன்னாரடிதான்
பாங்கியிலும்நல்லவளே பவளசேனைநீகேளும்
என்னவிதமாயவனை யாக்கினைகள்செய்திடுவோம்
என்றுமவள்கேழ்க்க யேதுசொல்வாள்பவளசேனை
கட்டும்விருதறுத்துக் கலியாணஞ்செய்வதற்கு
மண்டலத்துராசாவோ வானவரோதேவரோதான்
மணஞ்சூட்டவந்தவன்போல் பாதாவேகாண்கிறது
எண்ணுகயோசனைக ளெண்ணியவள்தன்மனதில்
அல்லிப்பெருமாள்தனக் காலோசனையேதுசொல்வாள்
விடுவிடுநேரத்திலே வெயிலானவேளையிலே
வெம்பாமணலிலே போட்டுபுரட்டுமென்றாள்
ஆ–கொடும்பாவிதன்னை ஆற்றில்புரட்டினாலே
சென்மமுருகியவன் செத்துமடிந்திடுவான்
ஆரடிதோழியரே ஆயிரம்பேர்வாருங்கள்
ஆற்றுமணல்தனிலே அவனைப்புரட்டுங்கள்
வெம்பாமணல்தனிலே யிழுத்துப்புரட்டுங்கள்
கட்டியுருட்டுங்கள் கள்ளனதிருடனைத்தான்
செத்துமடிந்தபின்பு சேதிவந்துசொல்லுமென்றாள்
அவ்வார்த்தைதான்கேட் டாயிரந்தோழியர்கள்

அருச்சுனனுக்கு அல்லியரசாணி முதல்தெண்டனையிட்டது

ஓட்டநடையுமாக ஓடிவந்தார்தாதியர்கள்
ஆயிரந்தோழிமார்க ளருச்சுனரைத்தானெடுத்தார்
ஆற்றுமணல்தனிலே அர்ச்சுனரைப்போடவந்தார்
காண்டீபனர்ச்சுனர்க்கு கனமோசம்வருகுதென்று
ஆயன்பெருமாளும் யாரைநினைக்கலுற்றார்
சூரியபகவானைத் திருமாலுந்தானினைத்தார்
கானலுரைக்கவேண்டாம் காண்டீபனர்ச்சுனற்கு
அர்ச்சுனரைக்காருமென்று ஆயருந்தோத்தரித்தார்
அப்போதுதோழியர்க ளாற்றோரம்வந்துநின்று
ஆற்றுமணலிற்போட் டருச்சுனரைப்புரட்டினார்கள்
கொற்றவனாருச்சுனற்கு குளிர்ந்தசலம்போலிருக்கும்
ஆயிரந்தோழியற்கு மனல்கொண்டுவீசுதங்கே
நெல்லிபழம்போலே நெருங்கிற்றேகொப்பளங்கள்
சங்கப்பழம்போல சரீரமெங்குங்கொப்பளங்கள்
அத்தண்டதோழிகளும் அலைகுலைந்தோடுகிறார்
அப்போது அருச்சுனனும் ஆணழகனேதுசொல்வான்
அல்லியரும்நானுமா யமர்ந்துவிளையாட
மருவிவிளையாடுதற்கு மண்டபந்தானில்லையோ
ஆற்றிலேவந்துநீ யமர்ந்துவிளையாடிருப்பாய்

எப்போதுதான்வருவா ளென்றாசைதீர்வதற்கு
மனதுவருவதெப்போ மருவியணைவதெப்போ
சித்தமிரங்காதோ சற்றேமனம்வருமோ
என்றுபுலம்புகிறா னியலானவர்ச்சுனனும்
அப்போதுதாதிமா ராரணங்குவோடிவந்து
அல்லியற்குதெண்டனிட்டு ஆரணங்குமேதுரைப்பாள்
வெம்பாமணல்தனிலே வேகவேபுரட்டினோம்யாம்
ஆற்றுமணலிற்போட்டு அர்ச்சுனரைப்புரட்டும்போது
எங்கள்சரீரமெல்லாஞ் சங்கப்பழம்போலாச்சு
நெல்லிப்பழம்போல் நெருங்கிற்றேகொப்பளங்கள்
அவனுக்கு-வாட்டமில்லைவதக்கமில்லை மாபாவியானவற்கு
அல்லியல்லியென்றுசொல்லி யலைகிறான்மாபாவி
உன்மேலேசிந்தையாய் உருகிப்புலம்புகிறான்
அல்லிப்பெருயாளும் ஆரணங்குமேதுசொல்வாள்
வானஞ்சுழலவேதான் மருந்துண்டோபாவிகையில்
என்னமருந்தறிவான் இடிவிழுவான்பாவியவன்
எந்தவிதத்தினாலே அவனைநாம்கொல்கிறது
பாங்கிகளில்நல்லவளாம் பவளசேனைநாயகியே
தூக்குமரத்தில்போட்டுத் தூக்கிவிடச்சொல்லுமென்றாள்
செங்கமலத்தாதியரை தோழியரைத்தானழைத்து
ஊருக்குமேற்காக ஒருகாதவழிதனிலே
தூக்குமரஞ்சொப்பனிட்டுத் தோழியரேபோடுமென்றாள்

அருச்சுனனுக்கு அல்லிஇரண்டாவதுதெண்டனையிட்டது.

அவ்வார்த்தைதான்கேட் டருகிருந்தசெங்கமலம்
திடுக்கென்றெழுந்திருந்து தோழியருந்தானுமாக
தச்சன்மகளாரைத் தையலருந்தானுமாக
தூக்குமரஞ்சொப்பனிட்டு சோடித்துவந்தார்கள்
ஊருக்குமேற்காக ஒருகாதவழிதனிலே
கொண்டுவந்துதூக்குமரங் கொப்பனவேநட்டார்கள்
ஏணியுஞ்சாத்தி இணிகயிர்போட்டார்கள்
அர்ச்சுனராசாவை அங்கேயெடுத்துவந்தார்
சுற்றிவளைத்தார்கள் சூழ்ந்தார்கள்தாதியர்கள்
ஏணிமேலேறுமென்றார் இயலானமன்னவனை
பார்த்துமறியேனடி பாருலகில்கண்டதில்லை
கண்டுமறியேனடி காதாரக்கேட்டதில்லை
கேட்டுமறியேன்காண் புதிதாகதோணுகுது

எனக்குத்தெரியும்வகை இன்பமாய்க்காண்பியுங்கள்
ஏணிமேலேறி எடுத்துகயிர்பூட்டிகொள்ளு
இங்கிதமென்றுசொல்லி எந்தனுக்குகாண்பியுங்கள்
அறியாதவெந்தனுக்கு அறியப்படுத்துங்கள்
இவ்வார்த்தைதான்கேட் டெழுந்தாளேசெங்கமலம்
சூரணைகெட்டபாதகனே தெரியாதோவுன்னடத்தை
இதோபாருமென்றுசொல்லி ஏணிமேலேறினளே

ஸ்ரீகிருஷ்ணமூர்த்தி பெருச்சாளி ரூபங்கொண்டு ஏணியைத் தள்ளிவிட்டது.

அதுசமயம்பார்த்தாரே அரிராமசெம்பெருமாள்
பெருச்சாளிபோலேவந்து புரட்டிவிட்டாரேணிதன்னை
சுருக்குவலித்துகொண்டு தொங்குகிறாள்தோழியவள்
காலையுதறிகொண்டு கண்விழிபிதுங்கிக்கொண்டாள்
நாவையிழுத்துக்கொண்டு நல்லுயிர்தான்போச்சுதங்கே
செத்துமடிந்தாளே செங்கமலதோழியவள்
காண்டீபனர்ச்சுனரும் கட்டழகரேதுசொல்வார்
காலையுதறுவதும் கண்பிதுங்கியிருப்பதுவும்
நாக்கைபிதுக்கிக்கொண்டு நல்லவுஞ்சலாடுவதும்
இவ்வளவோசூஸ்திரங்க ளெனக்குத்தெரியவரும்
இனிமேல்தெரியவரும் பிராங்கிவாதோழியரே
ஐயையோதெய்வமென றழுகிறார்தோழியரும்
ஓட்டம்நடையுமாக ஓடிவந்தாராச்சியண்டை
மகுடத்துரைச்சிபரே மாதாவேவந்கேளும்
தூக்குமரந்தனிலே தோழியவள்போட்டபோணை
செங்கமலத்தோழியவள் தூக்கில்மடிந்தாளே
அவ்வார்த்தைதான்கேட்டு அல்லிமனநொந்து
பாங்கியிலும்நல்லவளே பவளசேனைநீகேளும்
என்னவிதமாக இவனைநாம்கொன்றிடலாம்
ஆராடிமந்திரியே ஆலோசனைசெய்யுமென்றாள்
அப்போதுபவளசேனை யாலோசனைசொல்லுகிறாள்

அர்ச்சுனனை மூன்றுந்தரங் காளிக்குப்பலியிடச்செய்தது.

வடவாசல்செல்வியம்மாள் மாகாளியம்மனுக்கு
பொங்கலையிட்டுநீங்கள் பொலிபோட்டுவாருங்கள்
அவ்வார்த்தைதான்கேட்டு ஆயிரந்தோழிமார்கள்
சிக்காயுமெண்ணையுடன் தேங்காயுமிளநீரும்
புதுப்பானையரிசிகளும்புட்பமுடன்சந்தனமும்
கருப்பூரஞ்சாம்பிராணி காளிக்குக்கொண்டுவந்தார்

ஆரடி தாதிகளே அழைத்துவா ஓச்சப்பெண்ணை
இவ்வளவில்தாதிமார்க ளிவர்முடுகியோடுகிறார்
ஆயன்பெருமாளும் அவ்வார்த்தைதான்கேட்டு
கார்மேகவர்னரும் காளியண்டையோடிவந்தார்
வாருமம்மா தங்கையரே வார்த்தையொன்றுநீர்கேளும்
அல்லிப்பெருமாளை அழகுமணஞ்சூட்டவென்று
காளையந்தஅர்ச்சுனனும் கனவேஷங்கொண்டுவந்தான்
காளியம்மாவுந்தனுக்கு காவெடுக்கச்செலவுதந்தாள்
ஓச்சப்பெண்போலாக வுத்தமியேவருவேனம்மா
பூசையானபிற்பாடு பொங்கலிட்டுத்தீர்ந்தபின்பு
என்மேலேசென்னதமா யிந்தபெலிவேண்டாமென்பேன்
என்வார்த்தைக்குவேண்டாமென் றுன்வார்த்தைகேழ்ப்பார்கள்
நானுரைத்தபாவனைபோல் நாயகமேநீயுரையும்
அர்ச்சுனராஜனுக்கழிவுவந்ததானுக்கால்
வெற்றிமதயானை வீமனுன்னைப்பிழைக்கவொட்டான்
வச்சிரகோபசெதையால் மண்டிபோட்டுதலைப்புடைப்பான்
தண்டாயுதமெடுத்து தாக்குடையவீமராஜன்
ஒருதண்டமாகவென்னை துணித்திடுவான்வீமராஜன்
சுத்தியெடுத்துவுன்னைக் கழுத்தையறுத்திடுவான்
காளியென்றுபாராமல் கணத்தவுயிர்வாங்கிடுவான்
காளியற்குத்தாமுரைத்துக் கரியமால்தானடந்தார்
ஓச்சப்பெண்போலாக வுலகளந்தார்வடிவெடுத்தார்
ஓரகத்திவாசலிலே வுட்கார்ந்திருந்தார்கள்
கோவிலுக்குபோகவேண்டும் குச்செடுத்துவாருமென்றாள்
திறவுகோல்தானெடுத்து தேன்மொழியாள்போகலுற்றாள்
சடுகிமுடுகியே காளிகோவில்வந்தார்கள்
கோவில்கதவுதன்னைக் குச்சிட்டுதாள்திறந்தாள்
குளத்தில்முழுகிவந்து கொம்பனையைபூசைசெய்து
அபிஷேகஞ்செய்துவைத்தா ளாங்காரக்காளியற்கு
செந்நலரிசிகொண்டு தேவியர்க்குபொங்கலிட்டார்
கோவில்திருவிளக்கை குறைவில்லாமலேற்றினார்கள்
தேங்காயுடைத்தார்கள் தீபதூபந்தான்கொடுத்தார்
அர்ச்சுனரைக்கூட்டிவந்து அம்மனுக்கெதிரேவைத்தார்
மண்பிறக்குமுன்பிறந்த வழக்காடும்நல்செல்வி
யுகம்பிறக்குமுன்பிறந்த வுத்தண்டபத்திரகாளி
காய்ந்தமழுவேந்தும் கர்த்தனிடதேவியரே
எரிந்தமழுவேந்தும் ஈஸ்வரனார்தேவியரே
வடவாசல்செல்லியம்மாள் மனிதர்பலியோர்வைகொள்ளும்

வசனிக்கும்போதையிலே வந்துவிடும்சந்ததங்கள்
துச்சப்பெண்மேலே யுதறுதுதெய்வம்வந்து
ஆங்காற்றடிபாத அல்லிமலர்நாயகிக்கு
அவளுடையபெல்லைகாக்கு மாங்காரக்காளியல்லோ
மதுரையைகாத்திருக்கும் மண்ணுப்பிடாரியல்லோ
அல்லிபருக்காகாதவன் யெந்தனுக்குமாகாது
இப்பலியான்வேண்டே னேர்வையில்லையெந்தனுக்கு
பெண்பலியிந்தாலே யிப்பவேயேர்வைகொள்வேன்
ஆண்பலியீந்தாலே யனர்த்தம்பண்ணிபோட்டிடுவேன்
மதுரைக்குடிபடையை மாளபலிபோட்டிடுவேன்
இவ்வார்த்தைதான்கேட் டேதுசொல்வார்தாதியர்கள்
நீசொன்னவாக்கியங்கள் நிட்சயமுமாகாது
காளியம்மன்வாயாலே கடுகிவுரைத்தாலே
நல்லவரியாள்வாக்குரைத்தால் எல்லார்க்குநிட்சயங்கள்
என்றுபணிந்தார்கள் இயலான தாதியர்கள்
அஞ்சிப்பயந்தார்க ளல்லியிடமோடிவந்தார்
மகுடத்துரைச்சியற்கு வந்துதெண்டம்பண்ணினார்கள்
காளியற்குபூசைபண்ணிக் கனத்தபொங்கலிட்டோமம்மா
ஆண்பலிவேண்டாமென் றுடினாள்சந்ததமாய்
இவளையும்நம்பாமல் அம்மன்சொல்லவேண்டுமென்றோம்
அப்படியேகாளியம்மன் யாண்பலிகொள்ளேனென்றாள்
அல்லிபெருமாட் காண்காத்துமாகாது
எந்தனுக்குமாகாது என்றாளே காளியம்மன்
ஆண்பலிதந்தாலே யனர்த்தம்பண்ணிவிடுவேனென்றாள்
இவ்வார்த்தைகேட்டவுட னேதுசொல்வாளல்லியம்மாள்
வானஞ்சுழல்வதற்கு மருந்துவித்தைகற்றவனோ
பூமிசுழல்வதற்குப் பொடிகளறிந்தவனோ
என்னமருந்தறிவா னிடிவிழுவானென்றறியேன்
எந்தவித்தையாலே யெந்திசையேகொல்வோமடி
பாங்கியிலும்நல்ல பவளசேனையேதுரைப்ப ள்
பூதக்கிடங்கிலே போட்டடையும்பாதகனை

அர்ச்சுனனுக்குநான்காவது தெண்டனையிட்டது.

ஆரடிதாதிகளே யலங்காரத்தோழிகளே
பூதக்கிடங்குதனிற் போட்டடையுமென்றுசொன்னாள்
எம்பெருமாள்மேகவர்ணர் இவ்வயணந்தாமறிந்தார்
பூதங்கள்தன்னருகே பெருமாளுமோடிவந்தார்
மாயவரைக்கண்டவுடன் மயங்கிற்றேபூதமெல்லாம்
ஆரடாபூதங்களே யலங்காரராட்சதரே
அர்ச்சுனரைக்கொண்டுவந்து அடைக்கவருவார்கள்

பார்த்திபனர்ச்சுனற்குப் பணிவிடைசெய்திடுங்கள்
சங்கீதந்தன்னுடனே சந்தோஷமாவைத்திடுங்கள்
அர்ச்சுனராசனுக்கு அழிவுவந்ததானுக்கால்
வெற்றிமதயானை வீமராசன்தானறிந்தால்
வச்சிரகோபகெதையினாலே மண்டியிட்டுத்தலையுடைப்பான்
தண்டாயுசமெடுத்து தாக்குதடையவீமராசன்
அஞ்சுதுண்டாக அறுத்திடுவான்வீமராஜன்
பூதத்துக்குசொல்லியபின் பெருமாளும்போய்நடந்தார்
அப்போதுதாதிமார் அர்ச்சுனரைக்கூட்டிவந்தார்
பூதக்கிடங்கதனிற் போட்டடைத்தாரர்ச்சுனரை
ஆர்காணுர்பூதங்களே அல்லியம்மாளுக்காரம்
பொல்லாதபாதகனை பலியதுகொண்டிடுங்கள்
இவனைபலிகொண்டு எடுத்தப்புசித்திடுங்கள்
தள்ளிக்கதவடைத்துச் சங்கிலியைப்பூட்டினார்கள்
முதுகிலேயட்சரேகை கண்டதேபூதமெல்லாம்
பஞ்சணைமெத்தைபோட்டு பார்த்திபனைக்குந்தவைத்து
அத்தண்டபூதமெல்லாம் அர்ச்சுனர்க்குப்பணிகள்செய்யும்
கைபிடிக்குஞ்சிலதுபூதம் கால்பிடிக்கும்சிலகணங்கள்
பாதம்பிடிப்பதுவும் பாட்டுகளைப்பாடுவதும்
கூத்துகளாடுவதுங் கொண்டானடிப்பதுவும்
தேர்விசையனர்ச்சுனர்க்கு சங்கீதப்பாடுவதும்
ஆடாதகேளிக்கையும் அரும்பவனிநாடகமும்
சங்கீதம்பார்த்துமே தார்விசையன்தானிருக்க
கண்டார்கள்தாதியர்கள் கனமானபேய்கூத்தை
அல்லிப்பெருமாளிடம் அன்பாகவோடிவந்து
சாஷ்டாங்கமாக சரணமுடனேதுசொல்வார்
பூதக்கிடங்குதனில் போட்டடைத்தோம்பாதகனை
பூதப்பிசாசனைத்தும் போதப்பணிசெய்கிறதும்
பாதம்பிடிக்கிறதும் பணிவிடைகள்செய்கிறதும்
கூத்துகளாடிக்கொண்டாடினடிக்கிறதும்
பார்த்துவந்தோமாச்சியென்று பாதம்பணிந்தார்கள்
அல்லிப்பெருமாளுமாரணங்கேதுசொல்வாள்
என்னமருந்தறிவானிடிவிழுவானென்றறியேன்
வானஞ்சுழல்வதற்கு மருந்தறிவான்சண்டாளன்
என்றுவிசாரமாயிருந்தாளேயல்லியம்மாள்
மாயன்பெருமாளும் மலோராமரேதுசொல்வார்
அர்ச்சுனராசாவை அழைத்துவரவேண்டுமென்று
என்னவடிவெடுத்தார் மெய்ப்பெருமாள்மேகவர்ணர்

ஸ்ரீகிருஷ்ணபகவான் ஸ்திரீரூபங்கொண்டு அர்ச்சுனனை யழைத்துப் போனது.

தெய்வப்பெண்போலே ஸ்ரீராமர்வடிவெடுத்தார்
செக்கச்செவலைபோலே தீவுக்கிளிபோலே
மின்னுகிறகாந்தியைப்போல் வெரிற்பவளம்போல்
காய்க்கும்பிராயம்போல் கன்னிகட்டும்பிராயமவள்
பூக்கும்பிராயமவள் பிஞ்சிவிடும்காலமவள்
கொஞ்சம்வயதுகாண் கொழுந்தெல்லாம்பிஞ்சிவிடும்
இருண்டெழுந்தசோலையிலே செவந்தெழுந்தசூரியன்போல்
குன்றுமேற்சந்திரன் குதித்தெழுந்தபாவனைபோல்
ஈழத்துதச்சனவன் எழுதிவரவிட்டானோ
மேல்நாட்டுதச்சனவன் விளைந்துவரவிட்டதுபோல்
அஷ்டாபரணமெல்லாம் அலங்காரஞ்செய்தவளும்
பட்டுபளபளென்ன பாடகக்கால்சோதிமின்ன
தெய்வப்பெண்போலே ஸ்ரீராமர்வருகின்றாரே
அழகுகுலுங்கவும் ஆனந்தங்கொஞ்சவேதான்
உடல்குலுங்கமாயவனோ ரோடிவருகிறாரே
காடுசெடிகள்தாண்டி கடுகியேவந்துவிட்டாள்
மதுரைத்தெருவிலே வந்தாரேயெம்பெருமாள்
அக்கைமாரே தங்கைமாரே ஆரடிதாய்மாரே
செக்கச்செவலையம்மாள் சிருவபதென்கணவன்
வெரிபிடித்தபன்னவன்காண் வீதிதிரிவாண்டி
அல்லியென்பான்மெல்லியென்பா னனந்தனிலேபெண்ணேயென்பா[ன்
தண்ணீர்கண்டவிடத்தில் தன்கைமருந்துவைப்பான்
எட்டுநாளாச்சுதம்மா என்கணவன்வீடுவிட்டு
ஆரோதெரியாது அடக்கிவசங்கொண்டார்கள்
என்கணவனைக்காணாமல் கதறித்திரிகிறேனே
புருஷனைக்காணாமல் புலம்பித்திரிகிறேனடி
அறிந்தாலுரையுங்கள் அக்கமாரேயென்றழுதாள்
மாதுபுலம்புவதை மதுரையுள்ளோர்தான்கேட்டு
தாதியர்கள்தோழியர்கள் தானரிந்தோடிவந்தார்
அல்லிப்பெருமாட் கறிக்கையிட்டார்தாதியர்கள்
பூதக்கிடங்குதன்னில் போட்டடைத்தோம்பாதகனை
அவனைமாலையிட்டதேவியராம் வந்தாளொருத்தியங்கே
வானத்துரம்பையம்மாள் மயிலனையாய்தோற்றுகிறாள்

கணவனைக்காணோமென்று கதறிப்புலம்புகிறாள்
சொல்லியழுகிறது துக்கம்பெருகுதம்மா
அவ்வார்த்தைதான்கேட்டு ஆரணங்கேதுசொல்வாள்
ஆரணங்குமாதரைநீ ரழைத்தோடிவாருமென்றாள்
ஓட்டம்நடையுமாக வோடிவந்தார்தாதியர்கள்
ஆரடிகன்னியரே யழுதுபுலம்புவதேன்
உங்கள்—ஆச்சியருமுன்னை யழைத்துவரச்சொன்னார்காண்
அல்லிபெருமாளு மழைக்கிறாள்வாருமென்றாள்
ஏதுக்கழைக்கிறா ளிளங்கொடியாள்மாதுயென்னை
என்றுநடந்தாளே யெம்பெருமாள்மாளிகைக்கு
வாசலும்வாசலது படியேழுந்தான்கடந்து
அல்லியற்குமுன்னேவந்து ஆரணங்குதெண்டனிட்டாள்
தெண்டனிட்டகன்னியரைத் தேன்மொழியாளேதுசொல்வாள்
எந்தவூருங்களூது யெங்கிருந்திங்குவந்தாய்
ஏதுக்கழுகிறா யெனக்கறியச்சொல்லுமென்றாள்
என்னுடையஆச்சியரே யென்பாவங்கேளுமம்மா
தூரம்வடக்கேயம்மா துவாரகாபுரிதேசம்
திருமலைநாய்க்கன்பெற்ற சீரானபெண்ணிருவர்
என்பேருமெல்லியர்கா ணென்தங்கைமேலிச்சைகொண்டான்
என்னைமணஞ்சூட்டி யென்தங்கைமேலிச்சைகொண்டான்
பெண்டுமேல்பெண்டுமல்லோ கொடுப்பாரோபூமியிலே
அல்லியர்மேலாசையாய் ஆணழகன்வெறியெடுத்து
பித்தம்பிடித்தவன்போற் பிதற்றித்திரிகிறானே
தண்ணீரைக்கண்டால் தன்கைமருந்துரைப்பான்
அல்லியென்பாமெல்லியென்பானலைந்துதிரிகிறானே
வீடுவாசல்தங்காமல் வெளிப்பட்டுபோய்விடுவான்
தேடித்திரிகிறேனே சீரானமன்மதனை
கண்டுபிடித்தவரைக் கடுகிமனைகொண்டுபோவேன்
எட்டுநாளொருவார மிருப்பான்மனப்பிடித்து
மாதுமேல்வினைவெடுத்து மாளிகையில்நிற்கரியான்
பந்தாடும்பட்டணத்தில் பாவியொருபெண்பிறந்தேன்
செல்வத்தலையிலே செப்பேடெழுதினதும்
கதியைதொலைப்பேண்டி காவேரிநீந்திடுவேன்
விதியைத்தொலைப்பதற்கு விதமற்றாளானேண்டி
வடிவழகாயிருந்தார் மன்னன்துரையென்கணவன்
ஆரோதெரியாது யடக்கிவசங்கொண்டார்கள்
என்புருஷன்றன்னையம்மா யினிகாணப்போறேனோ
என்றதுதான்கேட் டேதுசொல்வாளல்லியம்மாள்
என்பேரைச்சொல்லியவ னெடுத்துமருந்துரைத்தான்
ஆகயடிஞ்சொன்னதினூ லடைத்தேன்கிடங்கிலே

பயித்தியக்காரனென்றாற் பழுதில்லையுந்தனுக்கு
ஆறுலழைத்துப்போ மனுப்பிவிடச்சொல்லுகிறேன்
ஆரடிதாதியரே யலங்காரத்தோழிகளே
கிடங்கைத்திறந்தவனைக் கொப்பனவேபோகவிடும்
அவ்வார்த்தைதான்கேட் டலங்காரத்தோழியர்கள்
ஓட்டநடையுமாக ஓடிவந்தார்கிடங்கருகில்
கிடங்கைத்திறந்தார்கள் கொப்பனவே விட்டுவிட்டார்
அப்போது தெய்வகன்னி ஆளன்முகப்பார்த்து
வாடாகுடுப்பாசீ மதியழிவாரென்றுரைத்தாள்
அல்லியென்பாமெல்லியன்பா ளணழகன் தான்வருவான்
எப்போவருவானோ வென்றாசைதீருமென்றான்
மன்மதபாணமது மார்புருக்கப்போகுதென்றான்
சித்தசன்தொட்டகணை சிறுமார்புருகுதென்றான்
ஆருறுபாணமது மார்புருகிப்போகுதென்பான்
அஞ்சுருகுபாணமது நெஞ்சுருகிப்போகுதென்பான்
அர்ச்சுனரைக்கூட்டியே யிராமர்போகலுற்றார்
மதுரையைத்தாண்டியே வந்தாரேகானகத்தில்
மாயன்பெருமாளும் மாய்கையாய்ப்போகலுற்றார்
ஆலமரத்தடியி லிராமர்பள்ளிகொண்டார்
கள்ளக்கொருக்கையிட்டு கரியமால்தூங்குகிறார்
ஆயனருகாக அருச்சுனனார்வந்துநின்றார்
பாரளந்தார்பாதத்தை பார்த்திபன்பிடிக்கலுற்றான்
அலண்டுபுரண்டதுபோ லிராமர்கண்விழித்தார்
ஆறுலழகுமன்னா அருச்சுனரேகேட்டீரோ
காணுதசொற்பனத்தைக் கண்டேன்காணர்ச்சுனரே
என்னைத்தனியேவிட்டு வெங்கேயோபோனதுவாய்
கானக்குறத்தி கைபார்த்துச்சொன்னதுவாய்
வண்ணமருந்துனக்கு மலைக்குறத்திதந்ததுவாய்
நீதரித்தபூஷணத்தை நேரிழைக்குத்தந்ததுவாய்
அம்மருந்தைநீவாங்கி யல்லியிடம்போனதுவாய்
வண்ணமருந்தெடுத்துத் தண்ணீரிலுரைத்ததுவாய்
அல்லியிடதாதிமா ராயிரம்பேரோடிவந்து
அர்ச்சுனரேயுனையெடுத்து ஆற்றிலேபோட்டதுவாய்
தூக்குமரந்தனிலே சேர்வை பொடக்கண்டேன்
காளியம்மன்கோவிலிலே காவுகொடுக்கக்கண்டேன்
பூதக்கிடங்கிலேதான் போட்டடைக்கக்கண்டேன்
ஆரோவொருதெய்வகன்னி யழைத்துவரக்கண்டேனப்பா
என்னருகேவந்திருக்க கண்டேன்கனவாக
என்னகாண்மைத்துனரே யப்படிகனவுகண்டேன்
வாழ்விசையன்கோமானும் மாயவனுக்கேதுரைப்பான்
பித்தமுயர்ந்ததினாற் போதநைக்கண்டீர்

அல்லியர்மேல்சிந்தையது ஆசைமறக்கவில்லை
மாலையிட்டுஅல்லியரை மருவியணைவதெப்போ
கோபாலாமைத்துனரே கூட்டிவைப்பதுன்பாரம்
அப்போதுமாயவரு மருச்சுனன்முகம்பார்த்து
ஏறமுகம்பார்த் தெம்பெருமாளேதுசொல்வார்
பட்டுகுல்லாகுண்டலமும் பவுத்திரமோதிரமும்
பட்டுதட்டிபொட்டிபர்ணம் பசும்பொன்றேற்சமுதாடும்
தாமரைப்பூசல்லடமும் சந்திரகாந்திதட்டிகளும்
உத்திராசஞ்சம்வல்லவாட்டு வுத்தமனேயெங்கேயென்றார்
அஞ்சிப்பயந்தவன் அர்ச்சுனனுமேதுசொல்வான்
ஆயர்பெருமாளேநீர் அனந்தகித்திரைபோகையிலே
மாதினதுபட்டணத்தை மதுரையைப்பார்ப்போமென்று
மாதுமேல்தன்னினைவாய் வந்ததுவிசொன்னேனையா
வண்ணமருந்துதந்து தண்ணீரிலுரையுமென்றாள்
மருந்துறைக்கும்போதவள் மனதுகரையுமென்றாள்
குளிகைகரையும்போது குணமுந்திரும்புமென்றாள்
மருந்துபலியாமல் மாயவரேபோச்சுதையா
நாலுமலைக்குள் நடுவிலவள்குடிசையென்றாள்
இராமக்காள்பொம்மக்காள் இலட்சுமக்காளவள்பேராம்
அங்குவந்துகேட்டாக்கா லாபரணந்தருவேனென்று
மருந்தைக்கொடுத்துவிட்டு வாங்கிப்போனாளுடைமையெல்லாம்
அவள்-கொடுத்தபடியேதான் குணமாச்சோவர்ச்சுனரே
சொன்னபடியாகச் சேர்ந்தாளோவல்லிநல்லாள்
ஒருலாபங்கண்டறியேன் வுழன்றுநான்வந்தேனையா
பொம்மக்காள்பேரைச்சொல்லத் திம்மக்காள்நேர்ந்ததையா
உடைமைபறிகொடுத்து வுழன்றுநான்வந்தேனையா
அவ்வார்த்தைதான்கேட் டரிராமரேதுசொல்வார்
குறத்தியிருப்பிடத்தைக் கொற்றவனேதேடிப்போய்
உன்னுடைமையுள்ளதெல்லாம் வுத்தமனேவாங்கிவாரும்
கடுகியேவாங்கிவாரும் கட்டழகாவென்றுரைத்தார்

அர்ச்சுனன் குறத்தியிடம்சென்று தான்கொடுத்ததை வாங்கினது.

ஆயாதுசொற்கேட்டு அர்ச்சுனனார்தானடந்தார்
குறத்தியரைத்தேடி கொப்பெனவேவருகிறாரே
நாலுமலைநடுவே நல்விசையன்தேடிவந்தார்
இராமக்காள்பொம்மக்காள் லட்சுமக்காளென்றழைத்தார்
மாயன்பெருமாளு மலைக்குறத்திபோலேவந்தார்
ஆரடா தம்பியரே யழைத்தகருமமென்ன
அப்போதருச்சுனனு மாணழகரேதுசொல்வார்
நீகொடுத்தமருந்துதனிற் குணமில்லையாச்சியரே
நீதந்தமருந்துதனிற் சற்றும்பலனில்லையே

பொம்மக்காள்பேரைச்சொல்லத் திம்மக்காள்நேர்ந்ததம்பா
உன்பேச்சைக்கேட்டுநா னுதைபட்டுவந்தேனடி
நான்-கொடுத்தவுடைமையெல்லாம் கொப்பெனவேதாருமென்றான்
என்வார்த்தைநீகேளீர் யியலான தம்பியரே
கட்டழகாவுன் னுடைமை கடையிலேவிற்கப்போனேன்
காசுக்கடைதனிலே கண்டதலையாரிசேனை
கன்னமிட்டுவந்தேனென்று கட்டியடித்தார்கள்
அடியும்பட்டே னுதையும்பட்டே னலைச்சல்பட்டுவந்தேன்
உடைமைபறிகொடுத்து உடுத்தின துணியிழந்தேன்
எங்கிருந்துநான்கொடுப்பே னினியவுடைமையது
அவ்வார்த்தைதான்கேட் டர்ச்சுன னுமேதுசொல்வான்
உடைமைகொடுக்காம லுன்னைவிடேன்கட்டுவச்சி
மடியைப்பிடித்திழுத்தான் மாதுகுறத்தியரை
குய்யோமுறையோவென்று கூவினாள்குறத்தியரும்
புற்றீசல்போலவேதான் புறப்பட்டார்சிறுகுறவர்
சில்லுபொல்லென்றுசொல்லிச் சிறுவராய்க்கூடினார்கள்
ஆளுக்கொருகுத்துவைத்து அடித்தாரேயர்ச்சுனனை
அர்ச்சுனர்தரித்திருந்த ஆபரணமுள்ளதெல்லாம்
கொண்டுவந்துதந்தாளே கொம்பனையாள்குறத்தியரும்
அல்லியர்க்காய்ப்பட்டகலை யர்ச்சுனர்க்குப்போதுமையா
பெண்ணாலேபட்டகலை போதுமென்றாரர்ச்சுனரும்
அர்ச்சுனமகாராச னையரிடம்வந்துவிட்டான்
வாங்கிவந்தே னுடைமையென்று வணங்கியேதெண்டனிட்டார்
அப்போதுமாயவனா ரருச்சுனற்கேதுசொல்வார்
மாளிகைக்குப்போகவே மனமுண்டோ அர்ச்சுனரே
தருமர்தவிப்பாரே தம்பிமார்புலம்புவாரே
காணாதேயுன்னாச்சி கலங்கித்தவிப்பாளே
வந்துநெடுநாளாச்சே வாழ்விஜையா அர்ச்சுனரே
பெண்ணாசைகொண்டுநீ புலம்பித்தவிக்கிறாயே
மாதர்மேலாசைகொண்டு மயங்குறாயர்ச்சுனரே
ஆணழகுமன்ன னர்ச்சுன னுமேதுசொல்வான்
எந்தவிதமானாலு மிளங்கொடியாளல்லியை
தாலிகட்டிவையுமையா சுவாமிபெருமாளே
மாலையிட்டுவையுமையா மாயன்பெருமாளே
என்றுபணிந்தானே யியலானவாழ்விசையன்
மாயன்பெருமாளு மரிராமரேதுசொல்வார்
ஆணழகுமன்ன னர்ச்சுனரேநீர்கேளும்
ஆண்டிவடிவாக அல்லியின்றன்வாசலிலே
மடலூர்ந்துவந்தையாகில் மாலையிட்டுவைப்பேனடா
அப்படியேபோய்வாருவே னையாசெலவருளும்

அருச்சுனன் ஆண்டிவேடங்கொண்டு மடலூர்ந்தது.

மாயன்பெருமாளு மபிராமரப்போது
ஆண்டியைப்போலாக அர்ச்சுனற்குசெலவுதந்தார்
ஆனாலழகுமன்ன னர்ச்சுனனுமேதுசொல்வான்
தொண்ணூறும்பத்தும்சென்ற துவண்டகிழவனைப்போல்
பண்ணைப்பூப்போலே பழுத்தகிழவனைப்போல்
நாணற்பூப்போலே நரைத்தகிழவனைப்போல்
தோலும்நரம்புகளுந் தொங்கிற்றுகிழவனுக்கு
பழுத்தபழம்போலே பார்த்தீபன்வடிவெடுத்தார்
காவிகாஷாயமுடன் கைதனிலேமாத்திரையும்
திருநீறுந்தாமணிந்து திரிகண்டமாலைசுற்றி
உருத்திராட்சத்தாவடமு முருத்திராட்சமாலைகளும்
அன்றுரித்தமான்றோலும் அழகானமான்றோலும்
தொட்டமிதியடியுந் தோளில்வைத்தகின்னரியும்
மாத்திரைகோற்பிரம்புகளும் மயிற்குச்சுங்கமண்டலமும்
வேலாயுதஞ்சூலாயுதம் விருதுகண்டகோடாலி
கௌரிநல்லபாத்திரமுங் கேதாரக்கங்கணமும்
திருவோடுபாத்திரமுந் திருநீறுங்கோபிசளும்
சங்குசெயகண்டிகையுந் தரித்தாரேபூஷணங்கள்
சடையுமுடியுமாகத் தம்பிரானைப்போலானார்
ஆதிசிவன்போலாக அருச்சுனனார்வேடங்கொண்டார்
கைலாசநாதரைப்போல் காண்டீபர்வடிவெடுத்தார்
வேடங்கள்பூண்டானே வீராதிவீரனுந்தான்
ஆயர்பெருமாளு மங்கனையேதுசெய்தார்
அல்லியரைப்போலாக அழகுபடமெழுதி
பாங்கியிலும்நல்ல பவளசேனைநாயகியை
கூடவெழுதினாராம் கோவிந்தரெம்பெருமாள்
படத்தைபடித்தவரும் பார்த்தீபன்கைகொடுத்தார்
அல்லியதுவாசலிலே யங்கேபடம்விரித்து
அவள் உடுத்தியபாவடையில் ஒருமுழம்பிச்சைவாங்கி
வந்தாயேயாமாகில் மாலையிட்டுவைப்பேனடா
போய்வாருமென்றுசொல்லிப் பெருமாளனுப்பிவைத்தார்
வண்ணப்படமெடுத்து வாழ்விசையன்வழிநடந்தார்
தள்ளாடித்தள்ளாடி தளர்ந்துமெல்லவழிநடந்தார்
தெத்துத்தெருகடந்து தேரோடும்வீதிவிட்டு
அல்லியரண்மனையா மாசாரவாசல்வந்தான்
ஆரடிதாதியரே யரண்மனைக்குப்போகவேணும்
காசியிலிருந்தலவோ யிராமேசுரம்போகவேணும்
பிச்சைகேட்கவந்தேனம்மா போகவழிவிடுங்கள்
பொற்கொடியாள்வாசலிலே போய்வருவேனாச்சியரே
ஐயாபெரியவரே யறிவுபடைத்தவரே

தீரப்படித்தவரே தெளிவறிந்தசங்கமரே
ஆண்காற்றடியாது அல்லிபதுகோட்டையிலே
போறாற்பழுதுவரும் போகாதேசாமியென்றாள்
ஆண்டிப்பரதேசி யையமென்றுவந்தவரை
வழியுமறிப்பார்கள் வையகத்திலாருமில்லை
தொண்ணூறஞ்சென்றதம்மா துவண்டகிழவனடி
தோலுநரம்புகளுந் தொங்குதுயெந்தனுக்கு
என்னைபார்த்தவர்களெல்லோரும் பணிந்திடுவார்தப்பாது
போகச்செலவுகொடும் போய்வருவேனுச்சியென்றான்
வாசற்றடைக்காரர் வழிவிட்டார்சங்கமற்கு
அவ்வாசல்வாசலது அர்ச்சுனனும்தாண்டிவந்தான்
ஐந்தாம்படிதளத்தில் அர்ச்சுனனார்வந்துவிட்டார்
புலியாசனம்போட்டு பொற்படத்தைமுன்னேவைத்தான்
அசனத்திமேலிருந்து அல்லிபடம்தான்விரித்து
..னசெவியுங்கண்ணையு மறைத்தாரே மாயவனார்
கண்ணிரண்டுந்தெரியாமற் காதிரண்டுங்கேளாமற்
அல்லிமேற்சிந்தையா யருச்சுனன்புலப்பலுற்றான்
அல்லியென்பான்மெல்லியென்பானனந்தனிலேபெண்ணேயென்பான்
வருவாளோஅல்லியென்பான் வாய்திறந்துபெண்ணேயென்பான்
உன்னுசைகொண்டேனடி பூராசைபேர்மறந்தேன்
தாயாரைநான்மறந்தேன் தமையனதுபேர்மறந்தேன்
தம்பிதமையனைச் சகலரையும்யான்மறநதேன்
உன்னுசைகொண்டொ னுழன் றுதிரிகிறேனடி
மன்மதபாணமது மார்பைப்பிளக்குதடி
சித்தசன்விட்டகணை சிறுமார்புருகுதடி
காமக்கணையாலே களைதாங்கிப்போறேனடி
அஞ்சுருகுபாணமது நெஞ்சுருகிப்போகுதடி
ஆறுருகு பாணமது யார்புருகிபோகுதடி
மார்போடேமார்பணைந்தால் மகாவிடாய்தீருமடி
என்றுதெளியுமோ யெக்காலஞ்செல்லுமடி
அல்லிமேற்சிந்தையா யருச்சுனன்புலம்பலுற்றான்
அவ்வாசல்காக்கின்ற ஆயிரந்தோழியர்கள்
அவ்வார்த்தைதான்கேட் டதிகவிசாரங்கொண்டார்
இதுவென்னகாலக்கேடோ யேதறிவோம்தோழியரே
பாங்கியிலும்நல்லதொரு பவளச்சேனைதன்னருகில்
ஒட்டம்நடையுமாக ஓடிவந்தார்தாதியர்கள்
பவளசேனைபக்கத்திலே பணிந்தவர்களேதுசொல்வார்
ஆரோஒருகிழவ னாண்டிபரதேசியவன்

பிச்சையென் றுவந்தான்காண் போகவழிதான்விட்டோம்
ஐந்தாங்கட்டுவாசலது அரண்மனையில்நான்வந்தான்
அல்லியரைப்போலாக அழகுபடவெழுதி
உன்னையுங்கூடவே ஒருமையாய்வைத்தெழுதி
வண்ணப்படம்விரித்து வல்லமையாய்ப்படிக்கின்றான்
அல்லியர்மேலாசையா யலைந்துபுலம்புகிறான்
வாடியென்றும்போடியென்று வம்புதுப்புஞ்சொல்லுகிறான்
ஆகடியம்பேசுகிறா னழும்புகளுஞ்சொல்லுகிறான்
சொல்லுகிறவார்த்தையது செவிகேட்கமுடியாது
இவ்வார்த்தைதான்கேட் டேதுசொல்வாள்பவளமேசனை
அல்லிபெருமாளை அழகுமணஞ்சூட்டவென்று
மாறுவேடங்கொண்டவனும் மலையிடவந்தான்காண்
ஆண்டிபரதேசியானு லழும்புகளுஞ்சொல்வானே
எல்லாமறிந்திடுவோம் யாரடிதோழிகளே
ஓரைந்துசாதியர்கள் ஒருநிறமாயெழுந்திருங்கள்
ஒருநிறமாய்க்குழல்முடித்து ஒருநிறமாயலங்கரித்து
ஐந்துவிதபட்டுகளை யலங்காரமாயெடுத்து
பொன்னொருதட்டிலேயும் பூவொருதட்டிலேயும்
ஆடையொருதட்டிலேயு மாபரணமொருதட்டிலேயும்
ஒன்பதுரத்தினமு மொருதட்டில்தானெடுத்து
பண்டாரமுன்னாலே பாங்கியரேகொண்டுபோய்
ஐயருக்குமுன்னேவந்து அடிபணிந்துதெண்டனிட்டு
ஐந்துபேர்பெண்களிலே யார்வேண்டுஞ்சொல்லுமென்று
ஆபரணமுத்துவஸ்திர மாசையென்றாலெடுத்துக்கொள்ளும்
பெண்களின்மேலாசையென்றால் பின்தொடர்ந்துவருவோமென்று
ஐயரைக்கேட்பதற்கு ஆரணங்கேபோங்களென்றாள்
அவ்வளவில்தோழிமா ரதிகமுடனோடிவந்து
ஐந்துபேர்தோழிமார்க ளலங்காரஞ்செய்துகொண்டார்
ஐந்துவிதத்தட்டிலே யாபரணபூஷணங்கள்
முத்துகளும்வஸ்திரமும் முன்னாலேகொண்டுவந்தார்
ஐயரதுமுன்னேவைத் தடிபணிந்துதெண்டனிட்டார்
ஐயா பெரியவரே யடியேன் சரணமென்றார்
ஆச்சியருந்தனுக்கு அனுப்பிவைத்தாள்பூஷணங்கள்
ஐந்துபேருனக்கு அனுப்பிவைத்தாள்சங்கமரே
ஆசையுள்ளபெண்களைநீர் யழைத்தால்வருவோமையா
வேண்டுமென்றரத்தினத்தை யெடுத்துக்கொள்ளுஞ்சங்கமரே
என்றந்தப்பெண்களுமே யிறங்கியேதெண்டனிட
அல்லியென்பான்பெல்லியென்பானந்தனிலேபெண்ணேயென்பான்
வருவாளோ அல்லியென்பான் வாய்திறந்துபெண்ணேயென்பான்

எப்போவருவாளோ யென்னாசைதீர்த்திடுமோ
மன்மதபாணமடி மார்புருகிப்போகுதடி
சித்தசன்விட்டகணை சிறுமார்புருகுதடி
காமக்கலையாலே கலைதாங்கிப்போறேண்டி
அல்லியல்லியென்றுசொல்லி யலைகிறான்சங்கமனும்
கேட்டந்ததாதியருங் கிலேசங்கொண்டுதானடந்தார்
பவளசேனைதன்னருகில் பக்கத்தில்வந்தார்கள்
ஆச்சியின்சொற்படிக் கைந்துபெண்கள்போனோமம்மா
அலங்காரந்தன்னுடனே யாபரணமுன்வைத்தோம்
ஏனென்றுகேட்கவில்லை யேறமுகம்பார்க்கவில்லை
அல்லியின்மேற்சிந்தைகொண் டலைகிறான்சங்கமனும்
அனேகநெடுநேரம்நின்று அலைந்துமேவந்துவிட்டோம்
இவ்வார்த்தைதான்கேட் டிளங்கொடியாள்பவளசேனை
எண்ணாதவெண்ணமெல்லா மெண்ணியிளங்கொடியும்
ஐயமென்றுவந்தொரு யாண்டிபரதேசியல்லு
கட்டினவிருகறுத்துக் கலியாணம்பண்ணவந்தான்
தெய்வமென்றுநாமறியோஞ் சிவராசனென்றறியோம்
தன்மனதிலேயடக்கி தானடந்தாள்செங்கமலம்
அல்லிநல்லாள்பக்கம்வந்து ஆரணங்குதெண்டனிட்டாள்
ஏதுபவளசேனையிந்நேரம்வந்ததென்ன
வேர்க்கவிரிவிரிக்க வெண்துயிலுஞ்சோர்ந்துவிழ
உச்சியுருமத்தி லுத்தமியெங்குவந்தாய்
ஆச்சியரே கேட்டாயோ அதிசயமானவிதம்
நாடுசுகப்படவே நாளாச்சு ஆச்சியரே
உனக்குவரும்பாக்கியங்க ளொருவருக்குந்தெரியாது
ஆதிசிவனைப்போ லாண்டியிங்கொருவர்வந்தார்
படம்படிக்கும்பண்டாரம் பரமசிவன்போலேவந்தார்
மாணிக்கச்சொக்கலிங்கம் வந்தாற்போற்காணுதம்மா
கண்டுமறியோமம்மா கலியுகத்தில்தானறியேன்
தோலும்நரம்புகளுந் தொங்குதேகிழவனுக்கு
ஐந்தாங்கட்டுவாசலிலே ஐயர்வந்திருக்கிறார்
தெரிசனம்பண்ணோனாகில் தோஷவினைதீருமம்மா
பார்த்தால்பசிதீரும பண்டாரமானவரை
ஆச்சியெழுந்திரம்மா ஐயரைப்போய்ப்பார்ப்போம்
என்றதுதான்கேட் டேதுசொல்வாளல்லியம்மாள்
ஆண்காற்றடியாத வரண்மனைவாசலிலே
ஆண்டியிங்கேதான்வர யதிகாரமாச்சுதடா
ஆண்டிபரதேசி யையமென்றுவந்தாலும்
கொடுத்தனுப்பலாகாதோ கொம்பனையேயென்தோழி
எந்தனுடன்சொல்வானே னெழுந்திருந்தாதியென்றாள்

பாங்கியிலும்நல்ல பவளசேனையேதுசொல்வாள்
பிட்சைகொடுக்கிறது பெருமையென்றுபாராதே
நல்லோர்பெரியோரை நடந்துபோய்சேவித்தால்
காசிபோகவேண்டுமோ கருமந்தொலையாதோ
பெரியோரைசேவித்தால் பிழையொருக்காலுமில்லை
கைலாசநாதரைப்போற் காண்கிறதேஆச்சியரே
என்வார்த்தைதள்ளாதே எழுந்திரும்போவோமென்றாள்
மருடத்துரைச்சியவள் வாழ்வரசியேதுசொல்வாள்
ஆண்டியைப்பார்ப்பதற்கு அழைக்கிறாளென்தோழி
ஆணுமழகுமல்ல அரிகிழவனைலும்
என்னைக்-கண்டானேயாமாகில் காமங்கொளுத்திடுமே
பரிகாசஞ்செய்தாலே பாங்கியரேயென்னசெய்வேன்
வீரமணிவாளாலே வீசியெறிந்திடுவேன்
அப்படியேயாகுமம்மா ஆச்சியெழுந்திருங்கள்
சிங்காசனத்தைவிட்டுத் தேன்மொழியாள்தானெழுந்தாள்
பட்டுபளபளென்ன பாடவக்காற்சோதிமின்ன
நெற்றிசுற்றிதிகனிகென்ன நீலவிழிமைதுலங்க
காற்பீலிகலகலென்ன கைவளையல்பளபளென்ன
முந்தானைநிலம்புரள மோதிரக்கால்சத்தமிட
தோழியரைத்தோளணிந்து தோகைநல்லாள்தானடந்தாள்
பாங்கிமார்தோழியர்கள் பக்கம்புடைசூழ்ந்துவர
வாசலும்வாசலது படியேழுந்தான்தாண்டி
ஆண்டியிருக்குமந்த அஞ்சாங்கட்டுவாசல்வந்தார்
அல்லிவரும்போது அர்ச்சுனருமேதுசொல்வார்
என்னகாணல்லியரே எப்போமனதிறங்கும்
என்றைக்குக்காணுவே னென்னாசைதீருமடி
மாரனவனெய்தகணை மார்பைப்பிளக்குதடி
சித்தசன்தொட்டகணை சிருமார்புருகுதோடி
மாலையிடுவதெப்போ மருவியணைவதெப்போ
கூடியணைவதெப்போ குறைகளெல்லாந்தீர்வதெப்போ
அல்லியென்பான்மெல்லியென்பா னனந்தனிலேபெண்ணேயென்பான்
வருவாளோஅல்லியென்பான் வாய்திறந்துபெண்ணேயென்பான்
கட்டழகியல்லியவள் காதாரகேட்டுவிட்டாள்
உருக்கியசெம்பொனது உதிரம்போற்கண்சிவந்து
பிறந்துவளர்ந்துநான் பூமியாரமாண்டிருந்தேன்
நீன்முகனைக்கொன்றுநான் நீவிபட்டமாண்டேனே
வாடியென்றழைத்தவர்கள் வையகத்திலாருமில்லை
அடியென்றழைத்தவர்க ளவனியிலொருவரில்லை
ஆண்டியதுவாயாலே அலைச்சல்படலாச்சே

எடுத்துவாபெரியகத்தி இருதுண்டாய்போடவென்றாள்
எடுபரிசைபெரியகத்தி எடுத்துவாதாதியென்றாள்
பாங்கியிலும்நல்ல பவளசேனையேதுசொல்வாள்
பாண்டிப்பெருமாளே பதராதே ஆச்சியென்றாள்
அப்படியேகொண்டுவந்து ஆச்சியருகேவைத்தாள்
கண்ணாடியெதிர்வைத்துக் கண்டான்படத்தழகை
தன்னழகும்படமழகும் சரியாகதோன்றியது.
என்னழகும்பாவனையும் எங்குகண்டெழுதினானோ
உச்சிசுழியழகும் உரோமத்தின்பேரழகும்
மயிரழகும்பாவனையும் மாபாவியெங்குகண்டான்
மூகத்துத்திருவழகை மூதேவியெங்குகண்டான்
கண்ணின்விழியழகை கழுசிறையனெங்குகண்டான்
பவளம்போலென்னிதழும் பல்லழகுமெங்குகண்டான்
மார்பின்ஸ்தனமழகும் மட்சமுமெங்குகண்டான்
இடையழகுந்துடையழகும் யேறுதியெங்குகண்டான்
ஆபரணந்தன்னழகு மாடைத்துயிலழகும்
வடிவழகுமொப்பனையு மாபாவியெங்குகண்டான்
என்னையெழுதிவந்த தல்லாமலென்தோழி
உன்னையுங்கூடவே யுடனெழுதிவந்தான்
எடுத்துவாபெரியகத்தி யிருதுண்டாபோடவென்றாள்
பக்கச்சதைகளெல்லாம் பதைக்கிறதேயல்லியற்கு
பாங்கியிலும்நல்லதொரு பவளசேனையேதுசொல்வாள்
ஐயமார்பட்டதொரு அடைவுபோலாகுமது
பாண்டியர்கள்பட்டதொரு பதலம்போலாகுமது
ஆண்டியைவெட்டினாலே ஆரார்தலைபோமோ
அந்தக்கதையையெனக் காரணங்கேசொல்லுமென்றாள்

பவளசேனை பாண்டியர்களடைந்த துன்பத்தை
அல்லியரசாணிக்கு கதையாகக்கூறினது.

வைகைப்பெருக்கெடுத்து மாவெள்ளம்போகையிலே
ஆராலும்வைகைதன்னை யடைக்கமுடியாமல்
பாண்டியராசாக்கள் பகுந்துகரைபோட்டார்கள்
ஆணாய்ப்பிறந்தவர்க ளரைநாண்கயர்கட்டினவர்
பெண்ணாய்ப்பிறந்தவர்கள் புடவையுடுத்தினபேர்
அவரவர்க்கொருபங்கு அளந்துகரைபோட்டார்கள்
அவரவர்கள்பங்குக்கு அடைத்தார்கள்வைகைதனை
அண்ணாடம்பிட்டுசுட்டு ஔவையார்விற்றிருப்பாள்
அவளுக்கொருபங்குமல்லோ அளந்துகரைபோட்டார்கள்
பங்குகளில்லாமல் பரதவித்துத்தானழுதாள்
மண்ணாஞ்சுமக்கரியாள் மனஸ்தாபப்பட்டழுதாள்
வாணியக்கிழவியவள் மனத்துயரமாகையிலே
மாணிக்கச்சொக்கலிங்கம் மகாதேவர்தாமறிந்தார்

அட்டாளுஞ்சொக்கலிங்கம் ஆதிசிவன் தானறிந்தார்
ஔவையார்மனத்துயரம் ஆயாசம்தீர்க்கவென்று
ஒட்டனைப்போலாக உலகளந்தமைத்தனரும்
தட்டுதலையில்வைத்துக் கெஜக்கோலைக்கைபிடித்து
மண்வெட்டித்தோளில்வைத்து மகாதேவர்வாராரே
மதுரைத்தெருவி ல வந்தாரோசொக்கலிங்கம்
அப்போதுசொக்கலிங்கம் ஆதிசிவன்கூறிவாரார்
மண்ணெடுப்பேன்சுவர்வைப்பேன் வைப்பீரோகூலியாளாய்
என்றுமேசொல்லியல்லோ ஈஸ்வரனார்கூறிவாரார்
கூறியவர்வந்தாரே கொர்டிமதுரைவீதியிலே
ஔவையார்தன்னருகி லாதிசிவன்வந்துவிட்டார்
ஔவையாருமப்போ ஒட்டனுக்கேதுசொல்வாள்
ஆடாவொட்டாநீ அன்புடன்கேளுமென்றாள்
அன்றாடம்பிட்டுசுட்டு அங்காடிவிற்பேனடா
நூற்றொருபிட்டுசுட்டா லொருபிட்டுதிருபடா
உதிர்ந்ததோர்பிட்டுனக்கு வுத்தமனேநான்தருவேன்
மண்ணெடுத்தாரடைத்துவருவாயோமன்னவனே
உதிர்ந்துபோகும்பிட்டையல்லோ முத்தனேநான்றருவேன்
சத்தியந்தப்பாமல் தருகிறேன்போவென்றாள்
பிட்டுக்கூலிகட்டுமம்மா போயடைத்துவாரேனென்றான்
ஔவையாருந்தானெழுந்து அடுப்பூதமூட்டினாளே
பிட்டுக்கூலிகட்டியல்லோ போதச்சமைக்கலுற்றாள்
இருபதுபிட்டுசுட் டெடுத்தாளேகூன்கிழவி
இருபதுபிட்டு மெல்லாமுதிர்ந்தனவே
ஓட்டம்நடையுமாக ஓடிவந்தார்சொக்கலிங்கம்
காலாறடைத்துவந்தேன் கன்னிபசிக்குதென்றார்
சுட்டீரோபிட்டுகளைச் சொல்லுமுதிர்ந்ததுண்டோ
இருபதுபிட்டுசுட்டே னெல்லாமுதிர்ந்ததடா
எனக்கென்றுயெங்கிருந்தா ஈடழிவானொட்டாநீ
இந்தாருமென்றுசொல்லி ஈந்துவிட்டாள்பிட்டதனை
குறையாரடைத்துவாரேன் கொப்பெனவேபிட்டுசுடும்
புறக்கடையிற்போவாளும் புன்னைமரத்தடியிருந்தார்
கொண்டுவந்தபிட்டையெல்லாம் கொப்பனவேயுண்டுவிட்டார்
ஒருநாழிகைதரித் தோடிவந்தார்சொக்கலிங்கம்
அறையாரடைத்துவந்தே னச்சிபசிக்குதென்றார்
சுட்டீரோபிட்டுகளைச் சொல்லுமுதிர்ந்ததுண்டோ
ஐம்பதுபிட்டுசுட்டே னனைத்துமுதிர்ந்ததடா
இந்தாருமப்பாவென் றெடுத்துகொடுத்துவிட்டாள்

வாங்கியந்தபிட்டதனை வழிநடந்தார்சொக்கலிங்கம்
கொன்றைமரத்தடியிற் கொண்டுவந்து தான்புசித்தார்
ஈரறைநாழிசென் றெழுந்தவருமோடிவந்தார்
மார்மேலும்தோள்மேலும் மண்வாரிபோட்டுக்கொண்டார்
மூக்காலாறடைத்துவந்தேன் மெத்தப்பசிக்குதம்மா
சுட்டரோபிட்டுகளுஞ் சொல்லுமுதிர்ந்ததுண்டா
நூற்றொருபிட்டுகளுஞ் சுட்டாளேகூன்கிழவி
ஒருபிட்டுதான்தவிர மற்றபிட்டுதிர்ந்தனவே
உதிர்ந்திருந்தபிட்டையெல்லாம் உத்தமனார்கைகொடுத்தாள்
வாங்கியந்தசொக்கலிங்கம் வழிநடந்தார்மெல்லெனவே
குருந்தமரம்தன்னருகே கொப்பனவேவந்தமர்ந்தார்
கொண்டுவந்தபிட்டையெல்லாம் கொப்பனவேயுண்டுவிட்டார்
தலைக்குயர்ந்ததட்டுவைத்துச் சங்கரனார்பள்ளிகொண்டார்
ஆனந்தநித்திரையாய் ஆதிசிவன்போறாரே
ஒருபிட்டுவிற்றாளே உத்தமியாள்கூன்கிழவி
நூறுபிட்டுலாபமதை நேருடனேகண்டுகொண்டாள்
ஆறாயிரம்பாண்டியரு மையமார்வந்தார்கள்
வைகைக்கரைபார்த்து வருகையிலேபாண்டியர்கள்
கொஞ்சமாய்சலம்பெருகிக் குறையாறுவருகிறது
கண்டந்தபாண்டியருங் கடிதானகோபமுடன்
ஆருதடாபங்கிதுதா னடைக்காமல்போனதென்ன
எவருதடாபங்கிதுதா னேதுக்குக்கட்டவில்லை
பிட்டுவிற்கும்வாணிச்சி பொற்கொடியாள்பங்கிதுதான்
ஆள்பேரும்சேவகரும் அதிவிரைவாயோடிவந்தார்
ஔவையரைத்தானுமங்கே யழைத்துவந்தாராசரண்டை
வந்துமேதெண்டனிட்டாள் வாழ்பாண்டிராசருக்கு
வாடிநீகூன்கிழவி யாசக்கன்னிஔவையரே
அவரவர்கள்பங்குதனை யடைத்தார்கள்வைகைதனை
உன்பங்கையடையாமற் போனதென்னகூன்கிழவி
ஆரோவொருவொட்டனையா ஆரடைப்பேனென்றுசொல்லி
நூறுபிட்டுவாங்கிதின்று நேராயடைப்பேனென்றான்
பிட்டுதின்றபாவியைத்தான் பின்வரக்காணேனே
ஆறடைத்தானென்றறிந்தே னன்னீதம்பண்ணிவிட்டான்
அவ்வார்த்தைதான்கேட் டாறாயிரம்பாண்டியர்கள்
ஆரடாசேவகரே அவனைப்பிடியுமென்றார்
தேடிப்பிடியுமென்றார் சீரானவொட்டனைத்தான்
அப்போதுசேவகர்களாராய்ந்துதேடலுற்றார்
மதுரைத்தெருவுகளும் வனங்களுந்தோப்புகளும்
தேடிவருகிறார்கள் சீரானவொட்டனைத்தான்
மரத்தடியிற்பள்ளிகொண்ட மன்னவனைக்கண்டார்கள்

கண்டுபிடித்தவர்கள் கடுகெனவேகூட்டிவந்தார்
பாண்டியராசாக்கள் பார்த்தவரும்கோபமதாய்
வாணியக்கிழ்வியைநீ வகைமோசஞ்செய்தாயோடா
ஆறடைப்பேனென்றுசொல்லிப் பிட்டெல்லாந்தின்றுவிட்டு
மண்ணெடுத்துப்போட்டுநீ வைகையடையுமென்றான்
தட்டிலேமண்வாரித் தலையிலெடுத்துக்கொண்டு
அடிமேலடிவைத்துமல்லோ அஞ்சிநடைநடக்க
ஆதிசிவனென் றறியாமற்பாண்டியர்கள்
பிட்டுதின்றமயக்கத்தினாற் போகமனப்வல்லையோடா
என்றுசொல்லிப்பாண்டிய ரீஸ்வரரைத்தானடித்தார்
பாரப்பிரம்பாலே பாண்டியரடித்தாரே
அடிபட்டுசொக்கலிங்கம் அம்மண்ணைபோட்டுவிட்டார்
ஆறுமடைத்தவ ரரூபியாய்ப்போய்மறைந்தார்
ஆயிரம்பாண்டியற்கு மடிதுடையிற் பட்டதுவே
ஆறுமாதப்பிண்டத்திற்கு மந்தவடிபட்டதுவே
எறும்புகடையானையுயி ரெண்ணுபிரசீவனுக்கும்
அத்தண்டசீவனுக்கு மந்தவடிபட்டதம்மா
அப்படிபோலாகுமிது அல்லியம்மாமிஞ்சாதே
ஆண்டியரைக்கொன்றுக்கா லாரார்தலைபோமோ
உன்கையாற்கொல்லாதே கட்டழகிசங்கமரை
கொல்வாரைவிட்டுமல்லோ கொல்லவிடுசங்கமரை

ஆண்டியைச் சர்ப்பங்களால் கொல்லநினைத்தது.

பாம்புகளைக்கொண்டு பாரவிஷமேற்றி
சர்ப்பங்களைவிட்டுநீ சங்கமரைக்கொல்லுமென்றாள்
அவ்வார்த்தைதான்கேட் டல்லிப்பெருமாளும்
ஆடிதாதிகளே யலங்காரத்தோழிகளே
பாம்புபிடாரர்களைப் பார்த்தோடியழையுமென்றாள்
ஓட்டம்நடையுமாக ஓடியழையுமென்றாள்
அவ்வார்த்தைதான்கேட் டாரணங்குதோழிமாரும்
பாம்புபிடாரப்பெண்ணே பத்தினிமாராணர்களே
அல்லிப்பெருமாளு மழைத்தோடிவாருமென்றார்
வாருங்களென் றுசொல்லி வரவழைத்தார் தாதியர்கள்
அவ்வார்த்தைதான்கேட் டந்தப்பிடாரப்பெண்கள்
மகுடிக்குழலூதி மகாவிருதுகட்டினார்கள்
பாம்புபெட்டிதோளில்வைத்து பிடாரப்பெண்கள்வாறார்கள்
வீதியும்வீதியது தெருவும்பலகடந்து
அல்லியம்மாள்வாசலிலே அனைவோரும்வந்தார்கள்
மகுடத்தரைச்சியற்கு வந்தனந்தெண்டம்பண்ணினார்கள்
எங்களையழைத்தவகை யேதுவகைசொல்லுமென்றார்
உங்களையழைத்ததுதா னொன்றுக்குறையுமில்லை

காட்டிற்குபோங்களடி கன்னிபுத்துமருந்தைவைத்து
கரிநாகஞ்செந்நாகங் காற்கோடகப்பாம்புதனை
மண்ணுளிபாம்புகளும் மலைவிரியன்தாசிரியும்
மட்டில்லாபாம்புகளை வகையாய்பிடித்துவாரும்
ஆண்டியைக்கொல்லவேணு மதிதுரிதாய்வாருமென்றான்
உச்சிதங்கள்வேணமட்டு முங்களுக்குநான்றருவேன்
பாம்புப்பிடாரப்பெண்கள் பாங்குடனேபோகலுற்றார்
அத்துவானகானகங்க ளாரணியம்வந்தார்கள்
புற்றுக்குமருந்துவைத்தார் பெரும்பாம்புதான்பிடிக்க
மந்திரத்தேசொல்லியவர் மகுடிக்குழலூதினார்கள்
புற்றீசல்போலாகப் புறப்பட்டதுபாம்புகளும்
கரிநாகஞ்செந்நாகங் கறுத்தசிறுபாம்புகளும்
ஆடிவரும்பாம்புகள்தா னமர்ந்ததேபெட்டியிலே
சீறிவருகின்ற செந்நாகமுள்ளதெல்லாம்
மட்டில்லாப்பாம்புதனை வகையுடனேதான்பிடித்தார்
காவடியைதோளில்வைத்து கடுகியேவாறார்கள்
விருதுகளைக்கட்டிக்கொண்டு மகுடிக்குழலூதிவாரார்
காடுசெடிதாண்டி கடுகிவந்தார்தென்மதுரை
செட்டித்தெருதாண்டி தேரோடும்வீதிவிட்டு
அல்லியம்மாள்தன்னுடைய அரண்மனைக்குள்வந்தார்கள்
வாசலும்வாசலது மேழுகட்டுந்தான்தாண்டி
பத்தினிக்குதெண்டனிட்டு பாம்புகளைமுன்னேவைத்தார்
வகைக்கொருபாம்பாக மாதேநாம்கொண்டுவந்தோம்
கொண்டுவந்தோமாச்சியென்று கொம்பனைக்குதெண்டனிட்டார்
மகுடத்தரசியவள் மாதுமவளேதுசொல்வாள்
ஆர்பெண்கள்தாதிகளே யலங்காரத்தோழிகளே
பாலும்பழமுமாய் பாம்புகட்குவையுமென்றாள்
அபினிமருந்துகளு மடைவானசாராயமும்
முட்டையுடைத்துமல்லோ முன்னாலேவையுமென்றாள்
கொண்டுவந்துவைத்தார்கள் கொம்பனைமார்பாம்புகட்கு
அத்தண்டபாம்புகளு மாகாரமுண்டிறது
கண்கள்சிவக்கிறதே காந்தாளமாயினதே
அவ்வலரிகண்களெல்லாம் செவ்வலரிபூத்ததங்கே
பாம்புகளைப்பார்த்துமல்லோ பத்தினியாளேதுசொல்வாள்
அங்கயற்கண்ணம்மை யருளாலேயான்பிறந்தேன்
பட்டமுஞ்செங்கோலும் பாதிராடாளுகிறேன்
வாடியென்றப்போடியென்றும் வம்புசொன்னாருமில்லை
ஆண்டியிடவாயாலே யலைச்சல்படுகிறேனே
சாதிகெட்டபண்டாரந் தாறுமாறாய்ப்பேசுகிறான்
என்அங்கமுருகிறதே யாவிதணலாகிறதே
சென்மமுழுதேறுதே இக்கைதணலாகுதம்மா

பண்டாரமானவனைப் பத்தினியேகொல்லுமென்றாள்
கும்பிட்டுதெண்டனிட்டாள் குணமுள்ளபாம்பிற்கு
அவ்வசனங்கேட்ட தத்தண்டபாம்புகளுஞ்
செந்நாகமுள்ளதெல்லாஞ் சீறியெழுந்தனவே
கரிநாகமுள்ளதெல்லாங் கதறியெழுந்தனவே
இருதலைபாம்புகள்தா னெழும்பிவருகுதங்கே
மூன்றுதலைநாகமல்லோ மூடிவருகிறதே
ஐந்துதலைநாகமல்லோ அதிர்ந்துவருகுதங்கே
சீறிவருநாகமெல்லாந் தேர்விஜயனைப்பார்த்து
ஓடிவரும்பாம்பனைத்து மர்ச்சுனரைகண்டதுவே
ஆணழகுமன்ன னருச்சுனராசனென்றான்
மின்னழகும்பின்னழகும் முதுகில்மச்சரேகைகளும்
பல்லிற்பாசவீணை பாதத்திற்செந்தாமரை
மீசைமுறுக்கழகும் விழியில்நல்லபார்வைகளும்
அவரழகைதான்பார்த்து அர்ச்சுனரென்றறிந்து
நாககன்னிமணவாளன் நல்விசையராசனல்லோ
தருமராதம்பியாந் தனஞ்செயனர்ச்சுனர்காண்
வெற்றிமதயானை வீமருக்குத்தம்பியல்லோ
மாயாதுமைத்துனர்காண் வாள்விசையரிவர்காணும்
அல்லியரைமாலையிட ஆண்டிகோலமானாரே
மாலையிடவேணுமென்று வேடங்கொண்டுவந்தாரே
மாப்பிள்ளையைக்கொல்லவென்று மருந்திட்டாளல்லியரும்
கணவனைக்கொல்லவென்று கட்டழகிமருந்திட்டாளே.
அல்லியதுவார்த்தைகேட்டு அர்ச்சுனரைக்கொல்லவென்றாள்
பொற்கொடியாள்நாககன்னி போதச்சிறையாவாள்
கனமோசம்வந்துவிடுங் கன்னிசெய்தகாரியங்கள்
செல்வமருமகனுக்குச் செங்கானல்வீசுதென்று
வெய்யனுரைக்குதென்று வெங்கானல்வீசுதென்று
ஐந்துதலைநாகம்வந்து அர்ச்சுனர்க்குகுடைபிடிக்க
தோள்மேலேயேறுவதுந் தம்பிபறப்பதுவும்
கீதங்கள்பாடுவதுங் கொண்டாடிப்பதுவும்
அருப்பவனிகூத்தாளு மாபிஞ்சிலாலம்
மகுடத்தரச்சியவள் மாதருதம்பார்த்துவிட்டாள்
பாம்புமயங்கவேதான் பாவிமருந்துவைத்தாள்
வானஞ்சுழல்வதற்கு மருந்துண்டுபாவிகையில்
என்னைமயக்கவொரு மருந்தரியபாட்டாளோ
ஆர்காணுந்தாதிகளே யலங்காரத்தோழிகளே
வெள்ளிப்பிரம்பாலே வீசுங்கள்பாம்புகளை

பாரப்பிரம்பாலே பாம்பையடியுமென்றாள்
நாதிமாரப்பொழுது சவுக்கெடுத்துவீசலுற்றார்
மாறியடிக்கலுற்றார் வண்ணவிதபாம்புகளை
அப்போதுசர்ப்பமல்லோ யல்லியரைப்பார்த்துரைக்கும்
மாப்பிள்ளையுநீயுமாக மணமுகூர்த்தம்செய்கையிலே
அன்னவுஞ்சலாடுதற் கழைததால்வருவோமோ
என்றந்தபாம்புகள்தா னெகிரிப்பறந்ததுவே
பாங்கியிலும்நல்லதொரு பவளசேனைநீகேளும்
எந்தவிதத்தினாலே கொன்றிடுவேமென்றேழி
பண்டாரந்தன்னைக்கொல்ல பக்குவஞ்சொல்லுமென்றாள்
ஆனற்கேளாச்சியரே ஆலோசனைசொல்லுகிறேன்
நீபிறக்கத்தவசுபண்ண நீதியுள்ளகாட்டானை
ஆனையையழைத்துவந் தனந்தமபக்கமேற்றி
கொல்லவிடலாமோ கொம்பனையேசங்கமனே
அவ்வார்த்தைதானகேட் டல்லிமனமகிழ்ந்து

ஆனையினால் ஆண்டியைக்கொல்லவகைதேடினது.

ஆரடிதோழிகளே யலங்காரத்தாதிகளே
காட்டானைதன்னைநீங்கள் கடுகவழையுமென்றாள்
ஆச்சியரேநீர்கேளு மடியேனொருவார்த்தை
நீபிறக்கத்தவசுபண்ண நீதியுள்ளகாட்டானை
வெறித்துத்திறிகிறதேவெண்கானகந்தனிலே
தன்னிழலைதான்பார்த்து தன்மதம்பொழிகின்றது
கொம்பினால்மலையையல்லோ குத்திபிளக்கிறது
மலைகள்பருவதத்தை மண்ணோடேசாய்த்துவிடும்
மதப்பட்டுதிரியுதம்மா மயிலணையேயவ்வானை
எங்களைக்கண்டாலே யெடுத்துஅறைந்துவிடுஞ்
செத்துமடிந்திடுவோஞ் சிவலோகஞ்சேர்ந்திடுவோம்
சென்றோமேயாமாகில் திரும்பிவருவதில்லை
இவ்வசனம்தான்கேட் டேதுசொல்வாளல்லியரும்
கணையாழிமோதிரத்தைக் கழற்றிக்கொடுத்தாளே
முத்திரைமோதிரத்தை மொய்குழலாள்கொண்டுநீங்கள்
ஆனையின்முன்னே வைத்து அடிபணிந்துதெண்டனிட்டு
நீபெற்றமகளல்லியம்மாள் புலம்பியழுகிறாளே
உன்னைப்-பார்க்கமனதாகப் பத்தினியாளிருக்கிறாளே
அழைத்தோடிவாருமென்று சொன்னாளேயல்லியம்மாள்
கணையாழிகாட்டியல்லோ கடுகழைத்துவாருமென்றாள்
ஓட்டம்நடையுமாக வோடுங்கள்தாதியென்றாள்
மத்தகஜந்தான்பிடிக்க மாவெட்டிப்பெண்கள்வர
தங்களதுமாளிகையிற் சடுதியிற்போய்நுழைந்து

புத்திரரானவர்க்கு புத்திமிகவுரைத்து
மத்தகஜந்தான்பிடிக்க மகாவனம்போகிறேமே
சாவோமோபிழைப்போமே சாமிசெயலெப்படியோ
பிழைத்துமேவந்தோமானால் பிள்ளைமுகம்பார்ப்போம்
இல்லாமற்போச்சுதானால் ஈசன்பதஞ்சேருகிறோம்
பிள்ளைகளைக்கூட்டிவந்து பெரியோர்கையிலொப்பிவைத்து
வாய்க்கரிசிவாங்கி மலைதனிற்போகலுற்றார்
இருண்டவனங்களெல்லா மெங்கெங்குந்தேடலுற்றார்
மலையோரம்படுத்திருந்த மதயானைகண்டதுவே
யானையதுவீரிட்டலங்காரமாயெழுந்து
தன்னிலைதான்பார்த்து தரையில்நடக்குமது
கொம்பால்மலையைக்குத்தி கிளப்பிற்றுயானையது
கண்டுபயந்தார்கள் கட்டழகிபெண்களெல்லாம்
யானையைக்கண்டுமவ ரடிபணிந்துதெண்டனிட்டார்
கணையாழிமுன்போட்டுக் கன்னிமாரேதுசொல்வார்
அல்லிப்பெருமாளு மாரணங்குநாயகியாள்
நீங்கள்தபசுபண்ணிபெற்றதொரு தையநல்லாளல்லியரும்
உன்னைக்-காணவிருப்பமாகிக் கலங்கிதவிக்கிறாளே
பார்க்கமனதாகிப் பதைத்துப்புலம்கிறாள்
போசனம்பண்ணமற் புலம்பித்தவிக்கிறாள்காண்
உண்ணாளுடுக்கா ளொருபொழுதுநீராடாள்
படுக்கைபொருந்தாளே பத்தினியாளல்லியரும்
அழுதகண்ணுஞ்சிந்தையுமா யழைத்தோடிவாருமென்றாள்
நீவாராமல்போனக்கால் மாண்டுமடிவேனென்றாள்
செத்துமடிவேனென்றாள் செலவழிந்துபோவேனென்றாள்
கடுகெனவேவாருமென்று கையெடுத்துதெண்டனிட்டார்
கேட்டந்தமதயானை கெர்ச்சித்துதான்வருமாம்
யானைவரும்போது அழகானதாதியர்கள்
தெத்துத்தெருகடந்து தேரோடும்வீதிவிட்டு
அல்லியம்மாள்தன்னருகே யாரணங்குமோடிவந்து
யானைவருகுதென்று அடிபணிந்துதெண்டனிட்டார்
மதுரைத்துரைச்சியவள் மாதுகன்னிதான்கேட்டு
கரும்புசுமைகளைத்தான் கட்டுகட்டாவையுமென்றாள்
தென்னமட்டைவாழைமட்டை தோழிகளேவையுமென்றாள்
பச்சரிசிதேங்காயும் பாங்கிகளேவையுமென்றாள்
ஐங்கலஞ்சாராயமு மருகலமெட்டிக்கொட்டை
கெஞ்சாவபினிகளும் கொண்டுவந்துவையுமென்றாள்
இடிமருந்துபாஷாண மிளங்கொடியேவையுமென்றாள்

கொண்டுவந்துவைத்தார்கள் கொம்பனையாள்முன்னாலே
வாழ்மதுரைபட்டணத்தில் மத்தகசம்வருகிறதாம்
யானைவருகுதென்று அம்மதுரைபட்டணத்தார்
மதுரைக்குடிபடைகள் மாளிகையிற்போய்நுழைந்தார்
ஓடியொளிப்பார்களுத்தமரானவர்கள்
அப்போதுமத்தகஜம் அங்காரமாய்நடந்து
தெத்துதிருந்தாண்டி தேரோடும்வீதிவிட்டு
கடையுங்கடைத்தெருவும் கருமாரவீதிவிட்டார்
அல்லியம்மாள்தன்னுடைய அரண்மனையில்வந்ததுகாண்
யானையைக்கண்டவுடன் அல்லியெழுந்திருந்து
மத்தகஜம்முன்னேவந்து வணங்கியேதெண்டனிட்டாள்
யானைக்குமுன்பாக ஆசாரம்வைத்தார்கள்
வயிராவுண்டதுவே மயக்கம்பெரிதாச்சே
கண்கள்செவந்தனவே கனமயக்கங்கொண்டதுவே
அல்லியபெருமாளு மடிவணங்கியே சொல்வாள்
நான்பிறக்கவேணுமென்று நல்லதவஞ்செய்தீர்களே
நீங்கள்-தபசுபண்ணிபெற்றமகள் தடுமாறிநின்றுவிட்டேன்
அன்று-ஏழுபிராயத்திலே யெதிர்த்துவந்தநீன்முகனை
வெட்டித்தலையறுத்து விரபட்டங்கட்டிக்கொண்டேன்
நீன்முகனைக்கொன்றுநான் நீலிபட்டமாளுகிறேன்
வாடிபெண்ணேயென்பார்கள் வையகத்திலாருமில்லை
அடியென்றழைத்தவர்களாருமில்லைபூமியிலே
ஆண்டியிடவாயாலே யலைச்சல்படுகிறேன்யான்
சாதிகெட்டபண்டாரந் தாருமாராய்சொல்லுகிறான்
சொல்லாதுஞ்சொல்லுகிறான் செனமழுறுகுதையா
பொறுத்துமுடியவில்லை பெரும்பாவிசொன்னதெல்லாம்
கேட்டுமுடியவில்லை கேடுகாலன்சொன்னதெல்லாம்
செல்வங்குறைந்துதையா சீரழிந்துநின்றுவிட்டேன்
ஆண்டியைக்கொல்வதற்கு அழைப்பித்தேனச்சியென்றாள்
அல்லியதுவார்த்தைகேட்டு ஆங்காரகோபமுடன்
கண்சிவந்துமத்தகஜங் காளையரைக்கொல்வதற்கு
தும்பிக்கைதூக்கியல்லோ சுற்றியறையவரும
முதுகில்மட்சரேகைகளும் முன்னழகுகண்டதுதான்
மச்சவடிவுகண்டு மயங்கிற்றுஅப்பொழுது
மட்சரேகைபடைத்தவர்கள் மண்டலத்திலாருமில்லை
அருச்சுனனொருவனல்லால் அவனியிலேயாருமில்லை
வாழ்விசையனல்லாமல் மண்டலத்திலாருமில்லை
தேவேந்திரன்மகன் திருமாற்குமைத்துனன்காண்
துரோபதையைமாலையிட்ட தேர்விசையனிவர்காணும்
அல்லியுரைக்கன்னமிட ஆண்டிகோலமாகிவந்தார்
மாப்பிள்ளையைக்கொல்லவென்று மருந்திட்டாள்மாபாவி

கணவனைகொல்வதற்கு கனத்தமருந்திட்டாளே
அல்லிதன்வார்த்தைகேட்டு அருச்சுனரைக்கொன்றுவிட்டால்
ஆயர்பெருமாளும் அறிந்தால்பழுதுவரும்
வீமனறிந்தாலேவெகுமோசம்நேர்ந்துவிடும்
அல்லியற்கேற்றதொரு அழகுள்ளபுருஷனிவன்
மகளாரைமாலையிட வையகத்திலாருமில்லை
செல்வமருமகன்தான் சிரழியக்காரணமேன்
அருமைமருமகன்தா னலைக்சல்படுவானேன்
தும்பிக்கையாலேதான் சுழற்றியெடுத்துக்கொண்டு
கும்பஸ்தலத்தில்வைத்து கூத்தாடும்யானையது
கண்டாளேயானைதன்னை கண்கொள்ளாக்கோபமுடன்
மதயானைத்தான்மயங்க மருந்தறிவான்பாவியிவன்
காட்டானைதான்மயங்க கனமருந்தறிவாண்டி
என்னைமயக்கும்வகை யிவனறியமாட்டானே
ஆரடிதாதிகளே யடியுங்கள்யானைதன்னை
மாறியடியுமென்றாள் மதயானைதன்னையவள்
அப்போதுமத்தகஜம் அல்லியரைப்பார்த்துரைக்கும்
மாப்பிள்ளையுமாக மணக்கோலம்வரும்போது
என்னையழைத்தாலும் ஏந்திழையேவருவேனோ
வேண்டியழைத்தாலும் வருவேனோமெல்லியரே
என்றுநடந்ததுவே இருண்டவனங்களுக்கு
மதயானைபோனபின்பு மாயவரேதுசெய்தார்
மான்செவியுங்கண்கள்ரெண்டு மாயவனார்தெரியவைத்தார்
கண்ணுந்தெரிகிறதே காதிரெண்டுங்கேட்கிறதே
அல்லிப்பெருமாளு மாரணங்கேதுசொல்வாள்
பாங்கியிலும்நல்லவளே பவளசேனாயகியே
இந்தக்கிழவனைத்தான் என்னசெய்வேன்தோழியென்றாள்
செல்வங்குலையுதடி தேன்மொழியேயென்னசெய்வேன்
பாண்டிப்பெருமாளே பதறுதேசற்றேகிலும்
அறிந்துநான்வந்துமல்லோ ஆச்சியரேசொல்லுகிறேன்
தெரிந்துநான்வந்துமல்லோ சொல்லுகிறேனுந்தனுக்கு
திடுக்கென்றெழுந்து தோழியரும்வருகிறாளே
சங்கமனாருகில்வந்து தையலருமேதுசொல்வாள்
ஐயாபெரியவரே யறிவைப்படைத்தவரே
தீரப்படித்தவரே தெளிவறிந்தசங்கமரே
புதிதாய்தபசுபண்ணி புத்திமிகக்கற்றவரே
எங்கிருந்துவந்தீர்கா ணிங்கேபுலம்புகிறீர்
ஏதுவகையாக இங்கேவந்தீர்சொல்லுமையா

கேதாரஞ்சரஸ்வதியும் ஸ்நானங்களாடிவந்தேன்
பாராஸ்தலங்களில்லை பணியாதகோவிலில்லை
முழுகாததீர்த்தமில்லை மிதியாதகோவிலில்லை
புண்யகோடிதீர்த்தமாடிப் போரேனம்மாராமேசுரம்.
மதுரைநகரம்வந்து வைகைதீர்த்தமாடினேன்யான்
பிட்டுக்குமண்சுமந்த பித்தரையுந்தெரிசித்தேன்
நூறுபத்துஞ்சென்றதம்மா திகாணயென்வயது
தோலும்நரம்புகளுந் தொங்குதுபாரெந்தனுக்கு
இப்போதுபின்னையோ இனமைநாழிகையோ
எப்பவோவென்சடலம் யிறப்பதுயானறியேன்
அல்லிப்பெருமாளும் அரசாளுபநாயகியாள்
கன்னிகையென்றார்கள் கட்டிழகியல்லியரை
பத்தினியாளென்றுவெகு பேர்களுஞ்சொன்னார்கள்
ஆகையினாலேதா னரணங்கைத்தேடிவந்தேன்
எங்கள்-மூப்பாட்டனாளையிலே தைததபழஞ்சோளி
அட்சயபாத்திரந்தானடிபிரலாச்சுதென்று
சோளிக்குபழஞ்சேலை கேட்கவந்தேன்சுந்தரியே
உடுத்திக்கிழிந்திருக்கு முள்ளாடையொருமுழந்தான்
எனக்குமவளீந்தாலே எழுந்திருந்துபோவேனம்மா
அவ்வார்த்தைதான்கேட்டு ஆரணங்குவந்துவிட்டாள்
அல்லியர்க்குதெண்டனிட்டு அன்புடனேதுசொல்வாள்
ஐயாபெரிவர்மே லாயாசப்பட்டீரே
அவர்-மூப்பாட்டனாளையிலே தைத்தபழஞ்சோளியம்மா
அட்சயபாத்திரந்தா னடிபிரலாச்சுதம்மா
சோளிக்குப்பழஞ்சேலை கேட்கிறார்சுந்தரியே
பிச்சைக்கொடுத்தனுப்பும் போய்விடுவார்சுவாமியென்றாள்
அவ்வார்த்தைதான்கேட்டு அரசிதுரைநாயகியாள்
அறுபதுமுழப்புடவை அழகானபச்சைவடம்
எடுத்துக்கொடுங்களடி இறக்கமில்லாபாவியற்கு
நச்சுநச்சென்கிறது நரைகிழவன்போராட்டம்
எப்போதுதான்தொலையும் எடுத்துக்கொடுங்களென்றாள்
ஓட்டம்நடையுமாக ஓடிவந்தார்தாதியர்கள்
பச்சவடங்கொண்டுவந்து பண்டாரமுன்னேவைத்தார்
ஐயாபெரியவரே யறிவுபடைத்தவரே
சோளிக்குபழஞ்சேலை சுந்தரியைக்கேட்டீரே
முப்பதுமுழப்புடவை முன்னேவைத்தோமெடுத்துப்போம்
ஆர்காணுமாச்சியரே ஆரணங்குநீர்கேளும்
இப்படிக்குவேணுமானால் எனக்குபனேகமுண்டு
நாட்டிலேநான்குலட்சம் நமக்குக்கொடுப்பார்கள்
பத்தினியாள்கட்டினதோர் பாவாடையுள்ளாடை
உள்ளாடைசேலைதனி லொருமுழம்வேண்டுமென்றான்

அவ்வார்த்தைதான்கேட்டு அல்லியருங்கோபங்கொண்டு
இப்படிக்குபிச்சைகேட்டோ ருண்டோவுலகுதனில்
பாங்கியிலும்நல்லதொரு பவளசேனையேதுசொல்வாள்
ஆச்சியரேயுந்தனுக்கு அதனாற்பழுதில்லை
கொடுப்பதினாலேயம்மா குறையொன்றும்வருவதில்லை
அழுக்கில்புசுக்கினதோர் ஆடைதந்தால்பேசமென்ன
கொடுக்காமற்போனாலவன் கொஞ்சத்தில்விடுவதில்லை
சனியன்தொலையவேண்டும் சற்றேகொடுத்தனுப்பும்
அப்படியேநான்கொடுத்தால் ஆண்டியவன்போவானோ
கேட்டுவாதாதியரே கேடுகெட்டசங்கமனை
பாங்கியிலும்நல்லவளாம் பவளசேனையோடிவந்து
ஐயாபெரியவரே அறிவைப்பண்டத்தவரே
தீரப்படித்தவரே தெளிவறிந்தசங்கமரே
உள்ளாடைசேலையது ஒருமுழந்தாலே
போகிறீரோபெரியவரே புண்ணியரேசொல்லுமென்றாள்
ஆனால்கேளாச்சியரே அதிலுமொருவயணம்
ஏந்திழையாள்பிச்சைதந்தால் இருகையால்வாங்கிக்கொளவேன்
தேன்மொழியாள்கைதலத்தை தீண்டியேயாலபிடித்து
அள்ளியேநீரிடுவேன் ஆனந்தமாரியர்கு
இருகையினால்வாங்கி ஏந்திழையாளளிக்கவேண்டும்
உலகத்திலுள்ளபடி உத்தமியேதப்பாது
அவ்வார்த்தைதான்கேட்டு அழகானதாதியரும்
மகுடத்துரைச்சியற்கு வந்தவளுந்தெண்டனிட்டாள்
ஆச்சியரேநீர்கேளும் அடியேனொருவார்த்தை
ஐயருக்குபிச்சையது ஆரணங்கேதந்தபின்பு
உன்கையைத்தான்பிடித்து கடுகியேநீரிடுவார்
வாங்கிதறித்துகொண்டால் வாழ்த்தியவர்போய்விடுவார்
உலகத்திலுள்ளபடி வுனக்குகுறைவுமில்லை
தலையிலெழுத்திதுவோ தையலரேயென்தோழி
உடுத்தியசேலையது உள்ளாடைதான்கிழித்தாள்
இந்தாருஞ்சாமியென்று ஈந்தாளேயல்லியம்மாள்
வாங்கியந்தசங்கமனும் வாழ்வரசிமுகம்பார்த்து
அள்ளியேநீருமிட்டார் ஆரணங்குகைத்தலத்தில்
பத்தினியைவாழ்த்தியவர் பல்லொளியைக்காட்டினாரே
அடிவானமின்னலைப்போ லல்லியற்குதோன்றியது
கண்டுமயங்கினாளே கட்டழகியாமியவள்
காண்டீபனருச்சுனருங் காற்றாய்ப்பறந்துவிட்டார்
தெத்துதெருதாண்டி சீரானகாட்டில்வந்தார்
மாயன்பெருமாளிடம் வந்துவிட்டானருச்சுனனும்
அல்லியின்வாசலிலே அதிசயங்களுள்ளதெல்லாம்
மாயருடன்சொல்லியல்லோ மனஸ்தாபப்பட்டழுதான்

மாலைதரிப்பதெப்போ மனதுகுறைதீர்வதெப்போ
கூடியணைவதெப்போ குறைகளெல்லாம்தீர்வதெப்போ
மன்மதபாணமது மார்புருகிப்போகுதென்றான்
அப்போது அல்லியரும் அவள்சோபந்தீர்ந்தெழுந்து
ஆரடிதோழியர்க ளாயிரம்பேர்வாங்களடி
ஆண்டியைக்கொண்டுவாரும் ஆக்கினைகள்செய்யவேணும்
பாங்கியிலும்நல்லதொரு பவளசேனையேதுசொல்வாள்
சந்திரனோசூரியனோ சதுர்முகபிர்மாவோ
மாணிக்கச்சொக்கலிங்கம் வடிவுகொண்டுவந்தாரோ
எங்கென்றுதேடுவோம் எழிலானசங்கமனை
போனாலும்போய்போறான் போவோமரண்மனைக்கு
அல்லியரைக்கூட்டிக்கொண்டு அரண்மனையில்வந்தார்கள்
மாளிகைவாசலது மண்டபம்வந்தார்கள்

ஸ்ரீகிருஷ்ணபகவான் பாம்புப்பிடாரனாகவும் அருச்சுனன் பாம்பாகவும் வடிவுகொண்டது.

அப்போதுபெருமாளும் ஆயரென்னவடிவெடுத்தார்
பாம்புப்பிடாரனைப் பாரளந்தார்வடிவெடுத்தார்
தொண்ணூறும்பத்துஞ்சென்ற துவண்டகிழவனைப்போல்
பண்ணைப்பூப்போலாகப் பழுத்தகிழவனானார்
பத்துவிதப்பாம்புகளை பாரளந்தாருண்டுபண்ணூர்
வாழ்விசையனருச்சுனரை மாணிக்கப்பாம்பாக்கி
போர்விசையனருச்சுனரைப் பெட்டியிலேதானடக்கி
முப்பதுவிருதுகட்டி மூகடிக்குழலெடுத்து
பாம்புபெட்டிக்காவடியை பாரளந்தார்தோளில்வைத்து
மகடிக்குழலூதி வாராரேயெம்பெருமான்
அல்லியாள்பிறந்த அழகானபொய்கையண்டை
ஆலமரத்தடியில் அரிராமர்வந்தமர்ந்தார்
நடுகாட்டிடைச்சியர்கள் நாறூறுகன்னிகளும்
பாற்குடங்கள்தாமெடுத்துப் பத்தினிக்குக்கொண்டுவந்தார்
காராம்பசுப்பாலைக் கப்பங்கள்கட்டிவைத்தார்
ஆலமரநிழலிலே அனைவரும்வந்தமர்ந்தார்
பெண்ணரசுமாதரெல்லாம் பிடாரனைக்கண்டார்கள்
ஐயாபெரியவரே அழகானபிடாரனேநீர்
எந்தவூரென்ன எங்கிருந்துவந்தீரையா
ஊரென்னபேரென்ன உத்தமனேசொல்லுமென்றார்
கொங்குமலையாளம் கொச்சிதேசமெங்களது
பாம்புபிடிக்கிறதும் பவனியாட்டிவைப்பேனென்றார்
ஆனால்கேளாயாவே அடியேனொருவார்த்தை
என்னென்னபாம்புவிதம் எடுத்துகாட்டுமென்றார்
பசியாயிருக்குதம்மா பாம்பாடமாட்டாது
ஐந்துநாளாச்சுதம்மா ஆகாரந்தான்புசித்து

போசனங்களில்லாமல் புலம்படல்பட்டுதம்மா
பாலதுதான்கொடுத்துப் பசியதுதீர்ந்ததானால்
அப்போவினையாடும் அழகானபாம்பிதுதான்
அவ்வார்த்தைதான்கேட்டு அருகிருக்குமாதரெல்லாம்
கொஞ்சம்பால்வார்க்கிறோம் குடிக்கவையும்பாம்பையென்றார்
அப்போதுபிடாரனவன் ஆயாவரேதுசொல்வார்
ஒருவர்-கண்பார்க்ககுடியாது கனமுள்ளபாம்பிதுதான்
பக்கந்திரைவளைத்துப் பாற்குடத்தைமுன்புவைத்தால்
உண்டுபசியாறும் உத்தமியேயிப்பாம்பு

பாற்குடங்களனைத்திலுமுள்ள பாலையெல்லாம்

பாம்புகுடித்தது.

அத்தண்டபெண்களெல்லாம் அவ்வார்த்தைதான்கேட்டு
பாற்குடமுள்ளதெல்லாம் பார்த்தீர்த்துவைத்தார்கள்
சுற்றித்திரைபோட்டு சீரானபாம்பைவிட்டார்
பக்கந்திரைவளைத்து பாம்புகளையுள்ளேவிட்டார்
ஆணழகுமன்னன் அருச்சுனவிரியனும்
பாலைக்குடித்துவிட்டு பானையையுருட்டிவிட்டான்
திரையெடுத்துபார்த்தார்கள் திகிலடைந்தார்பெண்களெல்லாம்
ஐயையோதெய்வமென்று அறைந்துகொண்டெல்லவரும்
பாவிகெடுத்தாயே பாலெல்லாம்போச்சுதடா
இத்தனைபாலையது எதாய்குடித்ததடா
அல்லியறிந்தாலே ஆக்கினைகள்செய்வாளே
தாமணிப்போட்டல்லவோ தலையைத்தறிப்பாளே
கொல்லநினைப்பாளே குடிகேடுவந்திடுமே
ஆராடபாதகனே அறிவுகெட்டபிடாராநீ
கொஞ்சம்பால்குடிக்குமென்று குடமெல்லாம்வைத்தாயே
நரைத்தலையைநாய்ப்பிடுங்க கிழத்தலைக்குக்கேடுவர
எங்களைக்கெடுத்தாயடா எங்கள்பாவங்கொண்டாயடா
என்றுபுலம்புகிறாரிளங்கொடிமாரெல்லோரும்
அழுதகண்ணுஞ்சிந்தையுமாய்ப் போரார்கள்மாதரெல்லாம்
அல்லியம்மாள்தன்வாசல் அரண்மனையில்வந்தார்கள்
அல்லியற்குமுன்வந்து அடிவணங்கிதெண்டனிட்டார்
ஆச்சியரேயென்தாயே அதிசயத்தைநீர்கேளும்
மதுராபுரியருகே வைகைக்கரையோரம்
ஆலமரத்தடியிலங்கேயொருகிழவன்
பாம்புப்பிடாரனவன் பாருலகில்யாமறியோம்
பத்துவிதபாம்புகளில் பஞ்சரத்தினபாம்பிதுதான்
சந்திரனைப்போலாகத் தளும்புதேயென்னாச்சி
சூரியனைப்போலேயல்லோ துலங்குதேயென்னாச்சி
வேரிற்பவளமது மின்னுகிறகாந்தியைப்போல்

மின்னற்கொடிபோலே விளம்புகிறதப்பாம்பு
பாம்பு-பசியாயிருக்குது பால்வார்த்துபோங்களென்றான்
பாற்குடத்தைகீழிறக்கிப் பாலமுதுவார்க்கவந்தோம்
கண்ணாலேபார்த்தாலே காண்டிப்பால்குடியாதென்றான்
அத்தனைபாலையுந்தா னப்பாம்புவுண்டுதம்மா

அல்லியரசாணி பாம்புப்பிடாரனை வரவழைத்தது.

அவ்வார்த்தைதான்கேட்டு அல்லியருமென்னசொல்வாள்
இந்தவதிசயத்தை எங்கிலும்நான்கண்டதில்லை
பாம்புகளைப்பார்க்கவேண்டும் பிடாரனையழையுமென்றாள்
அந்தகிழவனைப்போய் அழைத்தோடிவாருமென்றாள்
அவ்வார்த்தைதான்கேட்டு அலங்காரத்தாதியர்கள்
பாம்புகளையாட்டிவைத்தால் பாக்கியங்கள் தந்திடுவாள்
வேணுமென்றவுச்சிதங்கள் உத்தமியாள் தான்கொடுப்பாள்
வாருமையாவென்றுசொல்லி வருந்தினார் தாதியர்கள்
அப்போபிடாரனவன் அரிராமர்தாமெழுந்து
காவடியைத்தோளில்வைத்து கடிகிவழிநடந்தார்
கடையுங்கடைத்தெருவும் கருமாரவீதிகளும்
அங்காடிவீதிகளும் அரண்மனைத்தெருதாண்டி
அல்லியம்மாள்தன்வாச லரண்மனையிற்போய்புகுந்தார்
வாசலும்வாசலது படிபேழுந்தான் தாண்டி
சிங்காதனத்துக்கு முன்பாகவந்துநின்றார்.
உத்தமியைக்கண்டவுடன் ஒதுங்கியேதெண்டனிட்டான்
வந்துபணிந்தவரும் வணங்கியேநிற்கலுற்றார்
ஐயாபிடாரனே அப்பாம்பையாட்டுமென்றாள்
வண்ணவண்ணபாம்பெடுத்து விதவிதமாயாட்டலுற்றான்
ஆடாதகூத்துகளை யாட்டிவைத்தான்பிடாரனவன்
ஐயாகிழவனாரே அன்பானபிடாரனே நீ
வேரிற்பவளம்போலே மின்னுகுதுபெட்டியிலே
சந்திரகாசம்போலே தளும்புகுதுபெட்டியிலே
சூரியன்போலே துலங்குறதுபெட்டியிலே
என்னபாம்பிருக்கிறது எடுத்துநீயாட்டுமென்றாள்
ஆச்சியரேநீர்கேளும் அடியேனொருவார்த்தை
என்னோடேதான்பிறந்த எனக்கிளையதங்கையவள்
தங்கையவள்வளர்த்துவந்த தயவானபாம்பிதுதான்
எப்பாம்பெடுத்தாலும் யிப்பாம்பெடுக்கறியேன்
பெண்டுகளைக்கண்டாலே பிரியமுடனோடிவரும்
மார்மேலுந்தோள்மேலும் மடிமேல்புரண்டாடும்
தோளின்மேலேறுவதும் தும்பிப்பறப்பதுவும்
மார்பின்மேலேறுவதும் மடியிலிருக்குமது
முகத்தோடேமுகமணைந்து முத்தங்கொடுக்குமது

மார்பின்மேலேறியல்லோ மருவிவிளையாடும்
கீதங்கள்பாடுவதும் கொண்டாடியுக்குமது
ஆடாதகூத்தகளும் அரும்பவனியாடுவதும்
வெட்டுப்பிளகெடுத்து மெத்தெனவேவாயிலிடும்
வெற்றிலைச்சுருளெடுத்து விரும்பியதுகொடுக்கும்
பஞ்சரத்னபாம்பிதுதான் பத்தினியோநானெடுக்கேன்
உன்னையிதுகண்டாலே ஓடிவந்துமடியிலேறும்
இப்பாம்பைநானெடுக்கே னென்றானேபிடாரனுமே
ஆனால்கேளய்யாவே. அன்பானபிடாரா நீ
அப்பெரியபாம்பினது அதியத்தைபார்க்கவேணும்
சற்றேயெடுத்துவிடுஞ் சந்தேகப்படவேண்டாம்
உச்சிதங்கள்வேணதெல்லா முத்தனுக்குய ந்தருவேன்
மெத்தவருந்தினாளே மெல்லிநல்லாளல்லியரும்
அப்போபிடாரனவன் அப்பாம்பைதானெடுத்தார்
பெட்டிதிறக்கையிலே பேறானவாழ்விசயன்

அர்ச்சுனன் பாம்புருவங்கொண்டு அல்லியம்மாளை மருவியது.

அல்லிமடிமேலே அர்ச்சுனனேறினானே
மார்மேலுந்தோள்மேலும் மருவிவிளையாடுறானே
முகத்தோடேமுகமணைத்து முத்தங்கொடுக்கிறானே
போதுமையாமைத்துனரே போய்வாருஞ்சுவாமியென்றான்
மாயவரைக்கண்காட்டி வழிபிடித்துப்போங்களென்றான்
தும்பிபறக்கிறதும் சேர்ந்துவிளையாடுவதும்
கொண்டாடிப்பதுவுங் கூத்துகளாடுவதும்
வெற்றிலைபாக்கெடுத்து மெல்லியற்குக்கொடுப்பதுவும்
பார்த்துமகிழ்ந்தாளே பத்தினியாளல்லியம்மாள்
ஐயாபிடாரனே நீ அன்பானவார்த்தைகேளும்
இன்றையராத்திரிக்கு இருக்கட்டுமிப்பா ம்பு
நாளைக்குவந்துதான் வாங்கிப்போம்பாம்பையென்றாள்
அவ்வார்த்தைதான்கேட்டு அன்புடனேயேதுசொல்வான்
என்னுடையதங்கையவள் இன்பமுள்ளநாயகியாள்
பஞ்சணைமெத்தையிலே படுத்திருக்கும்போதையிலே
கூடப்படுத்துக்கொண்டு குலாவிருக்கும்பாம்பிதுதான்
பக்கத்திற்பிரிந்ததில்லை பத்தினியாள்தங்கையவள்
காணாமற்போனாலே கலங்கித்தவிப்பாளே
பாராமற்போனாலே படுக்கைபொருந்தாளே
உண்ணாள்குளியாளே வுறக்கம்வந்துதூங்காளே
அல்லவென்றுவுன்னிடத்தி லாச்சியேனான்விட்டுப்போனால்
பாம்புகரைந்துபோகும் பத்தினியேயேதுசெய்வேன்
அரைபலங்குறைந்துபோகும் அழகானவிப்பாம்பு
கரைந்துகுறைந்தாலும் கனகந்தருவேனென்றாள்

தராசுநிறையாக நிறுத்துப்போம்பாம்பையென்ருள்
அப்படியேசம்மதித்தான் ஆயன்பிடாரனவன்
எடுத்துத்தராசிலவைத்து இடைபார்த்துதந்துவிட்டான்
பாலும்பழங்களுமே பசியாமல்வையுமென்ருன்
நாளைவருகிறேனே நாயகமேபோகிறேன்யான்
பாஷையினலேயல்லோ பார்த்திபனேதுசொல்வான்
எட்டொருநாள்போனபின்பு இங்கேவாமைத்துனரே
இந்தவிசுவாசமெனக்குத்தெரியுமென்ருன்
போங்காணும்சுவாமியென்ன புகழாகதெண்டனிட்டார்
பாம்பைக்கொடுக்கல்லோ பாளைதார்போய்நடந்தார்
பாலும்பழங்களுமே பாம்புக்குவைத்தார்கள்
பார்த்திபனர்ச்சுனரும் பசியாறித்தானிருந்தார்
அந்திகாலமாச்சுதங்கே ஆதித்தன்போய்மறைந்தார்
ஆதித்தன்தான்மறை அல்லியம்மாளேதுசொல்வாள்
அந்தியனுஷ்டானம ஆனத்துமிகக்கழித்து
செபதபங்களுள்ளதெல்லாம் செய்தாளேயல்லியம்மாள்
சொக்கரைபூசைசெய்து செவிதனிலேபூச்சொருகி
போசனச்சாலையிலே புகுந்தாளேயல்லியம்மாள்
சற்கரைப்பால்போசனமும் சாதங்கறிவகையும்
உண்டுபசியாறி உத்தமியாள்கையலம்பி
பஞ்சணைமெத்தையது பள்ளியறைசோடியென்ருள்
தோழிமாரானவர்கள் சுருக்காயெழுந்திருந்து
கண்மூன்றுடையதொரு கனவயிரசகட்டிலிட்டார்
மெத்தைமடித்துயிட்டார் மேலேதலையணைபோட்டார்
காம்பரிந்தஜங்கலப்பூ கட்டிலின்மேல்சொரிந்தார்
தங்கத்தலையணையுஞ் சார்மணையுமிட்டார்கள்
ஒருகுதலையணையும் ஒய்யாரத்திண்டுவைத்தார்
அருகுதலையணையும்வைத்து அலங்காரஞ்செய்தார்கள்
அத்தர்புனுகுகளும் அள்ளித்தெளித்தார்கள்
கதம்பமுங்கஸ்தூரி கரைத்துத்தெளித்தார்கள்
சந்தனமும்பன்னீருஞ் சாதிஞரெத்திசையும்
சந்தனமும்புகைகொடுத்து சாம்பிராணிதூபமிட்டார்
குத்துவிளக்குகளைக் கொழுந்துபடவேற்றினர்கள்
மாடங்கள்தோருமங்கே மணிவிளக்குயேற்றினர்கள்
சன்னலிலேபன்னீரைச் சாதிஞரெத்திசையும்
பஞ்சணைமெத்தையண்டை பாக்குபடிகம்வைத்தார்
முத்துசுட்டசுண்ணும்பும் மோரங்கவெற்றிலையும்
ஆரங்கிபாக்குகளும் அழகுநல்லவெற்றிலையும்
காய்ச்சாக்களிப்பாக்கும் கம்மாறுவெற்றிலையும்
வாகாய்சுருள்மடித்து மாணிக்கத்தட்டில்வைத்தார்
கிண்ணியிற்பாலைவைத்து கெண்டிகையில்தீர்த்தம்வைத்தார்

சோடித்தோப்ரச்சியென்று தெண்டனிட்டார்தாதியர்கள்
பாம்பெடுத்துமடியில்வைத்து பத்தினியாள்தானடந்தாள்
பஞ்சணைமெத்தையிலே படுக்கையறைபோய்ச்சேர்ந்தார்
மாணிக்கக்கதவடைத்து வயிரத்தாள்பூட்டினாளே
அத்தண்டதாதிகளும் அங்கங்கேபள்ளிகொண்டார்
பஞ்சரத்னப்பாம்பெடுத்து பக்கத்தில்வைத்துக்கொண்டாள்
பைங்கிளியாளல்லியம்மாள் பள்ளிகொண்டாள்மலரணையில்
அப்போதருச்சுனரும் ஆயவரைத்தானினைந்து
என்சோபம்தெளியவேண்டும் ஸ்திரீராமாதயவுசெய்யும்
காமவிகாரமது களைதீரவேண்டுமென்றான்

ஸ்ரீகிருஷ்ணபகவான் மூதேவியையழைத்து அல்லியின்மேல் பிரவேசிக்கச்செய்தது.

அருச்சுனன்தன் துயரமரிந்தாரேயெம்பெருமாள்
சிதேவிமுன்பிறந்த திருவிளையாள்மூதேவி
மூதேவிநாயகியை முகில்வண்ணர்தாமழைத்து
மருடத்துரைச்சியற்கு மாறாதநித்திரையை
விடிந்துமொருசாமம் மெல்லிநித்திரைதெளியாமல்
மாறாநித்திரைகொள்ளுமென்று வரவிட்டார்மாயவரும்
வந்துநித்திரைகொண்டாள் வளப்பெரியமூதேவி
அனந்தல்தெளியாமல் அசந்துநித்திரைபோகலுற்றாள்
பாம்புவடிவைவிட்டுப் பார்த்திபனர்ச்சுனனும்
எப்போதும்போலாக இளவிசையன்வடிவுகொண்டான்
சங்கரரும்பார்வதியும் தழுவியிருந்ததுபோல்
சிவனுடனேபார்வதியும் சேர்ந்திருந்தபாவனைபோல்
தென்னகரிராமருக்குச் சீதைவந்துவாய்த்ததுபோல்
கந்தருடன்வள்ளியம்மை கைகலந்தபாவனைபோல்
சாரையும்சர்ப்பமும் சருவிமயலானதுபோல்
மானுங்கலையுமல்லோ மருவியணைந்ததுபோல்
கூடிமருவினளே குங்குமப்பூமெத்தையிலே
கண்ணாடிமேலேயல்லோ கடுகுருண்டபாவனைபோல்
மல்லிகைப்பூமேலே வண்டிருந்துவாய்த்ததுபோல்
மருவியணைந்தானே மகாவிடாய்தீர்ந்தானே
ஆறாதபோகமெல்லாம் ஆரினானர்ச்சனனும்
தீராதசோபமெல்லாம் தீர்ந்தானருச்சுனனும்
மங்கையரைப்புல்கியல்லோ மருவினனருச்சுனனும்
வெள்ளிமுளைக்கையிலே வெண்கோட்டான்கூவும்போது
பாம்புவடிவெடுத்து பக்கம்படுத்திருந்தான்
எப்போதுஞ்சர்ப்பம்போ லெழில்விசையன்வீற்றிருந்தார்
பொழுதுவிடிந்ததங்கே பொற்கொடிமார்கண்விழித்தார்
தோழியர்தாதிவர்கள் திடுக்கிட்டெழுந்தார்கள்
அல்லிப்பெருமாளும் அசந்துநித்திரைபோகலுற்றாள்

கொம்பனைமார்தோழியர்கள் கூவியெழுப்பினார்கள்
தட்டியெழுப்பினார்கள் தாமக்குழலாளை
பொட்டெனக்கண்விழித்து பொற்கொடியாள்தானெழுந்து
அலைகுலையத்தலைகுலைய ஆடைகலைந்திருக்க
கதவைத்திறந்தாளே கட்டழகியல்லியம்மாள்
பாங்கியர்கள்சூழவேதான் பவளமேனைவந்துவிட்டாள்
அல்லிப்பெருமாளை ஆரணங்கைத்தான்பார்த்து
உற்றுற்றுப்பார்த்தவளும் உத்தமியைக்கேட்கலுற்றாள்
ஒருநாளுமில்லாத உச்சிதங்கள்காணுதம்மா
வாரிமுடித்ததலை மயிருங்கலைந்ததென்ன
கோதிமுடித்ததலை கூந்தல்கலைந்ததென்ன
மஞ்சளழிந்ததென்ன மார்பழிந்துபோனதென்ன
பொட்டுக்கலைந்ததென்ன பூவழிந்துபோனதென்ன
கண்ணிலிட்டமைகளெல்லாங் கரையவந்தகாரணமேன்
கோவைப்பழம்போலே குமரியின்செவ்விதழும்
குமரியின்செவ்விதழும் கோதியிருப்பானேன்
படுக்கைகலைவானேன் பஞ்சணைகலைவானேன்
காம்பரிந்தஜெங்கலப்பூ கசங்கிநசுங்குவானேன்
மங்கையரேயுந்தனுக்கு வாட்டம்வந்தவாறேது
அல்லிப்பெருமாளு மாரணங்கேதுசொல்வாள்
பிடாரனவன்சொன்னவார்த்தை பொய்யல்லதாதியரே
மணிதருநடன்கூடவே மருவினபாம்பிதுகாண்
பஞ்சணைமெத்தையிலே பக்கத்திலேவைத்திருந்தேன்
ஏதாய்விளையாடிற்றோ இளங்கொடியேயென்தோழி
என்று முத்தின்மிதியடியைத் தொட்டுநடந்தசைந்தாள்
பூங்காவனத்திற்போய்ப் புனல்கங்கைநீராடி
பாளைகொண்டுபல்விளக்கி ஓலைகொண்டுநாவழித்து
கன்னியிளங்கொடியாள் கமலமுகஞ்சுத்திசெய்து
வாயோடுபல்லும் மதிமுகஞ்சுத்திசெய்து
சிவனுக்கருளென்று திருநீற்றுக்காப்பணிந்தாள்
சிங்காரமெத்தையின்மேல் தேன்மொழியாள்வந்தமர்ந்தாள்
ஆரடிதாதியரே அலங்காரத்தோழியரே
பாம்புதனக்குப்பாலும் பழங்களுமவையுமென்றாள்
கொண்டுவந்துவைத்தார்கள் குடம்நிறைந்தபாலதனை
பஞ்சரத்னப்பாம்பிதுதான் பாலைக்குடித்ததுவே
அப்போதுபெருமாளும் ஆய்ரவர்தாமெழுந்து
பிடாரனைப்போலாக பெருமாளும்வந்துவிட்டார்
வாசலுள்ளவாசலது படியேழுந்தான்தாண்டி
அல்லியம்மாள்முன்னேவந்து அடிபணிந்துதெண்டனிட்டான்
ஆச்சியரேசீர்கேளும் அடியேனுறுவார்த்தை

இப்பாம்புயில்லாம லென்னுடையதங்கையவள்
அழுதகண்ணுஞ்சிந்தையுமா யழுதழுதுண்ணமாட்டாமல்
கண்ணீரைவிட்டவளுவும் கலங்கியழுதாளே
கேளாதவார்த்தையெல்லாம் கேட்டேனம்மாவுன்னாலே
உன்னாலேபட்டகளை வுத்தரியேபோதுமம்மா
என்னுடையபாம்பதுதா னெத்தனைகரைந்துபோச்சோ
எவ்வளவுதேய்ந்ததோ வெடுத்துவாவிருப்போமென்றார்
கொண்டுவந்துநிறுத்தார்கள் கொப்பெனவேதிராசிதன்னில்
பாரமிகக்குறைந்து பாம்புதட்டெழும்பியது
அரைவாசிகுறைந்ததம்மா அழகானபாம்பதுதான்
இன்னம்ரண்டுநாளிருந்தால் இங்கேதான்சாகுமம்மா
அறியாமல்விட்டுப்போனே னனர்த்தம்வரலாச்சுதம்மா
கொஞ்சமிடைக்குதான் கொண்டுவாருமரத்தினத்தை
என்றுசொல்லத்தான்கேட்டு யிளங்கொடியாளல்லியம்மாள்
வச்சிரமாணிக்கமும் வைத்திடைகட்டிதந்தாள்
பாம்பெடுத்துபெட்டியிலே பாரளந்தார்வைத்துக்கொண்டார்

ஸ்ரீகிருஷ்ணபகவான் அருச்சுனகியபாம்பையெடுத்துப்போனது.

போகிறேனுச்சியென்று போய்நடந்தான்பிடாரனவன்
கோட்டைகடந்தவரும் கொத்தளமுந்தான்தாண்டி
தெத்துத்தெருகடந்து தேரோடும்வீதிவிட்டு
ஆரண்ணியந்தன்னிலே யரிராயர்வந்துவிட்டார்
ஆணலழகுமன்ன னர்ச்சுனனேதுசொல்வான்
வாழ்வாகியல்லியரை மாலையிடுவதெப்போ
தாலிதரிப்பதெப்போ சுவாமிபெருமாளே
கட்டினவிருதறுத்துக் கலியாணஞ்செய்வதப்போ
என்றுதெளியுமோ வெக்காலஞ்சென்றிடுமோ
அல்லிமேற்சிந்தையா யலைகிறானர்ச்சுனனும்

ஸ்ரீகிருஷ்ணபகவான் மறுபடியும் மிருகங்களை யுண்டுபண்ணினது.

அன்றுபோய்மற்றுநா ளரிராமரேதுசெய்தார்
மாயமிருகங்களை வனத்திலேயுண்டுபண்ணூர்
காட்டானைசிங்கங்களும் கரடிபுலியாளிகளும்
ஏனங்கடம்பைகளும் வெருகைமக்குரங்குகளும்
புள்ளிமான்முள்ளம்பன்றி புனுகுபூனைமுயல்களுடன்
மயில்குயிலன்னமும் வண்ணவண்ணப்பட்சிகளும்
அந்தமானமிருகமெல்லா மரிராமருண்டுபண்ணூர்
மதுரைக்குடிபடைகள் வனத்தில்வர அஞ்சுகிறார்
கண்டவரையெதிர்க்கிறது காட்டானைசிங்கந்தான்
ஒடிப்பதுங்கியல்லோ ஒளிப்பார்சனங்களெல்லாம்
அழுதகண்ணுஞ்சிந்தையுமா யல்லியண்டையோடிவந்தார்
அழுதமுகத்துடனே அல்லியெதிரிம்வந்தார்
[illegible]

என்னகுறைசெய்தோமோ யியலானமிருகமம்மா
காட்டானைகரடிபுலி கண்டுமிரட்டுதம்மா
எந்தவிதம்நாம்பிழைத்து யிடுக்கமில்லா திருப்போம்
மிருந்தபன்றிமானினமும் விம்மிதாத்துதம்மா
மறுதேசம்போய்நாங்கள் வகையாய்ப்பிழைப்போமம்மா
மதுரையிலுள்ளசெனம் வலசைகுடிபோறோமென்றார்
அவ்வார்த்தைதான்கேட் டலங்காரத்தாதியர்கள்
அல்லியம்மாள்தன்னுடனே அறிக்கையிட்டார்தாதியர்கள்
மருடத்துரைச்சியவள் வார்த்தையதுகேட்டு
வேட்டைகாரப்பெண்களை விரைந்தோடியழையுமென்றாள்
குறவர்பெண்கள்மறவர்பெண்கள் கூட்டிவாதாதியென்றாள்
வில்லியப்பெண்களைநீ வேட்டைக்கழையுமென்றாள்
கேட்டந்ததாதியர்கள் சொப்பெனவேவோடிவந்தார்
வேட்டைகாரப்பெண்களைத்தா னோடியழைத்தார்கள்
அப்போதுவில்லியர் மெல்லியரவர்வாறார்கள்
காற்செருப்புந்தோல்குல்லாவும் கைதனில்சில்லாக்கோலும்
இரட்டைகுண்டுதுப்பாக்கி யிருதோளில்வைத்தார்கள்
பன்றிகுத்தும்வல்லயங்கள் பாங்குகளுந்தானெடுத்தார்
மான்வலையுமுயல்வலையும் வகையுடனேதானெடுத்தார்
உண்டுவில்லுஞ்சுண்டுவில்லுஞ் சிங்காணிவில்லெடுத்தார்
வேட்டைநாயுஞ்சங்கிலியும் விருதுகட்டிவாரார்கள்
வெள்ளித்தமுக்கடித்து வெண்கலக்கொம்பூதிவாரார்
பொன்னின்தமுக்கடித்துப் புறப்பட்டார்பெண்களவர்
வேட்டைநாயுஞ்சங்கிலியும் விருதுகட்டிவாறார்கள்
கரிநாயுஞ்செந்நாயும் கடுகெனவேகூட்டிவந்தார்
அல்லியம்மாள்வீதியிலே அனைவோரும்வந்துநின்றார்

அல்லியம்மாள் மறுபடியும் வேட்டைக்குப்போகிறது.

ஐயாயிரந்தோழியர்க ளடங்கலும்பயணமென்றார்
பல்லக்கைஜோடியென்றாள் பத்தினியாளல்லியரும்
கனகதண்டிசொப்பனிட்டு கன்னியர்கள்முன்னேவைத்தார்
ஆயிரம்பெண்களவ ரழகுள்ளகுதிரையேறி
பாண்டிப்பெருமாளும் பல்லக்கிலேறினாளே
பாராசாரிபுரவியது பஞ்சகல்யாணியது
விடுகுதிரைஜோடித்து மெல்லியர்கள்கொண்டுவந்தார்
ஏறினாள்கனகதண்டி யெடுத்தார்கொடிவிருது
ஆனையின்மேல்பேரிகைதா னடிபடுதேதமுகுமென்று
வெண்கலபேரிகைகள் விருதுமுழங்குதங்கே
மேளமுழங்குறது மும்மண்டலமதிர
மதுரைத்தெருக்களெல்லா மண்தூளெழும்புறது
மதுரைத்தெருதாண்டி வந்துவிட்டார்கானகத்தில்
காடுசெடிபுகுந்து கனவேட்டையாடுகிறார்

கனகதண்டிகைவிட்டிறங்கி சட்டழகியல்லியம்மாள்
ஏறினாள்புரவியின்மே லெடுத்தாளே அம்புவில்லை
தட்டினாள்புரவிதன்னைச் சாரிவிட்டாள்கானகத்தில்
வளைத்தாளேவில்லதனை வாங்கிவிட்டாளஸ்திரத்தை
இழுத்துவிட்டாள்பாணந்தன்னை யிடியகிரிநடுங்க
தொட்டாளேவில்லதனைச் சொரிந்துவிட்டாள்பாணங்களை
காட்டானைசிங்கங்களைக் கண்டுஅறுத்தலுற்றாள்
புலிகள்கரடிகளைப் போடுகிறாள்பாணத்தாலே
கலைமானும்பன்றிகளும் காண்டாமிருகங்களை
மட்டில்லாமிருகங்களை வதைபண்ணிபோட்டிடுவாள்
புள்ளிமான்றன்னைக்கண்டு போட்டாளேபாணத்தாலே
மதயானைமிருகங்களை அதமாக்கிப்போடுகிறாள்
அனேகமிருகங்களை யதமாக்கிப்போடுகிறாள்
மாயன்பெருமாளும் மலைஜோகியேதுசெய்தார்
அந்தவனந்தனிலே அதிகஜலமில்லாமல்
தண்ணீர்கிடையாமல் சுவாமியவருண்டுபண்ணார்
அல்லிப்பெருமாட்கு அதிகதாகமுண்டுபண்ணார்
தண்ணீர்களையாலே தாகவிடாயானாளே
நெஞ்சுலர்ந்துபோகிறதே நினைவுதப்பிப்போகிறதே
உண்ணாக்குதொண்டையது வுலர்ந்துமேபோகிறதே
காதையடைக்குறதே களையாய்வருகிறதே
தண்ணீர்களையாலே தான்விழுந்தாள்பூமியிலே

அர்ச்சுனன் காசிப்பிராமணனாகவந்து காசிதீர்த்தங்கொடுத்தது.

காண்டீபனருச்சுனனுங் கட்டழகரப்பொழுது
காசிப்பிராமணன்போல் கடுகவடிவெடுத்தார்
தொண்ணூறும்பத்துஞ்சென்ற துவண்டகிழவனைப்போல்
நாணற்பூப்போலேயல்லோ நரைத்தக்கிழவனானார்
காசிநல்லதீர்த்தமது காவடியைதோளில்வைத்து
மூர்ச்சையாய்விழுந்தாளே மொய்குழலாளல்லியம்மாள்
அந்தவழியாக அருச்சுனரும்வந்தாரே
பிராமணனைக்கண்டார்கள் பொற்கொடிமார்தோழியர்கள்
ஐயாபெரியவரே அழகானவேதியரே
மெத்தப்பெரியவரே மேனாட்டுவேதியரே
பாருலகையாளுமொரு பத்தினியாளல்லியம்மாள்
தண்ணீர்களையாகத் தவித்துவிழுந்தாளே
தாகவிடாய்மிகுந்து தளர்ந்தாள்காண்ராஜகன்னி
காதையடைத்தவளுங் களைத்துவிழுந்தாளே
காசிதீர்த்தம்வாருமையா களைகள்தெளியவேணும்
புண்ணியமாய்ப்போகுதையா பிராமணரேதீர்த்தங்கொடும்
என்றதுதான்கேட்டு யிறக்கினான்காவடியை

இறந்தானேகாவடியைத் தீர்த்தகும்பிதானெடுத்து
மாதுகளைதெளிய வார்க்கலுற்றான தீர்த்தமதை
தாகந்தெளிவதற் குத் தண்ணீருந்தான்கொண்டு
கடுக அந்தவர்ச்சுனனுங் காவடியைத்தோளில்வைத்து
காற்றாய்ப்பறந்துமல்லோ கரியமால்பக்கம்வந்தான்
மாயன்பெருமாளே வார்த்தையொன்றுநீர்கேளும்
களைபட்டிருந்தாளே கன்னியிளங்கொடியாள்
தண்ணீரையான்கொடுத்துத் தாகவிடாய்தீர்த்துவந்தேன்
மாலைதரிப்பதெப்போ மணமுகூர்த்தஞ்செய்வதெப்போ
தாலிதரிப்பதெப்போ சுவாமிபெருமாளே
என்றுதெளிந்திடுமோ யெக்காலஞ்செல்லுமோதான்
அல்லியின்மேற்சிந்தைகொண்டு அலைகிறானர்ச்சுனனும்
மாதுமேற்சிந்தையாய் மயங்குகிறானர்ச்சுனனும்
மாயன்பெருமாளு மலோசனைசெய்தார்

ஸ்ரீகிருஷ்ணபகவானும் அருச்சுனனும் மாறுவேடங்கொண்டு தண்ணீர்ப்பந்தல் வைத்தது.

அத்வானகானகத்தி லாரண்ணியந்தன்னிலேதான்
தண்ணீர்ப்பந்தல்போடுகிறார் சுவாமிபெருமாளும்
வெந்நீர்குளிர்ந்தநீர் மோர்குளம்வைத்தார்கள்
கொள்ளும்தண்ணிவைத்தார் குளிர்ந்தசலம்வைத்தார்கள்
தண்ணீர்ப்பந்தல்வைத்தபின்பு சுவாமியென்னவடிவெடுத்தார்
தெய்வப்பிராமணத்தி சிறுபெண்வடிவெடுத்தார்
காய்க்கும்பிராயமவள் கன்னிகட்டும்பாவனையாம்
பூர்க்கும்பிராயமவள் பிஞ்சுவிடுங்காலமவள்
கொஞ்சம்வயதல்லவோ கொழுந்தெல்லாம்பிஞ்சுகண்டீர்
சோலையிலேசந்திரனைச் சுழற்றிப்பிடித்ததுபோல்
ஈழத்துதச்சனவனெழுதிவரவிட்டானோ
மேல்நாட்டுதச்சனவன் விளைந்துவரவிட்டானோ
வேரிற்பவளமது மின்னுகிறகாந்தியைப்போல்
மின்னற்கொடிபோல் மேகவர்ணர்வடிவெடுத்தார்
அழகுதுலங்குவதும் ஆனந்தங்கொஞ்சுவதும்
வடிவுதுலங்குவதும் மாணிக்கங்கொஞ்சுவதும்
இந்தவிதமாக வெம்பெருமாள்வடிவெடுத்தார்
அருச்சுனராசதுரை அவரென்னவடிவெடுத்தார்
தொண்ணூறும்பத்துஞ்சென்ற துவண்டகிழவனைப்போல்
பண்ணைப்பூப்போலாக பழுத்தகிழவனானார்
நாணற்பூப்போலாக நரைத்தகிழவனானார்
தோலும்நரம்புகளும் தொங்குதுகிழவனுக்கு
ஒருகண்ணுகொள்ளைக்கண் ணொருபக்கம்நொண்டிக்கால்
ஒருகைமொண்டிக்கை யொருபக்கஞ்சாய்ந்தவுடல்

இந்தவிதமாக இளவிசையன்வடிவெடுத்தான்
தண்ணிபந்தலுக்குள்ளாக தானிருந்தாரிருவர்களும்
பிடிசொம்புகைபிடித்து பிராமணத்திமுன்னிருந்தாள்
அல்லிப்பெருமாளும் அவளுடையசேனைகளும்
அத்துவானகானகத்தில் அந்தவழிவாறூர்கள்
மிகவேட்டையாடியல்லோ வெளிப்பட்டுவாரார்கள்
தண்ணிபந்தல்வழியாகத் தையலர்கள்வாறூர்கள்
கண்டாளே தண்ணிபந்தல் கன்னியுள்ளேவந்தாளாம்
வந்துஇரங்கினுள் வர்னலட்சம்சேனையெல்லாம்
அத்தண்டசேனைகளும்அனைவோரும்வந்தமர்ந்தார்
தாகக்களைகளுமே சகலரும்தான்தெளிந்தார்
அல்லிபெருமாட்கு ஆசனங்கள்போட்டார்கள்
ஆசனத்தின்மேலாக அமர்ந்தாளேயல்லியம்மாள்
பிராமணக்கன்னியென்றும் பெண்ணரசைத்தான்பார்த்து
ஆர்காணுங்கன்னியரே அலங்காரப்பெண்மயிலே
எந்தவூரெந்ததேசம் எங்கிருந்துவந்தீர்காண்
அத்வானகானகத்தில் ஆர்வைத்தார்தண்ணிபந்தல்
இந்தவனத்திலே எவர்வைத்தார்தண்ணிபந்தல்
பிராமணப்பெண்ணழகி பொற்கொடியாளேதசொல்வாள்
என்பாவம்பெரிதுகண்டீர் பத்தினியேதுசெய்வேன்
தெய்வலோகம்வாழுகின்ற தெய்வப்பிராமணத்தி
நான்வாழும்பெருமையது மகிழ்ச்சிகள்மெத்தவுண்டு
ஆண்டிபரதேசி அமுதுக்குவந்தார்கள்
அள்ளிப்பதரைபிட்டு அநியாயம்பண்ணதோஷம்
சாணிதிரட்டிவந்து சாணுங்கள்போட்டதோஷம்
ஆதிசிவன்சந்நிதிமுன் அழகாய்வளர்ந்ததுகாண்
மகாதேவர்சந்நிதிமுன் மலையாய்வளர்ந்ததுகாண்
சாணிமலையதுதான் சதிராய்வளர்ந்ததுகாண்
பிட்டுதிருநாளுக்குப் புறப்பட்டார்சொக்கலிங்கம்
முப்பத்துமுக்கோடி முனிவர்களும்தேவர்களும்
வானவருமிந்திரரு மகாதேவர்தான்முதலாய்
கைலாசஞ்சுற்றியல்லோ வருகிறவேளையிலே
சாணிமலையதனைச் சங்கரனுர்கண்டுவிட்டார்
என்னுலேவந்ததொரு இடருகளைத்தாமறிந்தார்
பொல்லாதசாபமிட்டுப் பூமியிலேபோங்களென்றூர்
சாபந்தொலைவதற்குத் தண்ணீர்பந்தல்வைத்தேனம்மா
அண்ணனில்லைதம்பியில்லை அனுசரிக்கயாருமில்லை
தாய்வீட்டுசெனங்களில்லை தாபரிக்கயாருமில்லை
மாமிவீட்டுசெனங்களில்லை மற்றுமனிதரில்லை
தாண்டிநுழைவதற்கு தாழ்வாரமில்லையம்மா

எட்டிநுழைவதற்கு எரவாணந்தானுமில்லை
வாவென்றழைப்பதற்கு மனிதரொருவரில்லை
தோலும்நரம்புகளுந் தொங்குகிறகிழவனுக்கு
மாலுங்கிழவனுக்கு மாலையிட்டேனென்னுச்சி
இந்தக்கிழவனுந்தா னிறந்துமடியவில்லை
பாவந்தொலையவில்லை பத்தினியேயென்னசெய்வேன்
ஏவல்பலசெய்து எங்கேயாகிலும்பிழைப்பேன்
அவ்வார்த்தைதான்கேட்டு அல்லியம்மாளேதுசொல்வாள்
எந்தனுக்குத்தோழியாக என்னருகில்நீயிருந்தால்
சகலமானபாக்கியமுஞ் சம்பத்துந்தருவேனென்றாள்
கூடவருவாயே கொம்பனையேயென்றழைப்பாள்
எப்படிவருவேனம்மா யிளங்கொடியேயுன்பிறகே
இலக்குமிநோம்பதுதான் நாளைவருகுதம்மா
நோம்புமுடிக்கவேணும் நீதியுள்ளதாயாரே
என்றைக்குமுன்னடிமை யாகவிருக்குறேன்காண்
மருடத்துரைச்சியவள் மாதருமேதுசொல்வாள்
எந்தனரண்மனையி லுந்தனிடநோம்புதனை
குறையாமற்செய்துவைப்பேன் கொம்பனையேஎன்தோழி
வேணுமென்றசாமான்கள் மெல்லியரேயான்றருவேன்
வாரும்மாவென்றுசொல்லி வருந்தியழைக்கலுற்றாள்
இந்தமுடவனைநான் எங்குபோட்டுவருவேனம்மா
டோலிலேபோட்டவரைத் தூக்கிவரச்சொல்லுமென்றாள்
பல்லக்கிலேறினாள் பத்தினியாளல்லியம்மாள்
கிழவனைதூக்கிவந்து டோலிலேபோட்டார்கள்
தோழிமாருள்ளவர்கள் தூக்கியெடுத்தார்கள்
காடுசெடிதாண்டி கடுகிவருகிறார்கள்
ஆறுசுனைதாண்டி அதிகவனந்தாண்டி
மதுராபுரிபட்டணத்தில் மகிழ்ச்சியுடன்வாரார்கள்
தெத்துத்தெருதாண்டி தேரோடும்வீதிவிட்டு
மாளிகைவாசலிலே வந்தாளேயல்லியம்மாள்
கனகதண்டிவிட்டிறங்கி கன்னியரும்போகலுற்றாள்
இந்தகிழவனையு மிவ்வாசலில்வையுமென்றாள்
ஐந்தாங்கட்டுவாசலிலே ஆரியனைவையுமென்றாள்
அப்போபிராமணத்தி அரிராமரேதுசொல்வார்
தனியாகவிட்டுப்போக தறிக்குமோவென்மனது
முடவனைநான்விட்டுவிட முறையல்லவெந்தனுக்கு
அவராலேஎன்னகுற்றம் ஆச்சிவாட்டுமென்றாள்
அல்லிப்பெருமாளும் அரண்மனையிற்போய்புகுந்தாள்
முத்துசெம்பொன்வாசலது மூன்றுகட்டுந்தான்தாண்டி
ஆசாரவாசலது அரண்மனையிற்போய்ச்சேர்ந்தாள்
அந்தியனுஷ்டான மனைத்துமேதான்கழித்து

போசனச்சாலையிலே புகுந்தாளேமாதுகன்னி
பிராமணகன்னியர்க்கும் அவளுடையபுருஷனுக்கும்
அமுதுபடியரிசி ஆனதெல்லாங்கொடுங்களென்றாள்
அந்திகாலமாச்சுதங்கே ஆதித்தன்போய்மறைந்தான்
போசனங்களுண்டனர்கள் பொற்கொடிமார்பள்ளிகொண்டார்
மற்றநாட்காலையிலே கதிரோனும்வந்துதித்தான்
திங்கள்கிழமையது தசமிபுனர்பூசம்
அன்றையதினமதிலே அரிராமரேதுசொல்வார்
அல்லிப்பெருமாளே அரசிதுரைநாயகமே
விரதமுடிக்கவேண்டும் என்னேற்புதீரவேண்டும்
சாலுங்கரகமது தையலரேவேணுமென்றாள்
வேணுமென்றசாமானை வாங்கிக்கொண்டாள்பிராமணத்தி
தேவையுள்ளவஸ்துவெல்லாஞ் சேகரித்துக்கொண்டவளும்

அர்ச்சுனன் அல்லியம்மாளைச் சூதாகத்தாலிகட்டி
விருதறுத்துப்போனது.

பந்தக்கால்நட்டுமல்லோ பந்தலலங்கரித்தார்
பச்சோலைபந்தலது பாங்காயலங்கரித்தார்
நிலத்தைமெழுகியல்லோ மாவாலேகோலமிட்டார்
சாலுங்கரகமுமே சதுராய்நிறுத்திவைத்தார்
பாலிகைவைத்துமல்லோ பாங்காய்முளைதெளித்தார்
அரசாணிகால்நாட்டி அம்மிகுழவிவைத்தார்
அந்திகாலமாச்சுதங்கே ஆதித்தன்போய்மறைந்தான்
ஆயிரம்பெருவிளக்கை அழகாகயேற்றிவைத்தார்
குத்துவிளக்குங் குடவிளக்குமேத்திவைத்தார்
மாயன்பெருமாளும் மலைராமரேதுசெய்தார்
அத்தண்டதோழிகட்கும் அல்லிபெருமாட்கும்
மயக்கத்தையுண்டுபண்ணார் மாயன்பெருமாளும்
மூதேவிதனையழைத்து முகத்தில்நிறையுமென்றார்
வந்துநிறைந்தாளே வாடையிட்டாள்மூதேவி
சொரணைதப்பிதோழியர்கள் சோர்ந்துபடுத்தார்கள்
அப்போபெருமாளும் அர்ச்சுனனைதானழைத்து
ஓமம்வளர்த்துமென்றார் குலகளந்தமாயவரும்
வேதங்கள்தப்பாமலே வேள்விவளர்த்தினார்கள்
ஆயன்பெருமாளும் அருளாளரேதுசெய்தார்
தேவேந்திரனையல்லோ சிந்தையிலேதானினைந்து
அர்ச்சுனராசனிவன் அல்லியரைமணம்பொருந்த
மணமுகூர்த்தஞ்செய்வதற்கு மங்கிலியம்வேண்டுமையா
யானைத்தலைபோல அழகானமங்கிலியம்
தும்பிக்கைபோலே திருமங்கிலியச்சரடு
மாயத்திருநீரும் வரவனுப்பவேண்டுமென்று
தோத்திரஞ்செய்தாரே ஸ்ரீராமரெம்பெருமாள்

இந்திரருமப்போது இருதயத்திற்ருனறிந்து
உள்ளமகிழ்ந்தமல்லோ உம்பர்பிராணிந்திரரும்
யானைத்தலேபோலே அழகானமங்கிலியம்
தும்பிக்கைபோலே திருமங்கிலியச்சரடும்
மாயத்திருநீ றும் மகிழ்ச்சியுடன் தானெடுத்து
தூதன்கையிற்கொடுத்து ஸ்ரீராமர்கைகொடென்றுர்
வாங்கியந்ததூதனவன் மாயனுர்கைகொடுத்தார்
ஆயரவர்வாங்கியல்லோ அர்ச்சுனனுர்கைகொடுத்தார்
லக்கினமுந்தப்பாமல் நல்விசையன்கைகொடுத்தார்
தாராபலன்பார்த்து தரியுமென்றுர்மங்கிலியம்
மாயரிடதன்பாதம் வணங்கியந்தஅர்ச்சுனனும்
ஈஸ்வரரைப்பார்வதியை இருதயத்தில்தானினைந்து
பிட்டுக்குமண்சுமந்த புளிதரைத்தானினைத்து
தேவேந்திரபகவானை சிந்தையிலேதானினைந்து
அல்லியென்னும்பெண்ணரசி ஆரணங்குதன்கழுத்தில்
சிவசிவாவென்றுசொல்லித் தேர்விசையன்கட்டலுற்றுன்
அரகராவென்றுசொல்லி அழுத்திஞன்மங்கிலியம்
பிரமமுடிமூன்றுமுடி போட்டானேஅர்ச்சுனனும்
ஈஸ்வரனுர்வெண்ணீற்றை இட்டானேநெற்றியிலே
மாயன்பெருமாளும் வரமென்னதான்கொடுத்தார்
இந்த-மங்கிலியந்தன்னையிவள் வாள்கொண்டறுத்தாலும்
கோடாலியாலேயிவள் கொத்திப்பிளந்தாலும்
இரம்பத்தைப்பூட்டியிவள் நலமாயறுத்தாலும்
கத்திகொண்டறுத்தாலும் கட்டழகிமங்கிலியம்
அறுமலிருக்கவென்று அரிருமர்வரமளித்தார்
அருச்சுனரைக்கூட்டிக்கொண்டு அரியாமர்தானடந்தார்
பத்துசுற்றுகோட்டைகளும் பார்த்தீபன்தாண்டிவந்து
மஞ்சட்கொடிகளுமே மகுடரத்னதோரணமும்
பொம்மைவிருதுகளும் பூத்ததலேகளுமே
அல்லிக்கொடிவிருதும் அறுத்தெரிந்தானர்ச்சுனனும்
முச்சுகொட்டாகொடிவிருதை முனேவீரன்தானறுத்தான்

ஸ்ரீகிருஷ்ணபகவான் அர்ச்சுனனும் தருமாபுரம்வந்து சேர்ந்தது.

வீராதிவீமன்தம்பி விசையன்வெளியானுன்
மாயனுந்தானுமாக வழிநடந்துபோனுர்கள்
மதுராபுரிகடந்து வனமாய்வனங்கடந்து
காடுசெடிதாண்டி கரியமலேதான்கடந்தார்
ஆறுசுனேதாண்டி அதிகவனந்தாண்டி
பொல்லாதவனந்தாண்டி போய்சேர்ந்தார்தருமாபுரம்
மாளிகைவாசலிலே வந்துசேர்ந்தாரிருவருமாய்
பொற்கோழிகூவியல்லோ பொழுதுவிடிந்ததுகாண்
சுக்கலாதேவிபுத்திரன் சூரியனுமவந்துதித்தான்

அருணனுடதேரேறி ஆதித்தன்வந்துதித்தான்
தோழியருந்தாதியர்கள் தூக்கம்விழித்தார்கள்
அத்தண்டதோழியர்கள் அனைவருங்கண்முழித்தார்
பாங்கியிலும்நல்லதொரு பவளசேனையேதுசொல்வாள்
அல்லிபெருமாளின் அருகாகவந்தார்கள்
தட்டியெழுப்பினர்கள் தாமக்குழலாளை
பொட்டெனக்கண்விழித்தாள் பொற்கொடியாளானவளும்

அல்லியம்மாள் மங்கிலியங்கண்டுபரதவிக்கிறது.

கழுத்திலேமங்கிலியம் கண்டாளேயல்லியம்மாள்
அத்தண்டதோழிகளும் அனைவோரும்வந்தார்கள்
மூடாப்போலேதாலியது முன்மார்பில்தொங்குதங்கே
கண்டுவிழித்தாள் கட்டழகியல்லியரும்
பார்த்துப்பதங்குலைந்தாள் பத்தினியாளல்லியம்மாள்
இங்கிருந்தபாப்பாத்தி எங்கேபோனாள்பாருமென்றாள்
தேடிப்பிடித்துநீங்கள் சீக்கிரமாய்வாருமென்றாள்
எங்கெங்குந்தேடி யினியவிடமாராய்ந்தார்
தேடியலைந்தார்கள் திசையெட்டிற்கண்டதில்லை
எண்ணுதுமெண்ணியவ ளிடிவிழுந்தாளள்ளியம்மாள்
கத்தியெடுங்களடி கடுகஅறுக்கவென்றாள்
கத்திகொண்டறுத்தாலும் கத்திமடியுதங்கே
இரம்பங்கொண்டருத்தாலும் நாலுதுண்டாய்ப்போகுதங்கே
வாள்கொண்டறுத்தாலும் வாளுமடியுதங்கே
மெத்தவிசாரமிட்டு மெல்லிபுலம்பலுற்றாள்
கட்டினவிருதறுத்துக் கழுத்தில்தாலிகட்டினதார்
ஆரென்றறிவேண்டி ஆரணங்கேபவளசேனை
எவனென்றுயானறிவேன் ஏலப்பசுங்கிளியே
ஆறுயிரம்பாண்டியரை யழைத்தோடிவாங்களென்றாள்
பொன்னின்மலைநாடாளும் பேரெடுத்தஅண்ணனையும்
அழைத்தோடிவாருமென்று அனுப்பினாள்தாதியரை
ஓட்டம்பெருநடையாய் ஓடிவந்தார்தாதியர்கள்
ஆறுயிரம்பாண்டியர்க்கும் அண்ணருக்குஞ்சேதிசொன்னாள்
மாதுகன்னியல்லியரை மங்கிலியஞ்சூட்டினார்கள்
கட்டினவிருதுகளைக்கடுகவறுத்தார்கள்
அல்லிப்பெருமாளும் அழைத்தோடிவாருமென்றாள்
வாருங்களையாவென்று வணங்கினார்தாதியர்கள்
அந்தவுரைகேட்டு ஆறுயிரம்பாண்டியர்கள்
அலைகுலையதலைகுலைய அரைப்புடைவைநழுவிவிழ
அல்லியுடவாசலுக்கு அனைவோரும்வந்தார்கள்
மகளாரைக்கண்டல்லவோ வயிறெரிந்துதானழுதார்

அவனைத்துரத்திவிட்டேன் அழைத்துபோனாள்சீக்கிரமாய்
பண்டாரம்போலொருவன் படமெழுதிவந்தானையா
என்னைப்போல்படமெழுதி இங்கேமடலூர்ந்தான்
சொல்லாதவார்த்தைசொல்லிச் சோளிக்குசேலைகேட்டான்
கொடுத்தாலேயல்லாது போகேனென்றான்பாவியவன்
பாம்புதனைவிட்டேனே பாவியைக்கொல்வதற்கு
யானைமதமேற்றி அவனையேகொல்லவிட்டேன்
ஏதாலுஞ்சாகவில்லை இருந்தான்மகா பாவி
மற்றொருநாள்பிடாரனவன் வகையாகபாம்பெடுத்து
ஆடாதபாம்புகளை ஆடவைத்தான்வாசலிலே
மற்றொருநாள்வனத்தில் நான்வேட்டைபோனேனே
தண்ணீர்களையாலே தாகவிடாய்ப்பட்டுவிட்டேன்
காசிபிராமணன்போற் காசிதீர்த்தம்வார்த்ததுண்டு
வனவேட்டையாடியபின் மாளிகைக்குவரும்போது
தண்ணீர்பந்தல்போட்டிருந்தாள் தையல்பிராமணத்தி
பரதேசியென்றழுதாள் பரிதாபப்பட்டேனையா
மாளிகைவாசலுக்கு மயிலணையைக்கூட்டிவைத்தேன்
இலட்சுமிநோன்பென்று நடத்தினாள்பாவியவள்
கலியாணச்சடங்குபோலே கலசம்நிறுத்தினாள்
வேள்விவளர்த்தினாள் வேதங்களோதினாள்
பார்த்துமிருந்தேனே பண்ணினநோன்பதனை
கண்டுமிருந்தேனே கண்ணுறங்கிதூங்கிவிட்டேன்
பார்ப்பானைப்போலிருந்து பாவியவன்கட்டிவிட்டான்
கழுத்திலேதாலிகட்டிக் கனவிருதறுத்துவிட்டான்
ஆரென்றறிவேன் ஐயாவேசொல்லுமென்றாள்
ஆறுயிரவர்களும் ஆலோசனையேதுசொல்வார்
தேவனேயென்றாலே ஜெயிக்கமுடியாது
மண்டலத்துராசரென்றால் மாதேயறிந்திடலாம்
சீமைசீமைராசருக்குத் திருமுகமெழுதமென்றார்
சொக்கலிங்கர்தன்னுடைய சொர்னமயச்சந்நதியில்
கோயிலிற்கெதிராக கொப்பறையில்நெய்காச்சி
சத்தியங்கள்பண்ணச்சொன்னால் சாடையறிந்திடலாம்
மண்டலத்துக்கெழுதும் மதியுள்ளமந்திரியை
இராசசமர்த்தெழுதும் நன்மையுள்ளமந்திரியை
ஊர்கணக்கபிள்ளைதனை உத்தமரைதானழைத்து

அரசர்களுக்கு திருமுகமெழுதி அனுப்புகிறது

சீமைசீமைராசருக்கு திருமுகமெழுதுமென்றார்
என்னென்றழைல எழுதுவதுஎன்றாளே
அயோத்தியகோசலமுஞ் சலகர்ணபுரிதனிலே
நாரியபப்பளமும் அச்சிசழந்தொழுமார்க்கம்

அங்கதேசம்கலிங்கதேசம் அவந்திஅளகாபுரி
முய்யாசிமன்னுரு கோவைமலையாளம்
அஸ்தினபுரச்சந்திரநாடு அழகுள்ளஇந்திரநாடு
துலுக்காணம்பைகோவை தெலுங்குதேசந்தருமாபுரி
குருநாடுசிந்துதேசம் பங்காளங்காம்பில்யதேசம்
விசயபுரிவீமாபுரி நேபாளம்யாழ்ப்பாணம்
மராட்டியம்சோமாபுரி மச்சதேசங்குடகுநாடு
சீனங்கிருஞ்சுமார்க்கம் வைந்தாசிங்காளமும்
ஆனைகுந்திபட்டணமும் அழகானஒட்டியமும்
ஐம்பத்தாறுதேசத்து அரசர்களானவர்கள்
நம்பிக்கைசெய்து நலமுடனேபோவதற்கு
அல்லிமிகநினைத்து அரியகணக்கர்களை
மெல்லியாளல்லியம்மாள் மிக மேதானழைத்து
தேசதேசராசருக்குந் திருமுகமெழுதுமென்றார்
அப்படியேகணக்கர்க வன்புடனெழுதுகிறார்
மதுராபுரியாளுகிற வாழ்வரசியல்லியம்மாள்
சொக்கரருளாலே சுந்தரியாள்தான்பிறந்தாள்
அங்கயற்கண்ணருளாலே அல்லியருந்தான்பிறந்தாள்
ஏழுபிராயத்திலே எதிர்த்துவந்தநின்முகனை
வெட்டித்தலைதுணித்து வீரபட்டங்கட்டினவள்
பன்னிரண்டுபிராயமட்டும் பாருலகையாண்டகன்னி
விருதுகொடிகட்டியல்லோ வேணமட்டுமாண்டவள்காண்
ஆறுயிரம்பாண்டியற்கு அரியதுரைமகளாம்
அல்லியம்மாள்தன்கழுத்தில் ஆரோதெரியாது
தேன்மொழியாள்தன்கழுத்தில் திருட்டுதாலிகட்டினார்காண்
கழுத்திலேதாலிகட்டி கட்டினவிருதறுத்தார்
இன்னவனென்றுசொல்லி எனக்குத்தெரியாது
சீமையிலுள்ளதொரு துரைகள்மேலெந்தனுக்கு
ஐயுறவுதோன்றியது அரசமன்னராசர்களே
சீமையாளும்ராசர்கள் துரைகள்வரவேண்டும்
எல்லையரசாளும் இராசாக்களிங்குவந்து
கழுத்திலேதாலியது கட்டவில்லையென்றுசொல்லி
நாங்கள்சொன்னநம்பிக்கையைச் செய்துகொடுக்கவேண்டும்
ஓலையைத்தள்ளிவிட்டு வாராதிருந்தோர்களை
கோட்டையிடித்திடுவேன் கொத்தளங்கள்பேர்த்திடுவேன்
அரண்மனையைநானிடித்து ஆமணக்குவிதைத்திடுவேன்
ஆண்சிறையும்பெண்சிறையு மடங்கலுநான்பிடிப்பேன்
வெட்டித்தலையறுப்பேன் வீரசொர்க்கஞ்சேர்த்திடுவேன்
ஓலைகண்டநாழிகைக்கு வந்திடுங்களென்றுசொல்லி
எழுதுமென்றாளோலையது இளங்கொடியாளல்லியம்மாள்
அவ்வார்த்தைதான்கேட்டார் அன்பானமந்திரிகள்

சேமக்குருத்தோலை சீக்கிரமாய்த்தானெடுத்து
ஈழப்பனையோலை யிருபக்கங்காம்பரிந்து
தாளிப்பனையோலை தலைப்பக்கங்காம்பரிந்து
வாரியவோலையிலே வக்கணைகள் தானெழுதி
செந்திரிக்கம்போட்டுமல்லோ சீக்காமுத்திரைவைத்து
அல்லியம்மாள்முன்புவைத்து அடிபணிந்துதெண்டனிட்டு
ஆடாகிட்டிமல்ல ராயிரம்பேரெழுந்திருங்கள்
சீமையுள்ளராசருக்குச் சுருளோலைகொண்டுபோங்கள்
மல்லரெழுந்திருந்து வாங்கினாரோலைதன்னை
காலால்நடவாமற் காற்றாய்ப்பறந்தார்கள்
மதுரையைத்தாண்டியவர் வனங்கள்புகுந்தார்கள்
காடுசெடிதாண்டிக் கரியமலைதான்தாண்டி
சீமைசீமைராசருக்குந் திருமுகம்தந்தார்கள்
ஓலைச்சுருள்விரித்தா ருலகாளும்ராசாக்கள்
அதிலிருந்தமர்மமெல்லாம் அனைத்துமறிந்துகொண்டார்
நாமும்வருமோமென்றார் இராசாத்திசொற்படிக்கே
நம்பிக்கைதான்கொடுத்து நலமுடனேவருவோமென்றார்
தர்மாபுரமாளும் தருமருக்கோலைதந்தார்
சந்தனவடிவழகர் தருமரவரேதுசொல்வார்
சீர்கணக்கரையழைத்து சுருளோலைபடியுமென்றார்
அப்போதுகணக்கப்பிள்ளை யன்பாய்ச்சுருள்விரித்து
படித்தார்களோலைதனைப் பார்வேந்தர்கேட்டுவிட்டார்
சந்தனவடிவழகர் தருமராதுகேட்டுவிட்டார்
நாமும்வருகுறோம் ராசாத்திகொலுவுக்கென்றார்
மாயன்பெருமாட்கு வந்ததுசுருளோலை
ஓலையதுபடித்து உலகளந்தமாயவரும்
நாமும் வருகிறோம் நடவுங்கள்தூதரெல்லாம்
சீமையிலுள்ளதொரு துரைகளுக்குச்சொல்லிவந்தார்
காடுசெடிதாண்டிக் கடுகிவந்தார்தூதுவர்கள்
அல்லியம்மாள்முன்புவந்து அடிவணங்கிதெண்டனிட்டார்
சீமைசீமைராசருக்குச் சொல்லிவந்தோமாச்சியென்றார்
சீமைகளிலுள்ள துரைகளெல்லாம்வாரார்கள்
மண்டலத்துராசாக்கள் மகுடமன்னர்வாரார்கள்
திக்கெட்டையாண்டதொரு துரைராசர்வாரார்கள்
சந்தனவடிவழகர் தருமரவரேதுசொல்வார்
மாயன்பெருமாளை வரவழைத்துவாருமென்றார்
ஓட்டம்நடையுமாக ஓடிவந்தார்தூதுவர்கள்
மாயன்பெருமாட்கு வந்துமேதெண்டனிட்டார்
சந்தனவடிவழகர் தருமரும்மைக்காணவென்று
கூட்டிவரச்சொன்னார்காண் கோபாலசுவாமியென்றார்
அப்போதுபெருமாளும் அக்கணமேதானெழுந்து

தாரகனையெச்சரித்து சுவாமிரதம்வேணுமென்றார்
கொண்டுவந்தான் தாரகனும் கொப்பெனவேசித்ரரதம்
ஏறினார்தேர்மேலே யெம்பெருமாளாண்டவரும்
காடுசெடிதாண்டிக் கடுகவந்தார்தர்மாபுரம்
கோபுரவாசலண்டை கோபாலர்தேரிறங்கி
மாயன்பெருமாளும் மாளிகையில்வந்துவிட்டார்
தரணியளந்தமாயன் தருமருக்குதெண்டனிட்டார்
சிங்காதனம்போட்டு ஸ்ரீராமர்வீற்றிருந்தார்
இட்டசி மாசனத்தி லெம்பெருமாள்வீற்றிருந்தார்
என்னையழைத்ததுதா னேதுகருமமென்றார்
தாரார்புகழுடைய தருமரவரேதுசொல்வார்
மதுராபுரியாளுகின்ற வாழ்வரசியல்லியற்கு
காணாமல்மங்கிலியங் கட்டியேபோனார்களாம்
திக்கெட்டையாண்டநல்ல துரைகள்மகாராசருக்கு
சுருளோலையெழுதியல்லோ அனுப்பினார்தேசத்துக்கு
நம்பிக்கைசெய்துபோக நமக்கோலைவந்ததையா
அர்ச்சுனனும்நீருமாக ஆரணியப்போனீர்களே
காசியாத்திரைபோனபோது களவுசெய்துவந்ததுண்டோ
தறுதலைப்பட்டிமகன் தாழ்வுசெய்துவந்ததுண்டோ
குற்றங்களுண்டானால் கோபாலாசொல்லுமென்றார்
அர்ச்சுனன்றன்னாலே ஆரணியப்போனீர்களே
நான்வொக்கநடந்தேனே வொருபாவங்கண்டதில்லை
கூடநடந்தேனே குற்றங்கள்நானறியேன்
அழும்புகளுண்டானா லருண்மைந்தாசொல்லேனே
எந்தனுக்குவோலையது யெழுதிவரவிட்டாள்காண்
நானுமிதோபோறே னம்மதுரைசீமைக்கு
வீட்டுக்கொருவரல்லோ வேந்தர்கள்போகவேணும்
ஐவர்தன்னிலொருவ ராராகிலும்வாருமென்றார்
ஆரையழைத்துப்போறீ ரரிராமாசொல்லுமென்றார்
வெற்றிமதயானை வீமனையழைத்துப்போறேன்
நம்பிக்கைதந்துவிட்டு நாங்களும்வந்திடுவோம்
போய்வாருமென்றுசொல்லிப் புண்ணியருஞ்செலவுதந்தார்

ஸ்ரீகிருஷ்ணசுவாமியும் வீமனும்மதுரைக்குப்போகுதல்.

வெற்றிமதயானை வீமனெழுந்திருந்து
சந்திரகாந்திகட்டிகட்டி தாமரைப்பூசங்குவிட்டார்
அம்புவில்லுங்கைபிடித்து அம்புறாத்தூணிமுதுகணிந்து
தேரின்மேலேறினானே திக்குவிசயங்கொண்டவீமன்
மாயன்பெருமாளு மச்சுரதமேறினாரே
இருவருமாகவல்லோ ரதமேறிவாரார்கள்
தருமாபுரந்தாண்டி வீமாபுரந்தாண்டி
காடுசெடிதாண்டி கரியமலைதான்தாண்டி

ஆறுசுனைதாண்டி யதிகவனந்தாண்டி
வனமாய்வனந்தாண்டி வந்துவிட்டார்தென்மதுரை
மண்டலத்துராசரெல்லாம் வந்தார்மணிபுறத்தில்
முடியோடேமுடிவணங்க முடிமன்னர்வந்துவிட்டார்
வச்சிரகிரீடங்கள் மணிமுடிநெருங்குதங்கே
எல்லையரசாண்டராச ரெல்லோரும்வந்தமர்ந்தார்
ஆறுயிரவருடன் அல்லியருந்தானறிந்தார்
மகுடத்துரச்சியவள் வாய்திறந்தேதுசொல்வாள்
மாணிக்கச்சொக்கலிங்கம் மகாதேவர்கோவிலண்டை
கோபுரவாசலண்டை கொப்பரைவையுமென்றாள்
ஆயிரங்கலநெய்விட்டு அக்கினியைமூட்டுமென்றாள்
பாதாளகுழிதரித்துப் பாங்கானபள்ளம்வெட்டி
இருப்புநல்லகொப்பரையை யெடுத்துவந்துவைத்தார்கள்
ஆயிரங்கலநெய்வார்த்து அக்கினியைமூட்டினார்கள்
நெய்யைக்கொதிக்கவைத்து நேரிழைக்குசேதிசொன்னார்
பதிங்கலநெல்லெடுத்துப் பாங்கியரேவையுமென்றாள்
அம்பாரம்போடுமென்று ளாண்டவனார்சந்நதிமுன்
சம்பாநெல்லும்காருநெல்லும் அம்பாரம்போட்டார்கள்
மகுடத்துரச்சியற்கு மணியாசனம்போட்டார்கள்
ஆறுயிரவர்களும் அல்லியருந்தானெழுந்து
ஆலயந்தன்னருகே வந்தார்களெல்லவரும்
கோபுரவாசலண்டை கொப்பெனவேவந்தார்கள்
மகுடத்துரச்சியும் வந்தமர்ந்தாளாசனத்தில்
வந்தவந்தராசரெல்லாம் வீற்றிருந்தாரெத்திசையும்
அல்லிப்பெருமாளும் ஆரணங்குயேதுசொல்வாள்
கேளுங்கள்ராசர்களே கீர்த்திபெற்றமன்னர்களே
ஆலவாய்சொக்கலிங்கம் ஐயர்தன்கிருபையாலும்
அங்கையர்கண்ணம்மை ஆச்சிசெயலாலும்
அல்லியிலையிலே யாரணங்குபெண்பிறந்தேன்
ஒருவர்வயற்றிற்பிறந்ததில்லை வன்கொடுமைசெய்ததில்லை
குடலிற்பிறந்ததில்லை குலக்கொடுமைசெய்ததில்லை
ஓடுகிறதண்ணீரில் உள்ளேமணற்சேருமுண்டு
அடிக்கிறகாற்றதனில் அலைகாற்றுறும்புமுண்டு
ஆலகாலமுண்டவர்க்கு கண்டங்கறுப்புமுண்டு
குண்டுமணிக்காணுலும் கொஞ்சங்கறுப்புமுண்டு
என்மயிரேகறுப்பொழிய மற்றுங்கருப்புமில்லை
புருவங்கறுப்பொழியப் பின்னைக்கறுப்புமில்லை
மாசிலாப்பெண்றெந்தேன் மீனாட்சிதன்செயலால்
ஏழுபிராயத்திலே எதிர்த்துவந்தநின்முகனை
வெட்டித்தலைதுணித்து வீரபட்டங்கட்டிக்கொண்டேன்
பனிரெண்டுபிராயமட்டும் பாருலகையாளுகிறேன்

வாடியென்றழைத்தவர்கள் வையகத்திலாருமில்லை
வம்புதும்புஞ்சொன்னவர்கள் மண்டலத்திலாருமில்லை
யாரோதெரியாது அனியாயம்பண்ணுரே
காணுமல்மங்கிலியங் கட்டினுனென்கழுத்தில்
இன்னுனினியானென் றெனக்குத்தெரியாது
ஆகையினுலேதா னழைப்பித்தேனுங்களைநான்
நானறியேனென்று சொல்லி நம்பிக்கைசெய்திடுங்கள்
கொதிக்கின்றநெய்தனிலே கொப்பெனவேகையிடுங்கள்
அம்பாரம்போட்டநெல்லை யள்ளிசிமிட்டிடுங்கள்
நெல்லைசிமிட்டாமற் போனவனைவிடுவதில்லை
கையதுகொப்பளிக்க கண்டதேயுண்டானல்
வெட்டித்தலைபிளப்பேன் வீரசொர்க்கஞ்சேர்த்துவைப்பேன்
நாகலோகம்போனுலும் நானவனைவிடுவதில்லை
ஆகாயம்போனுலும் அவனைநான்விடுவதில்லை
வானத்திற்போனுலும் வலைகட்டிநான்பிடிப்பேன்
பாதாளம்போனுலும் பேதிப்பேன்பைங்கொடிநான்
விட்டுவிடுவேனென்று சற்றுமனமெண்ணவேண்டாம்
சத்தியத்தைசெய்துநீங்கள் தயவுடனேபோய்விடுங்கள்
அவ்வார்த்தைதான்கேட்டு அனேகங்கோடிராசரெல்லாம்
எழுந்தார்கள்சபைநடுவே யேதுசொல்வாராசாக்கள்
அன்னமடமாதே யாரணங்குநாயகமே
பாருலகையாண்டதொரு பாண்டியர்கள்சீர்மகளே
செங்கோல்முடிசூட்டித் துரைத்தனங்கள்செய்பவளே
உன் ஊரறியோம்பேரறியோம் ஒருசெய்கைநாமறியோம்
மங்கிலியந்தொட்டுமல்லோ தரித்தவகையறியோம்
அறிந்தோமேயாமாகி லழும்புவருமெங்களுக்கு
அக்கினிக்கெதிராக அனைவரும்வந்துநின்றுர்
மகுடமுடிராசாக்கள் வந்தவர்கள்தாமெழுந்து
நெய்க்கிடாரந்தன்னருசே அக்கினிக்குமுன்னுலே
இருகையைக்கட்டியவ ரேதுசொல்வார்மன்னவர்கள்
ஐயன்பிடாரிகளே ஆகாயதுர்க்கைகளே
அந்தரதேவதையே சந்திரசூரியரே
இந்திரப்பிர்ம்மாவே காந்தர்வரிஷிகளே
ஆலவாய்ச்சொக்கலிங்க மங்கையற்கண்ணம்மையரே
மாணிக்கச்சொக்கலிங்க மகாதேவரீஸ்வரரே
ஏதுமறியோமென்று இருகையைத்தானெடுத்து
மாதருக்குமங்கிலியம் தரித்தவகையறியோம்
ஏதுமறியோமென் றிருகையைத்தானெடுத்து
காய்கின்றநெய்தனிலே கைவைத்துவந்தார்கள்
அம்பாரநெல்லையெல்லா மள்ளிசிமிட்டினுர்கள்
ஒவ்வொருமன்னர்களாய் சோதனைதந்தார்கள்

மாயன்பெருமாளும் வந்துசத்தியம்பண்ணுரே
வெற்றிமதயானை வீமனெழுந்திருந்து
நெய்கிடாரந்தன்னருகே நேராய்வருகையிலே
அக்கினியாய்வீசியது அருகில்வரவொட்டாமல்
வெந்துகருகிறது வீமனதுதேகமெல்லாம்
மாயன்பெருமாளே மைத்துனரேதிருட்டுகிருஷ்ணு
முன்னிட்டகாலையவன் பின்னிட்டுவாங்கிக்கொண்டான்
என்னபுதுமையிது எம்பெருமாளென்றுகேட்டான்
அருகில்வரவொண்ணுமல் செந்தணலாய்வீசுதுகாண்
சேரவேவொண்ணுமல் செந்தணலாய்வீசுதுகாண்
ஒருபாவம்நானறியேன் ஏதுவினையென்றறியேன்
அக்கினிபகவானை ஆயரும்கைதொழுது
எம்பெருமாள்மாயவரும் பாரைநினைக்கலுற்ருர்
ஒருநன்றிசெய்தவரை யுள்ளத்தில்வைக்கவேண்டும்
அக்கினிபகவானே அர்ச்சுனனுருமக்கு
எத்தனைசகாயஞ்செய்தா ரெல்லாமறந்தீரே
மாளுகின்றஉன்னையந்த வாழ்விசையன்காத்தானே
அந்தசகாயமல்லோ அறியாமலேன்மறந்தீர்
பெண்டுடையமன்னனவன் பெண்ணரசைமாலையிட்டான்
உந்தனுக்குகோபமென்ன வுருத்துவானேன்செந்தணலாய்
கோபத்தைவையாதே குளிர்ந்தசலம்போலிருங்காண்
என்றுதொழுதாரே யெம்பெருமாள்மாயவரும்
ஆயரதுசொற்கேட்டு அக்கினிதேவரவர்
குளிர்ந்தஜலம்போலாக கொப்பெனவேநின்றுவிட்டார்
வாருங்காண்வீமசேனு வார்த்தைகேளுமைத்துனரே
மாதுக்குமங்கிலியம் மதவீமா தரித்ததுண்டா
செய்ததேயுண்டானல் சேரவரவொட்டாது
கலகங்களுண்டானல் கட்டழகா தூரநில்லு
மனதிற்கபடுகளும் வஞ்சனைகளில்லையென்ருல்
இராசாக்கள்போலேநீ நம்பிக்கைசெய்யுமென்ருன்

வீமராசன் நெய்குடித்துவிட்டுக் கொப்பறையையுருட்டினது.

மறுபடியும்வீமராசன் மன்னவனுந்தான்வருவான்
கொதிக்கிறநெய்யருகே கொப்பெனவேவந்துநின்ருன்
மணக்கின்றநெய்தன்னை மதவீமன்பார்த்துவிட்டான்
தூக்கினன்கொப்பறையைத் துரிதமாய்நெய்யையெல்லாம்
வெற்றிமதயானை வீமனவன்வாயில்வைத்து
நெட்டிக்குடித்துவிட்டு நேராகவிட்டெறிந்து
தருமர்தனக்கிளைய மதவீமன்வந்துவிட்டான்
மாயனுடனுக வழிபிடித்துப்போய்நடந்தார்
மதுரைத்தெருதாண்டி வனமாய்வனங்கடந்து
காடுசெடிதாண்டி கரியலைதான்தாண்டி

ஆறுசுனை தாண்டி யதிகவனந்தான் தாண்டி
தர்மாபுரிபட்டணத்தில் தார்வேந்தர்வந்துவிட்டார்
அல்லிப்பெருமாளு மாரணங்குயேதுசொல்வாள்
இத்தனைபேர்தனிலே யெவனைத்திருடனென்பேன்
அநேகங்கோடிராசர்சளி லாரைத்திருடனென்பேன்
சத்தியங்கள்செய்தாரே தாணியுள்ளராசரெல்லாம்
நெய்யிலேகைதோய்த்து நெல்லைகிமிட்டிவிட்டார்
சோதனைகாட்டியல்லோ துரைகளெல்லாம்போகையிலே
அனைவோரைப்போலாக அவனுங்கைதோய்க்கவேண்டும்
கொதிக்கின்றநெய்தனைக் குடிக்கவிதிமுறையோ
திருடருக்குதெய்வமுண்டோ சோரருக்குநேசமுண்டோ
வானஞ்சுழல்வதற்கு மருந்துண்டவன்கையில்
பூமிசுழல்வதற்கு பொடியுண்டவன்கையில்
வண்ணமருந்தெடுத்துத் தண்ணீரிலுறைக்கலையோ
வம்புதும்பும்பேசியவன் வாய்ப்பழுதுசொல்லலையோ
ஆற்றில்புரட்டியல்லோ அவனைநான்கொல்லுமென்றேன்
அவனுடையமந்திரத்தா லாற்றைத்தடைகட்டலையோ
தூக்கிலேபோட்டவனைத் தோழியரேகொல்லுமென்றேன்
தாதியைக்கொன்றுவிட்டான் தந்திரவித்தையினால்
காளியம்மன்கோவிலுக்கு காவுகொடுங்களென்றேன்
வடவாசல்செல்லியரை வாய்த்தடைகட்டிவிட்டான்
பண்டாரம்போலேவந்து படம்படித்தான்வாசலிலே
வம்பாடிவார்த்தைகளும் வாய்ப்பழுதுஞ்சொன்னனே
அரவத்தைவிட்டுநா னண்டியைக்கொல்லுமென்றேன்
பாம்பைதடைகட்டினனே பாதகனவனும்
யானையைமதமேற்றி ஆண்டியைக்கொல்லுமென்றேன்
யானைதடைகட்டினனே யரும்பாவியானவனும்
வேதியனைப்போலாக வேள்விவளர்த்தினனே
மறையவனைப்போலவந்து மங்கிலியஞ்சூட்டிவிட்டான்
நெய்யைக்குடிக்கவவன் வகையறியமாட்டானே
மலையாளவித்தைகளும் மந்திரமுங்கற்றபாவி
எந்தவூராஜாவோ எனக்கறியசொல்லுமென்றாள்
தர்மாபுரமாளும் தருமர்தம்பிவீமனென்றார்
நெய்யைக்குடித்தவனும் கிகரில்லாவீமனென்றார்
அவ்வார்த்தைதான்கேட் டல்லிப்பெருமாளும்
எட்டிப்பழம்போலே இருகண்ணுந்தான்சிவந்து
உருக்கியசெம்பொன் னுதிரம்போல்கண்சிவந்து
தர்மாபுரமுள்ளதெல்லாம் தவிடுபொடியாக்கி
தங்கமதில்கோபுரத்தை தரையோடேசாய்த்திடுவேன்
ஆமணக்கும்பருத்தியுமா யடங்கவிதைத்திடுவேன்
பயணம்பயணமென்று பயணபேரிபோடுமென்றாள்

வெட்டியானை தானழைத்து வீரமுரசறையுமென்றாள்
ஆயிரம்பாண்டியர்கள் அடங்கலும்பயணமென்றாள்
இன்றுவெளிகூடார மியலுடனேபோடுமென்றாள்
சண்டாளவைநாட்டுமென்றாள் தமுரையடியுமென்றாள்
அப்போதுசாம்புவனும் யானையேறிமாலைசூடி
அடித்தான்பறையோசை அம்மதுரைதானதிர
மதுரைப்படைகளெல்லாம் வாருங்களென்றுசொல்லி
ஆயுதங்கட்டியல்லோ அணிவோரும்வாருமென்று

அல்லியரசானி பஞ்சபாண்டவர்பேரில் சண்டைக்குவருகிறது.

மதுரைபடைகளும் மகாஜெனங்களுள்ளவரும்
எண்ணுதஆயுதத்தை எடுத்தரையிற்கட்டிக்கொண்டார்
அமரதருஞ்சமரதரும் அஸ்திரரானவரும்
கலிங்கர்தெலுங்கர்களும் கன்னடயரானவரும்
ஈழத்துவங்கணரும் இளநாட்டுச்சோனகரும்
ஆரியருமாரியரும் அணிமலைத்துநாடார்களும்
உடையவருஞ்சூதகரு மொட்டியரும்பார்ப்பாரும்
சிட்டிமனனர்தேசமன்னர் உரைமன்னர்போர்மன்னர்
குறவர்மறவர்களும் குச்சிலியருள்ளவரும்
வன்னியர்துலுக்கர்களும் மாரட்டியருள்ளவரும்
வேடரும்வில்லியரும் வேணஜனமுள்ளவரும்
ஆயுதங்கள்கட்டியல்லோ அநேகசனம்வந்தார்கள்
பட்டயஞ்சூரிகளும் பாரியவில்சமுதாடும்
நிமையில்சுடும்குண்டுகளும் நேரிசாமாம்பெரியகத்தி
சூலிசமுஞ்சூலிசமுங்குண்டு துப்பாக்கிகளும்
மண்வெட்டிகோடாலி வல்லயமிருப்புலக்கை
வாளுகளும்வேலுகளும் வளைதடி சக்கரமும்
கண்டகோடாலிகளும் கவண்டுக்கல்குண்டுவில்லும்
சிங்காணிபூச்சிவில்லும் சேனவிதஆயுதமும்
இரம்பமும்பாசங்களும் நாலெட்டுவாயுதமும்
எண்ணுதஆயுதத்தை எடுத்தரையிற்கட்டினார்
சட்டைதமான்வச்சிரகபாய் தரித்தார்களெல்லவரும்
சண்டைக்குமுஸ்தீபாய்ச் சமர்த்தரெல்லாம்வருகிறார்
வந்துநிறைந்தார்கள் வளம்பெரியசேனையெல்லாம்
யானைகளோஆறுலட்சம் அசுவங்களேழுலட்சம்
ஒட்டகமோபத்துலட்சம் ஒன்றாகக்கூடினார்கள்
கார்மேகம்போலாகக் கருத்தானைகூட்டம்வரும்
செவ்வானம்போலாகச் செவந்தபுரவிகளும்
வந்துநிறைந்தார்கள் வாழ்வரசியல்லியண்டை
பொன்னின்மலைநாடாளும் பேரெடுத்தஅண்ணவை
அண்ணவைதானழைத்து ஆளுமென்றாள்போனமதுரை
வென்றுஜெயித்துநான் விருதுகட்டிவருமளவும்
செயித்துவருமளவும் தென்மதுரையாளுமென்றாள்

முத்துப்படித்துறையும் மூனவீரர்பட்டுறையும்
யானைப்படுத்துறையு மடங்கலும்பதனமென்றாள்
பவளம்படுத்துறையும் பட்டணமும்பத்திரங்கள்
கப்பற்படுத்துறையுங் கடற்சோங்கும்பத்திரங்காண்
ஜெயித்துவருமளவும் சீர்மதுரையாளுமென்றாள்
பயணம்பயணமென்று பயணபேரியடியுமென்றாள்
அம்பெடுத்துவில்லெடுத்து அம்புறாத்தூணிமுதுகணிந்து
எல்லாரும்பயணமென்று ஏறினார்தேர்மேலே
வானத்துமேகம்போல் மணிரதங்கள்வருகிறது
ஆயிரந்தேறும் அணியணியாய்வருகிறது
சொக்கலிங்கந்துணையென்று தேரைநடத்தினார்கள்
அச்சுகிறுகிறென்ன யானைநெடுந்தேரசைய
வண்டில்கிருச்சிட மதயானைகோஷ்டமிட
குதிரையனுமானிக்கக் கோடிமன்னர்சத்தமிட
வெய்யலுக்கெடுத்தார்கள் வெள்ளைநல்லகூடாரம்
கானலுக்கெடுத்தார்கள் கறுப்புநல்லகூடாரம்
கறுப்புநிஜான்செகப்புநிஜான் கலந்துபறக்குதுபார்
அல்லிக்கொடிவிருது அலைகிறதுதோள்மேலே
மஞ்சட்கொடிபறக்க மகரதோரணமசைய
வருகிறதேமூலபலம் மண்ணிலிடங்கொள்ளாமல்
ஆற்றுமணல்போலே யனேகங்சோடிசேனைகளும்
மேகம்புரண்டாற்போல் வேணசனங்கள்வரும்
காட்டுக்களாபூவுங் காளான்முளைத்தாப்போல்
சுற்றிக்குடைபிடித்தார் சூரியன்தோற்றாமல்
பக்கங்குடைபிடித்தார் பகவானைக்காணாமல்
செந்தூளெழும்பினதே சூரியனைக்கப்பிற்றங்கே
அடிபடுதேபேரிகை எங்கராந்தானதிர
யானையின்மேல்பேரிகைகள் குதிரையின்மேல்டங்காவும்
ஒட்டையின்மேல்நகபத்தும் ஓசையெழும்பினதே
வெண்கலபேரியது விருதுமுழங்கிறதே
பாஞ்சசன்னியம்தேவதத்தம் பலவிருதுதான்முழங்க
சச்சரிகைவீணைகளும் தாக்கிமுரசறைய
ஒற்றுவாசல்சங்கமது ஊதுகிறாருலகதிர
மதுராபுரியைவிட்டு வளநாட்டிற்போகலுற்றார்
காடுசெடிதாண்டி காரியமலைதான்தாண்டி
ஆறுசுனைதாண்டி அதிகவனந்தாண்டி
வேங்கையடர்ந்தவனம் வெண்களாப்பூத்தவனம்
அண்டரறியாத இருண்டவனந்தேடி
தருமாபுரிபட்டணத்தை தானடுத்தாளல்லியம்மாள்
பட்டணத்தைச்சுற்றிக்கொண்டு பாளையஞ்சூழ்ந்தாளே
பஞ்சவர்னகூடாரம் பலதிசையும்போட்டார்கள்

இலட்சணைபோட்டாளே இராசாத்தியல்லியம்மாள்
ஐண்டாவைநட்டார்கள் தமுறடித்தார்பாளையத்தில்
அடிபடுதோரயபேரி அடிவானத்திடிபோலே
கோடைகாலத்திடிபோலே குமுறுதோரயபேரி
செவ்வானத்திடிபோலே சேறமுழங்கிறதே
சத்தத்தொனியதுதான் தர்மரவர்கேட்டுவிட்டார்
ஊரிலுள்ளசனங்களெல்லாம் ஓடிவந்துபுலம்புகிறார்
சந்தனவடிவழகர் தருமலிங்கமகாராசர்
வெற்றிமதயானை வீமனைத்தானழைத்தார்
ஆணலழகுமன்ன னருச்சுனரைத்தானழைத்தார்
சகுலசகாதேவர் ராசர்களைத்தானழைத்தார்
மாயன்பெருமாளை மனதிலேதானினைந்தார்
அடியளந்தமாயவரே ஆதிமூலம்வாருமென்றார்
வாருமென்றபோதே வந்தாரேயெம்பெருமாள்
சந்தனவடிவழகர் தருமருக்குச்சரணஞ்செய்தார்
கூடச்சரணஞ்செய்தார் கோபாலர்மாயவரும்
என்னையழைத்ததுதானேது தருமமென்றார்.
பட்டணத்தைச்சுத்தியல்லோ பாளையங்கள்வந்ததுவே
கோட்டையைச்சுற்றியல்லோ முத்திரைபோட்டார்கள்
சண்டைபண்ணவாருமென்று தமுருமடித்தார்கள்
எந்தவூர்ராசாவோ ஏதுமறியேனே
ஆளோடேவிட்டுநீங்க ளறிந்துவரச்சொல்லுமென்றார்
அர்க்காறொருவனைத்தா னனுப்பினார்மந்திரியை
வந்தவராரென்று வார்த்தையறியுமென்றார்
ஒற்றுளொருவனவன் ஓடினான்மந்திரியும்
பாண்டியர்களெதிரில்வந்து பாங்குடனேதெண்டனிட்டு
எந்தவூராசரையா எதற்காகவந்தீர்கள்
சண்டைபண்ணவந்தொரு வயணமென்னராசர்களே
சொல்லுங்களையாவென்று தெண்டனிட்டார்வந்தவர்கள்
மந்திரியுங்கேட்கையிலே மகாராஜரேதுசொல்வார்
மதுராபுரியாளும் வாள்வரசியல்லியற்கு
காணுமல்மங்கிலியம் கட்டினாரவள்கழுத்தில்
பொய்சத்தியம்பண்ணியல்லோ புகழ்வீமன்வந்துவிட்டான்
ஆகையினாற்சண்டைசெய்ய அநேகதளம்கூட்டிவந்தோம்
சண்டைபண்ணிஜெலிக்கச்சொல்லும சாமர்த்தியராஜர்களை
வந்தாலேயாச்சுது வாராமலிருந்தாக்கால்
நாளை-கோட்டையிடித்திடுவோம் கொத்தளங்கள்பேர்த்திடுவோம்
தங்கமதில்கோபுரத்தை தரையோடேசேர்த்திடுவோம்
ஆமணக்கும்பருத்திகளும் யடாவிரைத்திடுவோம்
ஆண்சிறையும்பெண்சிறையு மடங்கலும்பிடித்திடுவோம்
கடுகவரச்சொல்லும் கட்டழகராசர்களை

அவ்வார்த்தைதான்கேட்டு அழகான தூதுவர்கள்
சந்தனவடிவழகர் தர்மரண்டைவந்துவிட்டார்
வணங்கிநமஸ்கரித்து மந்திரியுமேதுசொல்வார்
மதுராபுரியாளும் வாழ்வரசிகன்னியற்கு
காணாமல்மங்கிலியம் கட்டினாராமவள்கழுத்தில்
பொய்சத்தியம்பண்ணியல்லோ வந்தாரும்புண்ணியரும்
ஆகையினாலேதா னல்லிதளங்கூட்டிவந்தாள்
சண்டைக்குவந்தாலே அல்லாதுராசாவே
கோட்டையிடிப்பேனென்றாள் கொம்மைப்பறிப்பேனென்றாள்
சண்டைக்குவரச்சொன்னாள் தருமலிங்கராசாவே
என்றுசரணமிட்டா னியலான தூதுவனும்
தக்கப்புகழுடைய தருமரதுகேட்டு
மாயன்பெருமாளின் மதிமுகத்தைத்தான்பார்த்து
தையலிளங்கொடிக்கு சத்தியஞ்செய்யவென்று
தென்மதுரைபோனீர்களே செய்தியென்னசொல்லுமென்றார்
அங்கேநடந்தவொரு அதிசயத்தைசொல்லுமென்றார்
அருண்மைந்தர் தருமருக் கரிராமரேதுசொல்வார்
மண்டலத்துராசாக்கள் வந்துசத்தியம்பண்ணார்கள்
கொதிக்கின்றநெய்தனிலே கொப்பெனவேகைதுவைத்தார்
வெற்றிமதயானை வீமனவனேதுசெய்தான்
சத்தியங்கள்செய்யாமல் தாமந்தவாழ்மார்பன்
கொதிக்கின்றநெய்யதனைக் கொப்பரையோடெடுத்து
நெய்யைக்குடித்துவிட்டு கொப்பறையையுருட்டிவிட்டான்
மதபட்டவீமன்செய்த வல்லமையினாலிப்பொழுது
சண்டைக்குவந்தாளே சாமார்த்தியமுள்ளகன்னி
சண்டைபண்ணவந்தவளைச் சற்றும்விடலாமா
சண்டைகளைச்செய்யவேணுஞ் சமர்த்தரியவேண்டுமென்றார்
வந்தசண்டைவிடலாமோ வளம்பெரியதர்மரேசொல்
பின்னுக்கிடைந்தாலே விடுவாளோபெண்ணரசி
வென்றுசெயிக்கவேண்டும் வீரபட்டஞ்சூட்டவேண்டும்
அவ்வார்த்தைதான்கேட் டருண்மைந்தரேதுசொல்வார்
ஆரையனுப்புவோம் அமரதுசெய்யவென்று
எவரையனுப்புவோ மெம்பெருமாள்சொல்லுமென்றார்
நகுலசகாதேவ ராசாக்கள் தங்களையும்
வெற்றிமதயானை வீமனையனுப்புமென்றார்
மூவருடனாக வெகுசனங்கூட்டுமென்றார்
நானுங்கூடப்போறேன் ராஜாவேயஞ்சாதே
வென்றுயெஜயித்துநான் வெளிப்பட்டுவருவேனென்றார்
மனதுக்கிசைந்தபடி மாயவரேசெய்யுமென்றார்

பஞ்சபாண்டவர் அல்லியோடு சண்டைக்குவருகிறது.

தர்மரதுசேனைகளை சகலசனம்வாருமென்றார்

இன்றுவெளிகூடார மியலுடனேபோடுமென்றார்
சண்டைமுரசறையுமென்றார் சண்டைகொடிநாட்டுமென்றார்
பாளையங்களுள்ளதெல்லாம் பயணங்கள்சொன்னார்கள்
ஆடாதேர்ப்பாகா அலங்கரியுந்தேரையென்றார்
தேர்ப்பாகனோடிவந்து தேரையலங்கரித்தான்
ஆறுவண்டிநூறுசட்ட மழகானகுத்துக்கால்
குத்துக்கால்சொப்பனிட்டு கொடுங்கைத்திரைவளைத்து
கும்பக்கலசமது கொடுங்கையலங்கரித்து
தேரையலங்கரித்துத் தேர்ப்பாகன்கொண்டுவந்தான்
அழகானசிலையினா லலங்காரம்பண்ணானே
நாலுபக்கஞ்சாலர்களும் நவரத்னதோரணமும்
கண்ணாடிசல்லிகட்டி கவரிமான்குச்சுவிட்டு
ஐந்துகொத்தாரச்சி யழகுபணிக்கட்டினானே
நவகண்டவீரமணி நான்குபக்கங்கட்டினானே
வாழைமரங்கட்டியே மகமேரலங்கரித்து
நான்குபுரவிகளை நன்றாய்க்குளிப்பாட்டி
பாராசாரிபுரவியொன்றும் பஞ்சகலியாணியொன்றும்
தேசியென்னும்புரவியொன்றும் சீவரத்னபுரவியொன்றும்
நாலுகால்வண்டயமாம் நடுக்கழுத்தில்கொலுசுகளும்
முன்னாலேசுட்டிகளும் பின்னாலேகுச்சுகளும்
மாணிக்கச்கடிவாளம் வாயிற்கொடுத்தானே
நான்குகுதிரைகளை நன்றாயலங்கரித்து
தேரிணமேலேறினானே சீக்கிரமாய்ப்புரவிகளை
சாய்ந்திருந்துசண்டைசெய்ய சார்மணைபோட்டானே
குந்தியேசண்டைசெய்ய குரிஞ்சிப்பூமேடையிட்டான்
ஒளித்திருந்துசண்டைசெய்ய ஒருதலையணைகளிட்டான்
சந்தனப்பொட்டுமிட்டு சாம்ராணிதூபமிட்டான்
தேரையலங்கரித்து தேர்ப்பாகனோடிவந்து
அலங்கரித்தேனென்றுசொல்லி யடிவணங்கிதெண்டனிட்டான்
வெற்றிமதயானை வீமனவனெழுந்து
நகுலசகாதேவ ராசாவரெழுந்து
ஆயர்பெருமாளும் மரிராயர்தானெழுந்து
மகுடமணிக்காரர்கள் வாகுவலயமிட்டார்
வாள்களுங்கத்திகளும் வலதுகையில்தானெடுத்து
அம்புவில்லுந்தானெடுத்து அம்புறாத்தூணி முதுகணிந்தார்
சட்டைதயானவச்சிரகபாய் தாமணிந்தாரரசரெல்லாம்
உண்டுவில்லுஞ்சுண்டுவில்லுஞ் சிங்காணிப்பூச்சுவில்லும்
வச்ரகபாயணிந்தான மதவீமராசனவன்
தண்டாயுதமணிந்தார் மந்திரவாளணிந்தார்
சண்டைக்குமுஸ்தீபாய்ச் சயர்ந்தர்வெளியானார்
அர்ச்சுனராஜவந்து ஆயண்டையோடிவந்தார்

அல்லியவளோடே யமருக்குப்போறீரோ
அவள்மேலேயம்புபட்டால் என்னுவியுருகிவிடும்
சிவனழித்திடுவேன் செலவழிந்துபோவேனென்றான்
மாண்டுமடிந்திடுவேன் மாதருக்குபாணம்பட்டால்
எந்தவிதமானாலு மிட்டுவரவேண்டுமையா
பொற்கொடிமாதரைநீர் பிடித்துவந்துசேருமையா
நல்லதருச்சுனரே நமக்குத்தெரியவரும்
எந்தவிதமானாலு மிட்டுவந்துசேர்க்கிறேன்பார்
உன்மனதுக்கிசைந்தபடி மன்னவனேசெய்கிறேன்போ
என்றுமேசொன்னாரே எப்பெருமாள்மாயவரும்
அப்போதருச்சுனரு மாணழகர்தாமெழுந்து
வெற்றிமதயானை வீமனண்டையோடிவந்து
மதகரிவீமனுக்கு வணங்கிநமஸ்கரித்து
அண்ணாமதவீமா அடியேனொருவார்த்தை
அல்லியவள்மேலே அமருக்குபோரீரே
அவள்மேலேபாணமதை விடவேண்டாமண்ணாவே
வில்வித்தைசெய்யவேண்டாம் விசைபாணப்போடவேண்டாம்
தந்திரமாய்க்கொண்டுவாருந் தாமந்தவாழ்மார்பா
என்றுதொழுதானே எழில்விசையனருச்சுனனும்
அவ்வார்த்தைதான்கேட்டு ஆணழகனேதுசொல்வான்
நல்லதுதம்பியரே நமக்குத்தெரியவரும்
என்றுசொல்லிமதவீம னேறினான்தேர்மேலே
ஏறினார்தேர்மேலே எடுத்தார்நெடுங்குடையை
முத்துக்குடைகளுமே முழுவயிரநற்குடையும்
பட்டுக்குடைகளுமே பலதிசையுந்தானெடுத்தார்
கிருஷ்ணாதுதேர்மேலே கருடக்கொடிபறக்க
வீமாதுதேர்மேலே சிங்கக்கொடிபறக்க
நகுலாதுதேர்மேலே நாமக்கொடிபறக்க
சகாதேவர்தேர்மேலே சாஸ்திரக்கொடிபறக்க
அச்சுகிறுகிறென யானைநெடுந்தேரசைய
வண்டில்கிறுச்சியிடும் மதயானைகோஷ்டமிடும்
குதிரையனுமானிக்கக் கோடிமன்னர்சத்தமிட
யானைசேனைபரிவார மடங்கலும்வருகிறதே
செந்தூளெழும்புவதாஞ் சூரியனைக்கப்புவதாம்
கருந்தூளெழும்புவதாங் கதிரோனைக்கப்புவதாம்
மண்தூளெழும்புவதும் மண்டலத்தைகப்புவதும்
அடிபடுதாரயபேரி அந்நகரந்தானதிர
வெண்கலபேரியது விருதுமுழங்கிவர
சண்டைசண்டையென்றுசொல்லி சண்டைபேரியடிபடுது
வெற்றிவெற்றியென்றுசொல்லி வெற்றிமுரசடிபடுதே
ரணங்கள்ரணங்களென்று ரணபேரியடிபடுதே

கோடைகாலத்திடிபோலே குமுறுதேராயபேரி
அடிவானத்திடிபோலே அடிபடுதேராயபேரி
அண்டங்கிடுகிடென்ன அடிபடுதேராயபேரி
அல்லியென்றுபேர்சொன்னால் கல்லுதெய்வங்கூத்தாடும்
மண்தூளுஞ்செந்தூளும் மண்டலத்தைக்கப்பியதே
வருகிறஜெனங்களென்றால் மட்டுமிதங்களில்லை
பட்டணத்தைத்தாண்டிப் பாளையம்வருகுதங்கே
யூகம்பிரித்தார்க ளுபித்தியஞ்செய்யவென்று
வந்துமுனைகொடுத்தார் வளம்பெரியசேனையெல்லாம்
இருவரதுபாளையங்க ளெட்டிநெருங்கிற்றங்கே
உத்திபிரிந்தார்க ளுபித்தியம்பண்ணுகிறார்
வில்வளைத்துநாரிபூட்டி வேணபாணந்தொடுத்தார்
சரமேற்சரம்பொழிந்தார் சாமர்த்தியமுள்ளவர்கள்
அமரதரும்சமரதரும் சமரதரும்அமரதரும்
கலிங்கர்தெலுங்கர்களும் தெலுங்கர்கலிங்கர்களும்
கன்னடியர்கஸ்திரியர் கஸ்திரியர்கன்னிடியர்
சத்திரியர்முத்திரியர் முத்திரியர்சத்திரியர்
டானையொடுயானைதாக்க அஸ்வத்தோடஸ்வந்தாக்க
ஒட்டகமுமொட்டகமும் ஒக்கப்போர்செய்யுதங்கே
ஒருவருக்கொருவரல்லோ யுபித்தங்கள்பண்ணுகிறார்
எட்டிற்றேநல்லசண்டை எழும்பிற்றேறுயபேரி
மூளுதேநல்லசண்டை முழங்கிற்றேறுயபேரி
வந்துமுனைகொடுத்தாள் வாழ்மாரியல்லியம்மாள்

வீமசேனன்யுத்தம்.

வெற்றிமதயானை வீமனவன்பார்த்து
வந்துவளைத்தானே வல்லிடிபோல்தேர்திருப்பி
தேரைத்திருப்பியவன் செங்கையிலேவில்லெடுத்து
வில்வளைத்துநாரிபூட்டி வில்லைக்குணத்தொனித்து
அம்புதொடுத்தானே அல்லியவள்மேலாக
வாரிபொழிந்தாளே வளம்பெரியஅஸ்திரத்தை
வாயுவாஸ்திரங்களோடு இந்திராஸ்திரங்களுந்தான்
சூரியஅஸ்திரமாம் சுப்பிரமணியஅஸ்திரமாம்
மூடுபனிபோலாக முடுக்கிவிட்டான்பாணமதை
அம்புவரும்வேகமாறு லார்க்குமுடிபோகாது
பாணம்வரும்வேகமானால் பார்க்கமுடிபோகாது
சரவருஷம்போலாகச் சரமேற்சரம்பொழிந்தார்
கண்டாளேயல்லியம்மாள் கண்கள்செவந்தாளே
சீறியெழுபறந்து சிங்கத்தைப்போற்கதும்பி
கழுத்திலேமங்கிலியம் கட்டினவனோடா
திருட்டுப்பயலேயுன் சிரசறுத்திடுவேன்
சண்டிப்பயலேயுன் சாமர்த்தியமானழிப்பேன்

என்சமர்த்துஞ்சேவகமு மிப்போதெரியுதுபார்
அல்லியென்றுபேர்சொன்னால் அழுதபிள்வாய்மூடும்
அரைநாழிக்கொள்ளையிலே யளகாபுரஞ்சேர்த்திடுவேன்
தேரைத்திருப்பினளே செங்கையிலேவில்லெடுத்தாள்
பம்பரம்போலாகப் பாராதந்திருப்பி
சக்கரத்திகிரிபோலே சமர்த்துடனேதேர்திருப்பி
வில்வளைத்துநாரிபூட்டி விட்டாள்சரபாணம்
தொட்டாளேவில்லதனை தொடுத்தாள்சரபாணம்
ஆகாயமுள்ளதெல்லாம் அம்பாலேபந்தலிட்டாள்
அம்புவரும்விதங்க ளார்க்குமுடிகூடாது
பாணம்வரும்விதங்கள் பார்க்கமுடிகூடாது
கார்த்திகைமாதத்திலே கனகமழைபெய்ந்ததுபோல்
ஐப்பசிமாதத்திலே யடர்ந்தமழைபெய்ந்ததுபோல்
சோனைமழைபோலே சொரிகின்றாள்பாணங்களை
அக்கினியாஸ்திரங்கள் அனந்தம்பொழிந்தாளே
நெல்லிப்பழம்போலே நெருங்கிற்றேகொப்பளங்கள்
அருநெல்லிப்பழம்போலே யஸ்தமெல்லாங்கொப்பளிக்க
நான்குநாள்மட்டாக நல்லசண்டைபண்ணுகிறாள்
தன்மேல்வரும்பாணமெல்லாஞ் சங்கரிப்பான்வீமனவன்
ஒருவர்விட்டபாணம் ஒருவர்விலக்கிக்கொள்வார்
இருவர்சமானமாக இனியசண்டைபண்ணுகிறார்
வீமன்விடும்பாணத்தினால் வெகுசெனங்கள்மாளுகுது
யானையின்மேலிருந்ததுரை யறுந்துவிழுகிறார்கள்
குதிரையின்மேலிருந்தோர் கொக்கரித்துகீழ்விழுந்தார்
ஒட்டகத்தின்மேலிருந்தோ ரோலமிட்டுவிழுந்தார்
அம்மாடியென்றுசொல்லி யலறிவிழுவார்கள்
தென்னங்காய்ப்போலாகச் சேனையுருளவிட்டான்
பனங்காய்கள்போலாகப் பரித்தெரிந்தான்வேணதலை
அறுந்ததலைகளெல்லா மம்மானைபோடுதங்கே
பெட்டியுப்பேழைபோல பெலிகொடுத்ததலைகள்போலே
சட்டிகள்பானைபோல தலைகளுருளவிட்டான்
அம்மாடியென்றுசொல்லி யனேகந்தலையுருளும்
காலறுந்துபோகுதே கைகளற்றுபோய்விடுதே
ஈரல்குடல்தான்சரிந்து இருநிலத்தில்வீழ்வாரும்
மணிக்குடல்தான்சரிந்து மண்ணில்விழுவாரும்
நிலப்பூச்சிபோலாக நிலத்தில்சுருங்கலுற்றார்
சாகிறவுண்ணிபோல தரையில்சுருங்கலுற்றார்
மாண்டசெனங்களென்றால் மட்டுமிதங்களில்லை
செத்தசெனங்களென்றால் சொல்லமுடியாது
அல்லியம்மாபாளையங்க ளலைந்துலைந்தோடுது

சண்டைபண்ணமாட்டாமல் சலாம்பண்ணியோடலுற்றார்
ஆயுதத்தைதூரவைத்து அருகில்சலாம்பண்ணுவாராம்
பண்டாரமென்பாரும் பரதேசியென்பாரும்
நாமத்தைகாட்டுவாராம் நான்தாதனென்பாரும்
பூணூலைக்காட்டுவாராம் பிராமணனென்பாரும்
பிச்சையிறந்துண்ணப் புறப்பட்டோமென்பாரும்
ஆயுதத்தைதூரவைத்து அருகில்சலாம்பண்ணுவாராம்
ஐயையோதெய்வமென்று அலைகிறதேபாளையங்கள்
வடுகரெல்லாம்நீளென்பர் வன்தமிழர் தண்ணீரென்பர்
துலுக்கரெல்லாம்பாணியென்று சொல்லிப்புலம்புகிறார்
தண்ணிதண்ணியென்று தவிக்குதேபாளையங்கள்
மார்பளவுரத்தாறு வழியவிட்டான்வீமனவன்
பிடாரியம்மாகோவிலுக்கு பலிகொடுத்தபாவனைபோல்
அம்மையார்கோவிலுக்கு ஆடுவெட்டும்பாவனைபோல்
துள்ளுகிறதலைகளெல்லாம் செருக்களங்கள்கொள்ளவில்லை
ரத்தாறுஓடினதே யுத்தகளங்களெல்லாம்
இந்தவிதமாக இனியபோர்செய்வதிலே
தேவாதிதேவரெல்லாம் சொல்லுவாறொருவார்த்தை
இராமராசண்டையென்பார் இராவணன்சண்டையென்பார்
சூரபத்மன்சண்டையென்பார் சுப்ரமண்யர்சண்டையென்பார்
வீரபத்திரர்சண்டையென்பார் வேள்விதக்கன்சண்டையென்பார்
வெற்றிமதயானை வீமனவன்பின்னிடையான்
நான்குநாள்மட்டுமல்லோ நல்லசண்டைபண்ணுகிறான்
அல்லிபெருமாளு மாக்கரித்துபற்கடித்து
ஆலவாய்ச்சொக்கரென்று மாண்டவரைதானினைத்து
திவ்யாஸ்திரத்தை தூபமிட்டுதானெடுத்தாள்
மந்திரதூபமிட்டு வாங்கிவிட்டாள்வீமன்மேலே
மார்புரளவாங்கியல்லோ தோள்புரளவாங்கிவிட்டாள்
மேலிட்டுவருகிறதே வீமனதுதேர்மேலே
வாயில்நெருப்பெரிய வந்துவிழுந்ததுவே
தேருமுடைந்ததுவே செம்புரவிசெத்ததுவே
போட்டதோர்வச்சிரகபாய் பொடிப்பொடியாயாச்சுதங்கே
சட்டைதமான்வச்சிரகபாய் தவிடுபொடியாச்சுதுகாண்
சரீரங்களுள்ளதெல்லாம் சல்லடைக்கண்ணாச்சுது
மானங்குலைந்தானே மதகரியான்வீமசேனன்
விழுந்துமெழுந்தவனும் வெட்கங்கெட்டோடிவிட்டான்

ஸ்ரீகிருஷ்ணபகவான் யுத்தம்.

மாயன்பெருமாளும் மலைராபர்கண்டுவிட்டார்
வகைமோசம்வந்ததென்று மாயவருந்தேர்திருப்பி
வந்துமேசண்டைசெய்தார் மயிலனையாள்தன்னுடனே

பம்பரம்போல்தேர்திருப்பி பாணந்தொடுத்துவிட்டார்
அல்லிப்பெருமாளு மாக்கரித்துப்பற்கடித்து
சொக்கரைதானினைத்து தொட்டாளேபாணமதை
இருவர்சரங்களு மிருநிலத்தில்தான்சுழல
பம்பரம்போலாகப் பாரரதந்திருப்பி
விட்டாள்சரபாணம் மேகவர்னன்தேர்மேலே
வாய்வாஸ்திரங்களும் வருணாஸ்திரங்களும்
வச்சிரபாணமதை வாரிச்சரம்பொழிந்தாள்
ஒன்றல்லஇரண்டல்ல ஒருகோடிபாணம்விட்டாள்
சூரியனைத்தான்மறைத்தாள் தொடுத்தநல்லபாணமதால்
ஆகாயமுள்ளதெல்லா மம்பாலேயந்தலிட்டாள்
பெருமாளுமல்லியரும் பிரியாதசண்டைபண்ணூர்
மாளுஞ்செனங்களென்றால் மட்டுமிதங்களில்லை
செத்தசெனங்களென்றால் சொல்லமுடிபோகாது
ஐயோகோதெய்வமென் றலருதேபாளையங்கள்
யானைமேலுள்ளவர்கள் ளயமிட்டுமண்ணைக்கவ்வ
குதிரைமேலுள்ளவர்கள் கொக்கரித்துமண்ணைக்கவ்வ
ஒட்டகமேலுள்ளவர்க ளோலமிட்டுமண்ணைக்கவ்வ
இந்தவிதமாக இனியசண்டைபண்ணுகிறார்
அலைகடல்சத்தம்போலே அபயமிடும்வெகுசனங்கள்
கூக்குரலாகிறதே கோஷ்டமிடும்பாளையங்கள்
அபயம்சிவாயமென்று அலைகிறதேவெகுசனங்கள்
வடுகரெல்லாம்நீளென்பார் வன்றமிழர்தண்ணியென்பார்
துலுக்கரெல்லாம்பாணியென்று சொல்லுகிறாபாளையத்தில்
தண்ணீர்தண்ணீரென்று தவிக்கிறதேபாளையங்கள்
அப்போதுயல்லியம்மாள் அதிகமானகோபமுடன்
வச்சிரபாணந்தன்னை மந்திரதூபமிட்டு
மாயாதுதேர்மேலே வரிந்துஇழுத்துவிட்டாள்
உக்கிராஸ்திரங்களது திவ்வியாஸ்திரங்களது
இராமச்சந்திரஅஸ்திரமாம் நாராயணஅஸ்திரமாம்
அக்கினியாஸ்திர மனந்தம்பொழிகிறளே
ஒன்றல்லவிரண்டல்ல ஒருகோடிபாணம்விட்டாள்
வாரிப்பொழிந்தாளே வளம்பெரியஅஸ்திரத்தை
எடுத்துப்பொழிந்தாளே ஏழுலட்சம்பாணங்களை
பாதாளமூடுருவிப் பாணந்தொடுத்தாளே
ஆயன்சரீரமெல்லாம் மங்கம்பிளக்கடித்தாள்
சல்லடைக்கண்போலே சரீரமெல்லாந்தான்றுளைத்து
மயிருக்கொருபாணம் மாதுதொடுத்துவிட்டாள்

விற்பிடித்தகைகளெல்லா மெத்தசிவப்பேறிற்று
கைகளெல்லாஞ்சோர்ந்துவிடக் கன்னியரும்பாணம்விட்டாள்
ஆகாயதேவரெல்லாம் அல்லியைக்கொண்டாடினார்கள்
இந்தப்படியாக இனியசண்டைசெய்கையிலே
இவளேவெகுபார மென்றொருபாணமதை
மார்புரளவாங்கியல்லோ தோள்புரளத்தொடுத்துவிட்டாள்
வாயில்நெருப்பெரிய வந்துவிழுந்ததுவே
தேருமொடிந்துபோச்சு செம்புரவிநாலும்போச்சு
சட்டைதானவச்சிரகபாய் தவிடுபொடியாகி
செங்கையிலேவில்லெடுத்து சோடுசட்டைதானணிந்து
பதாதியாயோடுகிறார் பாரளந்தவெம்பெருமாள்
வகைமோசம்வந்ததென்று கரியாமலோடுகிறார்

சகாதேவர் யுத்தம்.

கண்டான்சகாதேவன் கரியமாலோடுவதை
தேரைத்திருப்பினனே செங்கையில்வில்லெடுத்தான்
வந்துவளைந்துக்கொண்டான் வல்லிடிபோல்சகாதேவன்
பேரிகையறைவித்துப் போயெதிர்த்தானல்லியண்டை
சண்டைபேரிகையடித்துச் சமர்த்துடனேவந்தெதிர்த்தான்
கண்டாளேயல்லியமாள் கண்கள்ரெண்டுந்தான்சிவக்க
ஒருபாணம்விட்டாளே யுலகமெல்லாந்தானதிர
பேரிகைக்கிழித்தாளே பெரியடமாதான்கிழித்தாள்
விழுந்துஎழுந்திருந்தான் வெட்கங்கெட்டோடிவிட்டான்

சகாதேவன் அல்லியைப்புலிகூண்டினாற் பிடித்துவருகிறது.

எந்தவிதத்தினாலே யிவளைசெயித்திடலாம்
அடங்காதலிதனை யடக்கும்வழியெப்படிதான்
என்றுமேதானினைந்து இளையசகாதேவன்
உள்ளங்கைசாஸ்திரத்தை யுத்தியுடன்பார்த்து
பாதாளஅஞ்சனத்தைப் பார்த்துசகாதேவன்
பத்துசுற்றுப்புலிக்கூண்டை பாங்குடனேகொண்டுவந்தார்
சூதுபண்ணியல்லியரை போணிலடைக்கவேண்டும்
இல்லாமற்போனக்கா லிவளைசெயிக்கமுடியாது
இவள்கையால்மாளுவ தெல்லவருநிச்சயந்தான்
சாஸ்திரத்தைத்தான்பார்த்து ஆக்குள்ளசகாதேவன்
செருக்களத்தைவிட்டவனுஞ் சீக்கிரமாய்ப்போயினான்
மாளிகையில்போய்ச்சேர்ந்து மன்னன்சகாதேவன்
விசுவபிர்மதச்சர்களை விரைந்தோடியழையுமென்றான்
அப்போதுகாவலர்க ளழைத்தோடிவந்தார்கள்
ஆயிரம்தச்சர்களை யழைத்துவந்துவிட்டார்கள்
வந்துபணிந்தார்கள் மன்னன்சகாதேவனைத்தான்

எங்களையழைத்தபணி யாதென்றுகேட்டார்கள்
நிமிஷமனோராஜிகையில் திருப்பியுங்கூண்டையென்றான்
ஒருபக்கப்பார்த்தாலே யுச்சிதகூண்டைப்போல்
மறுபக்கம்பார்த்தாலே மச்சுவீடுபோலாக
பத்துசுற்றுக்கோட்டையதாய்ப் பக்கங்கதவடைத்து
வாசலுக்குவாசலது வச்சிரத்தாள்போட்டு
சாவியுஞ்சங்கிலியுந் தாப்பாளும்வையுமென்றான்
ஆயிரந்தச்சர்களும் அக்கணமேசொப்பனிட்டு
நிமிஷமனோராஜிகையில் நியமித்தார்விசுவகர்மர்
சோடித்தோமென்றுசொல்லித் தெண்டமிட்டுப்போனார்கள்
அப்போசகாதேவன் அங்கெனவேதானெழுந்து
தேரைத்திருப்புகிற சூரனைத்தானழைத்து
குதிரையலங்கரித்துக் கூண்டிலேகட்டுமென்றான்
பாராசாரிப்புரவிகளைப் பாங்காயலங்கரித்து
கூண்டுக்கழகாக குதிரைகளைக்கட்டுமென்றான்
சாஸ்திரக்கொடிவிருதைச் சமர்த்துடனேகட்டுமென்றான்
அங்கேசகாதேவ னம்புவில்லுங்கைபிடித்து
ஏறினான்கூண்டுதனி லெடுத்தடித்தார்பேரிகையை
திறவுகோல்கைபிடித்துச் சூதாகபோனானே
கூண்டைதிருப்பியல்லோ கொண்டுவந்தான்பாளயத்தில்
செயங்கொண்டோமென்றுசொல்லி செங்கையில்வில்லெடுத்தார்
சண்டைசண்டையென்றுசொல்லி சண்டைபேரியடிபடுது
வெற்றிவெற்றியென்றுசொல்லி வெற்றிகொடிபடுது
ரணங்கள்ரணங்களென்று ரணபேடியடிபடுது
கண்டாளேயல்லியம்மாள் காற்றைப்போல்தேர்திருப்பி
வந்துமுனைந்தாளே வல்லிடிபோல்வளைந்தாள்
எடுத்ததேநல்லசண்டை எழும்பிற்றேறுயபேரி
முட்டுதேநல்லசண்டை முழங்கிற்றேறுயபேரி
விட்டாள்சரபாணம் மேனியெல்லாந்தான்மறைய
ஒருவர்விடும்பாணம் ஒருவர்விலக்கிக்கொள்வார்
இருவர்சமானமாக யிருந்துசண்டைபண்ணுகிறார்
அர்த்தசந்திரபாணங்களின் அல்லியொருபாணம்விட்டாள்
கோணமாகவந்து வில்லைமுறித்ததுவே
வில்லுமுறியவேதான் வேந்தன்சகாதேவன்
வாள்கேடகந்தானெடுத்து மண்ணிற்குதித்தானே
மூன்றுக்குதிரையின்கந்து மூப்பத்திரண்டுகெந்து
இந்திரவித்தைதீரி லெழும்பிவாரான்சகாதேவன்

அப்போது அல்லியரு மாரணங்குதான்பார்த்து
காரணங்கள்போடுகிறாள் கைலாகுபண்ணுகிறாள்
கருடப்பாய்ச்சல்தானெடுத்துச் கொப்பெனவேபாயுகிறாள்
புலியும்புலியுமது போயெதிர்த்தபாவனைபோல்
யானையும்யானையுமாய் அதிர்ந்துமெதிர்த்ததுபோல்
சிங்கமும்சிங்கமுமாய் சீறியெதிர்த்ததுபோல்
கொக்கரித்துவாளியிட்டுக் கொற்றவனும்பாய்கிறான்
துள்ளுமான்குட்டியைப்போல் துள்ளுகிறாளல்லியம்மாள்
ஓடியொளிப்பவன்போ லுபாயமாய்ச்சகாதேவன்
கூண்டிற்குதித்தானே கொப்பெனவேசகாதேவன்
ஓடிப்போறானென்று உலகாளும்ராசகன்னி
கூடக்குதித்தாளே கூண்டுதனிற்பாய்ந்தாளே
முன்வாசற்புகுந்தவனும் பின்வாசலோடலுற்றான்
அவ்வாசற்புகுந்தாளே அல்லிமலர்நாயகியாள்
எங்கேபோனான்கள்ளனென்று இளங்கொடியாள்தேடுகிறாள்
ஐந்தாங்கட்டுவாசலிலே அல்லியம்மாள்தான்புகுந்தாள்
அவ்வாசல்கதவடைத்து ஆணழகன்வெளியானான்
அகப்பட்டாளல்லியென்று அடியுமென்றான்பேரிகையை
செயங்கள்செயங்களென்று செயபேரிபோடுமென்றான்
அகப்பட்டாளல்லியென்று அடிபடுதேபேரிகைதான்
சிக்கினாளல்லியென்று சின்னங்களூதுகிறார்
அத்தண்டபேர்களுமே அனைவோருங்கேட்டுவிட்டார்
சந்தோஷப்பட்டார் தருமருடசேனையெல்லாம்
தப்பினசேனையெல்லாந் தென்மதுரைசேர்ந்துவிட்டார்
அப்போசகாதேவ னுனர்தமாய்வாரானே
கூண்டைத்திருப்பியே கொண்டுவந்தான்வையகத்தில்
அர்ச்சுனன்தன்னருகே அடிபணிந்துதெண்டனிட்டான்
தெண்டனிட்டசகாதேவன் சொல்லுவானொருவார்த்தை
அல்லியுடன்சண்டைபண்ண வமருக்குப்போனபோது
அகங்காரப்பெண்புலிதா னகப்பட்டதென்கையிலே
வேங்கைப்புலியதனை விடுகூண்டிலடைத்துவந்தேன்
மதுராபுரியாண்ட வாழ்வரசியல்லியரை
தேரோடிசண்டைசெய்யுந் துரைமகளைக்கொண்டுவந்தேன்
அவ்வார்த்தைதான்கேட் டருச்சுனன்மனமகிழ்ந்து
சந்தோஷப்பட்டானே தாமந்தவாழ்மார்பன்
அன்னமடைதுரௌபதியாம் ஆரணங்கைதானழைத்து
நாகமடந்தை யுலூபியை நறுநுதலைதானழைத்து
சோரவளங்கை சுபத்திரையைத்தானழைத்து
தான்செய்தகாரியத்தை நாயகமேநீர்கேளீர்

மாயவரும்நானுமாக வன்வாசம்போனபோது
தீர்த்தயாத்திரைபோகையிலே செய்தபிழைநீர்கேளும்
ஆதிசிவனைநான் அடிவணங்கவேணுமென்று
மதுராபுரியிலே மாணிக்கசொக்கலிங்கம்
பிட்டுக்குமண்சுமந்த பித்தரைக்காணவென்று
மதுரைக்குப்போகின்ற வழியிலேயங்கொருவன்
அழுதகண்ணுஞ்சிந்தையுமாய் அங்கொருவன்புலம்பிநின்றான்
மதுராபுரியாளும் வாழ்வரசியல்லியற்கு
அன்றுடமுத்தெடுத்து அளப்பாணுமாரிழைக்கு
படிமுத்துக்குறைந்ததென்று பதறியவன்விழுந்தான்
அல்லியரசாணி யரசுநிலையாள்கிறதும்
அவள்பிறந்தவண்மைகளும் ஆவலெல்லாஞ்சொல்லுமென்றேன்
ஆறுயிரம்பாண்டியர்க ளறியதவஞ்செய்ததுவும்
அகிலாண்டசொக்கலிங்கம் அங்கயற்கண்கிருபையினால்
அல்லியிலேமேலே அவள்பிறந்தவண்மைகளும்
ஏழுபிராயத்திலே எதிர்த்துவந்தநீன்முகனை
வெட்டித்தலைதுணித்து வீரபட்டங்கட்டினதும்
கொள்ளவருமாப்பிள்ளைக்குக் குறடாகொடுப்பேனென்று
சேரவருமாப்பிள்ளைக்குச் செருபந்துதருவேனென்றாள்
ஆளவருஞ்சப்பந்தியை யடிப்பேனென்றாள்செருபந்தால்
மூச்சுகொட்டாதெருவிற்கட்டி மொய்குழலாளாண்டிருந்தாள்
இவ்வார்த்தைதான்கேட் டென்மனதுதாளாமல்
கட்டினவிருதறுத்துக் கலியாணஞ்செய்யவென்று
என்றுமனதிலெண்ணி எட்டுநாள்காத்திருந்தேன்
பத்தினியானவள் பாரிவேட்டைபோனதும்
கரும்புரவிமேலேறி மான்மேட்டையாடையிலே
ஆனந்தமாரியருக் கம்புபொருக்கித்தந்தேன்
வேட்டைகளாடியே மெத்தக்களைத்தவளும்
ஆலமரத்தடியில் அங்கேபடுத்தாளே
காலும்பிடித்தேனே கதையொன்றுசொன்னேனே
அடையாளங்காட்டவென்று ஆரங்கழற்றிக்கொண்டேன்
அன்றுபோய்மற்றுநாள் மற்றொருவேடங்கொண்டேன்
பித்தம்பிடித்தவன்போல் பெரும்பைத்தியங்கொண்டவனாய்
அல்லியதுபட்டணத்தில் அழகுதிருக்குளத்தில்
வண்ணமருந்தெடுத்து வளம்பாடியாணைத்தேன்
அனேகந்தாதிகளைவிட்டு யாற்றிலென்புரட்டுமென்றாள்
அதிருதுஞ்சாகாமல் அவள்நினைவாயிருந்தேன்
தூக்குமரந்தனிலே போடுமென்றாளென்னையவள்

செங்கமலதாதியைநா னுபாயமாய்க்கொன் றுவிட்டேன்
காளியம்மன்கோவிலிலே காவுபோடச்சொன்னாளே
பூகக்கிடங்கிலே போட்டடைக்கச்சொன்னாளே
பூதம்பணிமாறப் பிழைத்திருந்தேனவ்விடத்தில்
மாயனொருபெண்ணாகி வரவழைத்துக்கொண்டுவந்தார்
ஆண்டியைப்போல்வடிவெடுத்து அல்லிதன்வாசலிலே
வண்ணப்படமெடுத்து மாதுபிச்சைவாங்கிவந்தேன்
மாயனபிடாரனானார் வண்ணவிதப்பாம்பானேன்
பாம்புருவாய்ப்போயிருந்து படுக்கையிலேநான்கலந்து
பொற்கொடிமாதினுக்குப் புத்திரனுண்டாக்கிவைத்தேன்
மற்றொருவேஷமது மறுநாள்வடிவெடுத்து
பெருமாளந்தமாயவனார் பிராமணப்பெண்ணானார்
மெத்தகிழவனைப்போல் வேதியனாய்வடிவெடுத்து
அத்வானமானகாட்டில் தண்ணீர்பந்தல்வைத்திருந்தோம்
அதுவேஷந்தன்னுடனே அரண்மனையிற்போயிருந்தேன்
தேவேந்திரனைநோக்கி செய்தேன்பெருந்தபசு
ஆனைத்தலைபோலே அழகானமங்கிலியம்
தும்பிக்கைபோலாகத் திருமங்கிலியச்சரடும்
கொடுத்தனுப்பவேணுமென்று கொப்பெனவேதவஞ்செய்தேன்
மாயத்திருநீறும் மங்கிலியந்தரித்துவிட்டார்
மாலைப்பசுங்கிளிக்கு மங்கிலியந்தரித்துவிட்டேன்
ஆருமறியாமலங்கொருவர்காணாமல்
கட்டினவிருதறுத்துக் கடுகவேவந்துவிட்டோம்
நான்குமாதங்கெற்பமது நடக்குதுகாண்மாதினுக்கு
இன்னவனென்றுசொல்லி என்னையறியமாட்டாள்
கழுத்திலேமங்கிலியங் கட்டினவனையறியாள்
தரணிலுள்ளராசர்களை வாவென்றழைத்தவளும்
நெய்களைக்காச்சியல்லோ கைகளைத்துவையுமென்றாள்
மண்டலத்துராசரெல்லாம் வந்துசத்தியஞ்செய்தார்கள்
வெற்றிமதயானை வீமன்குடித்துவிட்டான்
ஆகையினாலேயவள் அமருக்குயிங்குவந்தாள்
தர்மமுடியானுஞ் சகாதேவன்பிடித்துவந்தான்
புலிக்கூண்டிலேயடைத்துப் பொற்கொடியைக்கொண்டுவந்தான்
இந்தவயணமெல்லா மெந்திழைக்குநீயுரைத்து
நம்பிக்கைவாங்கியே நாயகியைவெளிவிடுங்கள்
கோபங்களாற்றுங்கள் கொம்பனையாள்நாயகிக்கு
மனந்தேறச்சொல்லுங்கள் மாலையிடப்பாருங்கள்
சத்தியத்தைவாங்கி தையலைவிட்டுவிடும்
ஆயுதத்தைவாங்கியேநான் அப்புறத்தில்விட்டுவிடு
என்றுசொல்லியே யெழில்விஜயனனுப்பிவைத்தான்

திரௌபதை முதலானவர்கள்வந்து அல்லியம்மாளை மணந்திருப்பி மாலையிடச்செய்தது.

அப்படியேயாகுதென்று அன்னநடைமாதர்களும்
திரௌபதிநாககன்னி சுபத்திரைவருகிறார்கள்
மந்தாரக்குந்தியம்மாள் மற்றுமுள்ளோர்வருகிறார்கள்
வாசலும்வாசலது படியேழுந்தான்கடந்து
புலிக்கூண்டுதன்னருகே போய்ச்சேர்ந்தார்மாதரெல்லாம்
தோராவடிவழகி திரௌபதியாடுளதுசொல்வாள்
ஆரடியம்மாளே யழகானகூண்டிலேதான்
இப்பெரியகூண்டிலேதா னிருக்கிறவனார்காணும்
வாயைத்திறந்துநீ வந்தவகைசொல்லுமென்றாள்
மகுடத்துரைச்சியவள் வாய்திறந்தேதுசொல்வாள்
என்னசொல்வேனாயகியே என்தலைவிதிப்பயனை
ஆருக்கடங்காம லரசுநிலைசெய்திருந்தேன்
வயிற்றிற்பிறந்ததில்லை வன்கொடுமைசெய்ததில்லை
குடலிற்பிறந்ததில்லை குலக்கொடுமைசெய்ததில்லை
ஓடுகிறதண்ணீரி லுள்ளேமணற்சேருமுண்டு
அடிக்கிறகாற்றதனி லலைகாற்றுறுப்புமுண்டு
ஆலகாலகண்டருக்குக் கண்டங்கருப்புமுண்டு
குண்டுமணிக்காளுலுங் கொஞ்சங்கறுப்புமுண்டு
மயிரோகறுப்பொழிய மற்றக்கறுப்புமில்லை
புருவங்கறுப்பொழிய பின்னைக்கறுப்புமில்லை
ஆயிரம்பாண்டியர்க ளரியதவஞ்செய்தார்கள்
மாளுகிறோமென்றுசொல்லி மலைமேற்றவமிருந்தார்
மாளாதேயென்றுதான் மலரிலவதரித்தேன்
அல்லிப்பிலைமேலே ஆரணங்குபெண்பிறந்தேன்
ஏழுபிராயத்திலே எதிர்த்துவந்தநின்முகனை
வெட்டித்தலையினந்து வீரபட்டங்கட்டிக்கொண்டேன்
நீன்முகனைக்கொன்றுநான் நீலிபட்டங்கட்டிக்கொண்டேன்
எல்லையரசாண்டு இருந்தேனம்மாலிக்காலம்
சேரவருமாப்பிள்ளைக்குச் சேருபந்துதருவேனென்றேன்
ஆளவரும்சம்பழுதியை யடிப்பேனென்றேன்சேருபந்தால்
பொம்மைவிருதுகட்டிப் பூமியாசாண்டேனம்மா
எவனோதிருட்டுப்பயல் என்கழுத்தில்மங்கிலியம்
தாலியைக்கட்டினானே தனிவிருதையறுத்துவிட்டான்
அறிந்துபிடிக்கவென்று அனைவரையும்வரவழைத்தேன்
செய்தனைக்காச்சியே கையைத்தாவையுமென்றேன்
செய்யைக்குடித்துவிட்டா னின்முடனவனும்

சண்டைக்குவந்திடத்தில் சமர்த்துகளைக்காட்டாமல்
எதிரேயிருந்துமல்லோ வென்சமர்த்தைப்பார்க்கவேணும்
என்னைமோசஞ்செய்தல்லோ இக்கூண்டிலடைத்தானே
சரியாகவிற்கவேண்டுஞ் சமர்த்துகளைக்காட்டவேண்டும்
வெளியேவிடச்சொல்லு ' வீரியத்தைக்காட்டுகிறேன்
அவ்வார்த்தைதான்கேட்டு யேதுசொல்வாள்துரௌபதியாள்
கழுத்திலேமங்கிலியம் கட்டினவண்மையெல்லாம்
அங்கவதிசயத்தை ஆரணங்கேசொல்லுகிறேன்
காட்டிலேவேட்டையாடநீ கடுகவரும்போது
பெண்வேஷம்போட்டுமல்லோ பின்னேதொடரலையோ
அம்புபொருக்கலையோ ஆரணங்கேயுந்தனுக்கு
காலும்பிடிக்கலையோ கதையொன்றுஞ்சொல்லலையோ
பித்தம்பிடித்தவர்போல் பெருமருந்துதானெடுத்து
வண்ணமருந்தெடுத்து தண்ணீரிலுரைக்கலையோ
அல்லிப்பெருமாளே நீ அதிககோபங்கொள்ளாதே
ஆற்றிலேபோட்டுநீ யவரைப்பிரட்டலையோ
தூக்கிலேபோடுமென்றாய் துய்யப்பசுங்கிளியே
காளியம்மன்கோயிலிலே காவுகொடுக்கச்சொன்னாய்
மற்றுநாள்தெய்வகன்னி மணவாளனென்றழுது
தன்புருஷனென்றுசொல்லித் தானழைத்துப்போகலையோ
ஆண்டியரைப்போலேவந்து அல்லியேயுன்வாசலிலே
மடலூர்ந்துஉந்தனது வாசலிலிருக்கும்போது
பாம்புகளைவிட்டுநீ பண்டாரத்தைக்கொல்லுமென்றாய்
பாம்புப்பிடாரனைப்போற் பத்தினிவருகையிலே
பாம்பாகவேடங்கொண்டு படுக்கலையோவுன்னிடத்தில்
உன்னிடத்தில்போகஞ்செய்து உனக்குமைந்தனுக்கிவைத்து
தாலிதரித்தவர்தான் தருமர்தம்பியர்ச்சுனர்காண்
உன்னைத்-தாலிகட்டிவந்ததுதான் சமர்த்தென்றும்பாராதே
அல்லியிலைமேலே அதிசயமாய்ப்பெண்பிறந்து
மெத்தப்பெரிதென்று பாராதேயல்லியரே
நான்-அக்கினியிற்பெண்பிறந்த அதிசயத்தைநீர்கேளும்
வயிற்றிற்பிறந்ததில்லை வன்கொடுமைசெய்ததில்லை
குடலிற்பிறந்ததில்லை குலக்கொடுமைசெய்ததில்லை
சந்திரற்குமச்சமுண்டு சற்றேகருப்புமுண்டு
குண்டுமணிக்காணலும் கொஞ்சங்கறுப்புமுண்டு
எனக்கு-மயிரேகறுப்பொழிய மற்றகறுப்புமில்லை
புருவங்கறுப்பொழிய பின்னேகறுப்புமில்லை
மாசிலாப்பெண்பிறந்தேன் வளருகிறேனக்கினில்

நெருப்பிற்பிறந்தேனே நீலப்பசுங்கிளியே
பாஞ்சாலநெக்கியத்தில் பிறந்தபதிவிரதை
மந்திரகிரிமேடைதன்னில் மச்சரையில்பெண்பிறந்தேன்
அருச்சுனன்மாலையிட அக்கினியில்பெண்பிறந்தேன்
அரக்குமாமாளிகையி லைவரிறந்தாரென்று
செய்திதெரிந்து துயரமிட்டானென் தகப்பன்
ஐவரிறந்தாரென்று ஆயாசப்பட்டார்கள்
நான்மீறிவளர்ந்தேனே மெல்லிருதுவானேன்
போதவளர்ந்தேனே பிள்ளைபெருநாளானேன்
கொள்ளவேவந்தவர்கள் கோடானகோடியுண்டு
மாலையிடவந்தவர்கள் மட்டுமிதங்களில்லை
அப்போதருச்சுனரு மன்றுமொருபார்ப்பானுய்
குஷ்டரோகிபோலாகக் கொற்றவருமவடிவெடுத்தார்
பாஞ்சாலன்பந்தலிலே பார்ப்பான்போல்வந்திருந்தார்
அப்போதுயென்தகப்பன் ஆலோசனையேதுசொல்வார்
வில்லைவளைத்தவற்கு மெல்லியரைக்கொடுப்பேனென்றார்
அவ்வார்த்தைதான்கேட்ட அரசமுடிராசர்கள்
மண்டலத்துராசாக்காள் வந்துவில்வளைத்ததில்லை
திக்கரசையாண்டதொரு துரைகளெல்லாம்வந்தார்கள்
வானவர்கோனிந்திரரும் வந்துவில்லைவளைத்தார்கள்
மண்ணுலகராசர்கள் வில்லைவளைத்ததில்லை
தேசத்துராசாக்கள் வில்லைவளைத்ததில்லை
அரசுமுடிராசாக்கள் அவ்வில்லைவளைத்ததில்லை
திக்கரசராசாக்கள் வில்லைவளைக்கமாட்டாமல்
வெட்கங்கள்கெட்டாரே வேந்தரந்தராசாக்கள்
ஆரால்முடியாது அவ்வில்லைவளைப்பதற்கு
வந்தவந்தராசாக்கள் மானங்குலைந்தார்கள்
அப்போதுஉன்புருஷ னர்ச்சுனன்டியாணழகன்
பார்ப்பானைப்போலிருந்து பார்த்திபன்தானெழுந்து
தேவாதிதேவர்மெச்ச துரைகளெல்லாம்பார்த்திருக்க
விஷ்ணுவும் பிர்மாவும் வியர்ந்துநடுங்கிடவே
விண்ணிரண்டுந்தானதிர அவ்வில்லைவளைத்தாரே
நீர்பார்த்துமீநெய்தார் நித்திலங்குபூமுடியார்
என்னைமாலையிட்டாரே யெழில்விசயனர்ச்சுனரும்
எனக்குக்குறையுமுண்டோ வென்னுடையதங்கையரே
இவ்வார்த்தைதான்கேட் டேதுசொல்வாள் நாககன்னி
அல்லியரேஅப்பியரே அதிசயத்தைநீர்கேளும்
நான்-இவ்வுலகமல்ல இன்னுட்டுமனுஷியல்ல
நாகலோகம்பெண்பிறந்த நாககன்னிநானல்லவோ
ஊருமொருமாணிக்கம் பேருமொருமாணிக்கம்

மாணிக்கந்தன்னுல் மடையடைக்கும்பொற்பாவை
என்னைவந்துமாலையிட்டா ரியலானவுன்புருஷன்
எனக்கென்னகுறையாக விருக்குறேண்டியப்பியரே
இவ்வார்த்தைதான்கேட் டெழுந்தாள்சுபத்திரையும்
பூவிற்பிறந்தவளே பொற்கொடியேநீர்கேளும்
மகுடத்துரைச்சியரே வார்த்தையொன்றுநீர்கேளும்
ஆயாளுதங்கையர்காண் அம்மான்மகளல்லவோ
என்னைச்சிறையெடுக்க இயலானவுன்புருஷன்
சந்நியாசிவேஷங்கொண்டு தார்விசையன்வந்திருந்தார்
மாயப்பொடிமருந்து மயக்கத்தைதூவிவிட்டார்
என்னைசிறையெடுத்து இட்டுவந்தாருன்புருஷன்
நானென்னகுறையாக விருக்கிறேனுச்சியரே
அருச்சுனரைப்பார்த்தாலே ஆவல்தெளிந்திடுமே
மீசையழகுமழகர் விழியிற்கழுப்பழகர்
நாவிலேலநட்சத்திரம் நயனவிழிப்பார்வைகளும்
தோளில்துளசிமாலை தொப்புளிலமிர்தகலசம்
பல்லில்பரசவீணை பாதத்தில்செந்தாமரை
முதுகிலேமட்சரேகை முழங்காலிலேமுத்துமாணிக்கம்
ஸ்திரீலீலைமன்மதண்டி சிறுபெண்கட்குகந்தவண்டி
அருச்சுனரைப்பார்த்தாலே ஆவல்தெளிந்திடுமே
அவ்வார்த்தைதான்கேட் டல்லியருமேதுரைப்பாள்
அழகுவேண்டுமென்றுசொல்லி ஆரடிகாத்திருந்தார்
மாப்பிள்ளைவேண்டுமென்று மயங்கினவராரடிதான்
கணவனுர்வேண்டுமென்று காத்திருந்தாராரடிதான்
வேண்டுமென்றிருந்தாலல்லோ விசயனைவேண்டுவது
இராசாக்கள்தன்னைப்போலே யானுமகுடஞ்சூட்டி
மாணிக்கக்கிரீடமது மகுடஞ்சிரசிலிட்டு
கத்திகட்டிசீமைகளை கன்னியரேயாளலையோ
எதிர்த்தவரைசங்கரித்து எல்லையரசாளலையோ
மண்ணுண்டராசாத்தி மனையாட்டியாயிருந்தால்
பூமியாண்டராசாத்தி பெண்சாதியாயிருந்தால்
கண்டார்நகையாரோ கலியுகத்தாரேசாரோ
பார்த்தார்நகையாரோ பாருலகமேசாதோ
இவ்வார்த்தைதான்கேட் டேதுசொல்வாள்துரோபதையும்
மகுடத்துரைச்சியரே வார்த்தையொன்றுநீர்கேளும்
தலையிலெழுதினதை தள்ளிவைப்பாராருமில்லை
ஏட்டிலெழுதியதை யெடுத்தெறிவாராருமில்லை
அன்றெழுதுமாதிசிவ னழித்தெழுதப்போரதில்லை
கதியைத்தொலைக்கலாம் காவேரிநீந்திடலாம்
விதியைத்தொலைப்பதற்கு வேறுவிதநாமறியோம்
கழுத்திலேதாலியது கட்டியிருக்கையிலே

வயிற்றிலேபிள்ளையது வந்துயிருக்கையிலே
ஆயாசப்படுவதுதான் அன்னியருக்கேச்சாகும்
தரணியுள்ளோர்கேட்டாலே சற்றேநகைப்பார்கள்
மாலைதரித்துநீ மணமுகூர்த்தம்செய்யவேணும்
எப்போதும்போலேயுங்க ளிராச்சியமாளவேண்டும்
மதுராபுரிபட்டணத்தில் மண்டலத்தில்யாருமில்லை
எப்போதும்போலேநீ யெல்லையரசாளுமம்மா
அவ்வார்த்தைதான்கேட் டல்லியம்மாளேதுசொல்வாள்
நல்லதுஆச்சியரே நம்மைவெளியேவிடும்
உங்கள்-மனதின்படியாக விவகாரம்பேசுவதேன்
கூண்டிலடைத்துமென்னை விவகாரம்பேசுவதேன்
விழியெதிரேநிற்கவேணும் விவகாரம்பேசவேணும்
வெளியேவிடுங்களென்றாள் மெல்லியிளங்கொடியாள்
அவ்வார்த்தைதான்கேட் டன்னநடைதுரௌபதையாள்
தோகைமயிலாளும் துரௌபதையுமேதுசொல்வாள்
கையிலிருக்கும்வாளைக் கன்னியரேவிட்டுவிடு
சந்திராயுதத்தைநீ சன்னலிலேவீசிவிடு
என்வார்த்தைதள்ளிநீ யாதொன்றும்பேசவேண்டாம்
என்று-நம்பிக்கைதந்தாலே நானும்விடுவேனம்மா
சத்தியத்தைதந்தாலே தையலரேவிடுவேனம்மா
அப்படியேயாகுதென்று ஆரணங்குமேதுசொல்வாள்
சொக்கர்திருவாணை ஸ்ரீராமர்தன்னாணை
ஆதிசிவன்தன்னாணை ஆறுயிரவாணை
அங்கையர்கண்ணம்மை யலர்மேலுதன்னாணை
பரமசிவன்தன்னாணை பார்வதியாள்தன்னாணை
சந்திரர்சூரியரும் சமஸ்தமானதேவதைமேல்
ஈஸ்வரருமீஸ்வரியு மிருடியர்மேலாணையென்றாள்
இந்திரரும்பிர்மாவு மெல்லார்மேலாணையென்றாள்
சத்தியந்தவறுவேனென் றெண்ணாதேதையலரே
காலம்பிரண்டாலும் கலியுகம்பொய்த்தாலும்
சந்திரர்கள்சூரியர்கள் தெற்குவடக்கானாலும்
சத்தியந்தவறுவேனென் றெண்ணாதேதையலரே
கதவைத்திறந்தல்லோ கடுகவிடுங்களென்றான்
அப்போதுதிரௌபதையாள் ஆரணங்குமேதுசொல்வாள்
சகாதேவராசாவை சடுதியில்வரவழைத்து
கதவைத்திறந்துநீர் கன்னியைவிடுங்களென்றாள்
அப்போதுசகாதேவன் அன்புடனேதானெழுந்து
தந்திரவுபாயத்திற் சாத்தும்கதவுகளை
எட்டித்திறந்தானே இயலானபொற்கதவை
சூஸ்திரமாகவேதான் திறந்துவிட்டான்பொற்கதவை
மின்னலொளிபோல வெளிப்பட்டாளல்லியம்மாள்

சந்திரனைப்போலே தளும்புகிறாள்தோகைநல்லாள்
குன்றுமேற்சந்திரன் குறித்தெழுந்தபாவனைபோல்
மருடத்துரைச்சியவள் வந்தாள்வெளியாக
மூடிச்சிவிகைவைத்தார் முன்னாலேயல்லியற்கு
ஏறினாள்சிவிகைதன்னி லெடுத்தார்நெடுங்குடைகள்
அந்தப்புறத்திலே யாரணங்கைகொண்டுசென்றார்
சிவிகைதனைவிட்டிறங்கிச் சென்றாளேமாளிகையில்
கெண்டிகையிற்றீர்த்தமது கொண்டுவந்துமுன்னேவைத்தார்
கைகாலுஞ்சுத்திபண்ணிக் கனிவாயைக்கொப்பளித்தார்
அமுதுண்ணுமண்டபத்தி லாரணங்குபோய்சேர்ந்தாள்
பந்திப்பாய்மேலாகப் பாங்குடனேவந்தமர்ந்தாள்
வாழையிலைபோட்டு வரிசையுடன்நீர்தெளித்து
மல்லிகைமொக்குபோல் மாற்றுவெள்ளம்நீர்போல
போசனமும்பாலித்துப் பொற்கறியும்வைத்தார்கள்
பத்துவகைக்கறியும் பதினெட்டுபச்சடியும்
சர்க்கரைபாற்போசனமும் முப்பழம்போசனமும்
உண்டுபுசித்தார்க ளுரிமையுடனல்லவரும்
கைகாலலம்பினார்கள் கனிவாயும்சுத்திபண்ணினார்கள்
மற்றுமொருமண்டபத்தில் வந்தமர்ந்தாரெல்லவரும்
சந்தனமும்புஷ்பமும் தாம்பூலந்தான்கொடுத்தார்
வாங்கித்தரித்தார்கள் மண்டபத்தில்கொலுவில்வந்தார்
அன்னநடைதிரௌபதையாள் அருச்சுனரைதானழைத்து
கலியாணமுகூர்த்தமது கடுகெனவேவையுமென்றார்
ஓலையெழுதியே ஊருக்கனுப்புமென்றாள்
ஆறுயிரம்பாண்டியர்க ளனைவோர்க்குமோலையது
எழுதியனுப்புமென்று ளின்பத்திரௌபதியாள்

கலியாணவோலையெழுதி இராசருக்கனுப்புதல்.

அவ்வார்த்தைதான்கேட் டருச்சுனர்மனமகிழ்ந்து
அண்ணன்தருமராசருக் கறிக்கையிட்டனர்ச்சுனனும்
சாஸ்திரபிராமணரைச் சடுதியிலேதானழைத்து
ஊர்கணக்கப்பிள்ளைகளை யுத்தமரைவரவழைத்து
சீரானகணக்கர்களைச் சிறப்புடனேயழைத்து.
திங்கட்கிழமையிலே தெசமிநல்லமுகூர்த்தம்வைத்து
அல்லியற்கும்அர்ச்சுனர்க்கு மழகுமுகூர்த்தம்வைத்து
ஆறுயிரம்பாண்டியர்க ளனைவோரும்வாருமென்றான்
எழுதுமென்றோலையது இன்பமுடன் தருமலிங்கம்
அப்போதுகணக்கப்பிள்ளை அன்புடனேஓலைகொண்டு
ஈழப்பனையோலை இருபக்கம்காம்பரிந்து
தாழைப்பனையோலை தலைபக்கங்காம்பரிந்து

வாரியஓலையிலே மஞ்சளைமேற்பூசி
ஆயிரம்பாண்டியர்களையன்மார்தங்களுக்கு
வக்கணையாகவேதான் வைத்துஎழுதினார்கள்
எழுதியவோலைதன்னைச் சுருள்முடித்துதந்தார்கள்
செந்திருக்கந்தான்போட்டுத் திருவடிகீழ்வைத்தார்கள்
சாஷ்டாங்கதெண்டனிட்டு நடந்தாரேகணக்கப்பிள்ளை
ஓலைதனையெடுத்து உத்தமனார்தருமலிங்கம்
காற்றிலதிகமான கடுந்தூதரையழைத்து
மலையுடனேதலைகொடுக்கும் மன்னவரைதானழைத்து
ஓலைகொண்டுபோகுமென்றார் வுத்தமனார்தருமலிங்கம்
இந்திரபுரந்தாண்டி இயலானகாடுவிட்டு
காடுசெடிதாண்டி கரியமலைதான்தாண்டி
ஆருசுனைதாண்டி யதிகவனந்தாண்டி
குன்றுமலைதாண்டி கொப்பெனவேதூதாட்கள்
மதுராபுரிபட்டணத்தில் வந்துவிட்டார்தூதாட்கள்
பாண்டியராசர்முன்னே பாங்குடனேஓலைவைத்தார்
ஆயிரம்பாண்டியர்கள் தர்மமுடிராஜாக்கள்
சாஷ்டாங்கமாகவே சரணமிட்டார்தூதாட்கள்
நாமும்வருவோமென்றார் ராஜாக்கள்பந்தலுக்கு
சந்தோஷப்பட்டார்கள் தர்மமுடிராசாக்கள்
நாமும்வருவோமென்றார் ராஜாக்கள்பந்தலுக்கு
ஆறுபிரவர்களு மையன்மார்பயணமானார்
பொன்னுமலைநாடாளு போரெழுதியவர்கூட
மற்றுமுள்ளராசாக்கள் மன்னர்பயணமானார்
யானைபரிவார மடங்கலும்பயணமானார்
துரியோதனராசனுக்குச் சுருளோலைவந்ததுகாண்
துருதபதேசனுக்குச் சுருளோலைவந்ததுகாண்
மத்திரதேசனுக்கு வந்ததேஓலையது
மண்டலத்துராசருக்கு வந்துதேஓலைகள்தான்
கல்யாணஓலைதன்னைக் கண்டந்தராசாக்கள்
சகலமானபேருஞ் சந்தோஷமாய்வருகிறார்கள்
திக்கரசையாண்டதொரு துரைகளெல்லாம்வாரார்கள்
மண்டலத்தையாண்டவர்கள் வருகிறார் துரைகளெல்லாம்
மேளமுழங்கிற்று மும்மண்டலந்தானதிர
செந்தூளெழும்புவது சூரியனைக்கப்பிற்றங்கே
கருந்தூளெழும்புவது கதிரோனைக்கப்பிற்றங்கே
முத்தையிளந்தார்கள் மூன்றுங்கால்நட்டார்கள்
பவளம்பிளந்தார்கள் பந்தக்கால்நாட்டினார்கள்
வெள்ளியால்கால்நிறுத்தி வெத்திலையால்பந்தலிட்டார்
மூங்கில்பிளந்தார்கள் முச்சூடும்பந்தலிட்டார்
கரும்பாலேகால்நிறுத்தி அரும்பாலேபந்தலிட்டார்

பச்சோலைபந்தலது பாங்காயலங்கரித்தார்
வன்னிமரம்கமுகுமரம் வாசலெல்லாம்நாட்டினார்கள்
சோலைபலாமரமும் தெருவெல்லாம்நாட்டினார்கள்
வாழைமரங்களது வாசலெல்லாநாட்டினார்கள்
மாவிலைதோரணமும் மகுடத்தோரணங்கட்டினார்கள்
எங்கெங்குஞ்சோலைகளு மெத்திசைதோரணமுங்
கண்ணாடிசல்லிகட்டிக் கவரிமான்குச்சுவிட்டு
பஞ்சவர்னக்கிளிகளை பந்தலிலேதூக்கிகட்டி
அன்னமுமயிலினமும் அழகுபெரக்கட்டினார்கள்
சன்னலிலேபனிநீருஞ் சாடினாரெளத்திசையும்
நிலகோலமிட்டார்கள் நிலமெல்லாம்பூத்தெளித்தார்
அத்தர்புனுகுகளை அள்ளித்தெளித்தார்கள்
பட்டுரத்னப்பாய்போட்டார் பந்தலுக்குள்ளாக
சாத்தலைக்கணையுஞ் சகலாத்துநிண்டுவைத்தார்
அந்தச்சமயத்தில் அனந்தங்கோடிராஜாக்கள்
வருகிறதுனைறகளென்றால் மட்டுமிதங்களில்லை
வாகனங்கள்விட்டிரங்கி வந்தார் துரைகளெல்லாம்
சந்தனவடிவழகர் தருமருக்கேதெண்டனிட்டார்
பந்தலில்வந்தமர்ந்தார் பாங்குள்ளராசாக்கள்
அத்தண்டபெண்களு மனைவோருஞ்சிவிகைவிட்டு
அந்தப்புரத்திலே யனைவோரும்போய்ச்சேர்ந்தார்
சாஸ்திரப்பிராமணர்கள் சகலரும்வந்தமர்ந்தார்
செந்நெல்லைக்கீழ்பரப்பிச் சேஷைமணைபோட்டு
மணவரையைப்போட்டார்கள் மாப்பிள்ளையைக்குந்தவைத்தார்

அலியரசாணியை அர்ச்சுனன்மாலையிடுதல்.

மாப்பிள்ளையும்பெண்ணுமாக வந்தமர்ந்தார்பந்தலிலே
சேஷைமணைமேலே சீருடனேவந்தமர்ந்தார்
சென்நெல்லரிசிகொண்டு தெற்குநோக்கிப்பொங்கலிட்டார்
நாவிதன்வந்துநின்றான் நல்லமணப்பந்தலிலே
பாலால்முகம்துடைத்தார் பத்துவிரல்நகம்வாங்கி
பணிசெய்வோன்சங்கூத பார்த்திபர்குடைகவிய
சங்கீதமேளங்கள் சபையில்முழங்கிநிற்க
வெற்றிசங்கூதவே விருதுமேளமடிபடவே
தீக்ஷைகழித்தார்கள் சிறாயிருவருக்கும்
முன்னூறுபிராமணப்பெண் மூன்றுநலங்குசெய்தார்
எழுனூறுபிராமணப்பெண் ணேழுநலங்குசெய்தார்
மஞ்சனச்சாலையிலே மஞ்சணீராட்டிவைத்தார்
ஸ்நானங்களாட்டினார் தர்மமுடியார்க்கும்
நீர்காட்டியுடுத்தினார் நிலங்கிள்ளிகாப்புமிட்டார்
ஈரத்துகில்களைந்து இழைசேர்ந்தபட்டுடுத்தி
நனைத்ததுகில்களைந்து நாகரீகபட்டுடுத்தி

மாப்பிள்ளையும்பெண்ணையும் மண்டபத்திற்கூட்டிவந்தார்
அலங்காரம்ப்பண்ணலுற்று ரழகாயிருவரையும்
எழில்விசையராசாவை எப்படியலங்கரிப்பார்
கோதிமுடித்தார்கள் கிரிக்கொண்டைபோட்டார்கள்
உட்கொண்டைபோட்டார்க ளுருமாலைகட்டினார்கள்
வண்டித்தலைப்பாகை மன்னனுக்குத்தான் தரித்தார்
முத்துக்கடுக்கனது முகமழகாகாதிலிட்டு
முத்துக்கலிக்கத்துராய் முன்னெற்றியிலேசொருகி
லலடாச்சிங்கத்துராவ் நடுத்தலையிலேசொருகி
ஒட்டுக்கடுக்கனது வலசம்விலைப்பெருமே
பச்சைக்கல்முருகுதனைப் பதித்தார்களர்ச்சுனர்க்கு
வச்சிரக்கடுக்கனுடன் மாணிக்கக்கடுக்கனிட்டார்
கண்டசரங்களுடன் கனவிதவாபாணமும்
மோகனமாலையுடன் முத்துச்சரப்பளியும்
ஐந்தாம்பிறைப்போலே அடுக்கடுக்காய்பதக்கம்
சிங்கமுகக்கடகம் சீரானபாசிபந்து
அரைஞாண்கயிறுகளு மைந்துவிரல்மோதிரமும்
நீட்டிவைக்குங்கால்களுக்கு நெருஞ்சிப்பூச்சல்லடமாம்
மண்டியிடுங்கால்களுச்கு மாதளப்பூச்சல்லடமாம்
சந்திரகாந்திதட்டிகட்டி தாமரைப்பூச்சுங்குவிட்டு
பூவிழைத்தஅங்கிதன்னை பூட்டியலங்கரித்து
பொன்னிழைத்தபட்டாடை போட்டார்கள்வல்லவாட்டு
சிவாசிவாவென்றுசொல்லித் திருநீற்றுக்காப்பணிந்து
சந்தனபொட்டுமிட்டார் தருபர்தம்பியருச்சுனர்க்கு
மல்லிகைமாலைதன்னை மார்பிலணிந்தார்கள்
அருச்சுனனைசோடித்தா ரழகுபெரத்தோழரெல்லாம்
ஆயிரம்பெண்க ளனைவோருஞ்சோடித்தார்கள்
சம்பங்கியெண்ணைக்கொண்டு கூடிமயிராற்றி
சீவிமயிராற்றி சிமிள்போலேகொண்டையிட்டு
ஒவ்வொருபூவுக் கொவ்வொருபொன்னிதழாம்
பூவிதழும்பொன்னிதழும் பூட்டியலங்கரித்தார்
கட்டிமுடித்தகொண்டை காதின்கீழ்சோதிமின்ன
சுற்றிமுடித்தகொண்டை சூரியனைத்தோற்றடிக்கும்
ஆண்மயிலைப்பெண்மயிலை யண்டையிலேசேர்த்தார்கள்
சந்திரசூரியனை சரியானபிறையணிந்து
பக்கத்திற்சேர்த்தார்கள் பல்லியாழ்வார்பிரையும்
பல்வீடுமெல்வீடு பக்கமயிர்கொலுசும்
அருகுகொப்பு சொருகுவாளி அன்னகொப்புமணிந்தார்கள்
பச்சக்கல்முருகுகளும் பதித்தார்களல்லியற்கு
மூக்குத்தியட்டிகை மேற்கத்திரிபாலையும்
நாகரீகக்காரையது நடுக்கழுத்தில்பூஷணமாம்

ஒற்றைச்சரடுகளாம் ஒருபுரமாம்பொற்சரிகை
முத்துபவளங்களாம் மோகனமாலைகளாம்
வட்டசரப்பளியாம் மார்நிறைந்ததாழ்வடமாம்
ஐந்துவிரலுக்கு வழுத்தியமோதிரமாம்
பத்துவிரலுக்கு பதித்தகணையாழிகளாம்
பாடகம்தண்டைகளாம் பருஞ்சிலம்புகாலாழி
காலாழிகல்லணையாம் பீலாழிபில்லணையாம்
அஷ்டாபரணமெல்லாம் அலங்காரம்பண்ணினார்கள்
சோடித்தோமென்றுசொல்லி தெண்டனிட்டுநின்றார்கள்
அருச்சுனரையல்லியரை லயங்காரம்பண்ணார்கள்
மணவரையின்மேலாக வந்தாரிருவருமாய
அரசாணிநாட்டினார்க ளம்மிகுழவிவைத்தார்
சாலுங்கரகமும் சட்டமுடன்வைத்தார்கள்
அம்மிவலமாக அரசாணிமுன்பாக
குத்துவிளக்குகளும் குடவிளக்குமுன்புவைத்தார்
பார்த்தீபனருச்சுனர்முன் பாலியெதிராக
ஓமப்புகையிலே யுடனிருந்துவேதஞ்சொல்ல
ஆயிரம்பிராமணர்க ளங்கிருந்துவேதஞ்சொல்ல
காப்பரிசிதான்வழங்கிக் கங்கணந்தரித்தார்கள்
ஆறுயிரபாண்டியர்க ளாயமார்தாமெழுந்து
மாவுங்கழுநாலு மஞ்சளுடனெல்லிதையும்
தாலியுங்கூரையுந் தந்தாரேபாண்டியர்கள்
காலுக்குமிஞ்சியிட்டார் கைக்குகணையாழியிட்டார்
காலுங்கழுவியே கன்னியைத்தானமிட்டார்
தந்தேனுனக்கிந்தேன் தாரைநீர்பிடியுமென்றார்
மாவுங்கழுநால் மஞ்சளுடனரிசி
அத்தண்டபிராமணர்க ளஸ்தமிட்டார்மங்கிலியம்
மண்டலத்துராசாக்கள் மன்னவர்களஸ்தமிட்டார்
ஆறுயிரம்பாண்டியர்க ளாயன்மாரஸ்தமிட்டார்
மாயன்பெருமாளு மலைராமரஸ்தமிட்டார்
அரகராவென்றுசொல்லி யழுத்துகிறான்மங்கிலியம்
சிவசிவாவென்றுசொல்லி தேர்விஜையன்கட்டலுற்றான்
மாதுதலைகுனிய மன்னன்தரிக்கலுற்றான்
பிரமமுடிமூன்றுமுடி போட்டானேபுண்ணியனும்
தேவதுந்துமிமுழங்கத் தேவர்பூமாரிபெய்தார்
சங்கீதமேளமது சபையில்முழங்கிவர
அடிபடுதேபேரிகைதான் அந்தகர்தானதிர
முப்பத்துமுக்கோடிமுனிவர்கள்தேவரெல்லாம்
ஆகாயவீதியிலே அருச்சுனரைவாழ்த்தினார்கள்
முப்புரத்தைத்தானெறித்த முக்கணனார்வாழ்த்தினரே
அருச்சுனர்க்குமல்லியற்கு மட்சதையெறிந்துவிட்டார்

வாழ்த்தியேபோனார்கள் வானவர்களெல்லோருந்தான்
அரசாணிசுத்தினார்க ளம்மிமிதித்தார்கள்
அப்போதருச்சுனரு மல்லிப்பெருமாளும்
அருந்ததிபூசைபண்ணி யள்ளிப்பொடியிரைத்தார்
கணையாழிமாத்தினார் கட்டழகரிருவருமாய்
மாலைதனைமாற்றி வந்தமர்ந்தாரிருவருமாய்
அத்தனடபேர்களு மள்ளியேசேஷையிட்டார்
வந்திருந்தராசாக்கள் வந்தவர்கள்மொய்யுமிட்டார்
ஆறுயிரவரு மய்யன்மார்சேஷையிட்டார்
சேஷைதரித்தபின்பு சீருடனேமொய்யுமிட்டார்
மகுடமுடிராசாக்கள் வந்தவர்கள்மொய்யுமிட்டார்
காப்பரிசிதான்வழங்கிக் கங்கணமவிழ்த்தார்கள்
அனைவரையுந்தண்டம்பண்ணி யரண்மனையிலுட்புகுந்தார்
பாலிகைப்பாய்மேலே பாங்குடனேபோய்ச்சேர்ந்தார்
பாலும்பழங்களுண்டு பசியாறிவீற்றிருந்தார்
அந்தமணப்பந்தலிலே யழகானதருமலிங்கம்
மொய்பாக்குவெத்திலையும் முடிமன்னராசருக்கு
சந்தனபுட்பமுந் தாம்பூலம்வழங்கினாரே
ஆயிரம்பிராமணர்க்கு மதிதிபரதேசிகட்கு
பலதானங்கொடுத்தார்கள் பிராமணருள்ளவற்கும்
மண்டலத்துராசாக்கள் வந்திருந்ததுரைகளெல்லாம்
போசனச்சாலையிலே போய்புகுந்தாரெல்லோரும்
பந்திப்பாய்போட்டார்கள் பாங்குடனேவந்தமர்ந்தார்
வாழையிலைபோட்டு வரிசையுடன்நீர்தெளித்தார்
முப்பழமுஞ்சர்க்கரையும் முடிமன்னர்வைத்தார்கள்
புத்துருக்குநெய்வார்த்து போசனமுண்ணுமென்றார்
அத்தளிகையுண்டபின்பு மருதளிகைமுன்னேவைத்தார்
மல்லிகைமொக்கைபோலே மாற்றுவெள்ளிநிரப்போலே
போசனங்கள்பாலித்துப் பொரிக்கரியும்வைத்தார்கள்
பத்துவிதக்கரியும் பதினெட்டுபச்சடியும்
எட்டுவிதக்கரியும் இயலானபோசனமும்
பொன்போல்பருப்பும்வைத்து புத்துருக்குநெய்சொரிந்தார்
அத்தளிகையுண்டபின்பு மருதளிகைவைத்தார்கள்
இளந்தோச்சல்தயிருமிட்டு ரெனுமிச்சங்காயுமிட்டார்

போசனங்களுண்டபின்பு பொடியிட்டுக்கைதிமிறி
கைகால்கள்சுத்திபண்ணிக் கனிவாயுங்கொப்பளித்தார்
சித்திரப்பந்தலிலே வந்தார் துரைகளெல்லாம்
சம்பந்திதாம்பூலந் தட்டோடேவழங்கினர்கள்
உறவின்முறைதாம்பூல முத்தமர்கள்வழங்கினர்கள்
யானையலங்கரித்து அருச்சுனற்குக்கொண்டுவந்தார்
அத்தளங்கள்சோடித்து அல்லியற்குக்கொண்டுவந்தார்
யானைமேலர்ச்சுனரு மத்தளத்திலல்லியரும்
ஏறினரிருவருமா யெடுத்தார்நெடுங்குடைகள்
சண்டாபரக்கவிட்டார் தனிபேரியடித்தார்கள்
யானையின்மேல்பேரிகையும் குதிரைமேல்டங்காவும்
ஒட்டகமேல்நகபத்தும் ஓசைமுழங்கவேதான்
சங்கீதமேளமது சபையில்முழங்கவேதான்
எக்காளைசின்ன மெழில்பெரவேயூதிவர
பாஞ்சசன்னியம்தேவதத்தம் பலவாத்தியமுழங்க
சாமரங்கள்சின்னம் யெக்காளையூதிவர
பகல்வத்திமத்தாப்பு பட்டம்பகல்போல்பிடித்தார்
புருசுவெடிபாணம் போகமுழங்கிறதே
ஆடாதகூத்துகளும் அரும்பவனிநாடகமும்
கேளிக்கைதன்னுடனே கீர்த்திமன்னரர்ச்சுனனும்
நான்குதெருகோலம் நன்றாய்வருகிறார்கள்
தண்ணீர்தெளிப்பார்கள் சாம்பிராணிபோடுவார்கள்
வாழைக்கமுகும் வாசலெல்லாம்நடுவார்கள்
நிலக்கோலமிடுவார்கள் நிலமெல்லாம்பூத்தெளிப்பார்
ஊர்கோலமாகியே யுத்தமர்கள்வந்தார்கள்
ஆலஞ்சுழற்றினர்க ளர்ச்சுனர்க்குமல்லியற்கும்
திருஷ்டிகள்சுத்தியே தெருவிலேகொட்டுவார்கள்
வாகனங்கள்விட்டிறங்கி மண்டபத்திற்போய்புகுந்தார்
பாலும்பழங்களுண்டு பசியாறிவீற்றிருந்தார்
ஐந்தாறுநாள்சென்றபின்பு அத்தண்டராசர்களும்
அவரவர்மாளிகைக்கு அனைவோரும்போகவென்று
தருமர்செலவதினால் தானடந்தார்மாளிகைக்கு

பாண்டியரும் அல்லியரும் விடைபெற்று மதுரைக்குவந்தது.

ஆறாயிரவ ரையன்மார்தங்கள்முதல்
மூடுசிவிகையிலே மெல்லியரைவைத்துக்கொண்டு

காலாளுஞ்சேவகரும் கடுகப்பயணமானார்
தருமரவர்செலவருள சந்தோஷமாயெழுந்து
யானைகளுஞ்சேனைகளும் யாவர்களுமாக
மேளமுழங்கிவர முடிமன்னர்போறார்கள்
மதுராபுரிபட்டணத்தில் வந்தார்களெல்லவரும்
நான்குதெருகோலம்வந்து நாயகிபோய்சேர்ந்தார்கள்
மண்டபத்துக்குள்ளாக வந்தமர்ந்தாரெல்லோரும்
அப்போதுஅல்லியரு மரசுக்குரித்தானாள்

அல்லியரசாணி பாலகனைப்பெற்றது.

ஓராந்தான்மாதமது ஒருதிங்கட்கிழமையிலே
இரண்டாந்தான்மாதமது இரண்டுதிங்கள்தானாச்சு
மூன்றாந்தான்மாதமது முத்துகொங்கைமுகங்கருத்து
நான்காந்தான்மாதமது நல்மசக்கையானாளே
ஐந்தாந்தான்மாதத்திலே அடிவயிறுகனத்திடுமாம்
ஆறாந்தான்மாதத்திலே யங்கமெல்லாந்தங்கநிறம்
ஏழாந்தான்மாதத்திலே இசைந்தஸ்ரீமந்தஞ்செய்தார்
எட்டாந்தான்மாதத்திலே இளைப்புந்தவிப்பானாள்
ஒன்பதாம்மாதத்திலே உடம்பெல்லாம்நோகுதென்றாள்
பத்தாந்தான்மாதத்திலே பாலகனைப்பெற்றெடுத்தாள்
பப்பிரவாகனென்று பாண்டியர்கள்பெயருமிட்டார்
மாணிக்கத்தொட்டிலிலே வளருகிறானிந்திரனும்
இந்தக்கதைதன்னை யின்பமாய்பாவைகளும்
விந்தையாயிக்கதையை விரும்பியபூவைகளும்
அன்புமிகக்கொண் டல்லிக்கதைபடிக்க
துன்பமிகத்தீர்ந்து துரிதமுடன்படிக்க
கோதைமார்தான்வாங்கிக் கொள்ளமனங்களிக்க
பேதைமார்தானேங்கிப் பெருங்களிப்பில்தான்குளிக்க
சொக்கநாயகர்படிக்க சுத்தமாயிக்கதையை
அக்கரையாகவே யனைவோரும்படிப்பதற்கு
இக்கதையையாவர்களு மிசைந்துமேகேட்டவர்கள்
சொக்கர்பதியதனைச் சேர்வார்கள்வையகத்தில்
அருமையாய்க்கேட்டவர்க ளனைவோரும்தான்வாழி
பெருமைமையாய்க்கேட்டவர்கள் பெரியோர்கள்தான்வாழி
பாருலகிலிக்கதையை படிப்பவர்கள்தான்வாழி
சீருருமல்லிகதை சிந்திப்போர்தான்வாழி

தேவரும்மூவரும் யாவருந்தான்வாழி
ஆதிசிவனருளால் அனைவோருந்தான்வாழி
மாயனருளாலே மண்டலங்கள்தான்வாழி
காயங்களுள்ளளவும் களிப்புடன்தான்வாழி
சொக்கரருளாலே சுகமாகத்தான்வாழி
இக்கட்டுவாராமல் இசைந்துமிகவாழி
அங்கயற்கண்ணம்மை யருளாலேதான்வாழி
ஆல்போல்தழைத்து அருகுபோல்வேரோடி
பால்போல்மிகப்பொங்கி பாருலகந்தான்வாழி
மூங்கில்போல்சுற்ற முசியாமல்தான்வாழி
தீங்கில்லாமாதர்கள் செழித்துமிகவாழி
ஊழியூழிதோறு முலகங்கள்தானவாழி
வாழிவாழியென்று வரமளித்தாரீஸ்வரனுர்

மாதவத்தோர்கள்வாழ்க மற்றுமுள்ளதேவர்வாழ்க
வேதமும்வாழ்கவீர சைவத்தோர்தாமும்வாழ்க
ஆதுலர்முனிவர்வாழ்க அருந்தவரிஷிகள்வாழ்க
பூதலம்வாழ்கபூமி புவியுள்ளோர்வாழ்கத்தானே.

அல்லியரசாணிமாலை முற்றுப்பெற்றது.

பூமிபரிபாலனுக்கும் புகழ்வடிவேலனுக்கும்
சேயமிகுசீலனுக்கும் செய்யவனுகூலனுக்கும்-ஜெய
வில்லழகர்பாண்டவற்கும் விண்ணவர்களாண்டவற்கும்
கொல்லழலின்மீண்டவற்கும் துய்யமுத்துதாண்டவற்கும்-ஜெய
கற்புநிலைவிழியாட்கும் கனியனையமொழியாட்கும்
பொற்புறுசுழியாட்கும் பொருகயலிவிழியாட்கும்-ஜெய
மன்னர்புகழ்நேசனுக்கும் வலங்கொள்மகாராசனுக்கும்
பன்னறியநேசனுக்கும் பத்திவிசுவாசனுக்கும்-ஜெய
பாருலகிலல்லியற்கும் பன்னின்மொழிமெல்லியற்கும்
சீருலகுவல்லியற்கும் செருக்களவிலதிதியற்கும்-ஜெய
பாண்டியர்கள்யாவருக்கும் பரிமளசீலருக்கும்
ஆண்டியெனுந்தேவருக்கும் அவரடியர்சூவருக்கும்-ஜெய

மங்களம்-முற்றிற்று.